# நோயை விட குணப்படுத்தல் மோசமானதா?

## இலங்கையில் கொவிட் ஆளுகையின் பிரதிபலிப்புகள்




பதிப்பாசிரியர்
பிரதீப் பீரிஸ்

# நோயை விட குணப்படுத்தல் மோசமானதா?

## இலங்கையில் கொவிட் ஆளுகையின் பிரதிபலிப்புகள்

பதிப்பாசிரியர்
பிரதீப் பீரிஸ்

வெளியீட்டாளர் : சோஷல் இன்டிகேட்டர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (Center for Policy Alternatives), கொழும்பு, இலங்கை

பதிப்பாசிரியர் : பிரதீப் பீரிஸ்

ISBN : 978-624-5914-14-2

அடையாள எண் : 9 786245 914142

அட்டைப்படம் : நஸ்லி அஹும்மட்

©2021 மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமும் (CPA) ஆய்வுக் கட்டுரைகளது ஆசிரியர்களும்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீனம் மற்றும் அரசியல் கட்சிக் கொள்கை எதனையும் சாராதொரு அமைப்பாகும். ஆளுகை மற்றும் முரண்பாட்டுத் தீர்வு தொடர்பான பிரச்சினைகள் மீது இது பிரதான கவனத்தைச் செலுத்துகிறது. பொதுக்கொள்கை விவாதத்தில் சிவில் சமூகத்தின் முக்கியமான வகிபங்கினை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்த உறுதியான நம்பிக்கையினால் 1996இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கை விமர்சிக்கப்படுவதோடு அவற்றுக்கான மாற்றுவழிகள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றை பரப்புகின்ற ஆய்வு மற்றும் ஆதரவு திரட்டுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றினையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் முன்னெடுக்கிறது.

சோஷல் இன்டிகேட்டர் (Social Indicator) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஒரு கணிப்பீட்டு ஆய்வுப் பிரிவாகும். சமூகப் பொருளாதார பிரச்சினைகள் குறித்து இலங்கையில் ஒரு நிலையான உத்தியோகபூர்வ மற்றும் சுயாதீனத்தன்மை கொண்ட கருத்துக்கணிப்பு வசதியொன்று நீண்டகாலமாகக் காணப்படாத நிலையில் அதன் இடைவெளியை நிரப்புவதற்காக 1999ஆம் ஆண்டு செப்டெம்பரில் சோஷல் இன்டிகேட்டர் தாபிக்கப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது சனநாயகத்தை வலுப்படுத்துகின்ற ஒன்று என்ற பலமான நம்பிக்கையினால், தாபிக்கப்பட்ட காலத்திலிருந்து சோஷல் இன்டிகேட்டரானது பரந்தளவிலான சமூக-பொருளாதார அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகக் கருத்துக் கணிப்புக்களை மேற்கொண்டுவருகிறது.

தமிழாக்கம் : மாலினி பாலமயூரன்

அச்சுப்பதிப்பு : கருணாரத்ன மற்றும் மைந்தர்கள் (தனியார்) நிறுவனம்,
65 C, தல்காவில வீதி,
மிடில்லாமுலஹேன,
ஹொரண, இலங்கை.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| பங்குபற்றாளர்கள் | | 5 |
| அணிந்துரை | | 8 |
| முன்னுரையும் நன்றி நவிலலும் | | 10 |
| அத்தியாயம் 1 | அறிமுகம்: இலங்கையில் கொவிட் ஆளுகையின் பிரதிபலிப்புகள்<br>*பிரதீப் பீரிஸ்* | 13 |
| அத்தியாயம் 2 | பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையில் துரிதமாக்கப்பட்ட சனநாயகச் சிதைவு<br>*பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க* | 33 |
| அத்தியாயம் 3 | கீழ்ப்படிவுள்ள பிரசைகளைக் கட்டியெழுப்புவதனூடாக மக்களை மாற்றுதல்: இலங்கையில் பெருந்தொற்று ஆளுகை<br>*பிரதீப் பீரிஸ்* | 67 |
| அத்தியாயம் 4 | வாழ்வா அல்லது வாழ்வாதாரமா? இலங்கையின் கொவிட்-19 பதில் நடவடிக்கையில் தேய்ந்து போகும் சேமநலன்<br>*நிபுணிகா ஓ. லேக்கம்வசம்* | 98 |
| அத்தியாயம் 5 | இனத்துவ-மையவாத பெருந்தொற்று ஆளுகை: இலங்கையின் கொவிட் பதில் நடவடிக்கைகளில் முஸ்லிம் சமூகம்<br>*சகினா மொய்னுதீன்* | 125 |
| அத்தியாயம் 6 | இலவசமில்லாத கல்வி: பெருந்தொற்றுக் காலத்தில் இலங்கையின் கல்விசார் கொள்கைப் பதில் நடவடிக்கையில் அரசு-பிரசை உறவுகள்<br>*ஹசினி லேக்கம்வசம்* | 146 |
| அத்தியாயம் 7 | எண்ணெய்ச் சட்டியிலிருந்து நெருப்புக்குள்: கொவிட் பதில் நடவடிக்கைகளும் உள்நாட்டுக்குள் குடிபெயர்ந்த ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களும்<br>*கௌஷினி தம்மாலகே* | 170 |
| அத்தியாயம் 8 | கடினமான காலங்களில் தொடர்புகள்: கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் அரசசேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சமூக வலையமைப்புகளின் செயற்பாடு பற்றிய ஒரு ஆய்வு<br>*ஷஷிக் சில்வா* | 193 |

# பங்குபற்றாளர்கள்

**பவானி பொன்சேகா** ஒரு வழக்கறிஞராகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் ஒரு சிரேஷ்ட ஆய்வாளராகவும் பணியாற்றுகின்றார். இவர் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளதோடு சமூக பிரச்சினைகள் தொடர்பாகத் தேசிய, சர்வதேச மட்டத்தில் ஆதரவுத் தளத்தினைத் திரட்டுதல் மற்றும் பொதுநலன் தொடர்பான வழக்குகளிலும் ஈடுபடுகின்ற ஒருவராவார். நிலைமாறுகால நீதி தொடர்பான சர்வதேச ஆய்விதழது (International Journal on Transitional Justice) ஆசிரியர் குழுவிலும் கொழும்புப் பல்கலைகழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார். 2016ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் ஆலோசனைச் செயலணிக்கான ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்ததோடு 2017-2021 வரையான காலத்தில் இலங்கைக்கான தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டத்தினை வடிவமைப்பதற்கான வரைவுக்குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டவராவார்.

**கௌஷினி தம்மாலகே** சமூக விஞ்ஞானிகள் சங்கத்தில் பணியாற்றுகின்ற ஒருவராவார். பால்நிலை, சனநாயகம், தேர்தல் அரசியல் மற்றும் இலங்கையில் இடதுசாரி அரசியலின் வரலாறு போன்றனவே இவரது முதன்மையான ஆய்வுத் தலைப்புகளாகும். இவர் பெருந்தோட்ட ஊழியர்களைத் திரட்டுவதில் பால்நிலை, இலங்கையில் மரபுசார் இடதுசாரிக் கட்சிகளின் அமைப்புசார் தந்திரோபாயங்கள் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளார்.

**ஹசினி லேக்கம்வசம்** ஒரு விரிவுரையாளராக பேராதனைப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையில் பணியாற்றுவதோடு சமூக விஞ்ஞானிகள் சங்கத்தினது பொலைட்டி (Polity) என்ற ஆங்கில சஞ்சிகையிலும் இணை-இதழாசிரியராகப் பணியாற்றுகின்றார். அடையாளக் கட்டமைப்புகளில் அரசியல் சமூகவியல், கல்வியினை சனநாயகப்படுத்தல், இடம்சார் அரசியல் போன்ற ஆய்வுப் புலங்களில் கற்கைகள் பலவற்றினை மேற்கொண்டுள்ளார்.

**நிபுணிகா ஓ. லேக்கம்வசம்** ஒரு விரிவுரையாளராக பூட்டான் நாட்டினது ரோயல் திம்பு கல்லூரியில் அரசியல் விஞ்ஞானமும் சமூகவியல் நிகழ்ச்சித்திட்டமும் என்ற துறையில் பணியாற்றுகின்றார். அபிவிருத்தி மானிடவியல், இளைஞர்கள், சமாதானம், சனநாயகம் போன்ற ஆய்வுப் புலங்களில் பல கற்கைகளை மேற்கொண்டுள்ளார்.

**சகினா மொய்னுதீன்** ஒரு ஆய்வாளராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினது ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டரில் பணியாற்றி வருகின்றார். இவர் அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வுமுறைகள் தொடர்பாகப் பரந்த அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவரது ஆய்வு அனுபவங்களானவை சனநாயகம் மற்றும் ஆளுகை தொடர்பான பொதுமக்களின் பார்வைகளும் எதிர்பார்ப்புகளும், அபிவிருத்தியின் கல்விசார் மற்றும் சுகாதாரப் பார்வைகள், யுத்தம் மற்றும் சமாதானம் தொடர்பான பிரச்சினைகள் (யுத்தத்திற்குப் பின்னராகவும் முரண்பாடுடைய சமூகங்களிலும்) பற்றிய கற்கைகளை மேற்கொள்ள உதவியளித்துள்ளன.

**பிரதீப் பீரிஸ்** ஒரு விரிவுரையாளராகக் கொழும்பு பல்கலைக்கழகத்தினது அரசியல் விஞ்ஞானமும் பொதுக்கொள்கையும் என்ற துறையில் பணியாற்றி வருகின்றார். இவர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர் என்ற அமைப்பின் தாபகராகவும் காணப்படுகின்றார். இலங்கையில் சமஷ்டி பற்றிய விவாதத்திலிருந்து சனநாயகநிலை வரையான பல தலைப்புகளில் வெளியீடுகளை மேற்கொண்டுள்ளார். முரண்பாட்டுத் தீர்வு, பால்நிலை, அரசியல் கட்சிகள், உள்ளூராட்சி அரசாங்கம், தென்னாசியாவில் சனநாயகநிலை போன்ற ஆய்வுப் புலங்களில் ஈடுபாட்டுடன் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

**குஷ்மிலா ரணசிங்க** ஒரு ஆய்வாளராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தில் பணியாற்றுகின்றார். கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டபீடத்தினது பட்டதாரியான இவர், இலண்டன் பல்கலைகழகத்தில் சர்வதேச உறவுகளில் இளமாணிப் பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

**ஷஷிக் சில்வா** ஒரு கணிப்பீட்டு ஆய்வாளராக, அளவுசார் பகுப்பாய்வாளராக, பண்புசார் ஆய்வாளராக 15 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டவராகக் காணப்படுகின்றார். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர் என்பதிலும் UNOPS இனது பிரயோக ஆய்வுப் பிரிவிலும் முன்னர் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது இலங்கையில் சமூக விஞ்ஞானிகள் சங்கத்தில் ஆய்வாளராகவும்

நிர்வாக முகாமையாளராகவும் பணியாற்றி வருகின்றார். இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பான பல விளக்கங்களைப் புரிந்துகொள்ளல், நீதிக்கான பிரசைகளின் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளல், உள்ளூ ராட்சி ஆளுகையில் உள்ளீர்த்தல் மற்றும் நிகழாதபடி தடுத்தல் தொடர்பான ஆய்வுப்புலங்களில் கற்கைகளை மேற்கொண்டுள்ளார். பொது அபிப்பிராயம் பற்றிய ஆய்வுக்கான உலகச் சங்கம் (World Association for Public Opinion Research) என்ற அமைப்பின் உறுப்பினரான இவர் 2019ஆம் ஆண்டிலிருந்து ஆசியாவை பிரதிநிதித்துவப்படுத்தி இடம்பெறும் WAPOR இனது வருடாந்த மாநாட்டில் தனது ஆய்வினை முன்வைத்து வருகிறார்.

# அணிந்துரை

இலங்கைச் சூழலில் கொவிட்-19 பெருந்தொற்றினது நீண்டகால விளைவுகள் கவலையளிப்பனவாகக் காணப்படுகின்றன. அரசாங்கம் தொடர்பான பொதுமக்களின் திருப்திநிலையானது பெருமளவுக்குக் குறைந்தளவான இறப்பு மற்றும் நோய்க்கிருமித்தொற்று என்பதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பொதுமக்கள் சுகாதார விடயங்களுக்கு அப்பால், பெருந்தொற்றானது ஆளுகையில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்துக் கவனம் செலுத்துவதில்லை. இந்நிலைமை கவலைக்குரியதாகும்.

கொவிட்-19 ஆனது நிறைவேற்றுத்துறையினைப் பலப்படுத்தல் மற்றும் இராணுவமயமாதல் போன்றன இடம்பெறுவதற்கான நியாயப்படுத்தலை வழங்கியுள்ளது. பெருந்தொற்றுக் காலத்தில் பாராளுமன்றம் சுமார் 3 மாதங்களாக கூடாததோடு பொதுநிதி தொடர்பான மேற்பார்வை எதுவும் இடம்பெறவில்லை. பெருந்தொற்றுக்கான முகாமைத்துவமானது இராணுவத் தளபதியான ஷவேந்திர சில்வாவின் தலைமையிலான சனாதிபதி விசேட செயலணிகளின் கீழ் இடம்பெற்றது. அத்தோடு வேறும் பல செயலணிகள் தற்போதைய மற்றும் முன்னைய இராணுவ அதிகாரிகளைப் பிரதானமாகக் கொண்டு ஒழுக்கமுள்ள சமூகமொன்றை உறுதிப்படுத்தவும் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள்சார் இடங்களைக் கண்காணிக்கவும் தாபிக்கப்பட்டன. தொல்பொருள்சார் விடயம் தொடர்பான செயலணிக்கான குழுத் தெரிவில் மாகாணத்தினது பல்லின மற்றும் பன்மைத்துவம் போன்றன கவனத்தில் கொள்ளப்படவில்லை. சனாதிபதியினது அறிவித்தல் மூலம் அரசாங்கக் கொள்கைகள் என வெளிப்படுத்தப்பட்ட அனைத்தும் அவர் பிரகடனப்படுத்திய தினத்திலிருந்து ஒழுங்குவிதிகளாக மாறின. மேலும் துறைமுகநகர ஆணைக்குழு மசோதா என்பது அரசியல் கட்சிகளாலும் சிவில் சமூக அமைப்புகளாலும் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டாலும் அதனைச் சட்டமாக்குவதற்கான அவசரம் அரசாங்கத்துக்குக் காணப்பட்டது. மசோதாக்கள் சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் அவை திருத்தப்பட வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

நிறைவேற்றுத்துறை அதிகாரத்தைப் பலப்படுத்த இராணுவமயமாதல் ஊட்டமளித்தது. அத்தோடு நிறைவேற்றுத்துறையின் அதிகாரம் மற்றும் ஆணையைப் பிரயோகிக்க இடையூறாகக் காணப்பட்ட தடைகளையும் சமநிலைகளையும் 20ஆவது திருத்தம் நீக்கி அதனைச் சாத்தியமாக்கியது. செயலணிகளுக்குப் புறம்பாக பரந்த அளவான அதிகாரங்களைக் கொண்ட இராணுவத்தினர் 25 மாவட்டங்களுக்குமான தனிமைப்படுத்தல் வேண்டுகோள்களை முன்னெடுப்பதற்கான தலைமை ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர். ஆளில்லா விமானப்படை விமானங்கள் மற்றும் இலங்கை இராணுவத்தின் அதிரடி செயற்பாட்டுக்கான றைடர்ஸ் குழு (Sri Lanka Army Quick Reaction Riders Team) போன்றன தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறுவோரை கைதுசெய்யப் பயன்படுத்தப்பட்டன. அத்தோடு சிவில் சமூகத்தின் பரப்பினைச் சுருக்குதல், வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களைத் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தல் என்பன தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. அவசரகாலச் சட்டத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் செயற்பாடுகள் விரக்தியான அனுபவங்களைப் பொதுமக்களுக்கு ஏற்படுத்தியபோது, ஒருகட்டத்தில் அது ஒரு இயல்பான விடயமென அவர்கள் எண்ணினர். அவ்வாறானதொரு எண்ணம் பெருந்தொற்று முடிவடைந்த பின்னரும் பொதுமக்களுக்கு ஏற்படலாம். உண்மையில் அந்தநிலை பொதுமக்களுக்கு ஏற்கனவே இடம்பெற்றுள்ளது போலத்தெரிகிறது.

இந்த நூலானது சனநாயக நிறுவனங்கள், ஆளுகை, பெருந்தொற்றில் சேமநலனின் தாக்கம், இனத்துவ உறவுகள், இலவசக்கல்வி, உள்நாட்டுக்குள் குடிபெயர்ந்த தொழிலாளர்கள், அரசியல் சகாயம் போன்றன சமூகத்தில் ஏற்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேள்விகளை எழுப்புகிறது. இந்நூல் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களை முன்னெடுக்க ஊக்கப்படுத்தும் என்றும் அதன் மூலம் இலங்கையில் மிகச் சிறப்பான ஆளுகை மற்றும் அரசாங்கத்தினை உருவாக்குவதற்கான பங்களிப்பினை வழங்கும் எனவும் நான் நம்புகின்றேன்.

கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து,
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

# முன்னுரையும் நன்றி நவிலலும்

பெருந்தொற்று என்பது வெறுமனே பொதுச்சுகாதார நெருக்கடியாக மட்டுமல்லாது சமகால சமூகக் கட்டமைப்பிலும் அழிக்கமுடியாத வடுக்களை விட்டுச்செல்கிறது. பெருந்தொற்றினால் ஏற்படும் மாற்றங்களால் (கண்ணுக்குப் புலப்படும் மற்றும் புலப்படாத) சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆழமான தேடுதலொன்று தேவைப்படுகிறது. எனினும் பெருந்தொற்றினது பாதிப்புகள் ஒரு கட்டத்தில் மனிதர்களது ஞாபகங்களிலிருந்து மறைந்துவிடக் கூடியனவாகக் காணப்படுகின்றன. இதனால் எதிர்காலப் பரம்பயினர் இவ்வாறான துன்பமான நிலையிலிருந்து விடுபடுவதற்கு மட்டுமல்ல அதிலிருந்து நன்மையடையவும் இந்த நிகழ்வுகளானவை விமர்சன ரீதியாகப் பதிவுசெய்யப்பட வேண்டும்.

நோயை விட குணப்படுத்தல் மோசமானதா? இலங்கையில் கொவிட் ஆளுகையின் பிரதிபலிப்புகள் என்ற இந்த நூலானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினது கணிப்பீட்டு ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர் என்ற ஆரம்பிப்பினது விளைபயனாகும். 2021ஆம் ஆண்டு பெப்ரவரி-மார்ச் வரையான காலப்பகுதியில் நாடளாவிய மட்டத்தில் 'கொவிட்-19 காலத்தில் சமூக-பொருளாதாரக் குறிகாட்டி' (Socio-Economic Index In the Face of Covid-19) என்ற கணிப்பீடானது சோஷல் இன்டிகேட்டரினால் மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணிப்பீடானது கொவிட்-19 பெருந்தொற்றினது முதலாவது மற்றும் இரண்டாவது அலைக் காலத்தில் இலங்கை மக்களின் அனுபவங்களையும் உணர்வுகளையும் அறிந்துகொள்ளும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டது. கணிப்பீட்டில் பெறப்பட்ட முடிவுகளானவை கருப்பொருட்கள் பல ஆழமாக ஆய்வுசெய்யப்பட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தியதோடு ஆய்வுக்குழுவினது எண்ணத்தில் இத்தகையதொரு ஆய்வு நூல் ஒன்றினை உருவாக்கும் எண்ணத்தினையும் ஏற்படுத்தின.

இந்தப் பின்னணியில் உருவாகிய இந்த நூலானது இலங்கைச் சமூகத்தில் அரசியல், பொருளாதர, சமூக வாழ்க்கையில் கொவிட்-19 ஏற்படுத்திய தாக்கத்தினையும் நாட்டின் அரசியல் கலாசாரத்தில் (ஏதாவது இருப்பின்) அது ஏற்படுத்திய நிலைமாறக்கூடிய விளைவுகள் பற்றியும்

பரீட்சிக்கிறது: பெருந்தொற்றினைச் சமாளிப்பதற்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தந்திரோபாயங்களும் கொள்கைகளும் எவ்வாறு சமூகத்தின் மீது பாதிப்புகளை ஏற்படுத்தின என்றும் குறிப்பாக இந்த தந்திரோபாயங்களும், கொள்கைகளும் ஆளுகை, சுகாதாரம், கல்வி போன்றன சகல சமூகங்களுக்கும் நியாயமாகக் கிடைக்கப்பெறுவதில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன என்பதிலும் கவனஞ்செலுத்தியுள்ளது. சமூகத்தின் பல துறைகள் பற்றியும் அவை பெருந்தொற்றினால் எதிர்கொண்ட அனுபவங்கள் பற்றியும் இத்தகைய அனுபவங்களால் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள பாதிப்புகள் போன்றவற்றுக்கான விடைகளாக இந்நூலினது அத்தியாயங்கள் காணப்படுகின்றன.

நீதி, உண்மை, நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான பூகோள ஆரம்பிப்பு (Global Initiative for Justice, Truth and Reconciliation) என்ற அமைப்பினது தாராளமான ஆதரவினாலேயே நாடளாவிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு மற்றும் இந்த ஆய்வுநூல் ஆகிய இரண்டும் சாத்தியமாகியது. அதற்காக சோஷல் இன்டிகேட்டர் சார்பாக நீதி, உண்மை, நல்லிணக்கம் ஆகியவற்றுக்கான பூகோள ஆரம்பிப்புக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எழுத்துவேலை தொடர்பான செயன்முறைக்கு எம். கிருஷ்ணமூர்த்தி, ஹசந்தா கமகே, சகினா மொய்னுதீன் போன்றோரை உள்ளடக்கிய சோஷல் இன்டிகேட்டர் குழுவினது ஆதரவு கிடைக்கப்பெற்றமையினை ஓர் அதிஷ்டமாக எண்ணுகிறேன். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணியாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் அங்கு சிரேஷ்ட ஆய்வாளராகப் பணியாற்றும் பவானி பொன்சேகா ஆகியோரது ஆதரவில்லாமல் இந்த நூல் சாத்தியமற்றதொன்றாகும். அதனால் அவர்களுக்கு எனது நன்றியை தெரிவிக்காமல் இருப்பது மன்னிக்கமுடியாத தவறாகும்.

இந்நூலின் வெவ்வேறுபட்ட அத்தியாயங்களானவை ஆய்வுக் குழுவினர் தொடர்ச்சியாக உயிரோட்டமுள்ள வகையில் மேற்கொண்ட விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களினால் பயனடைந்துள்ளன. நூலாக்குவதற்கான இந்த முயற்சியில் எனது குழுவினர் காட்டிய உணர்வு மற்றும் அர்ப்பணிப்புக் குறித்து விசேடமாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். இந்நூலுக்கான உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்பினைத் தனியாக ஒழுங்குபடுத்தி பங்களிப்புச் செய்த ஹசினி லேக்கம்வசம் அவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். இந்த வேலை முழுமை பெறுவதற்கு ஆய்வுசார் உதவியினை வழங்கிய அம்மாறா நிலாப்டீன் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

இந்நூலினை வடிவமைக்கத் தனது திறமையையும் நிபுணத்துவத்தினையும் வழங்கிய இஷான் அமரவீரவுக்கு எனது நன்றிகள். அத்தோடு கருணாரத்தின மற்றும் மைந்தர்கள் நிறுவனக் குழுவினது விடாமுயற்சியினாலே இந்நூல் இன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. நான் அவர்கள் இருவருக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக குறுகிய காலத்தில் இதனைப் பிரசுரிப்பதற்கு அவர்கள் தெரிவித்த விருப்பத்திற்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

இந்த நூலில் குறிப்பிட்ட விடயங்கள் சக நண்பர்களதும் பொதுமக்களதும் ஆர்வத்தினைத் தூண்டி அவர்களை மேலும் ஆய்வு, பொதுவிவாதங்கள் மற்றும் சமூக மாற்ற முயற்சிகள் போன்றவற்றினை நோக்கி சிந்திக்க செய்யுமாயின் அது எனக்குப் போதுமானதொரு பிரதியுபகாரமாக இருக்கும்.

# 1

# அறிமுகம்: இலங்கையில் கொவிட் ஆளுகையின் பிரதிபலிப்புகள்

*பிரதீப் பீரிஸ்*

நோயை விட குணப்படுத்தல் மோசமானதா? கொவிட் பதில் நடவடிக்கைகள் (COVID responses) ஏற்படுத்தவிருக்கும் ஆபத்தான பாதிப்புகள் பற்றிய பொதுவான கருத்துநிலையொன்று பூகோள ஆளுகையின் உயர்மட்ட நிலையிலும் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஏப்ரல் மாதம் 2020 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரான அன்ரோனியோ குட்டரஸ் (Antonio Gueterres) அவர்கள், கொரோனா நோய்க்கிருமி நெருக்கடியானது "பெருந்தொற்றோடு (Pandemic) தொடர்பில்லாத அடக்குமுறையான சட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கானதொரு சந்தர்ப்பத்தை வழங்கும்" அபாய நிலையொன்றினைக் கொண்டிருப்பதனால் இது "வெகு விரைவில் ஒரு மனித உரிமைகள் நெருக்கடியாக" உருமாற வாய்ப்புள்ளதென எச்சரிக்கை விடுத்துள்ளார் (Choukroune, 2020). சர்வதேச சிவில்சமூக நிறுவனங்கள் கூட பெருந்தொற்றானது உலகளாவிய ரீதியில் சனநாயகத்துக்கு ஓர் அதிகரித்த நெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளதாகக் கவலை வெளியிட்டுள்ளன. உதாரணமாக, ப்ரீடம் ஹவுஸ் (Freedom House) என்ற அமைப்பு தனது 2020 ஆம் ஆண்டு சிறப்பு அறிக்கையில் "கொரோனா நோய்க்கிருமி பரவத் தொடங்கியதிலிருந்து சனநாயகம், மனித உரிமைகள் போன்றவற்றின் நிலைமையானது 80 நாடுகளில் மோசமடைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறது (*Democracy under Lockdown*, 2020). பெருந்தொற்றினை எதிர்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பதில் நடவடிக்கைகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி வருகின்ற நிலையில் அதுவே இந்நூலின் முக்கிய தேடுபொருளாகியுள்ளது. தற்போதைய இலங்கை அரசாங்கத்தினது கொவிட் பதில் நடவடிக்கைகள்

எவ்வாறு சமூகம், அரசியல் போன்றவற்றினது சனநாயக அடிப்படைக் கட்டுமானத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன என்பதனை வெவ்வேறு கோணங்களில் ஏழு அத்தியாயங்களூடாக இந்நூல் பரீட்சிக்கிறது.

கொவிட்-19 என்ற பெருந்தொற்றானது சகல நாடுகளையும் நிலைகுலையச் செய்துள்ளது. இந்தப் பெருந்தொற்றானது கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள மிகப் பாரதூரமான பொதுச்சுகாதார நெருக்கடியாக "முன்னொருபோதும் நிகழ்ந்திராத வகையில் அரசாங்கத்தினது தலையீட்டினையும் அதிகரித்துள்ளது" (Cheibub et al, 2020). சகல நாடுகளும் (அபிவிருத்தி அடைந்தவை, அடையாதவை என்ற எவ்வித வேறுபாடுமின்றி), சுகாதார நெருக்கடியைச் சமாளிக்க மிகக்கடுமையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன. ஆனால் அந்நடவடிக்கைகள் சில வேளைகளில் தேவையற்றவையாகக் காணப்படுகின்றன. தற்போது நிலவும் சுகாதார நெருக்கடியினது தீவிரத் தன்மை மிகத் தெளிவானதாகப் புலப்படுகின்ற போதும் உலக அரசாங்கங்கள் முன்னெடுத்துள்ள பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகள் ஏற்படுத்தவுள்ள பாரதூரமான விளைவுகள் பற்றி இவ்வுலகம் இன்னும் முழுதாக அறியவில்லை. அடிப்படை சிவில் சுதந்திரம் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் போன்றவற்றின் பரிமாணங்கள் மீது கவனஞ்செலுத்தி மேற்கொள்ளப்பட்ட கணிசமானளவு அறிவுத் தொகுப்பொன்று காணப்படுகிறது (Coppedge et al, 2011). அத்தோடு அதிகாரப் பிரிவினை (Separation of powers) சட்ட ஆட்சி (Rule of law) என்பன பூகோள கொவிட் பதில் நடவடிக்கைகளால் எத்தகைய சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளன என்றும் அதனால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பரிசீலித்தல் மற்றும் கிடைமட்ட பொறுப்புடைமை (Horizontal accountability) போன்றன எவ்வாறு தடைப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் குறித்த ஒரு தொகுதியான அறிவுத் தொகுப்பொன்று காணப்படுகிறது (Zwitter, 2012).

பெருந்தொற்றுக் காலத்தில் ஊடகங்கள், அரசாங்க நிர்வாகப் பிரிவுகள் போன்றவற்றால் ஏற்படுத்தப்பட்ட பதட்டச் சூழலினால் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது உரிமைகள், சுதந்திரம் போன்றன கட்டுப்படுத்தலுக்கு ஆளாகுவது குறித்து கேள்வியெழுப்பவில்லை. 14 நாடுகளில் பெற்றுக்கொண்ட தகவலின் படி, கொவிட் காலத்தில், பொது மக்கள் தமது அரசாங்கங்கள் முன்னெடுத்திருந்த கொள்கைகளைப் பற்றி அதிக கவனங் கொள்ளாததோடு நாட்டின் நோய்த்தொற்று மற்றும் இறப்பு விகிதத்தினது போக்கினை அவதானித்தே தமது ஒப்புதல்களை அரசாங்கத்தினது கொவிட் பதில் நடவடிக்கைகள் தொடர்பாக அளித்திருந்தனர் என சென் முதலானோர் குறிப்பிட்டனர் (Chen et al, 2021). எனவே, பெருந்தொற்றினால் ஏற்பட்டுள்ள உயிர் ஆபத்தை கண்டு

அஞ்சும் மக்கள் சனநாயகத்துக்கான பரப்பெல்லை சுருங்குவதையோ, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையோ கண்டு அஞ்சுவது குறைவாகவேயுள்ளது. லிவிட்ஸ்கி மற்றும் ஷீப்லட் (Levitsky & Ziblatt, 2018) ஆகியோரது சனநாயகம் மரணமடைவது எப்படி? என்ற நூலில், 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து சனநாயகம் என்பது ஆயுத ரீதியான புரட்சிகளினூடாக அழிவடைவதனை விட காலப்போக்கில் மெதுவாக அது அழிவடைந்து போவதே அதிகரித்துள்ளது என வாதிடுகின்றனர். இப்பெருந்தொற்றானது அரசுகளால் தவிர்க்கப்பட வேண்டிய விடயங்களைச் சாதாரணப்படுத்துவதற்கான (Normalization) சூழ்நிலைகளை ஏற்படுத்தி, சனநாயக அழிவிற்கு வழிசமைக்கிறது. இந்தப் பின்னணியில் இலங்கை வாழ் பொதுமக்கள் எவ்வாறு அரசாங்கத்தினது பெருந்தொற்றுடன் தொடர்பான பதில்நடவடிக்கைகளை நோக்குகின்றனர், அப்பெருந்தொற்றினைக் குணப்படுத்துதல் நாட்டினது சனநாயகத்தின் மீது ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் போன்றவற்றினைக் கண்டறிய இந்நூல் முற்படுகிறது.

கொவிட் பதில் நடவடிக்கைகளின் ஆழமானதும் சிக்கலானதுமான அரசியல் பாதிப்புகளைப் புரிந்துகொள்ள இந்நூலானது சில எண்ணக்கருசார் வகைப்பாடுகள் மீது கவனஞ்செலுத்துகிறது. இந்த எண்ணக்கருக்கள் பெருந்தொற்றுக்கால ஆளுகைக்கான செயல்முறைகள் (Procedures), அரசாங்கங்களினது சட்டங்கள் (Rules) மற்றும் தர்க்கத் தன்மை போன்றவற்றினைப் பகுப்பாய்வு செய்து கலந்துரையாடுவதற்கான ஒரு பயனுள்ள பொதியாக அமைகின்றன. இந்த எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கம் கீழே விபரிக்கப்பட்டுள்ளது.

## பெருந்தொற்றுக் கால ஆளுகைத்தன்மை (Pandemic governmentality)

மக்களின் நடத்தையை வடிவமைத்தல், நெறிப்படுத்தல், திருத்தியமைத்தல் அல்லது அவர்களது நடத்தையை ஒழுங்குபடுத்தல் போன்றவற்றைக் குறிக்க பிரெஞ்சு தத்துவவாதியான மிச்செல் பூக்கோ (Michel Foucault) ஆளுகைத்தன்மை (Governmentality) என்ற புதிய சொல்லினைக் கண்டுபிடித்தார் (Li, 2007). ஆளுகைத்தன்மை என்பது பூக்கோவினால் பின்வருமாறு வரைவிலக்கணம் செய்யப்படுகிறது:

> நிறுவனங்கள், செயல்முறைகள், பகுப்பாய்வுகள், பிரதிபலிப்புகள் போன்றவற்றின் இணைத்தொகுப்பு, கணிப்புகள் (Calculations) மற்றும் உத்திகள் (Tactics) போன்றனவே எல்லையில்லாத சிக்கல் தன்மை கொண்ட அதிகார வடிவங்களினது விசேட பிரயோகத்துக்கு

வழிசமைக்கின்றன. இத்தகைய அதிகார வடிவங்களானவை தமது பாதுகாப்பினைச் செயல்படுத்துகின்ற வழிமுறைகளாகக் குறிப்பிட்டதொரு சனத்தொகையினர், அறிவு தொடர்பான கொள்கை ரீதியான வடிவம், அரசியல் பொருளாதாரம் போன்றவற்றைக் கொண்டுள்ளன (as cited in Burchell et al, 1991, p. 102).

பூக்கோவின் கருத்துப்படி, அரசாங்கம் என்பது வெறுமனே அரசியல் கட்டமைப்புகளும் அரசுகளைக் கையாளுதலும் அல்ல. அது தனிநபர்களது அல்லது குழுக்களது நடத்தையைத் தீர்மானிக்கின்றதொன்றாகும். “மற்றையவர்களின் செயல்களைக் கட்டுப்படுத்துதலே ஆட்சி செய்தலாகும்” என பூக்கோ வாதிடுகின்றார் (Foucault, 2002, p. 336). “மக்களின் சேமநலன் மற்றும் அதனை மேம்படுத்துதல், அவர்களின் செல்வத்தை அதிகரித்தல், நீண்ட ஆயுள், சுகாதாரம் மற்றும் பல்வேறு விடயங்களைப் பாதுகாப்பதே” அரசாங்கத்தின் நோக்கமாகும் (Burchell et al, 1991, p. 100). ஆயினும், அரசாங்கங்களால் ஒவ்வொரு நபரையும் தனிப்பட்ட ரீதியில் கட்டுப்படுத்துவது இயலாத காரியமாகும். ஆகையால் அரசாங்கங்கள் நிபந்தனைகளை விதிப்பதன் ஊடாக “விடயங்களை ஒழுங்குபடுத்தி சொந்த நலன்களைப் பாதுகாக்க முனையும் தனிநபர்களுக்குத் தேவையானவற்றினைப் பெற்றுக்கொள்ளச் செய்கின்றன” (Scott, 1995, p. 202). எனவே, நவீன ஆளுகை (Modern governance) என்பது செயல்முறைகள், சட்டங்கள், தர்க்கத்தன்மை போன்றவற்றை உள்ளடக்கியதொரு சிக்கலான பொறிமுறையாகும். லீ (Li, 2007, p. 275) என்பவரின் கருத்துப்படி, “அதிகாரமானது தொலைவிலிருந்து செயற்படும் போது மக்கள் அதன் நடத்தை எவ்வாறு இடம்பெறுகிறது அல்லது ஏன் அது அவ்வாறு இடம்பெறுகின்றது என்பதனை பெரிதாக உணர்வதில்லை. அதனால் அதிகாரம் செயற்படும் விதம் தொடர்பான கருத்து வேறுபாடுகள் எழுவதில்லை.”

பெருந்தொற்றுக் காலத்தில் பொதுவாக நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படுகின்ற நிலையில், ஆளுகைத் தன்மையின் எளிய தர்க்கமானது ஒரு புதுவிதமான நிர்ப்பந்தத்தினை எதிர்கொண்டுள்ளது. காரணம் எவ்விதமான இழப்பினை எதிர்கொண்டேனும் தனது சுகாதாரத்தினைப் பாதுகாக்க சமூக இடைவெளிக்கான ஒழுங்குவிதிகளை (Regulations) பின்பற்ற வேண்டியதொரு நிலைமை தனிமனிதர்களுக்கு காணப்படுகிறது. அதனால் அதிகரிப்புக்குள்ளான அரசாங்கக் கட்டுப்பாடு, கடுமையான மேற்பார்வையினால் வழக்கத்துக்கு மாறாக அன்றாட வாழ்க்கை நசுக்கப்படுதல், சிலவேளை அவற்றுக்குப் பொது ஒப்புதல் அளிக்கப்படுதல், மேற்கூறப்பட்டவற்றை இயல்பான விடயமாகக் கருதி சாதாரணமானதாக்குதல் போன்றன இடம்பெறுகின்றன. இந்த விடயங்கள் அடுத்த பகுதியில் விபரிக்கப்படுகின்றன.

## விதிவிலக்கு நிலை, பெருந்தொற்று மற்றும் சர்வாதிகார ஆட்சி

கொவிட்-19 பெருந்தொற்றுக்கு எதிராக, நாட்டினது எல்லைகளை மூடுதல், முடக்குதல்கள் (Lockdowns), முன்னொருபோதும் இல்லாதவாறு பொருளாதாரத்தினை ஊக்குவிக்கும் திட்டங்கள் மற்றும் தொற்று விகிதத்தையும் தொற்றினால் பீடிக்கப்பட்ட நோயாளிகளின் நடமாட்டத்தினையும் அதிகாரிகள் கண்காணிப்பதற்காக டிஜிட்டல் கருவிகளின் கண்டுபிடித்தல் என பல்வேறு வழிமுறைகளை உலகம் முழுவதுமுள்ள பல்வேறு அரசாங்கங்கள் கையாண்டுள்ளன. சில தலைவர்கள் "விதிவிலக்கு நிலைமையினை (State of exception) பிரகடனப்படுத்தி, இப்பெருந்தொற்று காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அவசரகால நிலைக்குரிய நடிவடிக்கைகள் யாவும் முற்றுமுழுக்க மக்களின் நலனிற்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தமது நாட்டு மக்களை நம்பவைத்துள்ளனர். "விதிவிலக்கு நிலை" என்ற எண்ணக்கருவினை முதன்முதலாக இத்தாலி நாட்டைச் சேர்ந்த தத்துவவாதி ஜோர்ஜியோ அகம்பன் (Georgio Agamben) என்பவர் நெருக்கடி நிலைமையொன்றின் போது, அரசாங்கங்களின் அதிகாரம் அதிகரிப்படுவதனை விவரிக்க உருவாக்கியதொரு பதமாகக் காணப்படுகிறது (Agamben, 2005). வழக்கத்திற்கு மாறான அதிகார அதிகரிப்பு அல்லது "விதிவிலக்கு நிலை" என்பது காலாகாலமாக மிகக் குறைவான கவனத்துக்குள்ளாகிய விடயமாக இருக்கின்ற போதும் அது வலிமை மிக்கதொரு தந்திரோபாயமாக அரசாங்கங்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றும் அது சனநாயக அரசுகளை சர்வாதிகார அரசுகளாக மாற்றக்கூடிய வலிமையினைப் பெற்றுள்ளதாகவும் அகம்பன் வாதிடுகிறார். இந்நடவடிக்கைகளானவை தீவிரமாகவும் அதேநேரம் தர்க்கமற்ற வகையிலும் தேவையற்றதொரு அவசரகால நடவடிக்கைளாகவும் அவை இடம்பெறுகின்றன என அகம்பன் குறிப்பிடுகின்றார். அவரது பார்வையில் இவ்வாறான ஏற்றத்தாழ்வான பதில் நடவடிக்கையானது விதிவிலக்கு நிலையினை இயல்பானதொரு ஆட்சி மாற்றமாகப் பயன்படுத்தி, நிறைவேற்று துறையினது தற்துணிவு அதிகாரத்தினூடாக இராணுவ ஆட்சியை அறிமுகம் செய்ய முனைகிறது என அகம்பன் குறிப்பிடுகிறார். முன்னாள் அமெரிக்க சனாதிபதியான டொனால்ட் டிரம்ப் உட்பட பல ஆட்சியாளர்கள் பெருந்தொற்றினை ஒரு யுத்தமாக விவரித்து, பொருளாதார அதிர்ச்சிக் கொள்கைகள், விதிவிலக்கு நடவடிக்கைகள், ஏனைய தீவிரத்தன்மை கொண்ட பாதுகாப்பு ஆரம்பிப்புகள் போன்றவற்றினை நடைமுறைப்படுத்தி ஊக்குவிப்பதற்கான ஆதரவினை திரட்டியிருந்தனர். பெருந்தொற்றினை ஒரு "ஆபத்து" என விவரித்து, பாதுகாப்போடு தொடர்புடைய பல்வேறு அமைப்புக்களை நிறுவுதல், நவதாராள அரசாங்கங்கள் மிக விரும்பும் "கட்டமைப்புசார் மாற்றங்களை" ஆழப்படுத்துதல் போன்றவற்றுக்கான ஒரு வழிமுறையாக

கொவிட் பதில் நடவடிக்கைகள் உபயோகிக்கப்பட்டுள்ளதாக டியஸ் மற்றும் டிலுக்கி (Dias and Deluchey, 2020) போன்றோர் வாதிடுகின்றனர் (p.3). "கொவிட்-19 பரவலை 'கண்ணுக்குப் புலப்படாத எதிரியாக' உருவகிப்பதானது கீழ்ப்படிவு மற்றும் அடிமைப்படுத்தல் போன்றவற்றினை மேம்படுத்துகின்ற ஆளுகைத்தன்மைக்கு மக்களை மீண்டும் ஆட்படுத்துகிறது. இந்த விரோத நிலைமையினைக் கொண்டு வரவும் அதனைக் கண்ணுக்குப் புலப்படாததொரு விடயமாகத் தக்கவைத்துக் கொள்ளவும் அரசாங்கம் பல்வேறு உத்திகளை கையாளுகின்றது" (Ibid).

சகல அரசாங்கங்களும் (சட்ட ரீதியாக நிறுவப்பட்ட வழிமுறைகளின் ஊடாகச் செயற்படுகின்ற நாடுகள், சட்டத்துக்குப் புறம்பாக உரிமைகள் மற்றும் கடமைகளை வரையறுத்துச் செயற்படுகின்ற நாடுகள், பலவீனமான நாடுகள் அல்லது பலம் பொருந்திய நாடுகள் போன்ற சகல சனநாயக நாடுகளும்) எவ்விதமான வேறுபாடுமின்றி நோய்க்கிருமியின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தாம் முன்னெடுத்த ஏற்றத்தாழ்வான பதில் நடவடிக்கைகளை நியாயப்படுத்தவே முயல்கின்றன. நோய்க்கிருமியின் பரவலை குறைக்கின்ற நடவடிக்கைகள் பெரும்பாலும் மக்களின் அடிப்படை சிவில் சுதந்திரங்களை மட்டுப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. இந்த அடிப்படை சிவில் சுதந்திரங்கள் பொதுவாக சனநாயக அரசுகளில் பாதுகாக்கப்படுவதோடு, விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரமே கட்டுப்படுத்தப்படுகின்றன (Coppedge et al, 2011). மேலும், முன்னர் குறிப்பிட்டவாறு "உடனடியாகச் செயற்படுவதற்கான உத்வேகமானது அதிகாரப் பிரிவினை மற்றும் சட்ட ஆட்சி தத்துவங்களுடன் முரண்படுவதற்கான சூழலை ஏற்படுத்துகிறது (அரசின் செயல்களை மேற்பார்வை செய்தல் மற்றும் கிடைமட்ட பொறுப்புடைமையை உறுதிப்படுத்துதல் என்பன அதிகாரப் பிரிவினை மற்றும் சட்ட ஆட்சி போன்ற தத்துவங்களுடன் தொடர்புபடுகின்றன)" (Zwitter, 2012, p. 100). ஆகையால் பொதுவாக சட்டதுறையினது சட்ட உருவாக்க அதிகாரமானது பெருந்தொற்றுக் கால நடவடிக்கைகளால் அது நிறைவேற்றுத்துறைக்குரியது என்ற நிலைப்பாடு நியாயப்படுத்தப்பட்டுள்ளது (Engler et al, 2021). இதனால் பெருந்தொற்றானது "தேசியவாத தர்க்கங்களை மீள வடிவமைத்து புத்துயிர் அளித்தல், சர்வாதிகார தன்மை பொருந்திய அரசாங்கத்தினை புதுப்பித்தல், விதிவிலக்கு நிலைமை தொடர்பாக தள்ளாடும் பொதுமக்கள் அபிப்பிராயத்தினை அது ஒரு சாதாரணமான ஆட்சி மாற்றமாகக் கருதி அதனை ஏற்றுக்கொள்ளச் செய்தலை ஊக்குவித்தல்" போன்றவற்றுக்காகப் பெருந்தொற்றானது பயன்படுத்தப்படுவதாக ஜன் ஹன்றிசிசன் எச்சரிக்கை விடுப்பதனைக் காணலாம் (Hinrichesen, 2020).

## பெருந்தொற்றும் நவதாராளவாதமும்

தாராளவாதத்தின் சகல வடிவங்களும் கோட்பாட்டு ரீதியாகப் பிரசைகளின் வாழ்க்கையில் அரசினது குறைந்தபட்சத் தலையீட்டினையே கோரி நிற்கின்றன. எனினும், 'நவ' என்ற திரிபுபட்ட வடிவமானது அபிவிருத்தியடைந்த நாடுகளில் மட்டுமல்ல உலகின் சகல சமூகங்களிலும், கட்டமைப்புசார் மாற்றங்களைக் கொண்டுவருவதிலேயே அதன் இருப்பு தங்கியுள்ளது. அரசு படிப்படியாக பின்வாங்குதல், அரச நிறுவனங்கள் பலவீனமடைதல் என்ற பின்னணியில் பெருந்தொற்றின் தாக்கமானது மேலும் தீவிரமடைந்துள்ளது. அல்பிரடோ சாட்-பில்லியோ (Alfredo Saad-Filho) என்பவரது 'நவதாராளவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் கொவிட்-19' (Covid to end of neoliberalism) எனும் கட்டுரையில்,

> நவதாராளவாதம் ஆரம்பமாகி நான்கு தசாப்தங்களின் பின்னர், சந்தையின் 'அதியுயர் வினைத்திறன்' என்ற பெயரில் பெருந்தொற்றானது அரசின் இயலளவை குறைத்துள்ளது. பூகோளமயமாக்கப்பட்ட உற்பத்தியினால் கைத்தொழில் மயமாதலிலிருந்து விடுபடுதல் (Deindustrialization) ஊக்கமூட்டப்பட்டுள்ளது. புதிரான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சிந்தனைகள் மற்றும் அரச உத்தரவாதங்களினால் குறுகிய கால இலாபத்தினை ஈட்டுவதற்காகப் பலவீனமான நிதிக் கட்டமைப்புகள் தாபிக்கப்பட்டுள்ளன (2020, p. 478).

நவதாராளவாத கொள்கைகள் "எமது பொதுச்சேவைகள் குறைவடைய அல்லது அவற்றினை இல்லாதொழிக்க முனைவதோடு கல்வி, சுகாதாரம் போன்றனவற்றை இலாபம் ஈட்டித்தரக்கூடிய துறைகளாக மாற்றியுள்ளன. புறக்கணிக்கப்பட்ட மற்றும் குறைந்த ஊதியத்தினைப் பெறுகின்றவர்களது இழப்பில் முதலாளிகளுக்கான இலாபம் பதுக்கப்படுகின்றது. மனிதப்பாதுகாப்பு, பொதுநலன் என்ற பெயரில் இராணுவமயப்படுத்தப்பட்ட உலகத்தினது அனுகூலத்திற்காக மக்களுக்கும் நாடுகளுக்குமிடையே அசமத்துவத்தை அதிகரித்துள்ளன" (Isakovic, 2020). பல புலமையாளர்கள் கொவிட்-19 என்பது "மிகப்பெரிய சமமாக்கி" (Great equalizer) என்பதினை விளக்க பாரிய முயற்சி எடுத்திருந்தாலும் கூட, பெருந்தொற்றானது பெரும்பாலும் மேலே கூறப்பட்ட விடயங்களை நிலைநிறுத்துவதாகக் காணப்படுகிறது (Bowleg, 2020; Marmot and Allen, 2020). தனிமைப்படுத்தல் விதிகளைப் பின்பற்றுவதற்கான திறமை, பெருந்தொற்று நிலைமையின் கீழ் வாழுதல், நிதி, உளவியல் தாக்கத்திலிருந்து விடுபடுதல் போன்றவற்றிற்கான திறனானது பொதுவாக வயது, பால்நிலை, வர்க்கம், புவியியல் போன்ற சமூக பொருளாதார காரணிகளில் தங்கியுள்ளதாக ஐசாகோவிக்

(Isakovic, 2020) வாதிடுகிறார். இந்நூலின் அடுத்துவரும் பகுதியில், 'பிண அரசியல்' (Necropolitics) என்ற எண்ணக்கரு கலந்துரையாடப்படுகிது. பிண அரசியல் என்ற எண்ணக்கருவே இந்நூலின் அனைத்து அத்தியாயங்களையும் வழி நடத்துகிறது.

## பிண அரசியலும் (Necropolitics) அப்புறப்படுத்தப்படும் வாழ்வும்

பெருந்தொற்றானது நவதாராளவாத ஆளுகையின் கொடூரத் தன்மையினை வெவ்வேறுபட்ட குழுக்களுக்கு வெவ்வேறு விதமாக வெளிப்படுத்தியுள்ளது. நவதாராளவாத ஆளுகை தொடர்பான சிந்தனை மற்றும் அமுலாக்க முறைமையில் சிலரது வாழ்வு மற்றயவர்களினது வாழ்வை விட முக்கியத்துவம் குறைந்ததாக கருதப்படுவதால் அவர்கள் இலகுவாக 'அப்புறப்படுத்தப்படுகின்றனர்'. அக்கிலே எம்பம்பே அவர்களின் பிண அரசியல் என்பது, மேற்குறிப்பிட்ட நிலைப்பாடு தொடர்பான முக்கியமானதொரு சட்டகத்தை வழங்குகிறது (Mbembe, 2003). எம்பம்பேயின் விளக்கத்தின்படி, ஆதிக்கம் பொருந்தியவர்களுக்கு அருகிலுள்ளோரின் வாழ்வும் பெறுமதியுடையது (Vagehese, 2021). இனத்துவ, மத சிறுபான்மை சமூகத்தவர்கள், ஓரங்கட்டப்பட்ட பொருளாதாரக் குழுக்கள் போன்றோர் எதிர்கொள்ளும் பாதிப்புகளை பிண அரசியல் என்ற சட்டகத்தினூடாகப் புரிந்துகொள்ளும் போது புதிய புரிதல் கிடைக்கப் பெறுகிறது. அத்தோடு இலங்கையின் பெருந்தொற்று ஆளுகைத் தன்மையையும் அதற்கான தர்க்கரீதியான அடித்தளத்தையும் விளங்கிக் கொள்வதற்கான பிறிதொரு எண்ணக்கருசார் கருவியாக இந்த பிண அரசியல் என்ற எண்ணக்கரு காணப்படுகிறது.

நீண்டகால இனத்துவ அசமத்துவங்களால் வடிவமைக்கப்பட்ட தொழில்சார் நிலைமைகள், வாழ்க்கை நிலைமைகள், சமூக உலகங்கள் தொடர்பான பரந்துபட்ட சமூக அசமத்துவங்கள் மற்றும் ஏலவேயுள்ள சுகாதார நிலைமைகள் போன்றன பெருந்தொற்றினது பாதிப்பினைத் தீவிரப்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தியுள்ளன (Sandset, 2020). "கறுப்பின, ஆசிய, மத்திய கிழக்கு பின்னணிகளைக் கொண்ட பெண்கள் இரு தடவை பாதிப்புக்குள்ளாகிறார்கள். காரணம், அப்பெண்களது குறைந்த ஊதியத் தொழில்களால் அவர்கள் அதிகளவான கொவிட்-19 தொற்றுக்கு ஆளாகின்ற அபாயத்தினைக் கொண்டிருப்பதாக" ஐக்கிய இராச்சியத்தினைத் தளமாகக் கொண்ட வேலைவாய்ப்பு உரிமைகள் நிறுவனம் (Institute of Employment Rights) குறிப்பிடுகிறது (*BAME women 'at twice the risk' of both Covid-19 and low pay, research shows*, 2020). சில இனரீதியான பாகுபாடுகள், பொருளாதாரச் சீரழிவுகள் போன்றன சமூகங்களை மேலும் புறந்தள்ளி செயலற்றவர்களாக்கியுள்ளன. இதனால்,

அச்சமூகத்தினர் அதிகளவான கொவிட்-19 தொற்றுக்கு ஆளாகின்றனர் (Sandset, 2020). ஜூடித் பட்லர் (Judith Butler) என்பவரினது கருத்துக்கள் இது தொடர்பாக மிக முக்கியமான அறிவுறுத்தல்களை வழங்குகிறது: "சில சமூகங்களில் மற்றைய சமூகங்களை விடக் கொடுமையான வன்முறைகளுக்கு முகங்கொடுப்பதற்கான பல்வேறுபட்ட பங்கீட்டு வடிவங்களுக்கான வழிகள் காணப்படுகின்றன" (Butler, 2006, p. xii). கொவிட்-19 காலத்தில் பொதுவாக அரசு கொண்டிருக்கும் 'விதிவிலக்கு நிலை' மற்றும் 'சகலவற்றினையும் ஏற்றுக்கொள்ளும் தன்மை' போன்றன எவ்வாறு 'பிண அரசியல்' (Necropolitics) இடம்பெறுவதற்கான சூழலை ஏற்படுத்துகின்றன என சான்செட் குறிப்பிடுகிறார். பிண அரசியலில் காணப்படும் ஆபத்து என்னவெனில், உண்மையான கட்டமைப்புசார் வன்முறையின் தாக்கத்தினை மக்கள் புறக்கணிப்பதும் சிலரது வாழ்க்கை ஆபத்தான நிலையில் இருப்பதனை ஒரு சாதாரணமான விடயமாக அவர்கள் ஏற்றுக்கொள்ளுவதுமாகும் (சிலரது வாழ்க்கை கொவிட்-19 ஆல் பாதிப்புக்குள்ளாவது ஓர் இயல்பான விடயம் என மக்கள் நினைக்கின்ற நிலைமை காணப்படுகிறது). கொவிட் காலத்தில் மக்கள் எதிர்கொள்ளுகின்ற பாதிப்புகள் என்பது, ஓர் இயல்பான 'விடயமாகச்' சித்திரிக்கப்படுகிறது (Sandset, 2020).

சகல (சனநாயகம் உட்பட சகல விதமான) அரசாங்கங்களும் நோய்க்கிருமி பரவுவதைத் தடுப்பதற்காக சிவில் சுதந்திரத்தை கடுமையாகக் கட்டுப்படுத்துகின்ற பல அசாதாரண நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தன. கொவிட்-19 ஆனது இந்த விதிவிலக்கு நிலைமையை நியாயப்படுத்தியது. விதிவிலக்கு நிலைமையின் கீழ், பிரசைகளின் சுதந்திரம் மற்றும் உரிமைகள் நசுக்கப்பட்டு, நிலைக்குத்தான மற்றும் கிடைமட்ட கூட்டுப்பொறுப்பற்றதொரு அதிகாரக் குவிப்பினை ஆட்சியாளர்கள் மேற்கொண்டனர். பெருந்தொற்றுக்கெதிரான போரில் பல அரசுகள் ஆளுகை செய்தலை இராணுவத்தின் அதிகரித்த கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவந்ததோடு பிரசைகள் மீதான தீவிர கண்காணிப்பினையும் இயல்பாக்கியிருந்தன. புதிய சர்வாதிகார போக்கானது, நோய்க்கிருமிக்கு எதிரான போராட்டமாகவன்றி அதிகரித்த நவதாராளவாத கட்டமைப்புசார் மாற்றங்களுக்கு எதிரான எதிர்ப்பினை நசுக்குவதற்கே பல நாடுகளால் பயன்படுத்தப்பட்டது. இறுதியாக பெருந்தொற்று ஆளுகைத் தன்மையினால் சாதாரணமாக்கப்பட்ட விதிவிலக்கு நிலைமையானது பெருந்தொற்றுக்குப் பின்னரும் நிலைத்துநிற்கக் கூடிய சனநாயகம் அல்லாத முறைகளை ஏற்றுக்கொள்ளவும் செய்துள்ளது. இந்த சிக்கலான அரசியல் நிலைமை, இலங்கையில் கொவிட்-19 பதில் நடவடிக்கைகள் அரசியல், சமூகத்தில் ஏற்படுத்தும் பாதிப்பு போன்றன பற்றி அறிந்துகொள்ளவுமே இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

## இலங்கையில் பெருந்தொற்றுக்கு முன்னரான ஆளுகைத் தன்மை

உயர் விகித கல்வியறிவுடைய சமூகம், சுகாதாரம், கல்வி போன்றவற்றுக்கான வலுவான சேமநலன் அடிப்படைகள் (Jayasuriya, 2004), இவற்றினை செயற்படுத்துவதற்கான பாராளுமன்ற சனநாயகம் (பல நாடுகளிலும் பரந்துபட்டவகையில் காணப்படுகின்ற) போன்றன சுதந்திர இலங்கை பற்றிய நம்பிக்கை நிறைந்த தோற்றத்தினைப் பெற்றுக் கொடுத்திருந்தன (DeVotta, 2010). எனினும் 70 வருடகால சுதந்திரத்திற்குப் பின்னர் ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சியினால் இலங்கையினது சனநாயகமானது ஒரு கொடுங்கோலான இனத்துவ ஆட்சியை நோக்கி விரைவாகச் சென்று கொண்டிருக்கின்றது (DeVotta, 2021). 2009இல் தமிழீழ விடுதலைப் புலிகள் (Liberation Tigers of Tamil Eelam) என்ற ஆயுதக் குழுவுக்கு எதிரான யுத்த வெற்றியைத் தொடர்ந்து ராஜபக்ஷ குடும்பம் இலங்கை அரசியலில் தமது குடும்ப தலைமைத்துவத்தை ஒருங்கிணைக்க ஆரம்பித்தது. ஏனைய அரசியல் சக்திகளைப் போலில்லாமல் சிங்கள பௌத்த சமூகத்தின் ஆதரவை திரட்டுவதில் வெற்றிகண்ட ராஜபக்ஷ, தேசத்திற்கு எதிரான சகல எதிரிகளிடமிருந்தும் மக்களைப் பாதுகாப்பவராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். 2015இல் பரந்த சனநாயக அணியினது கைகளில் தேர்தல் ரீதியாக அவர் தோற்கடிக்கப்பட்டாலும் இலங்கை பெருந்தொற்றை எதிர்கொள்வதற்கு சற்று முன்னதாக ராஜபக்ஷ அணியினர் மிக வலுவான வகையில் மீண்டும் அதிகாரத்திற்குத் திரும்பியிருந்தனர். நல்லாட்சிக் கூட்டணியினர் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமை, ஊழல், உள்ளகப் போட்டி மற்றும் குழுவாதம், ஈஸ்டர் தாக்குதலை தடுக்கத் தவறியமை போன்றமை ராஜபக்ஷ அணியினர் மீள அதிகாரத்துக்கு வருவதற்கான வலுவான சூழ்நிலைகளாக அமைந்தன. உயன்கொட (Uyangoda, 2020) விவரிப்பதன் படி:

> இந்த (நல்லாட்சிக் கூட்டணியினரது) தோல்வியானது, இலங்கை பொதுஜன முன்னணியினால் (Sri Lanka Podujana Peramuna) இலங்கைக்கு ஒரு வலுவான தலைவர், ஒரு வலுவான அரசாங்கம், இராணுவ பங்குபற்றலுடன் கூடிய ஒரு வலுவான நிர்வாகம், தடைகளும் சமனிலைகளும் இல்லாத வலுவான அதிகார மையம் போன்றவற்றுடன் கூடிய ஒரு தீவிரத்தன்மை பொருந்திய அரசியல் மாற்றீட்டினை வழங்கக் கூடிய ஒரு நிலையான மற்றும் நீண்டகாலத்திற்கு அரசியல் விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய தேர்தல் சுலோகமொன்றைத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்தது.

கோட்டாபய ராஜபக்ஷ தனது தேர்தல் பிரச்சாரத்தில் தேசியப் பாதுகாப்பு என்ற விடயத்தை வலியுறுத்தியதோடு தகுதி, நிபுணத்துவம், வினைத்திறன் போன்றவற்றின் அடிப்படையில் தன்னைப் பற்றிய

நல்ல அபிப்பிராயமொன்றினையும் அவர் திரட்டியிருந்தார். கோட்டாபய ராஜபக்ஷவின் எழுச்சியோடு "சிங்கள பௌத்த இனத்துவ ஆட்சி ஒருங்கிணைக்கப்பட்டு, பன்மைத்துவம் மாசுபடுத்தப்பட்டது. இறுதியாக தாராளவாதமே இந்த நாட்டில் எஞ்சியிருக்கிறது" என டிவட்டா குறிப்பிடுகின்றார் (DeVotta, 2021, p. 96).

ராஜபக்ஷ அணியினரின் ஆட்சியின் கீழ் (மஹிந்த மற்றும் கோட்டாபய), அரச அலுவல்களில் இராணுவத்தின் வகிபங்கு தொடர்ச்சியாக அதிகரித்தது. அகிலன் கதிர்காமர் குறிப்பிடுவதைப் போன்று யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் அபிவிருத்தி நோக்கங்களுக்காக இராணுவம் பெருமளவு ஈடுபடுத்தப்பட்டுள்ளது (Kadirgarmar, 2013). மேலும் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர், பல அரசாங்க நிறுவனங்களுக்கு ஓய்வுபெற்ற மற்றும் தற்போது இராணுவத்தில் பணியாற்றும் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர் (Fonseka and Dissanayake, 2021). ஆரம்பத்திலிருந்தே சனாதிபதி கோட்டாபய தனது அதிகாரத்தினைப் பிரயோகிப்பதில் எவ்வித தடைகளையும் அனுமதிக்காததோடு, எதிர்ப்பு மற்றும் விமர்சனம் போன்றவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளுகின்ற ஒரு சர்வாதிகார முறையிலான ஆட்சியினையே அவர் விரும்பியிருந்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இராணுவத்தையும் மரபுசார் கட்சி அரசியலுக்கு வெளியிலிருந்து பாராளுமன்றத்துக்குள் நுழைந்துகொண்ட தொழில்வல்லுநர்கள் போன்றோரையும் தான் வலுவாக நம்புவதை மறைப்பதற்கு சனாதிபதி கோட்டாபய எவ்விதமான முயற்சியையும் மேற்கொள்ளவில்லை.

இராணுவத் தேசியவாதம் மட்டுமல்லாது, ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் நவதாராளவாதப் பொருளாதார ஒழுங்கினது விரிவாக்கமும் தொடர்ந்து இடம்பெறுகிறது. தனது தேர்தலுக்கு ஆதரவளித்த நகர்ப்புற வர்த்தக வர்க்கங்களுடனான அவரது உறவினால் மாத்திரமன்றி, சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுவாக நவதாராளவாதக் கருத்தியலினது வாக்குறுதிகளை உள்ளார்ந்த முறையில் நம்புபவராகவும் காணப்படுகிறார். அவர் பதவியேற்ற திலிருந்து அவரது கொள்கை நிகழ்ச்சி நிரல்களில் இந்த கருத்தியல் ஈடுபாடு தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு நகரத்தினை நவீன பூகோள நகரமாக மாற்றுகின்ற அவரது நோக்கு, சந்தையின் தேவைகளுக்கமைவாக கல்விசார் மறுசீரமைப்புக்களுக்கு ஆதரவளித்தல், அரச சொத்துக்களை முகாமை செய்ய பூகோள மூலதனவியலாளர்களுடன் கூட்டுச்சேர்தல் போன்றன அவற்றினை வெளிப்படுத்துகின்ற சில உதாரணங்களாகும்.

சுதந்திரத்திற்குப் பின்னர், இலங்கையின் சனநாயகமானது சமாதானமான நிலையில் (State of peace) தொழிற்பட்டது என்பதனை விட விதிவிலக்கான நிலையில் (State of exception) தொழிற்பட்டது என்றே ஜோர்ஜியா அகம்பனின் (2005) புரிதலைப் பயன்படுத்தி வாதிட முடியும். சுதந்திரத்திற்குப் பின்னரான வரலாற்றில் இலங்கை பலதடவைகள் (குறிப்பாக வடக்கில் இராணுவ குழுக்கள் தோற்றம் பெற்றதிலிருந்து பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கான சட்டங்கள்) அவசரகால நிலையினை பிரகடனப்படுத்தியுள்ளது. 1953 இலிருந்து 2006 வரையிலான காலத்தில், இலங்கையில் 20 தடவைகள் அவசரகால பிரகடனம் பிறப்பிக்கப்பட்டுள்ளதோடு (Manoharan, 2006, p. 24), விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் மே மாதம் 2009 ஆம் ஆண்டு முடிவடையும் வரை இந்த நிலை தொடர்ந்தும் இருந்தது. விடுதலைப் புலிகளுடனான இராணுவ ரீதியான நடவடிக்கைகள் முடிவுக்கு வரும் வரை இவ்வாறானதொரு நிலை இருந்து வந்துள்ளது. இந்த நடவடிக்கைகள் பாதுகாப்பு காரணங்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டாலும் (உயர் பாதுகாப்பு வலயங்களைப் பேணுதல், இராணுவச் சோதனை நிலையங்களின் எண்ணிக்கையினை அதிகரித்தல், போர் இடம்பெற்ற பகுதிகளைப் பிரசைகள் செல்லாத வலயங்களாகச் சுற்றிவளைத்து ஆக்கிரமித்தல்), இவை சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு என்பனவற்றுடன் தொடர்புடையனவாகவே அறிந்துகொள்ளப்பட்டன. எனினும் இந்த நடவடிக்கைகள் கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்கு உத்தரவாதமளிக்கின்ற விடயங்கள் என்ற அடிப்படையில் நோக்கப்படாமை தெளிவாகப் புலப்படுகிறது (Uyangoda, 2020). 15ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை (சிறப்பு ஏற்பாடு) சட்டம் (1978), தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அதையொத்த நிறுவனங்களைத் தடைசெய்யும் சட்டம் (1978), குற்றவியல் நடைமுறை (சிறப்பு ஏற்பாடு) திருத்தச் சட்டமூலம் (Manoharan, 2006), பயங்கரவாதத் தடைச்சட்டம் (Prevention of Terrorism Act - 1979) போன்ற சட்டங்கள் மற்றும் விசேட ஒழுங்குவிதிகள் குழப்பநிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டன.

பயங்கரவாதத் தடைச்சட்டமானது எந்தவொரு நபரையும் ஆரம்பகட்ட விசாரணையின்றி தேடுதல், கைதுசெய்தல், நீண்டகாலமாகத் தடுத்து வைத்தல், வழக்கு விசாரணை செய்தல் போன்றவற்றுக்குரிய ஏற்பாடுகளை வழங்குகிறது. அது தவிர பயங்கரவாதத் தடைச்சட்டமானது ஏனைய விடயங்கள் (பகுதி 4-16), வழக்குத் தொடர்வதிலிருந்து தனிநபர்கள் விலக்கப்படுதல் (பகுதி 26), இருப்பிலுள்ள சட்டங்களுக்கு எதிராக செயற்படுதல் (பகுதி 28), பற்றிய ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது. தற்காலத்தில் இந்தச் சட்டம் பற்றி விசேடமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. காரணம் மத தீவிரவாதத்தின் எழுச்சியை அடக்குவதற்காக மார்ச்

மாதம் 2021ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஒழுங்குவிதி இலக்கம் 01இன் படி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அந்தத் திருத்தமானது பயங்கரவாதத்தினைத் தடுத்தல் (வன்முறைத் தன்மை கொண்ட கடுமையான மத கருத்தியலில் இருப்பவர்களை தீவிரத்தன்மையிலிருந்து விடுவித்தல்) என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது (*Concerns Relating to the Recent Regulations Issued Under the Prevention of Terrorism Act,* 2021). ஆயினும் இந்தச் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும் பொதுவாக, சிறுபான்மை சமூகங்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தல், எதிர்ப்பை நசுக்குதல், அரசாங்கத்தை எதிர்ப்பவர்களை அதைரியப்படுத்துதல் போன்றவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பது பரவலாக அறியப்பட்டதொரு விடயமாகும் (*ibid; Sri Lanka's draft Counter Terrorism Act: a license for continued state oppression, intimidation and torture,* 2017).

எனவே, பெருந்தொற்று ஆளுகைத்தன்மையானது அரசின் விதிவிலக்கு தன்மையினைப் புதிதாக உருவாக்கவில்லை. மாறாக பல தசாப்தங்களாகத் தொழிற்பட்டு வரும் நாட்டின் சனநாயகமே விதிவிலக்கு நிலைமையை நீடித்துள்ளது. இந்த நூலின் 7 அத்தியாயங்களும் வரலாற்று பின்னணியில் பெருந்தொற்றுக் கால ஆளுகைத்தன்மை மற்றும் இலங்கையின் சனநாயகம் ஆகியவற்றிற்கிடையிலான உறவுகள் தொடர்பாகப் புதிய மற்றும் தனித்துவமான நோக்குகளை வழங்குகின்றன.

## ஆய்வு முன்னெடுப்பு

இந்நூலானது பரந்ததொரு ஆய்வுச் செயற்றிட்டத்திற்காக முன்னெடுக்கப்பட்ட கணிப்பீட்டிலிருந்து பரிணமித்ததொன்றாகும். பெருந்தொற்று நிலைமை அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து நாட்டின் முழுக் கவனமும் பிரதானமாகச் சுகாதார நெருக்கடி பற்றியதாகவும் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் வாழ்க்கையை எவ்வாறு நிலைநிறுத்துவது என்பது பற்றியதாகவே காணப்பட்டது. ஊடகங்களைத் தவிர, சமூகம் மீதான பெருந்தொற்று ஆளுகையின் தீங்கு விளைவிக்கும் பாதிப்புகள் குறித்து முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினது சோஷல் இன்டிகேட்டர் (Social Indicator) என்ற கணிப்பீட்டு ஆய்வுப் பிரிவானது, அரசாங்கத்தினது கொவிட் பதில் நடவடிக்கைகளைப் பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயத்தினைக் கண்டறிவதற்கான ஆய்வொன்றினை முன்னெடுத்தது. ஆயினும் அளவுசார் ஆய்வொன்றினால் ஒரு விசாலமான தோற்றப்பாடு பற்றிய புரிதல் ஒன்றினையே வழங்கமுடியும். எனவே ஆய்வுக் குழுவானது

ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பெருந்தொற்று ஆளுகைத்தன்மையின் விளைவுகளைப் புரிந்துகொள்ள ஒரு தொகையான விடய ஆய்வுகளை மேற்கொண்டு ஆய்வை விரிவுபடுத்தியுள்ளது. பலதரப்பட்ட முறைகளினூடாக ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு விசாரணை ஆழப்படுத்தப்பட்ட அதேவேளை, விசாரணையின் பரப்பு சில குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. அதன்படி கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வாழ்வாதாரம், கல்வி, சிறுபான்மைச் சமூகத்தினர், உள்ளூர் மட்ட சமூக-அரசியல் வலையமைப்புகள் போன்றன மீதான அரசாங்கத்தினது கொவிட் பதில் நடவடிக்கைகளின் தாக்கம் பற்றிய விசாரணைகளை ஆய்வுக்குழு முன்னெடுத்தது. ஆய்வுக்குழுவின் அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் பல்வேறு முறைகள் மற்றும் மூலங்களினூடாகப் பெறப்பட்ட அறிவினைத் திரட்டி, ஆரம்பத்தில் கட்டுரை ஒன்றினைச் சமர்ப்பித்திருந்தனர். மேலதிக கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்களுக்குப் பின்னர் இந்தக் கட்டுரைகள் இந்நூலின் அத்தியாயங்களாக பரிணமித்துள்ளன. இந்நூலானது, இலங்கையின் கொவிட் பதில் நடவடிக்கைளைப் பற்றிய முழுமையான பகுப்பாய்வினை வழங்காவிட்டாலும் இலங்கை சேமநல சனநாயகத்தின் சிதைவு பற்றிய பல பெறுமதியான கருத்துக்களை முன்வைக்கிறது.

## அத்தியாய வடிவமைப்பு

பவானி பொன்சேகா (Bhavani Fonseka) மற்றும் குஷ்மிலா ரணசிங்க (Kushmila Ranasinghe) ஆகிய இருவரும் பெருந்தொற்றுக் காலப்பகுதியில் தாபிக்கப்பட்ட பல்வேறு ஒழுங்குமுறைகள், செயலணிகள் மீது கவனஞ்செலுத்தி, ஆளுகையின் மிக முக்கியமான நிறுவனஞ்சார் பரிணாமத்தினை முன்னிலைப்படுத்தியுள்ளனர். மேலும் பெருந்தொற்றுக் காலத்தில் அவசரமாக நிறைவேற்றப்பட்ட மிகச் சிக்கல் தன்மை கொண்ட இரு சட்டங்களான 20ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் கொழும்புத் துறைமுகநகர பொருளாதார மசோதா ஆகியன பற்றியும் அவர்கள் கலந்துரையாடுகின்றனர். பொன்சேகா மற்றும் ரணசிங்க ஆகியோர் இந்நிறுவன ரீதியான நடவடிக்கைகளால் சனநாயகம், மனித உரிமைகள், பொறுப்புடைமை, குறிப்பாக, சமூக சமத்துவமின்மை போன்றனவற்றுக்கு ஏற்படும் தாக்கங்கள் குறித்த பிரச்சினையையும் ஆய்வு செய்துள்ளனர்.

எனது அத்தியாயத்தில், கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் ஆளுகைத் தன்மையின் தொழிற்பாடு அல்லது கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தினது ஆளுகைத் தன்மை தொடர்பான செயல்முறைகள்,

தொழில்நுட்பங்கள், தர்க்கங்கள் பற்றி ஆராயப்படுகிறது. இந்த அத்தியாயமானது தற்போது அதிகாரத்தில் இருப்போர் தமது அதிகாரத்தினைத் தக்கவைக்க எத்தனிப்பது பெருந்தொற்றுக் கால ஆளுகையில் பிரதிபலிக்கிறது என வாதிடுகிறது. சனாதிபதியின் அரசியல் தொலைநோக்குப் பார்வையினை முன்னிறுத்துவதாகவே பெருந்தொற்றுக்கு எதிரான பதில் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாக இவ்வத்தியாயம் வாதிடுகிறது. அதன்படி சனாதிபதியின் அரசியல் தொலைநோக்குப் பார்வையானது இராணுவப் பங்குபற்றலுடனான நிர்வாகம், கீழ்ப்படிவும் நன்நடத்தையும் கொண்ட சமூகம், ராஜபக்ஷ அணியினரை மாத்திரம் உள்ளடக்கிய தொழில்வல்லுநராட்சி போன்றவற்றின் அடிப்படையிலான ஆளுகையினை வலியுறுத்துகின்றது. மேலும் இந்த அணுகுமுறையானது, பெருந்தொற்றுக் காலத்தில் ஏற்கனவேயிருக்கும் அசமத்துவம் மற்றும் ஓரங்கட்டல் போன்றவற்றைச் சமூகத்தில் மேலும் அதிகரித்துள்ளதோடு, கட்டுப்பாடான சமூகமொன்றினை உருவாக்குதல் என்ற போர்வையில் மக்கள் பங்குபற்றலுடன் கூடிய சனநாயகத்திற்கெதிராக தீவிரமான கண்காணிப்பு என்ற விடயத்தினை சாதாரணப்படுத்தப் பங்காற்றியுள்ளமையினை இவ்வத்தியாயம் வெளிக்கொணர்கிறது.

நிபுணிகா ஓ. லேக்கம்வசம் (Nipunika O. Lecamwasam) அவர்களது அத்தியாயமானது பெருந்தொற்றுக் காலத்தில் இலங்கையின் சமூகப் பாதுகாப்பு, சேமநலன்சார் பொறுப்புக் கூறல்கள் போன்றன தொடர்பாக உருவாக்கப்பட்ட கொள்கைகள் ஏற்படுத்திய பொருளாதாரப் பாதிப்பு பற்றி ஆராய்கிறது. சேமநல ஏற்பாடுகள் திருப்தியான வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் உயிர்களையும் வாழ்வாதாரத்தையும் பணயம் வைக்கும் நிலை ஏற்பட்டிருக்காது எனவும் இலங்கையில் சேமநல அரசு தொடர்ச்சியாக வலுவிழந்தமை, ஊழல், தவறான முகாமைத்துவம் ஆகியன பெருந்தொற்றோடு இணைந்து பிரசைகளை கொவிட்-19 போன்ற வெளிவாரியான அதிர்ச்சிகளினூடாக, இலங்கையை ஒரு வெற்று அரசாக கண்டுகொள்ள வழி சமைத்ததாகவும் அவர் வாதிடுகின்றமையைக் காணலாம்.

சகினா மொய்னுதீன் (Sakina Moinudeen) அவர்களது அத்தியாயமானது, இலங்கையில் பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகளில் உச்சப்படுத்தப்பட்ட இனத்துவ உணர்வு மற்றும் நோய்க்கிருமியின் தாக்கத்துக்குள்ளானவரை களங்கப்படுத்துதல் போன்றன எவ்வாறு அழிவுகரமான சமூக உறவுகளை ஏற்படுத்துகின்றன என்பதன் மீது கவனஞ்செலுத்தியுள்ளது. சிறுபான்மைச் சமூகமாகிய முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினைகளை வெளிப்படுத்த பெருந்தொற்றுக் காலத்தில் இடம்பெற்ற விடயங்களை ஆதாரமாகக்கொள்ளும் மொய்னுதீன் அவர்கள், இந்தச் சுகாதார நெருக்கடியானது இனத்துவ மையவாதம்

மற்றும் சனநாயகத்திற்கு எதிரான ஆளுகையினை மேற்கொள்ள வழிவகை செய்துள்ளது என விவாதிப்பதோடு எவ்விதமான பாரதூரமான விளைவுகளையும் எதிர்கொள்ளாது அவற்றினை மேற்கொள்வதற்கான மிகப்பொருத்தமான பின்னணியை ஆட்சியாளர்களுக்குப் பெருந்தொற்று வழங்கியுள்ளதாகவும் வாதிடுகின்றார். இலங்கையில் மக்கள் பங்குபற்றலுடன் கூடிய சனநாயகத்திற்கு இந்த நிகழ்வுகள் ஏற்படுத்தும் தாக்கங்களை வெளிப்படுத்தும் மொய்னுதீன் தன்னிச்சையானதும் தேர்ந்தெடுக்கப்பட்டதுமான சட்டங்கள், நிறைவேற்றுத்துறையிடம் குவிக்கப்பட்டுள்ள அதியுச்ச அதிகாரங்கள் போன்றன இலங்கைச் சமூகத்தின் சனநாயக அடிப்படையை ஆழமான வகையில் சிதைவுபடுத்துவதாகக் குறிப்பிடுகிறார்.

ஹசினி லேக்கம்வசம் (Hasini Lecamwasam) அவர்களது அத்தியாயமானது, இலங்கையின் இலவசக்கல்வி முறைமையில் பெருந்தொற்று கால கல்விசார் கொள்கைகள் ஏற்படுத்திய பாதிப்புகள் பற்றி ஆராய்கிறது. இந்த அத்தியாயமானது நிறுவன ரீதியான ஏற்பாடுகள் இல்லாத நிலையில், தனிநபர்கள் இணையவழி கல்விக்காகச் செலவு செய்கின்ற நிலையில், இனிமேலும் அதனை இலவசக்கல்வியென அடையாளப்படுத்துவது பொருத்தமற்றது என வாதிடுகிறது. கல்வித்துறையில் சேமநலன்சார் கடப்பாடுகளிலிருந்து அரசு அதிகரித்த வகையில் விடுபடுவதனை விமர்சிப்பதனூடாக நவதாராள அரசு படிப்படியாக பொறுப்புக்களைத் தனிநபர் வசமாக்குகிறது என்பதனை இவ்வத்தியாயம் வலியுறுத்துகிறது. நவதாராள போக்கின் “சுயாதீனம்” மற்றும் “தன்னிறைவு” என்ற பெயரில் தனிமனிதர்கள் மனநிலையானது தந்திரமாக வெல்லப்படுகிறது எனவும் அந்த அத்தியாயம் விமர்சிக்கிறது.

இலங்கை சுதந்திர வர்த்தக வலயத்தினைச் சேர்ந்த உள்நாட்டில் இடம்பெயர்ந்த பெண் தொழிலாளர்கள் பற்றிய கௌஷினி தம்மாலகே (Kaushini Dammalage) அவர்களினது அத்தியாயமானது, அரசினது பாரபட்சமான பெருந்தொற்றுக் காலக் கொள்கைகள், அது அந்த பிரசைகள் குழுவில் ஏற்படுத்திய பாதிப்புகள் போன்றன பற்றி ஆராய்கிறது. இந்த அத்தியாயமானது பெருந்தொற்றுக் கால கொள்கை உருவாக்கம், அக்காலத்தில் இடம்பெற்ற ஏனைய நிகழ்வுகள் மூலதன-ஊழிய உறவில் (Capital-labour nexus) ஏற்படுத்திய மாற்றம், இது தொடர்பில் அரசின் மத்தியஸ்தம் ஏற்படுத்திய தாக்கம் குறித்து விசேட கவனஞ்செலுத்துகிறது. சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் தொடர்ச்சியாகச் சுரண்டப்படுவது, குறைந்தளவான உற்பத்திச் செலவினால் இலாபமடையும் ‘முதலாளிகள்’ மற்றும் முதலாளிகளிடமிருந்து பெறப்படும் வரிப்பணத்தினால் நன்மையடையும் ‘அரசு’ ஆகிய இரு தரப்பினாலுமாகும் என தம்மாலகே வாதிடுகிறார்.

தம்மாலகேயின் கருத்துப்படி, பெருந்தொற்றுக் காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் (மூலதனத்தை உடைமையாகக் கொண்ட முதலாளிகள், அரசு போன்றவற்றால்) தொழிலாளர்கள் மீதான சுரண்டல் மேலும் அதிகரிப்பதனை அனுமதித்திருந்தன.

ஷஷிக் சில்வா (Shashik Silva) அவர்களின் அத்தியாயமானது, கொவிட்-19 தொடர்பான சேவைகளைப் பெறுவதில் முறைசாரா தொடர்புகள் மற்றும் வலையமைப்புகள் வகித்த வகிபங்கு பற்றி ஆராய்கிறது. பெருந்தொற்றுடன் தொடர்பான சேவைகளை விநியோகம் செய்வதற்கு உத்தியோகபூர்வ நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகள் ஏற்கனவே காணப்பட்டாலும் விநியோகத்தின் முழுச்செயற்பாடுகளும் அரசியல்வாதிகளால் அவர்களின் கட்டுப்பாட்டுக்கு கீழ் எவ்வாறு இடம்பெற்றன என்பதனை இவ்வத்தியாயம் குறிப்பிடுகிறது. சில்வாவின் கருத்துப்படி, இந்த வலையமைப்பில் முக்கியமான இடையீட்டாளர்களாக (Mediators) சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள் எழுச்சியடைந்திருந்தாலும் கூட, இறுதியில் அரசியல்வாதிகளிலேயே அவர்கள் தங்கியிருக்க வேண்டிய சூழல் காணப்படுகிறது. ஆதரவு நல்கும் முறையின் வகிபங்கினை ஏற்றுக்கொள்வதோடு சமூகத்தின் விளிம்பில் உள்ளவர்களுக்கு அத்தகைய சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முறைசாரா வலையமைப்புகள் பங்களிப்பதாக வாதிடும் சில்வா, அவ்வாறான முறைசாரா வலையமைப்புகளினால் புதிய சமத்துவமின்மைகள் தோன்றி, ஏற்கனவே இருக்கின்ற அசமத்துவம் வலிமையடைந்து சனநாயகத்தின் அடிப்படைக்கு ஏற்படவிருக்கும் தீங்கு குறித்து முன்னெச்சரிக்கை விடுத்து அத்தியாயம் நிறைவு செய்யப்படுகின்றது.

## உசாத்துணைகள்:


Agamben, G. (2005) *State of exception*. Illinois: University of Chicago Press.

Agamben, G. (2020) '*The state of exception provoked by an unmotivated emergency*' *praxis.* Available at https://positionspolitics.org/giorgio-agamben-the-state-of-exception-provoked-by-an-unmotivated-emergency/ (Accessed: 07 July 2021).

*BAME women 'at twice the risk' of both Covid-19 and low pay, research shows* (2020) *Institute of Employment Rights.* Available at https://www.ier.org.uk/news/bame-women-at-twice-the-risk-of-both-covid-19-and-low-pay-research-shows/ (Accessed: 17 June 2021).

Bowleg, L. (2020) 'We're not all in this together: On COVID-19, intersectionality, and structural inequality', *American Journal of Public Health*, 110(7), p. 917.

Burchell, G. Gordon, C. and Miller, P. (1991) 'Governmentality' in Burchell, G. Gordon, C. and Miller, P. (Eds.) *The Foucault effect: Studies in governmentality.* Illinois: University of Chicago Press, pp. 87-104.

Butler, J. (2006) *Precarious life: The powers of mourning and violence*. London: Verso Books.

Cheibub, J.A., Ji Y.J., Hong, and Adam Przeworski (2020) 'Rights and Deaths: Government Reactions to the Pandemic', *SSRN* Working Paper.

Chen et al. (2021) 'What factors drive the satisfaction of citizens with governments' responses to COVID-19?', *International Journal of Infectious Diseases*, 102, pp. 327-331.

Choukroune, L. (2020) 'When the state of exception becomes the norm, democracy is on a tightrope', *The Conversation,* 27 April. Available at https://theconversation.com/when-the-state-of-exception-becomes-the-norm-democracy-is-on-a-tightrope-135369 (Accessed: 02 July 2020).

*Concerns Relating to the Recent Regulations Issued Under the Prevention of Terrorism Act* (2021) *Centre for Policy Alternatives.* Available at https://www.cpalanka.org/concerns-relating-to-the-recent-regulations-issued-under-the-prevention-of-terrorism-act/ (Accessed: 03 July 2021).

Coppedge, M., et al. (2011) 'Conceptualizing and Measuring Democracy: A New Approach', *Perspectives on Politics*, 9(2), pp. 247–67.

*Democracy under Lockdown* (2020) *Freedom House.* Available at https://freedomhouse.org/report/special-report/2020/democracy-under-lockdown (Accessed: 15 June 2020).

DeVotta, N. (2010) *Politics and governance in post-independence Sri Lanka.* London and elsewhere: Routledge.

DeVotta, N. (2021) 'Sri Lanka: Returning to Ethnocracy', *Journal of Democracy*, 32(1), pp. 96-110.

Dias, B. and Deluchey, J. (2020) 'The "Total Continuous War" and the

COVID-19 Pandemic: Neoliberal Governmentality, Disposable Bodies and Protected Lives', *Law, Culture and the Humanities*, pp. 1 -18.

Engler, S. Brunner, P. Loviat, R. Abou-Chadi, T. Leemann, L. Glaser, A. and Kübler, D. (2021) 'Democracy in times of the pandemic: explaining the variation of COVID-19 policies across European democracies', *West European Politics*, 44(5-6), pp. 1077-1102.

Fonseka, B. and Dissanayake, U. (2021) 'Sri Lanka's Vistas of Prosperity and Splendour: A Critique of Promises Made and Present Trends', *Centre for Policy Alternatives*. Available at: https://www.cpalanka.org/wp-content/uploads/2021/07/Sri-Lankas-Vistas-of-Prosperity-and-Splendour-A-Critique-of-Promises-Made-and-Present-Trends.pdf (Accessed: 22 July 2021).

Foucault, M. (2002) 'The Subject and Power' in M Foucault, *Power: Volume 3: Essential Works of Foucault 1954-1984* (J Faubion, ed; R Hurley, trs). London: Penguin, pp. 326-341.

Hinrichesen, J. (2020) 'Conditions of Life: A Comment on Giorgio Agamben's Reading of the Corona Pandemic' *The Hedgehog Review*, 20 April 2020. Available at https://hedgehogreview.com/web-features/thr/posts/conditions-of-life (Accessed: 16 June 2021).

Isakovic, N. (2020) 'What has COVID-19 Taught Us About Neoliberalism?' *WILPF Newsbrief*. Available at http://wilpf.nl/wp-content/uploads/2020/06/WILPF-nieuwsbrief-lente-2020.pdf (Accessed: 13 July 2021).

Jayasuriya, L. (2004) 'The Colonial Lineages of the Welfare State', in Kelegama, S. (ed.) *Economic Policy in Sri Lanka: Issues and Debates*. First edition. Thousand Oaks, California: SAGE Publications Pvt. Ltd, pp. 403–425.

Kadirgamar, A. (2013).'The Question of Militarisation in Post-war Sri Lanka', *Economic and Political Weekly*, 48(7), pp. 42-46.

Li, T.M. (2007) 'Governmentality', *Anthropologica*, 49(2), pp. 275–281.

Manoharan, N. (2006) *Counterterrorism Legislation in Sri Lanka: Evaluating Efficacy*. Washington: East-West Center.

Marmot, M., & Allen, J. (2020) 'COVID-19: Exposing and amplifying

inequalities', *Journal of Epidemiology and Community Health*, 74(9), pp. 681–682.

Mbembe, A. (2003) 'Necropolitics', *Public Culture*, 15(1), pp.11-40.

Saad-Filho, A. (2020) *Critical Sociology*, 46(4-5), pp. 477-485.

Sandset, T. (2020) 'The necropolitics of COVID-19: Race, class and slow death in an ongoing pandemic', *Global Public Health*. DOI: 10.1080/17441692.2021.1906927.

Scott, D. (1995) 'Colonial Governmentality', *Social Text*, 43, pp. 191-220.

Solty, I. (2020) 'The bio-economic pandemic and the western working classes', *SP: The Bullet*, March 24. Available at: https://socialistproject.ca/2020/03/bioeconomic-pandemic-and-western-working-classes/ (Accessed: 05 July 2021).

'Socio-Economic Index in the face of COVID-19' (2021) *Centre for Policy Alternatives*, 30 June. Available at: https://www.cpalanka.org/socio-economic-index-in-the-face-of-covid-19/ (Accessed: 30 June 2021).

*Sri Lanka's draft Counter Terrorism Act: a license for continued state oppression, intimidation and torture* (2017) *Sri Lanka Campaign for Peace and Justice*. Available at https://www.srilankacampaign.org/sri-lankas-draft-counter-terrorism-act-license-continued-state-oppression-intimidation-torture/ (Accessed: 05 July 2021).

Uyangoda, J. (2020) 'A Major Shift in Sri Lanka's Politics', *Ground Views*, 08 August. Available at https://groundviews.org/2020/08/08/a-major-shift-in-sri-lankas-politics/ (Accessed 20 July 2021).

Uyangoda, Jayadeva. (2000) 'A State of Desire? Some Reflections on the Unreformability of Sri Lanka's Post-colonial Polity', in S.T. Hettige & Markus Mayer (Eds.) *Sri Lanka at Crossroads – Dilemmas and Prospects after 50 Years of Independence.* Delhi: McMillan India.

Vagehese, N. (2021) 'What is Necropolitics? The Political Calculation of Life and Death' *Teen Vogue,* 10 March 2021. Available at https://www.teenvogue.com/story/what-is-necropolitics (Accessed: 17 July 2021).

Zwitter, A. (2012). 'The Rule of Law in Times of Crisis', *Archiv f€ur Rechtsund Sozialphilosophie*, 98(1), pp. 95–111.

# 2

# பெருந்தொற்றுக்கு மத்தியில் இலங்கையில் துரிதமாக்கப்பட்ட சனநாயகச் சிதைவு

*பவானி பொன்சேகா மற்றும் குஷ்மிலா ரணசிங்க*

## அறிமுகம்

கொவிட்-19இனால் உருவாகியுள்ள சுகாதார மற்றும் ஏனைய சவால்கள் இலங்கையை 2020ஆம் ஆண்டிலிருந்து சூழ்ந்துள்ளதோடு, அவை உரிமைகள், ஆளுகை, நல்லிணக்கம் தொடர்பான பலதரப்பட்ட பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளன (Fonseka, Ganeshathasan, and Welikala, 2021). தற்போதைய இந்தப் பிரச்சினைகள் 2019இல் வாக்குறுதியளிக்கப்பட்ட பின்னணியிலேயே ஆராயப்பட வேண்டும். பேரழிவு தந்த ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் நல்லாட்சி அரசாங்கத்தின் குழப்பமான ஆட்சி போன்றன ஓர் உறுதியான தலைமைத்துவத்திற்கான தேவையினை வெளிப்படுத்தி நின்றன. 2019ஆம் ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற சனாதிபதித் தேர்தலானது, துறைசார் ஆளுகை, பாதுகாப்பு, உறுதித்தன்மை, ஒழுக்கம் ஆகிய தளங்களில் கோட்டாபய ராஜபக்ஷ சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்துகிறது. “எதிர்கால செழிப்பு மற்றும் மகிமை” போன்றவற்றை உள்ளடக்கிய தொலைநோக்கு பார்வை கொண்ட முன்மொழிவுகளை இலங்கை தற்போது எதிர்கொள்ளும் சவால்களுக்கான பதிலாக முன்வைக்கிறது. செழிப்பு மற்றும் மகிமை என்பதற்குப் பதிலாக இலங்கை தற்போது முன்னொருபோதும் இல்லாதவாறான சுகாதார, பொருளாதார சவால்கள், அதிகரித்த இராணுவமயமாக்கம், அதிகரித்த அசமத்துவங்கள், உரிமை மீறல்கள், கொள்கை ஒத்திசைவின்மை, சட்டத்தின் ஆட்சியை வெளிப்படையாக அலட்சியம் செய்தல் போன்றவற்றை எதிர்கொள்கின்றது (Fonseka and Dissanayake, 2021).

கொவிட்-19 ஆரம்பமாகியதிலிருந்து இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்திய பொறிமுறைகளின் சட்டபூர்வத்தன்மை, அரசியலமைப்பு சார் செல்லுபடித்தன்மை (Constitutionality) போன்றவற்றினை இந்த அத்தியாயம் ஆராய்கின்றது. இந்த அடிப்படையில், சுகாதார நெருக்கடியை முகாமைத்துவம் செய்வதற்காகத் தாபிக்கப்பட்ட கட்டமைப்புகள், பெருந்தொற்றினை நிருவகிப்பதற்காகப் பல கட்டங்களில் விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளைக் கொண்ட சட்டக் கட்டமைப்புகள் போன்றன மீதும் இந்த அத்தியாயம் கவனங்கொள்கிறது. மேலும், இந்த அத்தியாயமானது கட்டுக்கடங்காத பெருந்தொற்றுக் காலத்தில் மிக விரைவாகக் கொண்டுவரப்பட்ட சட்டங்கள், அதிகரித்த சர்வாதிகாரத் தன்மை பொருந்திய ஆட்சி மற்றும் இராணுவமயமாக்கம் தொடர்பாகக் கவனம் கொள்ளவேண்டிய தேவைகள் குறித்தும் ஒரு சுருக்கமான விபரிப்பை வழங்குகிறது. இந்த அத்தியாயமானது நடைமுறைப்படுத்தப்பட்ட பொறிமுறைகள் மற்றும் கொள்கைகள் என்பன எவ்வாறு ஆளுகையில் பொறுப்புத்தன்மை, வெளிப்படைத்தன்மை போன்றனவற்றைச் சவாலுக்குட்படுத்தியுள்ளன என்றும் அவை இலங்கையின் அரசியலமைப்புசார் சனநாயகத்திற்கு ஏற்படுத்தியுள்ள கடுமையான தாக்கங்கள் குறித்தும் விசேட கவனஞ்செலுத்துகின்றது.

## கட்டமைப்புகள்

பங்குனி 2020இல் கொவிட்-19 ஆரம்பமாகியதிலிருந்து அது தொடர்பான பிரச்சினைகள் பலவற்றைக் கையாள்வதற்காக சனாதிபதி செயலணிகள் பல தாபிக்கப்பட்டன ('Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', 2020; 'Q and A on Regulations Issued under the Quarantine and Prevention of Diseases Ordinance & how this impacts the COVID-19 response in Sri Lanka', 2020). சனாதிபதியின் அதிகாரங்கள், கடமைகள் பற்றிக் குறிப்பிடுகின்ற அரசியலமைப்பின் 33ஆவது உறுப்புரையின் கீழ் இந்த செயலணிகள் தாபிக்கப்பட்டன. உறுப்புரை 33 என வர்த்தமானி பொதுப்படையாகக் குறிப்பிட்டு இருந்தாலும் செயலணிகளானது உறுப்புரை 33(2)ஏ[1] பிரிவின் கீழ்த் தாபிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது.

1 இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 33(2). அரசியலமைப்பினாலோ ஏனைய எழுத்துமூலமான சட்டங்களாலோ சனாதிபதிக்கு வெளிப்படையாக அளிக்கப்பட்ட அல்லது அவருக்கு குறித்து ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள், பணிகளுக்கு மேலதிகமாக சனாதிபதி பின்வரும் அதிகாரங்களை உடையவராதல் வேண்டும். (h) : அரசியல் அமைப்பு அல்லது ஏனைய எழுத்தினாலான சட்டங்கள் அதேபோல சர்வதேச சட்டம், வழக்காறு அல்லது சனாதிபதிக்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட விடயங்களுடன் ஒத்துவராத அனைத்து செயல்களையும் காரியங்களையும் ஆற்றுவதற்கான அதிகாரத்தை சனாதிபதி கொண்டுள்ளார்.

ஆணைக்கான நோக்கெல்லை மற்றும் நடப்பிலுள்ள கட்டமைப்புகளுடனான அவற்றின் தொடர்பு போன்றவற்றினால் இந்த செயலணிகளுக்கான அதிகாரங்கள் தெளிவற்றனவாகக் காணப்படுகின்றன ('Pandemic Crisis and Democratic Governance in Sri Lanka', 2021). பிறிதொரு சர்ச்சைக்குரிய விடயம் என்னவெனில், ஓய்வுபெற்ற மற்றும் தற்போது சேவையாற்றும் இராணுவ அதிகாரிகளையும் சட்ட ஒழுங்கை நிலைநிறுத்துகின்ற உத்தியோகத்தர்களையும் இந்தச் செயலணிகள் கொண்டிருப்பதாகும். இராணுவ ஆளணியினரை உள்ளடக்கிய சிறப்புக் கட்டமைப்புகளின் உருவாக்கமானது பிரசைகளின் இடங்கள் மற்றும் செயற்பாடுகளில் இராணுவமயமாக்கத்தினை அதிகரித்துள்ளது என விமர்சிக்கப்படுகின்றது. நிபுணத்துவம், வினைத்திறன் போன்றன உத்தரவாதப்படுத்தப்பட்டாலும் ('Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', 2020) கொவிட்-19 இனது தற்போதைய தொற்று அதிகரிப்பானது இராணுவமயமாக்கப்பட்ட புதிய கட்டமைப்புகள் மற்றும் சிறப்பு செயன்முறைகள் போன்றன நெருக்கடி நிலையைக் கட்டுப்படுத்தத் தவறியுள்ளன என்பதனையே புலப்படுத்துகிறது ('An Update on the Legal Framework to Address the COVID-19 Pandemic in Sri Lanka', 2021). பங்குனி 2020 இலிருந்து தாபிக்கப்பட்ட நிறுவனங்கள் அல்லது கட்டமைப்புகள் பற்றிய ஒரு சுருக்கமான விளக்கத்தினை இனி நோக்கலாம்.

இந்த நெருக்கடிக்கான உடனடி பதில் நடவடிக்கையாக இராணுவப்படைத் தளபதியான ஷவேந்திர சில்வாவின் கீழ் 'கொவிட்-19 தொற்றினைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம்' (National Operation Centre for Prevention of COVID-19 Outbreak - NOCPCO) ('No decision taken to declare a complete lockdown', 2021) சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தாபிக்கப்பட்டது. இந்த நிலையமானது, "சுகாதார சேவைகள் மற்றும் ஏனைய சேவைகளைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்துகின்ற நடவடிக்கைகளை (தடுப்பு மற்றும் முகாமைத்துவ) ஒழுங்குபடுத்துகின்றது" (President's Media Division, 2020).

கொவிட்-19 தொற்றினைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் (NOCPCO) தாபிக்கப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர், 26ஆம் திகதி மார்ச் 2020இல், ஒரு சனாதிபதி செயலணியானது ('Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', 2020) 2168/8 என்ற விசேட வர்த்தமானியின் மூலம் தாபிக்கப்பட்டது. இந்த செயலணியானது "சகலரது சமூக வாழ்வையும் நிலைநிறுத்தத் தொடர்ச்சியான வகையில் சேவைகள் வழங்கப்படுதலை வழி நடாத்துதல், ஒழுங்குபடுத்தல், மேற்பார்வை

செய்தல் போன்றவற்றிற்காகத் தாபிக்கப்பட்டது. இதன் பிரகாரம், இச்செயலணியானது கிராமப்புறங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் உற்பத்தியாளர்களைக் கொரோனா நோய்க்கிருமி அதிகமாகத் தாக்கிய கொழும்பு, களுத்துறை, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்ட மக்களுக்கு பொருட்களை வழங்குவதற்கும் பொறுப்பாக்கப்பட்டது". இந்த நிலையமானது மேற்கூறப்பட்டவற்றோடு தொடர்பான 12 செயற்பாடுகளை ஆற்றுவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது.

அமுலாக்குகின்ற போது காணப்பட்ட குறைந்தளவான மேற்பார்வை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை ஆகியவற்றால், செயலணி மேற்கொண்ட செயல்கள் தொடர்பாக ஒரு தெளிவற்ற தன்மை மற்றும் குழப்பநிலை காணப்பட்டது. மேலும், சனாதிபதியால் நியமிக்கப்பட்டு, அவருக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ள இந்த செயலணிகளின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து, இந்த செயலணிகளை பொறுப்புத்தன்மை கொண்ட நிறுவனங்களாக வைத்திருப்பதற்கு எவ்விதமான செயன்முறைகளும் இல்லாத நிலையும் காணப்படுகிறது.

மேற்கூறப்பட்ட செயலணிக்கு வழங்கப்பட்ட அதிகளவான அதிகாரங்கள், சுகாதார நெருக்கடிநிலை ஒன்றினை நிருவகிப்பதற்கான சிவில் நிர்வாகத்தின் சுயாதீனம் மற்றும் நிபுணத்துவத்தினைக் குறைத்து மதிப்பிடுவதாகக் காணப்படுகின்றன. இந்தச் செயலணி கொண்டுள்ள ஆணையின் பிரகாரம், சகல அரச பணியாளர்களுக்கும் ஏனைய ஆட்களுக்கும் செயலணியானது அறிவுறுத்தல்களை வழங்க முடியுமாகவிருந்தது. அத்தோடு சேவைகளை வழங்குவதற்காக ஆட்களிடமிருந்து உதவிகளைப் பெறவும் செயலணி அதிகாரம் கொண்டிருந்தது. சகல அரச பணியாளர்களும் ஏனையோரும் செயலணியினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதோடு, உதவி வழங்குதல் மற்றும் தேவைப்படுகின்ற தகவல்களை வழங்குதல் போன்றவற்றையும் மேற்கொள்ளுதல் வேண்டும். அத்தோடு எந்தவொரு அரச உத்தியோகத்தரும் தனது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதில் தாமதித்தமை அல்லது தவறியமை தொடர்பான சகல விடயங்களையும் சனாதிபதிக்கு அறிக்கை செய்வதற்கான ஆணையைச் செயலணி கொண்டுள்ளது ('Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', 2020).

ஏப்ரல் 2020இல் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2173/4 கீழ், பிறிதொரு சனாதிபதிச் செயலணி தாபிக்கப்பட்டது. இச்செயலணியானது முப்படை உறுப்பினர்களிடையே கொரோனா நோய்க்கிருமிக்கான

தொற்றைத் தடுக்க சகல ஆயுதப் படைகளாலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யத் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி புனர்வாழ்வு அளிக்கப்படுகின்ற ஆட்கள் மற்றும் சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் போன்றோரையும் உள்ளடக்கி இதன் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டன[2].

மிக அண்மையில் டிசம்பர் 2020இல் வெளிவந்த அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2208/33இன் மூலம் கொவிட்-19 தடுப்பூசிக்கான தேசிய நிலைநிறுத்தல் மற்றும் தடுப்பூசியை வழங்கும் திட்டத்திற்கான சனாதிபதிச் செயலணி (The Presidential Task Force for National Deployment and Vaccination Plan for COVID-19) தாபிக்கப்பட்டது. இந்தச் செயலணிக்கு ஒதுக்கப்பட்ட செயல்களில் மிக முக்கியமானது என்னவெனில், துறைசார் நிபுணர்களுடனான கலந்தாலோசித்தலும், கிடைக்கப்பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில் இலங்கைக்கு மிகப் பொருத்தமானதும் பாதுகாப்பு மற்றும் பயனுள்ளதுமான கொவிட்-19 தடுப்பூசியை அடையாளங் காணுதலுமாகும். இது தவிர தடுப்பூசிகளைச் சரியான நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கான அவசரகால அனுமதி மற்றும் கொள்வனவு போன்றவற்றுக்கான பொருத்தமான, நெறிப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறை மற்றும் நிருவாக நடைமுறைகளை தாபிப்பதும் இந்தச் செயலணியின் பணியாகும்.

பெருந்தொற்றுக் காலத்தில் தாபிக்கப்பட்ட ஏனைய கட்டமைப்புகளில் "செழுமை மற்றும் மகிமையின் எதிர்காலம்" என்ற கொள்கையினை நடைமுறைப்படுத்த வேறும் சில செயலணிகள் தாபிக்கப்பட்டன. 22ஆம் திகதி ஏப்ரல் 2020இல் பிரசுரிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2172/9 மூலம் பொருளாதாரப் புத்தாக்கம் மற்றும் வறுமை ஒழிப்பிற்கான செயலணி தாபிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2ஆம் திகதி யூன் 2020இல் பாதுகாப்பான நாடு, நன்நடத்தை, ஒழுக்கம் மற்றும் சட்டபூர்வத் தன்மை கொண்ட சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான சனாதிபதிச் செயலணி (அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2178/18) மற்றும் கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள்சார் மரபுரிமையை முகாமைப்படுத்துவதற்கான சனாதிபதிச் செயலணி (அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2178/17) ஆகிய இரண்டு செயலணிகள் தாபிக்கப்பட்டன ('The Appointment ofthe Two Presidential Task Forces', 2020). பாராளுமன்றம் ஒன்று செயற்படாத காலத்தில் தடைகளும் சமனிலையும் நிறைவேற்றுத்துறைக்குச் சார்பாக இருந்த காலப்பகுதியிலேயே இச் செயலணிகள் தாபிக்கப்பட்டன.

2 வர்த்தமானி (விசேட) இலக்கம் 2185/41, 21 ஜுலை 2020. Available at: http://www.documents. gov.lk/files/egz/2020/7/2185-41_E.pdf (Accessed: 14 June 2021).

இங்கு குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், 2005இல் உருவாக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவச் சட்டம் (Disaster Management Act, No. 13) போன்ற ஒரு தொகையான சட்ட, நிறுவனக் கட்டமைப்புகள் நெருக்கடி நிலையொன்றினை எதிர்கொள்ளப் போதுமானவையாக இருக்கின்ற பட்சத்தில் இவ்வாறான சனாதிபதிச் செயலணிகள் தாபிக்கப்படுவதற்கான அவசியம் குறித்து வினாக்கள் எழவே செய்கின்றன.

உதாரணமாக, அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ தேசியப் பேரவை (National Council for Disaster Management) என்ற அமைப்பானது அவசரகால நிலையில் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள், உதவிகள், அனர்த்த முகாமைத்துவ நிதிப் பங்கீட்டினைப் பரிந்துரை செய்தல் போன்றவற்றினை அனுசரணை செய்யக்கூடிய ஒரு தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் ஒன்றினை உருவாக்குமாறு கோருவதற்கான அதிகாரத்தைக் கொண்டுள்ளது.[3] பொருத்தமான நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களினது அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளுக்கான அறிவுறுத்தல்களை வழங்குதல், இத்தகைய நிறுவனங்களிடையேயான ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற பல பணிகள் பேரவையினால் நியமிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு (Disaster Management Centre) வழங்கப்பட்டுள்ளன[4]. மே மாதம் 2005ஆம் ஆண்டு முதலாவது தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவை தாபிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்று அவசியமான உத்தியோகத்தர்களுடன் சகல மாவட்டங்களிலும் அனர்த்தத்தினை எதிர்கொள்வதற்கான தயார் நிலையினை மேற்பார்வை செய்தல், முன்னெச்சரிக்கை செய்தல், சுனாமிக்கான நிவாரணப் பணிகளை முன்னெடுத்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காகத் தாபிக்கப்பட்டது ('Sri Lanka, the tsunami and the evolution of disaster response', 2014).

மேலும், அனர்த்தத்திற்கு முகங்கொடுப்பதற்கான எதிர்ப்பு நடவடிக்கைகள் நிருவாகத்திற்குச் சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய வளங்கள் மற்றும் வழிவகைகளுக்கு அப்பாற்பட்டனவாக இருக்கின்றவிடத்து, சனாதிபதியின் சொந்த தீர்மானத்தின் அடிப்படையில் அல்லது பேரவையின் ஆலோசனையின் பேரில் அறிவித்தல் மூலம்

3 2005 ஆம் ஆண்டு இலக்கம் 13, அனர்த்த முகாமைத்துவச் சட்டம், பிரிவு 4

4 2005 ஆம் ஆண்டு இலக்கம் 13, அனர்த்த முகாமைத்துவச் சட்டம், பிரிவு 8(2)(உ)

அனர்த்த நிலையினை பிரகடனப்படுத்த அனர்த்த முகாமைத்துவச் சட்டம் சனாதிபதிக்கு அதிகாரமளிக்கிறது[5]. அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் கீழ்[6] தொற்றுநோய் (Epidemics) என்பது அனர்த்தம் என்பதன் வரைவிலக்கணத்திற்குள் உள்ளடக்கப்படுவதனால், முன்னெப்போதும் இல்லாததொரு சுகாதார நெருக்கடிக்குப் போதுமான மேற்பார்வை மற்றும் பொறுப்புத்தன்மையுடன் கூடிய வினைத்திறனானதும் துரிதமானதுமான ஒரு அரசாங்க பதில் நடவடிக்கையினை முன்னெடுக்க முடியும் என நியாயமான வகையில் ஊகிக்க முடிகிறது ('Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', 2020). இருந்தபோதிலும் அரசாங்கமானது அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தினை நடைமுறைப்படுத்த எத்தனிக்காததொரு நிலை காணப்படுவதோடு, அதற்குப் பதிலாக செயலணிகள் மற்றும் பிற நிறுவனங்களினூடாக இத்தகைய நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

செயலணிகளுக்கு மேலதிகமாக கொவிட்-19 பிரச்சினைகள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக நிபுணர்களை உள்ளடக்கிய பல குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மிக முக்கியமானதாக, 24ஆம் திகதி டிசம்பர் 2020இல் சுகாதார அமைச்சினால் சர்ச்சைக்குரிய கட்டாயத் தகனம் தொடர்பான ஒழுங்குமுறைகளை ஆராய்வதற்காக உருவாக்கப்பட்ட நிபுணர் குழு காணப்படுகிறது ('Cremation Vs. Burial: Expert Panel Revises Recommendation To Include Both Cremation and Burial of COVID-19 Dead Bodies', 2021). விஞ்ஞானத்தன்மை அல்லது விஞ்ஞானத் தகுதி குறைந்த தன்னிச்சையானதும் பாரபட்சத்தன்மை கொண்ட கட்டாயத் தகனம் பற்றிய ஒழுங்குமுறைகளானவை, உலக சுகாதார தாபனத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு முரணானவையாக அமைந்துள்ளதோடு (Saroor and de Soysa, 2020), முஸ்லிம் சமூகத்தினர் தமது மதத்தினது அடக்கம் தொடர்பான சடங்குகளைப் பின்பற்றுவதனையும் தடைசெய்தன (*Report of the United Nations High Commissioner for Human Rights*, 2021). தனது பரிந்துரைகளை முன்வைத்த நிபுணர் குழு சில குறிப்பிட்ட பாதுகாப்பு முன்னேற்பாடுகளுடன் இறந்த உடல்களை தகனம், அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை முன்வைத்தது ('Cremation Vs. Burial...', 2021). நாட்டின் சிறுபான்மையினர், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கும் குழுக்களின் தொடர்ச்சியான விமர்சனத்தினைத் தொடர்ந்து பெப்ரவரி 2021இல் ஒழுங்குவிதிகள்

5 2005 ஆம் ஆண்டு இலக்கம் 13, அனர்த்த முகாமைத்துவச் சட்டம், பிரிவு 11

6 2005 ஆம் ஆண்டு இலக்கம் 13, அனர்த்த முகாமைத்துவச் சட்டம், பிரிவு 25(ஓ)

திருத்தியமைக்கப்பட்டன ('An Update on the Legal Framework to Address the COVID-19 Pandemic in Sri Lanka', 2021).

மிக அண்மையில் சுகாதார அமைச்சர் மருந்துகளின் சர்வதேச உற்பத்தி மற்றும் கொவிட்-19 இனைக் கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சை தொடர்பான ஆய்வினை முன்னெடுப்பதற்காக பிறிதொரு நிபுணர் குழுவை நியமித்திருந்தார் ('Expert Committee to keep tab on new COVID therapies, vaccines', 2021). தடுப்பூசியேற்றம் தொடர்பான சில புதிய அறிக்கைகள், குறிப்பாக சினோபாம் தடுப்பூசியை எந்த வயதுக் குழுவினர் பெறவேண்டும் என்பது தொடர்பான பரிந்துரையை வழங்க பிறிதொரு நிபுணர் குழுவும் உருவாக்கப்பட்டது (Jayasinghe, 2021).

2020 மற்றும் 2021 காலப்பகுதியில் பலதரப்பட்ட நிறுவனங்கள் உருவாக்கப்பட்டாலும் அவற்றின் தொழிற்பாடு குறித்து குறைந்தளவான தகவல்களே பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடியதொரு நிலை காணப்பட்டது.

## சட்ட ஏற்பாடுகள்

தனிமைப்படுத்தல் (Quarantine), ஊரடங்கு (Curfew), பொலிஸ் ஊரடங்கு (Police Curfew) மற்றும் 2020இலிருந்து அண்மைக்காலம் வரையான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் தொடர்பாகக் காணப்பட்ட தெளிவற்ற சட்ட அடிப்படைகள் மற்றும் குறைந்தளவான தகவல்கள் போன்றவற்றால் பொதுப்பரப்பில் குழப்ப நிலையொன்று காணப்பட்டது. சுதந்திரமான நடமாட்ட உரிமையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட சட்டவிதிகளை மேற்கோள் காட்டி நியாயப்படுத்தாமல் ஊடக சந்திப்புகளினூடாக இந்த வரையறைகள் பெரும்பாலும் அறிவிக்கப்படுகின்றன. சட்ட ரீதியான தெளிவின்மைகள் காணப்படுகின்றதொரு நிலையில் இந்தக் கட்டுப்பாடுகளை மீறுவதாகக்கூறி சந்தேகத்தின் பேரில் கைதுகள் தொடருகின்றன (Ranasinghe, 2021). கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்த மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தை வரையறை செய்தல் என்பது பிழையான ஒரு விடயம் அல்ல. ஆயினும் ஏலவே இது தொடர்பாகத் தாபிக்கப்பட்ட சட்ட ஏற்பாடுகள் காணப்படாமையினால் அரசாங்கம் சில கட்டுப்பாடுகளைத் தன்னிச்சையாகப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது. இதனால் அரசாங்கத்தினால் சுகாதார நெருக்கடியின் தாக்கத்தினைக் குறைப்பதற்காக முன்னெடுக்கின்ற நடவடிக்கைகள் தொடர்பான மக்களின் நம்பிக்கையும் குறைவடைந்துள்ளது.

## *தனிமைப்படுத்தல்*

ஆரம்பத்திலிருந்தே காலாவதியான 'தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டத்தின்' (Quarantine and Prevention of Diseases Ordinance) கீழான தனிமைப்படுத்தல் விதிகளின் செயற்படுத்துகை தொடர்பில் ஒரு அக்கறை காணப்பட்டது. தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டமானது முதன் முதலாக 9ஆம் திகதி பெப்ரவரி மாதம் 1897இல் பிரித்தானியரால் அறிமுகஞ்செய்யப்பட்டு, 1952இல் இறுதியாகத் திருத்தி அமைக்கப்பட்டது (Gunasekara, 2020).

இந்தக் கட்டளைச்சட்டமானது ஊரடங்கு உத்தரவினை அமுல்ப்படுத்துவதற்கான சட்ட ரீதியான அடிப்படையை வழங்கவில்லை (*HRCSL Recommendations on Regularizing the Imposition of Curfew,* 2020*).* கட்டளைச்சட்டத்தின் இரண்டாவது பிரிவின் படி, "இலங்கையில் எந்தவொரு நோயும் உருவாவதனைத் தடுக்கும் நோக்கத்திற்காகவும் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் அது பரவுவதனைத் தடுக்கும் நோக்கத்திற்காகவும் தேவையான அல்லது பொருத்தமான சட்ட விதிகளைக் காலத்திற்குக் காலம் உருவாக்கவோ, இரத்துச் செய்யவோ அல்லது மாற்றியமைக்கவோ முடியும்."[7] எனினும் கட்டளைச்சட்டத்தின் மூன்றாவது பிரிவில் ஊரடங்கு உத்தரவினை அமுல்ப்படுத்துவதற்கான அதிகாரங்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

இவ்வாறான சில விசனங்கள் காணப்பட்டாலும், கடந்த சில மாதங்களில் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பல ஒழுங்குவிதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவையாவன:

1. 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மார்ச் 2020இல் பிரசுரிக்கப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 2167/18 மூலம், (1925 மற்றும் 1960கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் நடைமுறையிலிருந்த தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக) கொவிட்-19 என்பது தனிமைப்படுத்தலுக்குரிய நோயாகப் பிரகடனஞ்செய்யப்பட்டு, கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகள் கொவிட்-19 தொடர்பாக எடுக்கப்படும் நடைமுறைகளுக்கும் பொருந்தும் எனவும் வெளிப்படுத்தப்பட்டது.
2. 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை மார்ச் 2020இல் பிரசுரிக்கப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 2168/6 மூலம், முறையான அதிகார சபை (Proper authority) மற்றும் இறந்தவரின் இருப்பிடம் போன்றன வரையறை

7 1897 இலக்கம் 3, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்பு கட்டளைச்சட்டம், பிரிவு 2

செய்யப்பட்டன (நோயுற்ற இடம் அல்லது பிரதேசம் எது என்பதனை அறிவிக்கும் அதிகாரங்களைக் கொண்ட முறையான அதிகாரம் பொருந்திய நிறுவனக் கட்டமைப்பு பற்றிய தகவல்களைக் கொண்ட வர்த்தமானி இதுவாகும்).

3. 11ஆம் திகதி சனிக்கிழமை ஏப்ரல் 2020இல் பிரசுரிக்கப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 2170/8 மூலம், கொவிட்-19 இனால் இறந்த ஆட்களின் கட்டாயத் தகனம் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டன.
4. 15ஆம் திகதி வியாழக்கிழமை ஒக்டோபர் 2020இல் பிரசுரிக்கப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 2197/25 மூலம், நடமாடுதல் தொடர்பான கட்டுப்பாடுகளும் பொது இடங்களிலும் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டுதல்களும் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டன.
5. 25ஆம் திகதி வியாழக்கிழமை பெப்ரவரி 2021இல் பிரசுரிக்கப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 2216/38 மூலம் கொவிட்-19 இனால் இறந்த ஆட்களின் அடக்கம், தகனம் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டன.

தனிமைப்படுத்தல் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் தொடர்பாகத் தொடர்ச்சியாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது. ஒக்டோபர் 2020இல் நடமாடுதல் தொடர்பான வரையறைகள் குறித்த ஒழுங்குவிதிகளின்படி, ஒரு வீட்டிலிருந்து இறந்த உடலத்தை அல்லது தொற்றுக்குள்ளாக்கப்பட்டார் என சந்தேகிக்கப்படுகின்ற ஒருவரை அகற்றுவதற்கு அல்லது பொது வைத்தியசாலைக்கு அனுமதிப்பதற்கு அல்லது சுயதனிமைப்படுத்தலிற்கு அவர்களை வழிநடத்துவதற்கான அதிகாரத்தை, முறையான அதிகாரத்தைக் கொண்ட ஒரு நபருக்கு அல்லது சபைக்கு வழங்குகிறது. எனினும் முறையான அதிகார சபையாக எவருமே அடையாளப்படுத்தப்படாத நிலையில் இராணுவம் அல்லது சட்டத்தை அமுலாக்குகின்ற தரப்புக்கள் தனிமைப்படுத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளை மீறுகின்றன ('Q and A on Regulations Issued under the Quarantine and Prevention of Diseases Ordinance & how this impacts the COVID-19 response in Sri Lanka', 2020).

பொதுப்பரப்பில் குறைவான தகவல்கள் காணப்படுவதனால் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறுகின்றவர்களின் கைதுக்கான சட்ட அடிப்படையும் தெளிவற்றதாகவே காணப்படுகின்றது. மே மாதம் 2021இல் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது, பொலிஸ்மா அதிபருக்கு (Inspector General of Police) எழுதிய கடிதத்தில்

இக்கைதுகள் தொடர்பான சட்டபூர்வத்தன்மை மற்றும் பாரபட்சமற்ற தன்மை போன்றவற்றை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருந்தது (*IGP responds to HRCSL in respect to the arrest of persons violating quarantine rules*, 2021).

தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச்சட்டத்தின் பிரிவுகள் 4(1)[8] மற்றும் 5(1)[9] ஆகியவை இந்தக் கைதுகளை அனுமதிக்கின்ற ஏற்பாடுகளைக் கொண்டுள்ளன. மேலதிகமாக தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவுகள் 262[10] மற்றும் 264[11] போன்றவையும் கைதுகளுக்கான அடிப்படையை வழங்குகின்றன ('An Update on the Legal Framework to Address the COVID-19 Pandemic in Sri Lanka', 2020).

### *ஊரடங்கு உத்தரவு*

ஊரடங்கு உத்தரவொன்றினை அமுல்ப்படுத்துகின்ற போது அது தொடர்பான பொருத்தமான சட்ட ஏற்பாடுகளைத் தெளிவாகக் குறிப்பிடுவதில் அரசாங்கம் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்து

8 1897 இலக்கம் 3, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச்சட்டம், பிரிவு 4 (1). "எவரேனும் ஒருவர் சட்ட பூர்வமான அதிகாரமோ அல்லது முறையான விளக்கமோ இல்லாமல் கட்டளைச்சட்டத்தின் ஒழுங்குவிதிகளை மீறினால் அல்லது இந்தக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக செய்ய வேண்டியவற்றைத் தவிர்த்தாலோ அல்லது ஏதாவது ஒழுங்குவிதிகளினால் பொறுப்பாக்கப்பட்டவற்றை அவர் செய்யாது தவிர்த்தாலோ அல்லது கட்டளைச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் கண்காணிப்பாளரோ அல்லது எவரேனும் ஒரு உத்தியோகத்தரை இடையூறு செய்தாலோ அல்லது இடையூறு செய்பவருக்கு உதவி செய்தாலோ அல்லது இந்த கட்டளைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு இடையூறு செய்தாலோ, அந்த நபர் இந்தக் கட்டளைச்சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் கருதப்படுவார்."

9 1897 இலக்கம் 3, தனிமைப்படுத்தல் மற்றும் நோய்த்தடுப்புக் கட்டளைச்சட்டம், பிரிவு 5 (1). "இந்தக் கட்டளைச்சட்டத்திற்கு எதிராக தவறிழைக்கப்பட்டார் என குற்றஞ்சாட்டப்படுகின்ற எவரேனும் ஒருவர், நீதிபதியொருவர் முன்னிலையில் ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அல்லது இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவிற்கும் குறையாத, ஆனால் பத்தாயிரம் ரூபாவிற்கும் மேற்படாத அபராதத்தினைச் செலுத்துதல் அல்லது மேற்கூறப்பட்ட இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாகுவார்."

10 இலங்கை தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 262. "எவரேனும் ஒருவர், தெரிந்து கொண்டே அல்லது அந்தச் செயலொன்றினைச் செய்வதற்கான காரணத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, சட்ட விரோதமாகவும் அலட்சியமாகவும் செய்யப்படுகின்ற அந்தச் செயலினால் வாழ்க்கைக்கு ஆபத்தான ஏதேனும் ஒரு நோய்த்தொற்று பரவுமாக இருந்தால், அந்த நபர் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது மேற்கூறிய இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாவார்."

11 இலங்கை தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 264. "தொற்றுநோய் நிலவும் இடங்களுக்கும் ஏனைய இடங்களுக்குமான பரிவர்த்தனைகளை அல்லது தொடர்புகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பாக, அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்ட சட்டங்களை எவரேனும் ஒருவர் தெரிந்தே மீறுவாராயின், அந்த நபர் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது மேற்கூறிய இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாவார்."

வந்துள்ளது ('Curfew in response to COVID-19: Legal Framework and Relevant Questions in Sri Lanka', 2020). யூன் 2020இல், மனித உரிமைகள் ஆணைக்குழுவானது அரசியலமைப்பு, ஏற்பாடுகள் மற்றும் அரசுகளால் பின்பற்றவேண்டிய சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகள் போன்றனவற்றிற்கு இணைக்கமான முறையில் ஊரடங்கு உத்தரவானது அமுல்ப்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியிருந்தது (*HRCSL Recommendations on Regularizing the Imposition of Curfew*, 2020). ஊரடங்கு உத்தரவினை அமுல்ப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைப் பல நிலையியற் கட்டளைச்சட்டங்கள் (Statutes) கொண்டிருந்தாலும் இந்த நிலையியற் கட்டளைச்சட்டங்களால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் பின்பற்றப்படுகின்றனவா? என்பது தொடர்பாகத் தெளிவற்ற நிலையொன்று காணப்படுகின்றது.

ஊரடங்கு உத்தரவை விதித்தலுக்கான சனாதிபதியின் அதிகாரமானது, அரசியலமைப்பிலும் பொதுப்பாதுகாப்பு கட்டளைச்சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவினை அறிவித்த பல பத்திரிகை மாநாடுகளில் இந்தக் கட்டளைச்சட்டம் பற்றி மேற்கோள் செய்யப்படாததோடு, அந்த வார்த்தை எந்தவொரு சட்டத்திலும் மேற்கோள் காட்டப்படவில்லை. சட்டப் பின்னணி இல்லாத ஒன்றாகவே தனிமைப்படுத்தல் ஊரடங்கு என்ற பதம் அரசாங்கத்தினால் அடிக்கடி பயன்படுத்துகின்றது.

பொதுப்பாதுகாப்பு சட்டத்தினது 16ஆவது பிரிவின் கீழ் "வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கின் பிரகாரம் சனாதிபதியானவர் குறிப்பிட்ட பகுதிக்கு ஆட்களை தடைசெய்யலாம், குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்குப் பொது இடங்களைத் தடைசெய்யலாம். இது சனாதிபதி அத்தகையதொரு அனுமதியினை குறிப்பிட்ட பொது இடத்துக்கு ஏற்கனவே எழுத்து மூலமாக வழங்காததொரு நிலையிலேயே சாத்தியமானதாகிறது." எனினும் அத்தகையதொரு ஒழுங்கு சட்டபூர்வமாக செல்லுபடியாவதற்கு இரண்டு தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். முதலாவதாக, வர்த்தமானியில் குறிப்பிட்ட விடயம் தொடர்பான ஒழுங்குப் பத்திரம் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும். இரண்டாவதாக, பாராளுமன்றத்திற்கு அவசரகாலநிலைப் பிரகடனம் தெரிவிக்கப்படுவது போன்றதொரு முறையில் இந்த ஒழுங்குப்பத்திரமும் பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும் (*HRCSL Recommendations on Regularizing the Imposition of Curfew*, 2020).

"பொதுப்பாதுகாப்பு நலன்களுக்கு அவசியமானவை அல்லது உகந்தவை" எனச் சனாதிபதி கருதுகின்ற ஒழுங்குவிதிகளை உருவாக்க (அவசரகால ஒழுங்குவிதிகள்) அரசியலமைப்பும் பொதுப்பாதுகாப்புக்

கட்டளைச்சட்டமும் சனாதிபதிக்கு அதிகாரமளிக்கின்றது[12]. இந்த ஒழுங்குவிதிகளால் அரசியலமைப்பு ஏற்பாடுகளைத் தவிர, ஏனைய சட்ட விதிகளை மேலோங்கலாம்[13], மீறலாம், திருத்தலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்[14]. இதனை எந்த நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்த முடியாது[15]. ஆயினும் இந்த ஒழுங்குமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் அவசரகால நிலைமையைக்[16] கொண்டுவர ஒரு பிரகடனம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## *பொலிஸ் ஊரடங்கு*

பல சந்தர்ப்பங்களில் நாடளாவிய ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட பொலிஸ் எல்லைகளுக்குள் பொலிஸ் ஊரடங்கு உத்தரவு அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது (Foreign Ministry, Sri Lanka, 2020). பொலிஸ் ஊரடங்கு உத்தரவுகளை அனுமதிப்பதற்கான விசேடமான சட்ட ஏற்பாடுகள் எவையும் காணப்படவில்லை. தண்டனைச் சட்டக்கோவையின் பொதுத் தொந்தரவு தொடர்பான பல ஏற்பாடுகள் பொதுப்பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் வகிபங்கு பற்றிக் குறிப்பிட்டாலும் பொலிஸ் ஊரடங்கு உத்தரவினை அமுலாக்குதல் தொடர்பான போதுமான சட்ட அடிப்படைகள் பற்றி தண்டனைக் கோவையின் ஏற்பாடுகள் குறிப்பிடவில்லை.

தண்டனைக் கோவையின் பொதுத்தொந்தரவு தொடர்பான 261[17], 262[18] ஆகிய பிரிவுகள் சேமமாக வாழ்வதற்கான பொதுமக்களின் உரிமையை அங்கீகரிக்கின்றன. மேலதிகமாக பொலிஸ்

12 1947 ஆம் ஆண்டு இலக்கம் 25, பொதுப்பாதுகாப்பு கட்டளைச்சட்டம் பிரிவு 5

13 1947 ஆம் ஆண்டு இலக்கம் 25, பொதுப்பாதுகாப்பு கட்டளைச்சட்டம் பிரிவு 7

14 அரசியலமைப்பின் உறுப்புரை 155 (2)

15 1947 ஆம் ஆண்டு இலக்கம் 25, பொதுப்பாதுகாப்பு கட்டளைச்சட்டம் பிரிவு 8

16 அரசியலமைப்பின் உறுப்புரை 155 (3)

17 இலங்கை தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 261. எவரேனும் ஒருவர், செய்கின்ற செயல் அல்லது அவர் சட்ட விரோதமாகச் செய்யாது விடுகின்ற ஒரு விடயத்தினால் தீங்கு, ஆபத்து ஏற்படுதல் அல்லது பொதுமக்களுக்கோ அல்லது அண்டையிலுள்ள சொத்துக்களைக் கொண்டவர்களுக்கோ தமது உரிமையைப் பயன்படுத்தும் போது இடையூறு, இடைஞ்சல், ஆபத்து, அல்லது துன்புறுத்தல் ஆகியவற்றை மேற்கொள்ளுகின்ற ஒருவர், பொதுத் தொந்தரவை (Public nuisance) ஏற்படுத்திய நபராக குற்றஞ்சாட்டப்படுவார். பொதுத் தொந்தரவு என்பது சில சமயங்களில், சௌகரியம் அல்லது அனுகூலத்தை ஏற்படுத்தினாலும் அது மன்னிக்கப்படுவதில்லை.

18 இலங்கை தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 262. "எவரேனும் ஒருவர், தெரிந்து கொண்டே அல்லது அந்தச் செயலொன்றினைச் செய்வதற்கான காரணத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, சட்ட விரோதமாகவும் அலட்சியமாகவும் செய்யப்படுகின்ற அந்தச் செயலினால் வாழ்க்கைக்கு ஆபத்தான ஏதேனும் ஒரு நோய்த்தொற்று பரவுமாக இருந்தால், அந்த நபர் ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது மேற்கூறிய இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாவார்."

கட்டளைச்சட்டத்தின் 56ஆவது பிரிவானது, பொதுத் தொந்தரவினைத் தடுப்பதற்கான தனது சிறந்த முயற்சி மற்றும் திறனை பயன்படுத்துவது ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தரதும் கடமையாகும் எனக் குறிப்பிடுகிறது. எனினும் இந்த பொலிஸ் கட்டளைச்சட்டமானது ஊரடங்கு உத்தரவினை பொலிஸ் அமுலாக்குவதற்கான எந்தவொரு உத்தரவினையும் கொண்டிருக்கவில்லை ('Curfew in response to COVID-19: Legal Framework and Relevant Questions in Sri Lanka', 2020).

## பெருந்தொற்றுக் காலத்தில் விரைவுபடுத்தப்பட்ட சட்டங்கள்

வேகமாகப் பரவி வருகின்ற சுகாதார நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்கு அவசியமான சட்டங்களை உருவாக்க வேண்டியதொரு நிலையில் நிறைவேற்று அதிகாரத்தினை ஒன்றுதிரட்டிப் பாராளுமன்றத்தினைப் பலமிழக்கச் செய்கின்ற ஏனைய சட்டங்களை உருவாக்க அரசாங்கம் முன்னுரிமை அளித்தது. பெருந்தொற்றுக் காலத்தில் அவசரமாகக் கொண்டுவரப்பட்ட சட்டங்களாக, அரசியலமைப்புக்கான இருபதாம் சீர்திருத்தமும், கொழும்புத் துறைமுகநகரப் பொருளாதார ஆணைக்குழுவிற்கான சட்டமும் (Colombo Port City Economic Commission Act) காணப்படுகின்றது. மாறாக வேகமாகப் பரவிவரும் சுகாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க அரசாங்கத்தினால் நேர்மையான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. எனினும் பொதுச்சுகாதார அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தல், பொதுச்சுகாதார நலன்களைப் பாதுகாப்பதற்கான விசேட பொறிமுறைகளை நிறுவுதல் போன்றவற்றுக்கான சட்ட ரீதியான அடிப்படையொன்றினை வழங்க பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் 'தனிப்பட்ட உறுப்பினர் மசோதா' (Private Member Bill) ஒன்று 19ஆம் திகதி அக்டோபர் 2020ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டது (Indrajith, 2020).

### *இருபதாம் சீர்த்திருத்தம்*

இரண்டு நாள் விவாதத்தினைத் தொடர்ந்து 22ஆம் திகதி அக்டோபர் 2020இல் அரசியலமைப்புக்கான 20ஆவது சீர்திருத்தம் சட்டமாக்கப்பட்டது (*Sri Lanka: newly adopted 20th Amendment to the Constitution is blow to the rule of law*, 2020).

நிறைவேற்று சனாதிபதி கொண்டிருந்த தடைகளையும் சமனிலையையும் இல்லாதொழிக்கும் வகையிலேயே பிரதான மாற்றங்கள் 20 ஆம் திருத்தத்தினால் மேற்கொள்ளப்பட்டன. இதன் மூலம்

சுதந்திர ஆணைக்குழுக்களுக்கான நியமனங்களை (அரசியலமைப்புப் பேரவையினூடாக) மேற்கொள்வதில் சனாதிபதிக்கிருந்த மட்டுப்பாடுகள் இல்லாதொழிக்கப்பட்டன. 20ஆவது திருத்தத்தின் பிரகாரம், அரசியலமைப்புப் பேரவையானது அதிகாரமில்லாத பாராளுமன்றப் பேரவை ஒன்றினால் பிரதியீடு செய்யப்பட்டது. அத்தோடு சுதந்திர ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களை நியமிக்க சனாதிபதிக்குத் தன்னிச்சையான அதிகாரத்தினை வழங்கி, சுதந்திர ஆணைக்குழுக்களுக்கான சுயாதீன தன்மையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது ('Statement on the Twentieth Amendment', 2020).

குழு மட்டத்தில் (Committee Stage) பல புதிய ஏற்பாடுகளை அறிமுகஞ்செய்தமையானது செயன்முறை சார்ந்த பல பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது திருத்தத்திற்காகப் பிரசுரிக்கப்பட்ட மசோதாவில் நீதிமன்ற நீதிபதிகளை அதிகரித்தல் என்ற விடயமானது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெருந்தொற்றுப் பின்னணியில் அரசியலமைப்பு திருத்தச் செயன்முறையின் இறுதிக்கட்டத்தில் இத்தகைய புதிய ஏற்பாடுகளை அறிமுகஞ்செய்வதானது நீதிப் புனராய்வு மற்றும் பொதுமக்களின் பங்குபற்றல் போன்றவற்றினை மீறுவதால் இது சனநாயகத்திற்கு முரணானதாக அமைகிறது(*Sri Lanka: newly adopted 20th Amendment to the Constitution is blow to the rule of law*, 2020).

## *கொழும்புத் துறைமுகநகரம்*

கொழும்புத் துறைமுகநகர பொருளாதார மசோதாவில் உள்ளடக்கப்பட்ட பல விடயங்களுக்கு எதிராக 19 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன. இறைமை, ஆள்புல ஒருமைப்பாடு, சட்டத்தின் ஆட்சி போன்றவற்றிற்கு மசோதாவினால் ஏற்படவுள்ள விளைவுகள் குறித்து எதிரக்கட்சி மற்றும் சிவில் சமூகக் குழுக்கள்[19] இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தன. மசோதாவை நிறைவேற்ற பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுதல் அல்லது மக்கள் தீர்ப்பு ஒன்றினை நடத்தல் போன்றவற்றைத் தவிர்க்க விரும்பிய அரசாங்கம் உயர்நீதிமன்றம் குறிப்பிட்ட 25 திருத்தங்களையும் உடனடியாக ஏற்றுக்கொண்டது (Srinivasan, 2021).

விமர்சகர்கள் இந்த மசோதா குறித்துக் குரல் எழுப்பிய பிறிதொரு விடயம் என்னவெனில், சட்ட உருவாக்கச் செயல்முறையின் போது பொதுமக்கள் ஆலோசனை, மறுசீராய்வு என்பனவற்றுக்குக்

19 'மாற்றுக்கொள்கைக்கான நிலையம் மற்றும் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து எதிர் சட்டமா அதிபர் (SC SD 4/ 2021) ( கொழும்புத் துறைமுகநகர பொருளாதார ஆணைக்குழு மசோதா தொடர்பாக', 2021.)

குறைந்தளவான சந்தர்ப்பங்களே காணப்பட்டன என்பதாகும். உயர்நீதிமன்றத் தீர்மானம் அறிவிக்கப்பட்டு மறுநாள் மசோதா அவசரமாக விவாதிக்கப்பட்டு அடுத்த இரண்டு நாட்களுக்குள் நிறைவேற்றப்பட்டது ('Transparency International Sri Lanka continues to have the serious concerns about new Colombo Port City Law', 2021).

சட்டத்தின் ஆட்சி, இறைமை, பிரசைகளின் அடிப்படை உரிமைகள் போன்றவற்றுக்கு நீண்டகாலத் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியதாகக் காணப்படும் துறைமுகநகர பொருளாதாரச் சட்டமானது, பெருந்தொற்றுக் காலத்தில் அதற்கான மசோதாக்கள் அவசரமாக நிறைவேற்றப்பட்டமை பலரது கவனத்தினையும் ஈர்த்துள்ளது.

## ஆளுகை மற்றும் உரிமைகள் பிரச்சினைகள்

### *பதில் நடவடிக்கைகள் அரசியல்மயமாதலும் இராணுவமயமாதலும்*

ஆரம்பத்திலிருந்தே நெருக்கடி நிலையொன்றினைச் சமாளிக்கக்கூடிய இயலளவு கொண்ட சுகாதாரத் துறையிரதும் சிறந்த நிபுணத்துவத்தினைக் கொண்ட இலங்கை சிவில் நிருவாகத்தினதும் பங்கு வெளிப்படையாகக் காணப்பட்டது ('Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force', 2020). எனினும் சுகாதாரம் மற்றும் ஏனைய துறைகளில் நிபுணத்துவம் கொண்ட சிவில் உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்பட்டு, இராணுவ ஆளணியினருக்கும் சனாதிபதிக்கு நெருக்கமான துறைசார் பணிக்குழாத்தினருக்குமே அவசரகால நிலைமையொன்றில் உடனடியாக செயல்படுவதற்கான முன்னுரிமையும் முதன்மை ஸ்தானமும் வழங்கப்பட்டிருந்தது (Fonseka, 2020).

நன்நடத்தை, வினைத்திறன் ஆகியன கடுமையாக வலியுறுத்தப்படுகின்றதொரு அரசாங்கத்தின் நிலையானது, பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகளின் பல மட்டங்களில் இராணுவமயமாதலின் ஊடுருவலைத் தொடர்ந்திருக்கச் செய்துள்ளது. உதாரணமாக, சுகாதார அமைச்சின் செயலாளர் பதவி, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அரசாங்க பதவிகளுக்கு ஓய்வுபெற்ற மற்றும் தற்போது சேவையிலிருக்கும் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். மேலும் பெருந்தொற்றினை எதிர்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட பல நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக்கப்பட்ட செயலணிகளுக்கு இராணுவப் பின்னணி கொண்ட உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர் ('Technocratic Populism and the Pandemic State', 2020). சனவரி 2021 ஆகின்றபோது மாவட்ட மட்டத்தில்

தனிமைப்படுத்தல் செயன்முறையினை மேற்பார்வை செய்தல் உள்ளிட்ட கொவிட்-19 தடுப்பினது ஒழுங்கமைப்பு செயன்முறைகளுக்குச் சிரேஷ்ட இராணுவ உத்தியோகத்தர்கள் பொறுப்பாக்கப்பட்டிருந்தனர். இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவின் பரிந்துரையின் பிரகாரம், இந்த இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர் ('Army officers to coordinate COVID-19 prevention measures', 2021). கொவிட்-19 தொற்றினைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் (NOCPCO) தலைவர் என்ற அடிப்படையில் சுகாதார நெருக்கடி தொடர்பான முக்கியமான தீர்மானங்கள் மற்றும் அறிவித்தல்கள் ஷவேந்திர சில்வாவினால் முன்வைக்கப்படுகின்ற நிலைமை காணப்படுகின்றது (Fonseka, 2020).

தொற்றுக்குள்ளானவர்களைத் தேடிக்கண்டுபிடித்தல், சோதனைச் சாவடிகளை நிருவகித்தல் (*Sri Lanka: Increasing Suppression of Dissent*, 2020), தடுப்பூசிகளை நிருவகித்தல் (Jayawardana, 2021), தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு ஆட்களை வலுக்கட்டாயமாகக் கொண்டு செல்லுதல் ( *Sri Lanka: vulnerable groups pay the price for militarization of COVID-19 response,* 2020b), தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களைக் கண்காணிக்க ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தல் போன்ற பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகளில் அதிகூடிய இராணுவமயமாக்கத்தினைக் காணக்கூடியதாகவிருந்தது (Charindra, 2020).

'சுகாதார நெருக்கடி' என்பதனைப் 'பெருந்தொற்றுக்கெதிரான போர்' மற்றும் 'தேசிய பாதுகாப்புக்கான சவால்' என்ற வகையில் தொற்றுநோயைப் பாதுகாப்பு பிரச்சினையுடன் தொடர்புபடுத்தி இராணுவமயமாக்கம் விபரிக்கப்பட்டிருந்தது (Fonseka, 2020). பெருந்தொற்றானது இராணுவம் மற்றும் பாதுகாப்புத்துறை போன்றன விஸ்தரிக்கப்படுவதற்கான வசதியான நியாயப்படுத்தலை வழங்கியிருந்தது. அத்தோடு அவசரகால நடவடிக்கைகள் என்ற பெயரில் சில நடவடிக்கைகளை சட்டபூர்வத் தன்மையானதாகவும் இயல்பானதொரு விடயமாகவும் நியாயப்படுத்த பெருந்தொற்று ஓர் அரிய சந்தர்ப்பத்தினை வழங்கியுள்ளது. அவசரகால நிலையின் போது இராணுவத்துக்கு ஒரு குறிப்பிடப்பட்ட வகிபங்கு காணப்பட்டாலும்கூட, இலங்கையின் அரசியலமைப்பு சனநாயகத்திற்கு நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் அரச அலுவலகங்கள் மற்றும் பிரசைகளின் பரப்புகளில் தற்போது இருக்கின்ற இராணுவத்தின் தலையீட்டு மட்டமானது நியாயப்படுத்தக் கூடிய அளவில் காணப்படவில்லை.

மேலும் புதிதாக நிறுவப்பட்ட சிறப்புக் கட்டமைப்புகள் மற்றும் பொது நிறுவனங்களுக்கான முக்கிய பல நியமனங்கள் பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகளில் அரசியல்மயமாதல்

இடம்பெறுதலை வெளிப்படுத்துகின்றன. முக்கியமாக அத்தியாவசிய சேவைகளின் தொடர்ச்சியான வழங்கல், செயற்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தல் போன்றவற்றுக்கான சனாதிபதிச் செயலணியானது (Presidential Task Force on Continuous Supply, Operation and Coordination of Essential Services) பசில் ராஜபக்ஷவினால் தலைமை தாங்கப்படுகிறது. இந்த நியமனங்களுக்கான பங்கீடுகள் இடம்பெறுகின்ற போது அரசியல் ஆதரவாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு மேலெழுந்துள்ளது. குறைந்தபட்ச மேற்பார்வையுடன் உள்ளூராட்சி அதிகார சபைகளினால் 5,000 ரூபாய் கொடுப்பனவுக்காகக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டமையிலும் இந்தச் சர்ச்சை பிரதிபலித்திருந்தது (Colombage, 2020a). மேலும், பொதுத்துறைகளின் மிக முக்கியமான பதவிகளுக்கு ஓய்வுபெற்ற மற்றும் தற்போது சேவையிலுக்கும் பல இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படுதலானது, இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சுகாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இராணுவமயமாக்குதலில்கூட அரசியல்மயப்படுத்தல் இடம்பெறுதனை வெளிப்படுத்தப்படுகிறது.

### *அடக்குமுறை*

எதிர்ப்பினை அடக்குவதற்கான ஒரு போலிக் காரணமாக இந்தச் சுகாதார நெருக்கடி பயன்படுத்தப்படுகின்றது. ஏப்ரல் 2020ஆம் ஆண்டு, சிரேஷ்ட சட்டத்தரணியும் செயற்பாட்டாளருமான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா என்பவர் சுகாதார அமைச்சினால் வீட்டில் தங்கியிருக்குமாறு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டு, குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தினால் (Criminal Investigation Department) கைதுசெய்யப்பட்டிருந்தார் (Ruwanpathirana, 2020). மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் தாபனத்தின் உயர்ஸ்தானிகரான மிஷேல் பசிலட் (Michelle Bachelet), அரசாங்கத்தை விமர்சிப்பவர்களைக் கைதுசெய்தல் மற்றும் மிரட்டுதல் குறித்த அறிக்கைகள் வெளிக்கிளம்பியதனைத் தொடர்ந்து, கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக எடுக்கப்படுகின்ற கடுமையான நடவடிக்கைகள் குறித்து எச்சரிக்கை விடுத்தார் (*Asia: Bachelet alarmed by clampdown on freedom of expression during COVID-19,* 2020).

அரசாங்க அதிகாரிகளின் சிறிய விடயங்களைப் பெரிதுபடுத்தி, அரசாங்கத்தைச் சமூக ஊடகங்களில் விமர்சித்து தரவேற்றம் செய்பவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் பொலிஸ்மா அதிபர் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் ('Strict action against those criticise state officials on social media', 2020). பதில் பொலிஸ் மா அதிபருக்கான கடிதத்தில், அரச அதிகாரிகள்

மற்றும் கொள்கைகள் போன்றவற்றை வெறுமனே விமர்சித்தமைக்காகத் தனிநபர்கள் கைதுசெய்யப்படுவது அரசியலமைப்புக்கு முரணானது என மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருந்தது (*Limiting Freedom of Expression in a Democracy: The Need to Strike a Lawful Balance*, 2020).

சமூக ஊடகங்களில் "பொதுமக்களது இயக்கங்கள் மற்றும் டெங்கு, கொவிட்-19 தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்" தொடர்பாகப் போலியான செய்திகளைப் பரப்பி பிரச்சினைகளை ஏற்படுத்துபவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள அண்மையில் புலனாய்வுத் துறையில் (CID) விசேட குழுவொன்று தாபிக்கப்பட்டுள்ளது (Nathaniel, 2021).

பேச்சு, கூட்டங்கூடுதல், தனிப்பட்ட விடுதலை போன்ற அடிப்படை உரிமைகளைக் கணிசமானவளவு கட்டுப்படுத்துவதில் மிக முக்கியமான கருவியாக, சுகாதார நெருக்கடியினைச் சமாளிப்பதற்காக உருவாக்கப்பட்ட சட்டங்களும் விதிமுறைகளும் காணப்படுகின்றன. சுகாதார நெருக்கடிக்கு இராணுவ ரீதியாக முன்னெடுக்கப்பட்ட பதில் நடவடிக்கைகள் அடக்குமுறைக்கான சூழலை ஏற்படுத்தி, உண்மையான சனநாயகத்துக்கு நீண்டகாலத் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன. அடக்குமுறையை கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் பிரசைகளின் இயங்கு பரப்பினைக் குறைத்துள்ளன. அத்தோடு, கைதுசெய்யப்படலாம் அல்லது பழிவாங்கப்படலாம் என்ற அச்சத்தினால் பிரசைகள் இணையத்திலோ அல்லது அதற்கு வெளியேயான பரப்புக்களிலோ தமது கருத்துக்களை முன்வைக்கத் தயங்குவதனையும் காணமுடிகிறது.

## *பாரபட்சங்களுக்குள்ளான மற்றும் பாதிப்படையக்கூடிய குழுக்கள் மீதான தாக்கங்கள்*

பாரபட்சங்களுக்குள்ளாகும் மற்றும் பாதிப்படையக்கூடிய குழுக்களாகக் காணப்படும் அன்றாட தினக்கூலி பெறுபவர்கள், சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள், குடிபெயர்ந்த தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர் சமூகம் ஆகியன நெருக்கடிச் சுமைகளைத் தொடர்ச்சியாக அனுபவித்துச் சுமந்து வருவதனால் இந்த கொவிட்-19 ஆனது ஏற்கனவே சமூகத்தில் காணப்பட்ட பிரச்சனைகளைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதோடு சமூகத்தின் கட்டமைப்புசார் அசமத்துவங்களையும் அதிகரித்துள்ளது ('Socio-Economic Index in the face of COVID-19', 2021). கொவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்தும் ஊரடங்கு உத்தரவுகளும் நாட்டினை முழுமையாக மூடுதலும் மில்லியன் கணக்கான தினக்கூலித் தொழிலாளர்களைப் பாதித்துள்ளது ('Partial

shutdown sinks small businesses, daily wage earners', 2020). அத்தோடு தங்குமிடம் மற்றும் தாய்நாட்டிற்குத் திரும்பி வருவதற்கான விமான சேவைகளின்றி வளைகுடா நாடுகளில் ஏராளமான குடிபெயர்ந்த தொழிலாளர்கள் சிக்கித் தவித்துள்ளனர் (Hamza, 2021).

அண்மையில், தடுப்பூசித் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களிடையே ஏற்பட்டுள்ள கொவிட்-19 பரவலானது தற்போது கவனத்திற் கொள்ளப்படுகின்ற விடயமாக மாறியுள்ளது (Gunawardana and Padmasiri, 2021). இந்த சுகாதார நெருக்கடி காலத்தில் சிறைச்சாலைகளிலுள்ள சிறைக்கைதிகளின் நெரிசல் நிலையும் கவனங்கொள்ளப்பட வேண்டியதொரு விடயமாகும். இத்தகையதொரு நிலைமையினால், மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தின் போது 11 சிறைக்கைதிகள் கொல்லப்பட்டனர் (Srinivasan, 2020). ஏற்கனவே காணப்பட்ட கட்டமைவுகள் மற்றும் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட சிறப்புக் கட்டமைவுகள் மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை முகாமை செய்பவையாகக் காணப்பட்டாலும் இத்தகைய பிரச்சனைகள் இடம்பெறுவதானது கட்டமைவுகள் நடைமுறைப்படுத்தப்படுவதிலுள்ள இடைவெளியையே வெளிப்படுத்துகிறது. இந்த இடைவெளி நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

நாடு முடக்கப்பட்டிருக்கின்ற சூழலில் அதிகரித்த வீட்டு வன்முறையும் கவனத்தினை ஈர்க்கின்ற பிறிதொரு சிக்கலான போக்காகக் காணப்படுகிறது. சுகாதார நெருக்கடியினால் ஏற்பட்ட பொருளாதார சமூக அழுத்தங்களுக்குப் புறம்பாக, ஆட்களின் நடமாட்டத்திற்கு ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகள் (UNICEF, 2020) வீட்டு வன்முறை தொடர்பான பிரச்சினைகளை அதிகரித்துள்ளதோடு சட்டத்தை அமுலாக்கும் அதிகார சபைகளை அணுகுதல், ஆபத்திலுள்ளவர்கள் உதவி வலையமைப்புகளை அணுகுதல் போன்றவற்றில் மட்டுப்பாடுகளை ஏற்படுத்தியுள்ளமையானது நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது (Fonseka, 2021). அழுத்தம் தருகின்ற இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நடைமுறையிலிருக்கின்ற சட்டக் கட்டமைவுகளின் இடைவெளிகள் அகற்றப்பட வேண்டும்.

கொவிட்-19 பதில் நடவடிக்கைகளானவை முஸ்லிம் சமூகத்தினர் மீது ஏற்படுத்திய தாக்கம் பரந்தளவில் விமர்சிக்கப்பட்டது. பெருந்தொற்று உருவாக முன்னரே முஸ்லிம் சமூகத்திற்கு எதிரான பாரபட்சம் மற்றும் களங்கப்படுத்துதல் (Stigmatization) போன்றன காணப்பட்டன. எனினும் கொவிட்-19 இனது பின்னணியில் ஒருதலைப்பட்சமான முறையில் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளால் மேலும் அவை துரிதப்படுத்தப்பட்டன (Fonseka and Dissanayake, 2021). குறிப்பாக, 11ஆம் திகதி ஏப்ரல் 2020இல் இலக்கம் 2170/8 மூலம்

பிரசுரிக்கப்பட்ட விசேட வர்த்தமானியின் ஒழுங்குவிதிகள் கொவிட்-19 நோயாளி அல்லது நோயாளியாக சந்தேகிக்கப்படும் ஒருவரின் உடலைத் தகனஞ்செய்வதனைக் கட்டாயமாக்கியிருந்தன ('Q and A on Regulations Issued under the Quarantine and Prevention of Diseases Ordinance & how this impacts the COVID-19 response in Sri Lanka', 2020). "இலங்கையிலோ அல்லது வேறு எந்த நாட்டிலோ இறந்த உடல்களை தகனம் செய்வதனால் கொவிட்-19 போன்ற தொற்றுப் பரவக்கூடிய நோய்கள் அதிகரிக்கும் என்பதற்காகத் தாபிக்கப்பட்ட மருத்துவ அல்லது விஞ்ஞான ஆதாரங்கள் எவையும் இல்லாத நிலையில்" ஐக்கிய நாடுகள் தாபனத்தின் மனித உரிமை நிபுணர்கள் இலங்கையினது கட்டாயத் தகனக் கொள்கை ஒரு மனித உரிமை மீறல் எனக் குறிப்பிட்டனர் (*Sri Lanka: Compulsory cremation of COVID-19 bodies cannot continue, say UN experts*, 2021). பெருமளவான விமர்சனங்களைத் தொடர்ந்து தகனத்துடன் அடக்கம் செய்தலையும் உள்ளடக்கும் வகையில் ஒழுங்குவிதிகள் பின்னர் திருத்தியமைக்கப்பட்டன ('An Update on the Legal Framework to Address the COVID-19 Pandemic in Sri Lanka', 2021).

கொவிட்-19 இனது முதலாவது அலைக்கு முஸ்லிம்களே பொறுப்பானவர்கள் என்பதனை ஊக்குவிக்கும் முகமாக முஸ்லிம்களின் இனத்துவத்தினைப் பெரிதுபடுத்தி மேற்கொண்ட ஒழுக்கமற்ற அறிக்கைப்படுத்தலினால் முஸ்லிம் சமூகத்தினர் குறிவைக்கப்பட்டனர் (Ganeshathasan, 2021). இந்த அறிக்கைகள் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் முன்வைக்கப்பட்ட விசனங்கள் எவையும் இலங்கை அரசாங்கத்தினால் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

## *தடுப்பூசிகளை வழங்குவதில் முறைகேடுகள்*

29ஆம் திகதி சனவரி 2021இல், இலங்கையில் தடுப்பூசி வழங்குதல் ஆரம்பமாகியது. கொவிட்-19 பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் முன்னிலையிலிருந்த சுகாதாரத் துறையினர் உட்பட பலர் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டிருந்த நிலையில் தாதிமார் இன்னும் தடுப்பூசி பெறவில்லை என அகில இலங்கை தாதிமார் சங்க பொதுச் செயலாளர் குறிப்பிட்டிருந்தார் ('Nurses yet to receive COVID-19 vaccines; union claims', 2021). இது இடரினை முன்னிலைப்படுத்தும் வரைமுறைகளின் பொருத்தத்தன்மை குறித்து கேள்வியை எழுப்புகிறது. தற்போது கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி, மேல் மாகாணத்திற்குத் தடுப்பூசி வழங்குவதிலேயே அதிக கவனஞ்செலுத்தப்படுவதனால் நாடு பூராகவும் தடுப்பூசி வழங்குதல் என்பது சாத்தியமற்றதாகக்

காணப்படுகிறது ('An Update on the Legal Framework to Address the COVID-19 Pandemic in Sri Lanka', 2021). இந்த சவால்களுக்கு மேலதிகமாக தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகளில் தலையிட்டமை தொடர்பாகவும் (Sangakkara, 2021), தடுப்பூசிகளை வழங்குவதில் முன்னுரிமைப் பட்டியல் மற்றும் பதிவுகளைப் புறக்கணிக்குமாறு தடுப்பூசி நிலையங்களில் சேவைபுரிந்த சுகாதார ஊழியர்கள் மீது செல்வாக்கு செலுத்தியமை தொடர்பாகவும் பல அரசியல்வாதிகளுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன (Dewasiri, 2021).

திட்டமிடல், முன்னுரிமையளித்தல், இடர் குறித்த தகவல்களை அறிவித்தல் போன்றவற்றில் காணப்பட்ட போதாமை நிலையானது ('Sri Lanka's vaccination drive in disarray - College of Community Physicians highlights six key issues', 2021) அண்மைக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாடுகளின் மத்தியில் தற்போது இடம்பெற்றுக்கொண்டிருக்கும் தடுப்பூசி வழங்கல் குறித்த பயம் மற்றும் ஸ்திரத்தன்மையின்மையினை ஏற்படுத்தியுள்ளது. இது தடுப்பூசி வழங்கல் தொடர்பான வினைத்திறன் மிக்க தீர்மானம் எடுத்தல், பொதுமக்களுக்கு அது குறித்த தகவல்களை வழங்குவதற்கான ஒருங்கிணைந்த பொதுப் பிரச்சாரத்திற்கான தேவை போன்றவற்றினை வெளிப்படுத்தி நிற்கிறது. கொவிட்-19 பதில் நடவடிக்கைகளுடன், குறிப்பாக தடுப்பூசி வழங்கல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் தலைமைத்துவம், நிறுவனஞ்சார் கட்டமைப்புகள் மற்றும் பொறுப்புக்களின் எல்லைகள் போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது ('Let's talk about the vaccine: the need for strategy, clarity and equality', 2021).

## வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை மீதான தாக்கங்கள்

### *பாராளுமன்றக் கலைப்பு*

சுகாதார நெருக்கடியின் ஆரம்பத்தில் செயல்படும் பாராளுமன்றமொன்று இல்லாதிருந்தமையானது பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகளில் காத்திரமான விளைவுகளை ஏற்படுத்தியதுடன், ஏற்கனவே நடைமுறையிலிருந்த நிறைவேற்றுத் துறையின் செல்வாக்கினையும் வலுப்படுத்தியது. கொவிட்-19 பெருந்தொற்று இலங்கையில் ஏற்படுவதற்கு முன்னர், குறிப்பாக 2ஆம் திகதி மார்ச்

2020இல் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது[20]. 19ஆம் திகதி மார்ச் 2020 இல் வேட்புமனுக்களுக்கான காலம் முடிவடைந்தமையினைத் தொடர்ந்து சுகாதார நெருக்கடி வெளிக்கிளம்பிய நிலையில் தேர்தல் ஆணைக்குழு தேர்தலை ஒத்திவைக்கத் தீர்மானித்தது. பாராளுமன்றம் ஒன்று கலைக்கப்பட்ட நிலையில் அவசரகால நிலைமை ஒன்றினைச் சமாளிக்க, நடைமுறையிலிருந்த நிறுவனங்களை அரசாங்கம் பயன்படுத்த முடியாதிருந்தமையால் அவசரகால நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பான விசனங்கள் வெளிக்கிளம்பலாயிற்று. பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையினால் குறைந்தளவு மேற்பார்வையுடன், பொது நிதியைக் கையாளும் கட்டுப்பாடற்ற அதிகாரம் சனாதிபதிக்குக் கிட்டியது. குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், சுகாதார நெருக்கடியின் ஆரம்பத்தில் விரைவானதும் வினைத்திறனானதுமான பதில் நடவடிக்கைகளை முன்னெடுக்க நடைமுறையிலிருந்த நிறுவனங்களின் பயன்பாடு தேவைப்பட்ட போதிலும்கூட, பாராளுமன்றத்தினைக் கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை சனாதிபதி மீளப்பெறவில்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்த சில மாத காலப்பகுதியில் சனாதிபதி சுகாதார நெருக்கடியினைச் சமாளிக்க சிறப்பு கட்டமைப்புகளைத் தாபித்து ஒழுங்குவிதிகளை உருவாக்கியமையினால் தடைகளும் சமநிலையும் நிறைவேற்றுத்துறைக்கு ஆதரவாக வளைக்கப்பட்டன.

## *பொது நிதியும் இட்டுக்கம நிதியும்*

தேசிய பொருளாதாரத்தில் பெருந்தொற்றானது பாதகமான விளைவுகளைத் தொடர்ந்தும் ஏற்படுத்த விளைவதனால் பொது நிதியின் வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை, அரசாங்கம் நிதியினைத் திரட்டும் முயற்சிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கையின் பொருளாதாரப் பரிமாணம் பற்றி அறிந்துகொள்வது அவசியமானதாகும். பெருந்தொற்றினால் துவண்டுபோயுள்ள பொருளாதாரத்தை மறுசீரமைத்தலே 2021 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய குவிமையமாக இருக்கும் என நம்பப்பட்டது.

எனினும் 235 பில்லியன் ரூபா (மொத்த அரசாங்க செலவில் 6.43%) சுகாதாரத் துறைக்காக மத்திய அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலையில், 2021 வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புத் துறைக்கு 348 பில்லியன் ரூபாய் (மொத்த அரசாங்க செலவில் 9.55%) மத்திய

20 2ஆம் திகதி மார்ச் 2020, வர்த்தமானி (விசேட) இலக்கம் 2168/8

அரசாங்கத்திற்கு ஒதுக்கப்பட்டு, 10ஆம் திகதி டிசம்பர் 2020இல் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது ('Public Report on the 2021 budget: assessment on whether the expenditure allocations and taxation policies are in line with the government's policy', 2020). தன்னிச்சையாகத் தெரிவுசெய்யப்பட்ட சில உட்கட்டமைப்பு திட்டங்களான நகர்ப்புற நகரங்கள், வீதிக் கட்டுமானம், நடைபாதைகள் போன்றவற்றுக்காக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் குறித்தும் விமர்சகர்கள் கடுமையாக கருத்துக் தெரிவித்திருந்தனர் (Colombage, 2020b). ஏப்ரல் 2021இல், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சுகாதார வசதிகளை விரிவுபடுத்துவதற்கான ரூபா 18 பில்லியன் ஒதுக்கீடு பற்றி அறிவித்திருந்தார் (Ghosh, 2021).

இந்நிலையில் மார்ச் 2020இல் கொவிட்-19 நெருக்கடியை குறைத்தல், பொதுநல நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவுதல் போன்றவற்றுக்காகப் பொது நிதியை திரட்டும் நோக்கில் 'இட்டுக்கம கொவிட்-19 சுகாதார நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நிதியம்' (Itukama COVID-19 Healthcare and Social Security Fund) என்பது தாபிக்கப்பட்டது. இந்நிதியமானது 17 பில்லியன் பணத்தினை மொத்தமாக திரட்டியிருந்தாலும்கூட, சுகாதார நெருக்கடி அதிகரித்து வரும் நிலையில், சேகரிக்கப்பட்ட பணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் நன்கொடைகளின் வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை என்பன பொது விவாதத்திற்குரிய தலைப்பாக இருந்து வருகிறது. 10ஆம் திகதி மே 2020இல் தாபிக்கப்பட்டதிலிருந்து நிதியத்தினது வருமானம் மற்றும் செலவீனங்கள் குறித்த அறிக்கையொன்றினை சனாதிபதி ஊடகப் பிரிவு (President's Media Division) வெளியிட்டிருந்தது. அறிக்கையின் படி, தற்போது வரை நிதியத்தின் 23% நன்கொடையே பயன்படுத்தப்பட்டுள்ளது. நிதியத்தின் எஞ்சிய பணமானது தடுப்பூசி திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது ('Remaining 'ITUKAMA' COVID–19 Fund for', 2021).

12ஆம் திகதி மே மாதம் சனாதிபதி செயலகத்தின் வேண்டுகோளின் பேரில் நிதியத்தினைக் கணக்காய்வு செய்ய ஆரம்பித்துள்ளதாகக் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம் தெரிவித்தது (Thomas, 2021). எனினும் பாராளுமன்றில் ஒரு தனியான சட்டத்தின் கீழ் இது நிறைவேற்றப்பட்டமையினால் நிதியத்தினை நேரடியாக கணக்காய்வு செய்யும் அரசியலமைப்புசார் அதிகாரங்கள் தேசியக் கணக்காய்வு அலுவலகத்திற்கு (National Audit Office) கிடையாது என பிரதி கணக்காய்வாளர் நாயகம் பி.எல். கே பெரேரா (P.L.K. Perera) தெளிவுபடுத்தினார். எனவே வருடாந்தம் இடம்பெறுகின்ற சனாதிபதி செயலக கணக்காய்வின் போது,

நிதியத்திற்கான கணக்காய்வும் இடம்பெற வேண்டும் என்ற விளக்கம் முன்வைக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் அடுத்த வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படுவதற்கு முன்னர தேசிய கணக்காய்வு அலுவலகம் கணக்காய்வினை ஆரம்பித்து அதனை நிறைவு செய்யும் எனவும் பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் குறிப்பிட்டார் (Mudugamuwa, 2021).

நீண்ட மற்றும் குறுகிய காலத் தாக்கங்களைக் கொண்ட சமூக நெருக்கடிச் சூழ்நிலையின் அடிப்படையிலேயே இந்த நிறுவனம்சார் நெருக்கடிகளையும் தொடர்புபடுத்த முடிகிறது. மறுபுறமாக குறைந்தளவான நிறுவன வெளிப்படைத் தன்மை, பொறுப்புடைமை, அரசாங்கத்தின் நிறைவேற்றுத் துறையினால் அதிகரித்து வரும் மத்தியமயப்படுத்தப்பட்ட தீர்மானம் எடுத்தல் ஆகியன சமூக பொருளாதாரப் பிளவுகளை மேலும் ஆழப்படுத்துகின்றன. இது கொவிட்-19இன் வெற்றிகரமான தடுப்பு மற்றும் பொருளாதார சிதைவிலிருந்து மீண்டெழுதல் போன்றவற்றைத் தடைசெய்யலாம் (Fonseka, Ganeshathasan, and Welikala 2020). மறுபுறமாக நிறுவன மட்டத்தில் அதிகரித்து வரும் அசமத்துவம், பாரபட்சம், தண்டனையிலிருந்து விலக்களிக்கும் பரவலான கலாசாரம் ஆகியன நிறுவனச் செயன்முறைகளில் மக்களின் நம்பிக்கை மற்றும் பங்குபற்றலை குறைக்கின்றன.

## முடிவுரை

இலங்கையின் பெருந்தொற்று ஆளுகை என்பதனை இறுக்கமான, இராணுவமயப்படுத்தப்பட்ட கட்டமைப்புகள், தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயன்படுத்தும் ஒழுங்குவிதிகள், நடைமுறையிலுள்ள நிறுவனங்கள், பொறிமுறைகள் மற்றும் நிபுணத்துவத்தைப் புறக்கணித்தல் என்பவற்றின் அடிப்படையிலேயே விளங்கிக் கொள்ளமுடிகிறது. கொவிட்-19 முதலாவது அலையை இலங்கை கட்டுப்படுத்தியமையானது பாராட்டுக்குரிய விடயமாகும். எனினும் தற்போது அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவம், சிக்கலான தொடர்பாடல் போன்றன தொற்று அதிகரிப்பை ஏற்படுத்தி, அபாய நிலைமையை ஏற்படுத்தலாம். தற்போது இடம்பெற்று வரும் அரசியல்மயமாதல், இராணுவமயமாதல், நிறைவேற்றுத்துறையின் செல்வாக்குப் பெருகுதல், பாதிப்படையக்கூடிய சமூகங்களைப் பாரபட்சத்திற்குள்ளாக்குதல் ஆகியன சட்டத்தின் ஆட்சி, அதிகாரப் பிரிவினை, பிரசைகளின் உரிமைகள் போன்றவற்றிற்கு நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துவதோடு தற்போது அடியெடுத்து வைத்துள்ள சனநாயக பின்னடைவினை மேலும் வலுப்படுத்தலாம் (Fonseka and Dissanayake, 2021).

பேச்சு, கூட்டங்கூடுதல், விடுதலை ஆகியவற்றுடன் தொடர்புடைய உரிமைகளைக் குறைத்தல் மற்றும் சனரஞ்சக எதேச்சையதிகாரத்தினை வலுப்படுத்தி ஏற்கனவே பரவலாக நிலவும் பயம் மற்றும் அச்சுறுத்தல் சூழ்நிலையினைப் தொடர்ந்திருக்கச் செய்யும் நோக்குடன் சனநாயகக் கொள்கைகளை மறுத்தல் போன்றவற்றுக்கான வலுவான தளத்தினை பெருந்தொற்று வழங்கியுள்ளது. எனவே, பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகளின் வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை போன்றனவற்றை உறுதிப்படுத்தி, சனநாயக சீரழிவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுத்தல் இன்றியமையாததாகும்.

## உசாத்துணைகள்:


'An Update on the Legal Framework to Address the COVID-19 Pandemic in Sri Lanka' (2021) *Centre for Policy Alternatives,* 12 May. Available at: https://www.cpalanka.org/an-update-on-the-legal-framework-to-address-the-covid-19-pandemic-in-sri-lanka/ (Accessed: 15 June 2021).

'Army officers to coordinate COVID-19 prevention measures' (2021) *News First*, 1 January. Available at: https://www.newsfirst.lk/2021/01/01/army-officers-to-coordinate-covid-19-prevention-measures/ (Accessed: 15 June 2021).

'Cremation Vs. Burial: Expert Panel Revises Recommendation To Include Both Cremation And Burial Of COVID-19 Dead Bodies' (2021) *Colombo Telegraph*, 2 January. Available at: https://www.colombotelegraph.com/index.php/cremation-vs-burial-expert-panel-revises-recommendation-to-include-both-cremation-and-burial-of-covid-19-dead-bodies/ (Accessed: 15 June 2021).

'Curfew in response to COVID-19: Legal Framework and Relevant Questions in Sri Lanka' (2020) *Centre for Policy Alternatives*, 21 April. Available at: https://www.cpalanka.org/curfew-in-response-to-covid-19-legal-framework-and-relevant-questions-in-sri-lanka/ (Accessed: 15 June 2021).

'Expert Committee to keep tab on new COVID therapies, vaccines' (2021) *Daily News*, 21 May. Available at: http://www.dailynews.lk/2021/05/21/local/249855/expert-committee-keep-tab-new-covid-therapiesvaccines (Accessed: 15 June 2021).

‘No decision taken to declare a complete lockdown’ (2021) *Daily News*, 10 May. Available at: http://www.dailynews.lk/2021/05/10/local/248889/no-decision-taken-declare-complete-lockdown (Accessed: 15 June 2021).

‘Nurses yet to receive COVID-19 vaccines; union claims’ (2021) *News First*, 3 May. Available at: https://www.newsfirst.lk/2021/05/03/nurses-yet-to-receive-covid-19-vaccines-union-claims/ (Accessed: 15 June 2021)

‘Partial shutdown sinks small businesses, daily wage earners’ (2020) *DailyFT*, 19 March. Available at: https://www.ft.lk/Front-Page/Partial-shutdown-sinks-small-businesses-daily-wage-earners/44-697783 (Accessed: 15 June 2021).

‘Public Report on the 2021 budget: assessment on whether the expenditure allocations and taxation policies are in line with the government’s policy’ (2020) *Verite Research*. Available at: https://www.veriteresearch.org/wpcontent/uploads/2021/05/VR_ENG_Research_Report_May2021_Public_Report_on_2021_Budget.pdf (Accessed: 15 June 2021).

‘Q and A on Regulations Issued under the Quarantine and Prevention of Diseases Ordinance & how this impacts the COVID-19 response in Sri Lanka’ (2020) *Centre for Policy Alternatives*, 6 November. Available at: https://www.cpalanka.org/q-and-a-on-regulations-issued-under-the-quarantine-and-prevention-of-diseases-ordinance-how-this-impacts-the-covid-19-response-in-sri-lanka/ (Accessed: 15 June 2021).

‘Remaining ‘ITUKAMA’ COVID–19 Fund for’ (2021) *Ceylon Today*, 11 May. Available at: https://ceylontoday.lk/news/remaining-itukama-covid-19-fund-for (Accessed: 15 June 2021).

‘Socio-Economic Index in the face of COVID-19’ (2021) *Centre for Policy Alternatives*. Available at: https://www.cpalanka.org/wp-content/uploads/2021/06/SOCIO-ECONOMIC-INDEX-for-Web-F-I-N-A-L.pdf (Accessed: 29 June 2021).

‘Sri Lanka, the tsunami and the evolution of disaster response’ (2014) *ReliefWeb*, 24 December. Available at: https://reliefweb.int/report/sri-lanka/sri-lanka-tsunami-and-evolution-disaster-response (Accessed: 14 June 2021).

'Sri Lanka's vaccination drive in disarray - College of Community Physicians highlights six key issues' (2021) *Lanka Leader*, 23 May. Available at: https://english.theleader.lk/news/1420-sri-lanka-s-vaccination-drive-in-disarray-college-of-community-physicians-highlights-six-key-issues (Accessed: 15 June 2021).

'Statement on the Twentieth Amendment' (2020) *Centre for Policy Alternatives*, 4 September. Available at: https://www.cpalanka.org/statement-on-the-twentieth-amendment-2/ (Accessed: 15 June 2021).

'Strict action against those criticise state officials on social media' (2020) *Daily Mirror*, 1 April. Available at: https://www.dailymirror.lk/breaking_news/Strict-action-against-those-criticise-state-officials-on-social-media/108-186028 (Accessed: 15 June 2021).

'Structures to Deal with COVID-19 in Sri Lanka: A Brief Comment on the Presidential Task Force' (2020) *Centre for Policy Alternatives*, 8 April. Available at: https://www.cpalanka.org/structures-to-deal-with-covid-19-in-sri-lanka-a-brief-comment-on-the-presidential-task-force/ (Accessed: 15 June 2021).

'Technocratic Populism and the Pandemic State' (2020) *Centre for Policy Alternatives*, 10 November. Available at: https://www.cpalanka.org/technocratic-populism-and-the-pandemic-state/ (Accessed: 29 June 2021).

'The Appointment of the Two Presidential Task Forces' (2020) *Centre for Policy Alternatives*, 8 June. Available at: https://www.cpalanka.org/the-appointment-of-the-two-presidential-task-forces/ (Accessed: 14 June 2021).

'The Centre for Policy Alternatives (Guarantee) Limited and Dr. Paikiasothy Saravanamuttu vs. The Attorney General (SC SD 4/ 2021) (in re the Colombo Port City Economic Commission Bill)' (2021) *Centre for Policy Alternatives*, 17 April. Available at: https://www.cpalanka.org/the-centre-for-policy-alternatives-guarantee-limited-and-dr-paikiasothy-saravanamuttu-vs-the-attorney-general-sc-sd-4-2021-in-re-the-colombo-port-city-economic-commission-bill/ (Accessed: 15 June 2021).

'Transparency International Sri Lanka continues to have serious concerns about new Colombo Port City Law' (2021) *Colombo Page*, 26

May. Available at: http://www.colombopage.com/archive_21A/May26_1622045066CH.php (Accessed: 15 June 2021].

*Appropriation Bill 2021*. Available at: https://www.parliament.lk/uploads/bills/gbills/gazette/english/6202.pdf (Accessed: 24 July 2021).

*Asia: Bachelet alarmed by clampdown on freedom of expression during COVID-19* (2020) *United Nations Office of the High Commissioner (OHCHR)*. Available at: https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=25920&LangID=E (Accessed: 15 June 2021).

Centre for Policy Alternatives (2021) 'Pandemic Crisis and Democratic Governance in Sri Lanka' [ADRN Working Paper], *East Asia Institute*, 03 May. Available at: http://www.eai.or.kr/new/en/pub/view.asp?intSeq=20498&board=eng_workingpaper (Accessed: 15 June 2021).

Charindra, (2020) 'Covid-19 ; Drones to monitor isolated areas', *The Morning*, 13 November. Available at: https://www.themorning.lk/covid-19-drones-to-monitor-isolated-areas/ (Accessed: 15 June 2021).

Colombage, D. (2020a) 'Politicisation of COVID-19', *DailyFT*, 9 December. Available at: https://www.ft.lk/columns/Politicisation-of-COVID-19/4-709928 (Accessed: 6 July 2021).

Colombage, S. (2020b) 'Budget 2021 in the context of the COVID-19 pandemic', *DailyFT*, 24 November. Available at: https://www.ft.lk/columns/Budget-2021-in-the-context-of-the-COVID-19-pandemic/4-709287 (Accessed: 15 June 2021).

Dewasiri, H. (2021) 'Rosy Madam's list' under fire', *The Morning*, 23 February. Available at: https://www.themorning.lk/rosy-madams-list-under-fire/ (Accessed: 15 June 2021).

*Disaster Management Act No. 13 of 2005*. Available at: https://www.parliament.lk/uploads/acts/gbills/english/5640.pdf. (Accessed: 15 June 2021)

Fonseka, B. (2020) 'Uncomfortable Truths with the Pandemic Response in Sri Lanka', *Groundviews*, 11 May. Available at: https://groundviews.org/2020/11/05/uncomfortable-truths-with-the-

pandemic-response-in-sri-lanka/ (Accessed: 15 June 2021).

Fonseka, B. and Dissanayake, U. (2021) 'Sri Lanka's Vistas of Prosperity & Splendour: A Critique of Promises Made & Present Trends', *Centre for Policy Alternatives*, Available at: https://www.cpalanka.org/wp-content/uploads/2021/07/Sri-Lankas-Vistas-of-Prosperity-and-Splendour-A-Critique-of-Promises-Made-and-Present-Trends.pdf (Accessed: 14 July 2021).

Fonseka, B., Ganeshathasan, L. and Welikala, A. (2021) 'Sri Lanka: Pandemic-Catalyzed Democratic Backsliding', in Ramraj, V. V. (ed.) *Covid-19 in Asia: Law and Policy Contexts*. Oxford, Oxford University Press, pp. 349 – 364.

Fonseka, P. (2021) 'Pandemic-related Domestic Violence: Victims don't often get the desired help', *Daily Mirror*, 11 June. Available at: https://www.dailymirror.lk/insight/Pandemic-related-Domestic-Violence-Victims-dont-often-get-the-desired-help/374-213849 (Accessed: 15 June 2021).

Foreign Ministry, Sri Lanka (MFA) (2020) *Declaration of Police Curfew Island Wide*. Available at: https://mfa.gov.lk/declaration-of-police-curfew-island-wide/ (Accessed: 15 June 2021).

Ganeshathasan, L. (2021) 'Sri Lanka's Legal Response to COVID-19: Past Trends and Future Prospects.' *VerfBlog*. Available at: https://verfassungsblog.de/sri-lankas-legal-response-to-covid-19-past-trends-and-future-prospects/ (Accessed: 15 June 2021).

*Gazette (Extraordinary) No. 2165/8 of 2 March 2020*. Available at: www.presidentsoffice.gov.lk/wpcontent/uploads/2020/02/2165-08_E.pdf (Accessed: 14 June 2021).

*Gazette (Extraordinary) No. 2168/8 of 26 March 2020*. Available at: http://documents.gov.lk/files/egz/2020/3/2168-08_E.pdf (Accessed: 14 June 2021).

*Gazette (Extraordinary) No. 2172/9 of 22 April 2020*. Available at http://www.documents.gov.lk/files/egz/2020/4/2172-09_E.pdf (Accessed: 14 June 2021).

*Gazette (Extraordinary) No. 2173/4 of 27 April 2020*. Available at: http://www.documents.gov.lk/files/egz/2020/4/2173-04_E.pdf (Accessed: 14 June 2021).

*Gazette (Extraordinary) No. 2185/41 of 21 July 2020.* Available at: http://www.documents.gov.lk/files/egz/2020/7/2185-41_E.pdf (Accessed: 14 June 2021).

*Gazette (Extraordinary) No. 2208/33 of 31 December 2020.* Available at http://documents.gov.lk/files/egz/2020/12/2208-33_E.pdf (Accessed 14 June 2021).

Ghosh, P. (2021) 'Budget 2021: Rs 18Bn to be allocated for Maintaining Health Services', *Social Health Protection Network*, 13 April. Available at: https://p4h.world/en/news/budget-2021-rs-18bn-be-allocated-maintaining-health-services (Accessed: 15 June 2021).

Gunasekara, T. (2020) '20th in the time of COVID: A grim tale', *DailyFT*, 9 October. Available at: https://www.ft.lk/columns/20th-in-the-time-of-COVID-A-grim-tale/4-707213 Accessed: 15 June 2021).

Gunawardana, S. and Padmasiri, B. (2021) 'Avoiding Necrocapitalism in Sri Lanka's Free Trade Zones', *Groundviews*, 13 June. Available at: https://groundviews.org/2021/06/13/avoiding-necrocapitalism-in-sri-lankas-free-trade-zones/ (Accessed: 15 June 2021).

Hamza, M. (2021) 'Thousands of Migrant workers stranded in the Gulf States', *EconomyNext*, 15 March. Available at: https://economynext.com/thousands-of-migrant-workers-stranded-in-the-gulf-states-79779/ (Accessed: 15 June 2021).

*HRCSL Recommendations on Regularizing the Imposition of Curfew* (2020) *Human Rights Commission of Sri Lanka (HRCSL).* Available at: https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/02/curfew.HRCSL-recommendation-final.pdf (Accessed: 29 June 2021).

*IGP responds to HRCSL in respect to the arrest of persons violating quarantine rules* (2021) *Human Rights Commission of Sri Lanka (HRCSL).* Available at: https://www.hrcsl.lk/igp-responds-to-hrcsl-in-respect-to-the-arrest-of-persons-violating-quarantine-rules/ (Accessed: 29 June 2021).

Indrajith, S. (2020) 'Sumanthiran moves private member's Bill to tackle health emergency', *The Island*, 21 October. Available at: https://island.lk/sumanthiran-moves-private-members-bill-to-tackle-health-emergency/ (Accessed: 15 June 2021).

Jayasinghe, C. (2021) 'Expert committee to decide who in Sri Lanka should receive Sinopharm jab', *EconomyNext*, 2 April. Available at: https://economynext.com/expert-committee-to-decide-who-in-sri-lanka-should-receive-sinopharm-jab-80359/ (Accessed: 15 June 2021).

Jayawardana, A. (2021) 'In Pictures: Army joins COVID vaccination drive', *Times Online*, 11 May. Available at: https://www.timesonline.lk/news-online/In-Pictures-Army-joins-COVID-vaccination-drive/2-1133268 (Accessed: 15 June 2021).

*Let's talk about the vaccine: the need for strategy, clarity and equality* (2021) *Law & Society Trust (LST)*. Available at: https://lstlanka.org/images/pdf/2021/Lets_talk_about_the_vaccine_English.pdf (Accessed: 15 June 2021).

*Limiting Freedom of Expression in a Democracy: The Need to Strike a Lawful Balance* (2020) *Human Rights Commission of Sri Lanka (HRCSL)*. Available at: https://www.hrcsl.lk/wp-content/uploads/2020/02/Letter-to-IGP-Freedom-of-Expression.pdf (Accessed: 15 June 2021).

Marasinghe, S. and Nathaniel, C. (2021) 'Port City Bill passed', *Daily News*, 21 May. Available at: http://www.dailynews.lk/2021/05/21/local/249850/port-city-bill-passed (Accessed: 15 June 2021).

Mudugamuwa, M. (2021) 'Itukama Covid-19 Fund: Cannot be directly audited: Auditor General's Department', *The Morning*, 23 May. Available at: https://www.themorning.lk/itukama-covid-19-fund-cannot-be-directly-audited-auditor-general-department/ (Accessed: 15 June 2021).

Nathaniel, C. (2021) 'Sri Lanka to curb fake news on social media', *Daily News*, 7 June. Available at: http://www.dailynews.lk/2021/06/07/local/251037/sri-lanka-curb-fake-news-social-media (Accessed: 15 June 2021).

Penal Code of Sri Lanka

President's Media Division (2020) *Army Commander Shavendra Silva heads National Operation Center for Prevention of COVID-19 Outbreak*. Available at: http://www.pmdnews.lk/army-commander-shavendra-silva-heads-national-operation-center-forprevention-of-covid-19-outbreak/ (Accessed: 15 June 2021).

Public Security Ordinance No. 25 of 1947.

Quarantine and Prevention of Diseases Ordinance No. 3 of 1897.

Ranasinghe, I. (2021) 'Sri Lanka police arrest record numbers for COVID-19 quarantine violations', *EconomyNext*, 28 May. Available at: https://economynext.com/sri-lanka-police-arrest-record-numbers-for-covid-19-quarantine-violations-82520/ (Accessed: 15 June 2021).

*Report of the United Nations High Commissioner for Human Rights* (2021) *Office of the High Commissioner for Human Rights (OHCHR).* Available at: https://www.ohchr.org/EN/HRBodies/HRC/RegularSessions/Session46/Documents/A_HRC_46_20_AEV.docx. (Accessed: 15 June 2021)

Ruwanpathirana, T. (2020) 'On Hejaaz Hizbullah: The latest victim of Sri Lanka's draconian Prevention of Terrorism Act', *Amnesty International*, 15 July 2020, Available at: https://www.amnesty.org/en/latest/news/2020/07/sri-lanka-on-hejaaz-hizbullah-and-the-prevention-of-terrorism-act/ (Accessed: 7 July 2021).

Sangakkara, A. (2021) 'Vaccine Thieves of Sri Lanka', *Colombo Telegraph*, 20 May. Available at: https://www.colombotelegraph.com/index.php/vaccine-thieves-of-sri-lanka/ (Accessed: 15 June 2021).

Saroor, S. and de Soysa, M. (2020) 'Death in the Time of Corona: A Risky Business for Muslims', *Groundviews,* 11 December. Available at: https://groundviews.org/2020/11/12/death-in-the-time-of-corona-a-risky-business-for-muslims/ (Accessed: 29 June 2021).

*Sri Lanka: Compulsory cremation of COVID-19 bodies cannot continue, say UN experts* (2021) *United Nations Office of the High Commissioner (OHCHR).* Available at: https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=26686&LangID=E (Accessed: 15 June 2021).

*Sri Lanka: Increasing Suppression of Dissent* (2020) *Human Rights Watch (HRW).* Available at: https://www.hrw.org/news/2020/08/08/sri-lanka-increasing-suppression-dissent (Accessed: 15 June 2021).

*Sri Lanka: newly adopted 20th Amendment to the Constitution is blow to the rule of law* (2020) *International Commission of Jurists (ICJ).* Available at: https://www.icj.org/sri-lanka-newly-adopted-

20th-amendment-to-the-constitution-is-blow-to-the-rule-of-law/> (Accessed: 15 June 2021).

*Sri Lanka: vulnerable groups pay the price for militarization of COVID-19 response* (2020) *International Commission of Jurists (ICJ).* Available at: https://www.icj.org/sri-lanka-vulnerable-groups-pay-the-price-for-militarization-of-covid-19-response/ (Accessed: 15 June 2021).

Srinivasan, M. (2020) 'Following deadly riot, spotlight on Sri Lanka's prison conditions', *The Hindu*, 10 December. Available at: https://www.thehindu.com/news/international/following-deadly-riot-spotlight-on-sri-lankas-prison-conditions/article33302053.ece (Accessed: 15 June 2021).

Srinivasan, M. (2021) 'Sri Lankan parliament passes controversial Bill on China-backed Port City', *The Hindu*, 20 May. Available at: https://www.thehindu.com/news/international/sri-lankan-parliament-passes-controversial-bill-on-china-backed-port-city/article34608185.ece (Accessed: 15 June 2021)

*The Constitution of Sri Lanka.*

Thomas, K. (2021) 'What Happened To The Itukama Fund?', *Roar Media*, 13 May. Available at: https://roar.media/english/life/current-affairs/what-happened-to-the-itukama-fund (Accessed: 15 June 2021).

*UNICEF and NCPA gravely concerned by increase in proportion of child cruelty cases reported to NCPA hotline since the start of the COVID-19 curfew* (2020) *UNICEF.* Available at: https://www.unicef.org/srilanka/press-releases/unicef-and-ncpa-gravely-concerned-increase-proportion-child-cruelty-cases-reported (Accessed: 15 June 2021).

3

# கீழ்ப்படிவுள்ள பிரசைகளைக் கட்டியெழுப்புவதனூடாக மக்களை மாற்றுதல்: இலங்கையில் பெருந்தொற்று ஆளுகை

*பிரதீப் பீரிஸ்*

## அறிமுகம்

> பெருந்தொற்றுக்களானது தள்ளாடுகின்ற பேரரசுகளை வீழ்ச்சியடையச் செய்தும், காலனித்துவ மாதிரிகளை மாற்றியமைத்தும், மக்களுக்குப் போட்டித்தன்மையான நன்மைகளை வழங்கியும், மனித வரலாற்றின் போக்கினை மாற்றியமைத்துள்ளன. சூழ்நிலைகளைப் பொறுத்து, அசமத்துவம் மற்றும் சமூக நிறுவனங்களுக்கு நீண்ட கால விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில், பெருந்தொற்றுக்களானது ஊழியச் சந்தைகளையும் (Labor Markets) மறுசீரமைப்பு செய்யலாம் (Gingerich and Vogler, 2021, p. 393).

பெருந்தொற்றுகளின் வரலாறானது நிச்சயமாக ஒரு விடயத்தை கற்றுக்கொடுத்துள்ளது; அது என்னவெனில், விரைவில் அல்லது சில காலத்தின் பின்னர் பெருந்தொற்றுக்கள் முற்றுமுழுதாக இல்லாதொழிந்து விடலாம். ஆனால், அவை சமூகத்திற்கும் அரசியலுக்கும் ஏற்படுத்திய தாக்கம் பல தலைமுறைகளால் உணரப்படலாம். கடந்த ஆயிரமாண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட அழிவுமிக்க கொள்ளைநோய் (Black Death-1347-1351) என்ற பெருந்தொற்றுப் பற்றிய ஹிங்கிரிச் மற்றும் வோக்லரின் ஆய்வானது ஐரோப்பாவின் சமூக, அரசியல் பரப்பில் அது ஏற்படுத்திய நீடித்த தாக்கத்தை விபரிக்கின்றது. பெருந்தொற்று என்பது மனிதத் தெரிவினுடைய வெளிப்பாடு அல்ல (அது ஒரு

உயிரியல் ரீதியான ஆயுதமாக உருவாக்கப்படாத சந்தர்ப்பம் தவிர). எனினும் அத்தகைய பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகள் மனிதனால் மிகத்தெளிவாக முன்னெடுக்கப்படுகின்றன. இந்நூலின் அறிமுக அத்தியாயத்தில் குறிப்பிட்டது போன்று கொவிட்-19 இற்கு எதிரான போராட்டத்தில் உலகின் பல அரசாங்கங்கள் விதிவிலக்கு நிலையை அறிவித்ததோடு, சுகாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்காக ஏற்றத்தாழ்வான ஒழுங்குவிதிகளையும் விதித்துள்ளன (Cheibub et al, 2020). பெருந்தொற்றுக்கெதிராகப் போராடுதல் என்ற பெயரில் ஆட்சியாளர்கள் சனநாயக ஆட்சிக்கு அவசியமான தடைகளையும் சமநிலையையும் (Checks and balances) வலிதற்றதாக்கி, தமது அதிகாரத்தைத் திடமாக வலுப்படுத்தியுள்ளனர். அவர்களது பதில் நடடிவடிக்கைகளில் கொடுங்கோன்மைத் தன்மை பிரதிபலித்தாலும் நோய்க்கிருமிக்கு மக்கள் கொண்டுள்ள பயத்தினால் அவர்கள் கொவிட்-19 காலத்துப் பெருந்தொற்று ஆளுகைத்தன்மை குறித்துப் பொறுத்துக் கொள்கின்றனர். சில சமயங்களில் அரசாங்கத்தின் இந்தப் போக்கு பிரசைகளால் பாராட்டப்படுவதும் உண்டு. ப்ரீடம் கவுசின் தலைவரான மைக்கேல் ஜே. அப்ரமோவிட்ஸ் (Michael J. Abramowitz) “உலகமயமாகியுள்ள சுகாதார நெருக்கடியானது சனநாயகத்துக்கான பூகோள நெருக்கடியின் ஒரு பகுதியாக மாறியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்” (*Democracy under Lockdown*, 2020).

இலங்கையில் கொவிட் ஆளுகையானது, தாம் விரும்பியவாறு ஆட்சியமைக்க வேண்டுமென விரும்பிய அதிகாரத்திலுள்ளோரின் தொலைநோக்கினை எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதனை இந்த அத்தியாயம் ஆராய முற்படுகின்றது. இரண்டு நோக்கங்களை மனதிற்கொண்டு இந்த அத்தியாயத்தை நான் எழுத முற்பட்டேன்; i) அரசாங்கம் முன்னெடுத்துள்ள பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகள் தொடர்பான செயன்முறைகள் பற்றிய ஒரு குறுகிய விபரத்தினை முன்வைத்தல், ii) கொவிட் பதில் நடவடிக்கைகளின் முக்கியமான அரசியல் விளைவுகளைப் பரீட்சித்தல். இந்த பகுப்பாய்வானது பிரதானமாகப் பண்புசார் நேர்காணல் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகளில் தலைமைத்துவம் வெளிப்படுத்திய தருக்கத் தன்மையினை விளங்கிக் கொள்வதற்காகப் பல சிரேஷ்ட பணிக்குழாத்தினர், இராணுவ உத்தியோகத்தர்கள் போன்றோர் நேர்காணல் செய்யப்பட்டனர். அத்தகைய விடயம் (தலைமைத்துவம் வெளிப்படுத்திய தருக்கத்தன்மை) தொடர்பான பொதுமக்களின் பார்வை குறித்த பெறுமதிமிக்க புரிதலை அச்சு ஊடகம், இலத்திரனியல் ஊடகம், சமூக ஊடகங்கள் போன்றனவும் வழங்கியிருந்தன.

பெருந்தொற்றின் ஆரம்பத்தில் கொவிட் ஆளுகை பற்றிய பொதுமக்களின் அபிப்பிராயத்தை விசாரணை செய்வதுடன் இந்த அத்தியாயம் தொடங்குகின்றது. அடுத்ததாக, i. கொவிட் பதில் நடவடிக்கைகளை இராணுவமயப்படுத்தல், ii. பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகளின் முன்னுக்கு பின் முரணான நிலை, தேவையைப் பிரதிபலிக்காத இயல்பு, iii. அதிகாரத்தை மேலிருந்து கீழாக்கும் வரிசைப்படுத்தலை மீள வலியுறுத்தல், iv. பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகளில் அரசியல், ஆகிய நான்கு தலைப்புக்களில் அரசாங்கத்தின் பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கையின் தன்மை குறித்து விபரிக்க நான் விழைகின்றேன். இலங்கையில் கொவிட் பதில் நடவடிக்கை தொடர்பான முழுமையான விபரத்தை வழங்குவது எனது நோக்கமல்ல. எனினும் இலங்கை மக்களின் சனநாயக வாழ்க்கைக்குப் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் தற்போதைய சூழலில் எழுச்சியடைந்து வரும் பரந்துபட்ட விடயங்களில் நான் கவனஞ்செலுத்த விழைகின்றேன்.

## *ஆரம்பகட்ட கொவிட் பதில் நடவடிக்கையும் பொதுமக்கள் அபிப்பிராயமும்*

பெருந்தொற்று நோயின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டத்தை அரசாங்கம் முகாமைத்துவப்படுத்திய விதம் குறித்து மக்கள் பெரிதும் திருப்தியடைந்தமையை ஆய்வுக் கணிப்பீட்டு முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, பெப்ரவரி 2020 வரை அரசாங்கம் நிலைமையைக் கையாண்ட விதம் குறித்து 67 சதவீதமானவர்கள் திருப்தியடைந்திருந்தனர் (பின்னிணைப்பு 3இல் அட்டவணை 41ஐப் பார்க்கவும்). இருப்பினும் மக்கள் தொகையின் அதிக செறிவு காரணமாக ஒப்பீட்டளவில் அதிகமாக நோய்க்கிருமி பரவுக்கூடிய நகராட்சிப் பகுதிகளில் வாழ்பவர்களில் ஒவ்வொரு பத்துப் பேரில் நான்கு பேர் தமது அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர். ஒரு நாளைக்கு இரண்டாயிரத்திற்கும் அதிகமான இறப்புக்களுடன் போராடிக்கொண்டிருந்த பல அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் 31ஆம் திகதி ஜனவரி 2021 ஆகின்றபோது 316 இறப்புக்கள் மற்றும் 6,682 கொவிட் தொற்றாளர்கள் மாத்திரமே இனங்காணப்பட்டமையானது கவனிக்கத்தக்கதொரு விடயமாகும் (*Sri Lanka Coronavirus – Worldometer*, 2021). இலங்கை அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை மாதிரி தொடர்பான திருப்தியானது பூகோளப் போக்கினைப் பிரதிபலித்திருந்தது. 14 நாடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்த சென் (Chen) மற்றும் அவரது

ஆய்வுக் குழுவினர் முன்வைத்த விடயம் என்னவெனில், கொவிட்-19 இற்கு எதிரான அரசாங்கத்தினது பதில் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்கின்றபோது உறுதி செய்யப்பட்ட தொற்றுக்களின் எண்ணிக்கை, இறப்பு விகிதம் (மில்லியன் சனத்தொகைக்கான) முதலான விடயங்கள் குறித்தே மக்கள் அதிக கவனஞ்செலுத்தினரேயொழிய அரசாங்கம் என்ன கொள்கைகளை ஆரம்பித்துள்ளது என்ற விடயத்தின் மீது அதிக கவனஞ்செலுத்தவில்லை (Chen et al, 2021).

அரசாங்கத்தின் நிறைவேற்றுத் துறையினது பல பிரிவுகள் ஆற்றிய வகிபங்கு குறித்து ஆய்வுக்குட்படுத்தியவர்களில் பெரும் எண்ணிகையானவர்கள் தமது திருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர். இந்த விடயத்தில் சனாதிபதியின் வகிபங்கு குறித்து ஆய்வில் பங்குபற்றியவர்கள் திருப்தியடைந்திருந்த போதிலும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், கிராம சேவகர்கள், பொலிஸ், இராணுவ போன்ற ஏனைய அலுவலர்கள் ஆற்றிய வகிபங்கு குறித்து ஒப்பீட்டளவில் குறைந்தளவான திருப்தி மட்டமே காணப்பட்டது. மிகமுக்கியமாக, இந்த ஆய்வில் பங்குபற்றியவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் மாத்திரமே அரசாங்கத்தின் கொவிட் பதில் நடவடிக்கைகளில் தமது பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஈடுபாடு குறித்துத் திருப்தி அடைந்துள்ளனர் (பின்னிணைப்பு 3இல் அட்டவணை 5-10ஐப் பார்க்கவும்). பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகளில் அரசியல்வாதிகள் மிகக் குறைந்தளவிலான ஈடுபாட்டினைக் கொண்டிருந்தனர் என்ற யதார்த்த நிலையை ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தி நின்றன. அடுத்துவரும் பகுதிகளில் அதிகரித்த இராணுவமயமாக்கம், அரசியல்வாதிகளை விட நிபுணர்கள் மீது சனாதிபதி கொண்டுள்ள நம்பிக்கை போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

## கொவிட் பதில் நடவடிக்கையும் இராணுவமயமாக்குதலும்

பெருந்தொற்று அச்சுறுத்தலுக்கு எதிராகப் போராடுவதற்கு சகல அரசாங்க வகைகளும் (சர்வாதிகாரத்திலிருந்து சனநாயகம் வரை) தமது ஆயுதப் படைகளைப் பயன்படுத்த எத்தனித்திருந்தன. இதற்குக் காரணம், இராணுவம் ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய தலைமைத்துவத்திற்குட்பட்ட வலையமைப்பைக் கொண்டிருத்தல் மற்றும் நன்நடத்தையுடைய மனிதவளத்தைக் கொண்டிருத்தல் போன்றனவாகும். பொதுவாக இராணுவமானது குறைந்தளவிலான அறிவுறுத்தலின் கீழ் இலகுவாக அணிதிரண்டு தேசிய நெருக்கடியின் போது சிவிலியன்களுக்குச் சேவைகளை வழங்கக்கூடியதொரு அமைப்பாகக் காணப்படுகிறது. எனவே பல நாடுகள் பல்வேறு மட்டங்களில் பெருந்தொற்று கிட்டத்தட்ட ஒரு

அனைத்துலக அவசர நிலையாக மாறியபோது தமது ஆயுதப்படைகளின் உதவியை நாடின (Graham, 2020). போக்குவரத்து, மருத்துவமனை, ஏனைய வசதிகளை நிர்மாணித்தல், எல்லைகளைக் கட்டுப்படுத்தல், தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல், மருத்துவ உதவிகளை வழங்குதல், தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தல் போன்ற உதவிகளை இராணுவம் வழங்கியது. எனினும் பெருந்தொற்றுக்கெதிராகப் போராடுகின்ற சிவில் அதிகார சபைகளுக்கு ஒரு துணையாக இல்லாமல் சில நாடுகளில் கொவிட் பதில் நடவடிக்கையின் முழுச் செயற்பாடுகளும் இராணுவ மேற்பார்வையின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளன. சங்கரில்லா சம்பாஷணை (Shangri-La Dialogue) என்ற சர்வதேச அரசாங்கங்களுக்கிடையிலான பாதுகாப்புத் தொடர்பான வருடாந்த அமர்வினது ஆசிய பசுபிக்குக்கான சிரேஷ்ட உறுப்பினரான யுயன் ஹிராம் (Euan Graham) குறிப்பிடுகையில்,

> மிக அண்மைக் காலத்தில் இராணுவ தலையீட்டை அரசியலில் கொண்டிருக்கின்ற தென்கிழக்காசிய நாடுகளான மியன்மார், இந்தோனேசியா போன்றவற்றில் ஆலோசனை, தீர்மானமெடுத்தல் போன்றவற்றில் ஆயுதப்படைகள் காத்திரமான பங்கினை எடுத்துக் கொண்டுள்ளன. பெருந்தொற்றுத் தொடர்பான பதில் நடவடிக்கைகளை முன்னெடுத்தலில் ஆயுதப்படைகள் கணிசமானளவு செல்வாக்கினைக் கொண்டிருப்பதோடு, தாய்லாந்து அரசாங்கத்தினது பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகளில் பிரசைகள் பெருமளவு விலக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது (Graham, 2020).

மேலும் ஐக்கிய இராச்சியம் போன்ற அரசியலமைப்புசார் சனநாயக நாடுகூட, கொவிட் பதில் நடவடிக்கைகளுக்காகப் பாதுகாப்பு அமைச்சின் உதவியினை நாடியிருந்தது. எனினும் சிவிலியன் அதிகார சபைகளுக்கான இராணுவத்தின் உதவி (Military Aid for Civilian Authorities) என்ற நிலையியல் ஏற்பாடுகளுக்கமைவாக, இராணுவமானது வெறுமனே ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல் (Logistical) என்ற பணியினை மாத்திரம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது (Graham, 2020). தாராளவாத அரசியலில் குறைந்தளவு நம்பிக்கையைக் கொண்ட சிங்கப்பூரிலும்கூட, இராணுவம் எந்தவொரு வெளிப்படையான முன்னணி வகிபங்கினையும் வகிக்க அனுமதிக்கப்படவில்லை. எனினும் நெருக்கடியின் ஆரம்ப கட்டத்தில் சிங்கப்பூரின் தேசிய சேவையாளர்கள் (National servicemen) ஒவ்வொரு குடும்பத்திற்கும் முகக்கவசங்களை விநியோகிக்கப் பயன்படுத்தப்பட்டனர் (Graham, 2020).

ஏனைய சனநாயக நாடுகளுடன் ஒப்பிடுகையில் கொவிட் பதில் நடவடிக்கைக்கான இலங்கையின் இராணுவமயமாக்கம் தனித்துவமானதாகக் காணப்படுகிறது. குறிப்பிட்ட விடயங்களை

மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், தொழிற்பாட்டு உதவியை வழங்குதல் போன்றன மட்டுமன்றி இலங்கை இராணுவமானது அரசாங்கத்தின் கொவிட் பதில் நடவடிக்கைகளைத் திட்டமிடவும் அதனை வழிநடத்தவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய சனாதிபதி கோட்டாபய (முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் இராணுவ உத்தியோகத்தரும்), எந்தவிதமான தடைகளும் சமனிலைகளும் இல்லாமல் முக்கிய பதவிகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்து, பெருமளவுக்குத் தனியொருவராக நின்று கொவிட் பதில் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார். பெருந்தொற்றுப் பரவுவதனைத் தடுப்பதற்காக அரசாங்கம் கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் [National Operation Centre for the Prevention of COVID-19 Outbreak (NOCPCO)] என்பதனைத் தாபித்தது. இந்த நிலையத்திற்கு மருத்துவ நிபுணர்களை அல்லது சிவில் அலுவலர்களைப் பொறுப்பாக நியமிப்பதற்குப் பதிலாக இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா அதற்குப் பொறுப்பானவராக நியமிக்கப்பட்டார். எனவே சுகாதார நெருக்கடி என்பதற்கு மேலாக அரச தலைவருக்கு கொவிட்டிற்கெதிரான போர் என்பது பிறிதொரு இராணுவ பிரச்சார நடவடிக்கையாகத் தென்பட்டது. இதில் சுகாதார அல்லது வைத்திய நிபுணர்களின் பங்கு என்னவெனில், பாதுகாப்புப் படைகளுக்கு உதவுவது மட்டுமாகும். சகல பிரச்சினைகளுக்கும் இராணுவமே ஒரு தீர்வாக இருக்க முடியும் என சனாதிபதி கருதுவதனை இது தெள்ளத் தெளிவாகக் காட்டுகின்றது. உதாரணமாக, சுகாதார அமைச்சின் செயலாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம், இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகம் போன்ற மிக முக்கியமான துறைகளுக்கு ஒய்வுபெற்ற மற்றும் தற்போது சேவையாற்றும் இராணுவ அதிகாரிகளை சனாதிபதி நியமித்துள்ளமையைக் காணலாம் (Perera, 2020). ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவரால் கொவிட்-19 நிவாரண நிதியம் மேற்பார்வை செய்யப்படுவதோடு கொவிட்டிற்குப் பிந்திய பொருளாதாரப் பதில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட சனாதிபதிச் செயலணியின் உறுப்பினர்களில் ஐந்தில் ஒரு பகுதியினர் ஆயுதப் படையினைச் சேர்ந்தவராவர் (*Militarisation of COVID response, the looming refugee crisis, and Nepal's PM under pressure*, 2020).

பொதுவாக, ஒரு பெருந்தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கு விரைவாகச் செயற்படுதல், கணிசமான வளங்கள் மற்றும் செயல்திறன்கள் போன்றன தேவைப்படுகின்றன. இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பானது இத்தகைய சுகாதார நெருக்கடியொன்றினைத் தாக்குப்பிடிக்கும் திறனைக் கொண்டுள்ளது என்றும் குறிப்பாக "2016 இல் மலேரியா அற்ற நாடாக

இலங்கை பிரகடனப்படுத்தப்பட்டமை குறித்தும் நிபுணர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். அத்தோடு இலங்கையில் வலுவானதாகக் காணப்படும் சமூக மருத்துவமும் (Community medicine) இந்த கொவிட் காலத்திற்கு உதவியாக இருக்கும்" என நிபுணர்களால் நம்பப்படுகின்றது (Srinivasan, 2020a). ஆயினும் நடைமுறையில் இருக்கின்ற சுகாதாரத்துறை நிறுவனங்களை வலிமைப்படுத்தாது, கொவிட் பதில் நடவடிக்கைக்காக அரசாங்கம், இராணுவ ஆளணியினரை அதிகளவாகக் கொண்ட, அதற்குச் சமாந்தரமாகப் பிறிதொரு கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

நாட்டில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் அதற்குத் தேவையான பௌதீக உட்கட்டமைப்புகளை உருவாக்குவதில் இராணுவ பொறியியலாளர்கள் பாராட்டத்தக்க பணியினைச் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இராணுவத்துடன் இந்தப் பணிக்காக ஒத்துழைக்கத் தனியார்துறையும் முன்வந்துள்ளது. உதாரணமாக, நாட்டின் முன்னனி ஆடை உற்பத்தியாளர்களில் ஒருவர் தனது தொழிற்சாலைகளில் ஒன்றை வழங்கி, இராணுவத்துடன் இணைந்து அதி நவீன சுகாதார வசதிகளுடனான 1,200 படுக்கைகள் கொண்ட வைத்தியசாலையைக் கட்டுவதற்கு ஒத்துழைத்தமையைக் குறிப்பிடலாம் (*Sri Lanka Army constructs 1,200- bed hospital in Seeduwa for COVID-19 patients*, 2021). ஆயினும் ஏற்பாடு செய்தல் தொடர்பான உதவிகளை வழங்குவது போலல்லாமல், சிவிலியன்களின் விவகாரங்களுடன் தொடர்புடைய பெருந்தொற்றுக்கான தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை அமுலாக்குவதற்கான நேரடி பொறுப்பும் இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பெருந்தொற்று போன்ற காலகட்டங்களில் சிவிலியன்களின் அலுவல்களைக் கவனிப்பதற்காக ஆயுதப்படையைப் பயன்படுத்துவது தொடர்பாக யுயன் ஹிராம் குறிப்பிடுகையில்:

> இராணுவமும் சிவிலியன்களும் ஒன்றாக இணைந்து செயற்பட்டாலும்கூட சிவிலியன்களுக்கான அவசரகாலச் சேவைகளை வழங்குவதற்கு விசேட இராணுவத் திறன்கள் போதுமானதாக இருப்பதில்லை. கொவிட்-19 பெருந்தொற்றின் தீவிரத்தன்மையைக் கருத்திற்கொண்டு, முன்னணி நிலையில் செயற்படுவதற்காக நிலைநிறுத்தப்பட்ட சுகாதாரத்துறை சார்ந்த ஆளணியினர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் இராணுவத் தளபதிகள் தொற்று நோய்க்குட்பட்டவர்களைப் பாதுகாக்கும் வகையிலான வகிபங்கு குறித்தே கவனஞ்செலுத்துதல் வேண்டும் (Graham, 2020).

தனிமைப்படுத்தல் என்பது பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்துகின்ற பிரதான உத்திகளில் ஒன்றாகும். கணிசமானளவு மனித, பொருள்சார் வளங்கள் மற்றும் கடுமையான விதிகளை

அமுலாக்கும் திறன் ஆகியன தேவைப்படும் தனிமைப்படுத்தல் செயன்முறையை வடிவமைப்பதற்கும் முகாமை செய்வதற்குமான பொறுப்பு இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. கொவிட்-19 பதில் நடவடிக்கைகள் குறித்த இராணுவத்தின் வகிபங்கு பற்றி விளக்கும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர், 10,430 படுக்கைகளைக் கொண்ட 54 தனிமைப்படுத்தல் நிலையங்களும் 22,240 படுக்கைகளைக் கொண்ட 92 இடைநிலைத் தங்கல் நிலையங்களும் (கொவிட் தொற்றுக்குள்ளான நோயாளிகளுக்காக) இலங்கை இராணுவத்தினால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது[1] எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் குறிப்பிடுகையில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் நன்நடத்தையைப் பராமரிக்கவும் அந்நிலையங்களுக்கான வசதிகளைப் பராமரிக்கவும் தேவையான மனித சக்தியைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு இராணுவ பாணியிலான முகாமைத்துவம் எவ்வாறு உதவுகிறது என விளக்கினார்.

ஒரு போர், ஒரு பயங்கரவாதத் தாக்குதல், ஒரு சூழல் அனர்த்தம் அல்லது ஒரு சுகாதார நெருக்கடி போன்ற ஒரு தேசிய அவசரகால நிலைக்கு முகங்கொடுக்கும் போது மக்கள் தமது உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டியேற்படுகின்றது என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் சிவிலியன்களின் விவகாரங்களில் குறைந்த அல்லது பயிற்சியேதும் இல்லாத இராணுவத்தை நிலை நிறுத்துவதானது மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுவதற்கு வழிவகுக்கும். இந்த நூலின் பிறிதொரு அத்தியாயத்தில் குறிப்பிட்ட உதாரணத்தின் அடிப்படையில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களுக்குத் தனிமைப்படுத்தல் விதிமுறைகளைச் செயற்படுத்த இராணுவம் கடுமையான முறையில் ஈடுபட்டிருந்தது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கையின்படி:

> குறைந்தளவான வசதிகள் கொண்ட தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு நெரிசல் நிறைந்த பேரூந்துகளில் ஏற்றுவதற்கு முன்னர் அவர்களது உடைமைகளைச் சேகரிப்பதற்காக தொழிலாளர்களுக்கு ஐந்திலிருந்து பத்து வரையான நிமிடங்கள் மட்டுமே வழங்கப்பட்டன. எங்கு அனுப்பப்படுகிறார்கள் என்று தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்படவில்லை. பி.சி.ஆர். சோதனைகள் நடாத்தப்படவோ, முகக்கவசங்கள் வழங்கப்படவோ இல்லை. இது கொவிட்-19 தொற்றுக்குள்ளாகக் கூடிய சந்தர்ப்பங்களை அதிகரித்திருந்தன (Fonseka and Dissanayake, 2021, p. 23)

1 சிரேஷ்ட அதிகாரி ஒருவருடன் தனிமைப்படுத்தல் வசதிகள் குறித்த கலந்துரையாடல், 17 ஜூலை 2021.

பெருந்தொற்றினைத் திறமையான முறையில் கட்டுப்படுத்த வேண்டும் என்ற பெயரில், கொவிட் கண்காணிப்பு நோக்கங்களுக்காகத் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்க உளவுத்துறைப் பிரிவுகளையும் இராணுவம் பயன்படுத்தியது. உண்மையில் தனியார் செல்லிட கம்பனிகள்கூட பெருந்தொற்றிற்கெதிரான போரிற்கு ஆதரவளிப்பதற்காகத் தமது வாடிக்கையாளர்களின் விபரங்களை வழங்கி இராணுவத்திற்கு ஒத்துழைப்பு நல்கின (*Intelligence units to trace contacts of COVID –19 patients,* 2020). சேகரிக்கப்படும் தகவலின் வகை, அதனை வைத்திருக்கும் காலம், தொற்றுடன் தொடர்புடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்தலுக்கும் அப்பால் அத்தகவல்கள் பயன்படுத்தப்படுதல் மற்றும் அத்தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் அரச முகவர் அமைப்புக்களின் விபரங்கள் போன்றன பற்றிய வெளிப்படைத் தன்மையின்மை குறித்துப் பெரேரா அவர்கள் சுட்டிக் காட்டுகின்றார் (Perera, 2020). இது தொடர்பாக ஷாபாஸ் மற்றும் பங்க் (2020) ஆகியோர் "பொதுச்சுகாதார நெருக்கடிக்குப் பதிலளிக்க முனையும் அரசாங்கங்களும் கம்பனிகளும் நாளைய கண்காணிப்பு அரசாங்கம் (Surveillance state) ஒன்றினை உருவாக்குவதற்குத் தேவையான ஒவ்வொரு கற்களையுமிட்டு அடித்தளத்தினை அமைக்கின்றன" எனக் குறிப்பிட்டுள்ளனர் (Shahbaz and Funk (2020).

இலங்கையில் சிவிலியன்கள் விவகாரத்தில் இராணுவத்தின் செல்வாக்கு பெருந்தொற்றுக்கு முன்னரே ஆரம்பமாகியதெனலாம். எவ்வாறாயினும் அவசரகால நிலையினை முகாமைத்துவம் செய்ய இராணுவத் தலையீடு அவசியமானது என்பதனை பெருந்தொற்று நியாயப்படுத்தியுள்ளது. தடுப்பூசி நிலையத்தில் இடம்பெற்ற சுகமான அனுபவமொன்றை பாராட்டிய கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியரொருவர், வழமையாக இருக்கின்ற பணியகத் தொந்தரவுகளை தவிர்க்கக்கூடியதாக இருந்தமை[2] குறித்து இராணுவத்திற்கு நன்றி செலுத்தியிருந்தார். இது பெருந்தொற்றுத் தடுப்புத்தொடர்பாக இராணுவம் மேற்கொண்ட கடுமையான உழைப்பிற்குக் கிடைத்த சாதகமானதொரு பாராட்டு என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. அதேநேரத்தில் பணிக்குழாத்தினரூடாக சேவை வழங்கப்படுதலை விட இராணுவத்தினூடாக சேவை வழங்கப்படுதலை மக்கள் விரும்புகின்ற போக்கும் இந்த உதாரணத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. எவ்வாறாயினும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களிலும்கூட, சனநாயகத்தில் சிவிலியன்களின் விவகாரங்களில் சேவை வழங்கலின் தரத்தினை அடிப்படையாகக் கொண்டு இராணுவத்தைப் பயன்படுத்தல் என்பது நியாயப்படுத்தப்பட முடியாது என்பதனை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

2 இரண்டாம் நிலை பாடசாலை ஆசிரியர் ஒருவருடனான கலந்துரையாடல், 11 ஜூலை 2021.

## பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கையின் இசைவற்ற தன்மையும் அலட்சியப் போக்கும்

சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினது பிரச்சாரத்தின் பிரதான மேற்கோள் என்னவெனில், தனது வார்த்தையைச் சரியாகக் கடைப்பிடிக்கின்ற நன்நடத்தைக் கொண்ட மனிதன் என்பதாகும். வலுவான மனித ஆளுமை மற்றும் பாரம்பரியக் கட்சி அரசியலிலிருந்து தன்னைத் தூரமாக வைத்திருந்தமை போன்றன அவர் மற்றைய பாரம்பரிய அரசியல்வாதிகளிலிருந்து வேறுபட்டவர் என மக்களை நம்ப வைத்தன. அதனால் வாக்காளர்கள் மத்தியில் அவருக்கு ஒரு நற்பெயரும் கிடைத்திருந்தது. கொவிட் பதில் நடவடிக்கைகளில் இராணுவத்தை ஈடுபடுத்தி, சகலருக்கும் ஒரு சட்டம் என்ற எதிர்பார்ப்பு மேலும் அதிகரிக்கப்பட்டது. எனினும் பெருந்தொற்றுக் காலத்தில் சனாதிபதி உண்மையில் நாட்டினை எவ்வாறு ஆட்சி செய்தார் என்பதனைப் பார்க்கும்போது இவையெல்லாம் வெறும் கற்பனையான விடயம் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழான பெருந்தொற்று ஆளுகையானது, இணக்கமின்மைகளால் அல்லது முரண்பாடுகளால் நிறைந்திருந்ததோடு ஒழுங்குவிதிகளை அமுலாக்கும் போது சில சமூகங்களை அலட்சியம் செய்தது. இதனைத்தொடர்ந்து வரும் கலந்துரையாடல் பகுதியில் இந்த வேறுபாடுகளானவை முகக்கவசங்கள், சமூக இடைவெளி, தனித்திருத்தல், நாட்டை மூடுதல் மற்றும் தனிமைப்படுத்தல் போன்ற ஒழுங்குவிதிகளில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டன என்பது பரீட்சிக்கப்படுகிறது.

### *முகக்கவசங்களை அணிதலும் சமூக இடைவெளியும்*

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களானவை வீட்டை விட்டு வெளியேறும் போது சுத்தமான முகக்கவசங்களை அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல், முழங்கையைப் பயன்படுத்தி இருமல் மற்றும் தும்மல்களை மூடுதல், மெல்லிழைத் தாளினைப் பயன்படுத்தி அதனை முறையாக அப்புறப்படுத்தல், கைகுலுக்கல்களையும் கட்டியணைப்புக்களையும் தவிர்த்தல், சன நெருக்கமான இடங்களைத் தவிர்த்தல், பொது இடங்களில் இருக்கும் போது குறைந்தபட்சம் ஒரு மீட்டர் இடைவெளியில் இருத்தல் போன்றன குறித்து மக்களுக்கு அறிவுறுத்தியிருந்தன. சமயஞ் சார்ந்த கூட்டங்கள், திருமணங்கள், விருந்தினருடனான கூட்டங்கள், விளையாட்டுக்கள், ஏனைய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் போன்ற சமூக நிகழ்வுகளைக் கட்டுப்படுத்தல் அல்லது தடைசெய்தல் தொடர்பான ஒழுங்குவிதிகள்

அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும் அரசாங்கம் புதிய கொவிட் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகள், பொது இடங்களில் முகக்கவசங்களை அணிதல் மற்றும் சமூக இடைவெளியைக் கட்டாயப்படுத்தும் வர்த்தமானியையும் பிரசுரித்திருந்தது (*Health guidelines made compulsory, 2020*). இந்த ஒழுங்குவிதிகளை மீறுபவர்களுக்கு ஆறுமாத சிறைத்தண்டனை அல்லது பத்தாயிரம் ரூபாய் அபராதம் என அதனை ஒரு தண்டனைக்குரிய குற்றமாக்கியது. (*Sri Lanka makes masks mandatory under new quarantine laws; to impose fine if rule violated*, 2020). அத்தோடு பல்பொருள் அங்காடிகள், சில்லறைக் கடைகள், பொதுப்போக்குவரத்து, கூட்டம் கூடுகின்ற ஏனைய இடங்கள் போன்றன அங்கு வருகின்றவர்களை பதிவுசெய்வதற்கான ஒரு பதிவேட்டைப் பேணுமாறும் கட்டாயப்படுத்தப்பட்டன. குறிப்பிட்ட நேரத்திற்கு ஒரு இடத்திற்குள் நுழையும் குறிப்பிட்ட எண்ணிக்கையான ஆட்களை இலகுவாக அடையாளங்காண்பதற்காகத் தொப்பிகளை அணியச் செய்தல் மற்றும் நுழையும் போது வெப்பநிலையை அளவிடுவதற்கான வழிவகைகளைக் கொண்டிருத்தல் தொடர்பாகவும் வர்த்தமானி குறிப்பிட்டிருந்தது. ஆனால் பெருந்தொற்று தொடங்கியதிலிருந்து எவ்வாறு இந்த ஒழுங்குவிதிகள் ஊழல், தவறான முகாமைத்துவம், இனத்துவம், மதம், பொருளாதார அந்தஸ்து போன்றவற்றின் அடிப்படையில் இடம்பெறும் பாரபட்சங்களால் தடைப்பட்டன என்பதனைத் தெளிவுபடுத்துகின்ற பல சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. மேலும் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை இராணுவப்பாணியில் அமுலாக்கியமை சமூகத்தில் பாதிப்படையக் கூடிய தன்மை கொண்ட சமூகங்களை இலகுவாக அடக்குமுறைக்குள்ளாக்க வழிசமைத்துள்ளது.

உதாரணமாக, 7ஆம் திகதி மே மாதம் 2021 அன்று ஊடகங்களுக்குக் கருத்துக் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் 5,000 இற்கும் மேற்பட்ட ஆட்கள் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறியமைக்காகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அறிவித்தார். அத்தோடு "முகக்கவசங்களை அணிவதால் மாத்திரம் எவ்வித பயனுமில்லை என்றும் முறையான சுகாதார நடைமுறைகள், தராதரங்கள் என்பவற்றுக்கேற்ப முகக்கவசங்களை அணிவது கட்டாயமானது என்றும் அவ்வாறு இல்லையெனில் முகக்கவசங்கள் தொடர்பான சட்டங்கள் அமுலாக்கப்படும்" எனவும் அவர் தெரிவித்திருந்தார் (*Police arrest 238 for not masking*, 2021). ஆயினும் இந்தச் சட்டம் அமுலாக்கப்படும் போது பணக்காரர்களை விட வறுமையானவர்களும் சிறுபான்மையானவர்களும் கடுமையான நடாத்துகைக்கு ஆளாகினர். சர்வதேச செய்தி ஊடகங்கள்கூட, முகக்கவசங்களை அணியாமைக்காக இலங்கை பொலிஸ் எவ்வாறு மக்களை வீதியிலிருந்து துரத்தினர்

என்பதனை அறிக்கையிட்டிருந்தன (*Mask Police 'lift' people in Sri Lanka*, 2021). ஆயினும் இத்தகைய கொடூரமான நடாத்துகையானது வறிய தொழிலாளர் வர்க்க ஆண்களுக்கும் பெண்களுக்குமே நடாத்தப்பட்டது என்பதனை இந்த நிகழ்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன. செய்திகளை வெளியிடுவதனை விட, மதிப்பீடுகளில் அதிக ஆர்வம் கொண்ட ஊடகங்கள், கொவிட் சட்டங்கள் கடுமையாக அமுலாக்கம் செய்யப்படுவதனைப் பாராட்டியதோடு ஏழைகள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்கள் என்போர் பொதுவாகச் சட்டங்களை மீறுபவர்களாகவும் குற்றவாளிகளாகவும் நோக்கக்கூடிய வகையில் ஒரு கதையாடலை சித்திரித்தன. அதேவேளை செல்வந்தர்களும், அதிகாரத்திலுள்ளவர்களும் சுதந்திரமாக சுற்றி திரிந்தனர். உதாரணமாக, பொலிஸ் திணைக்களத்திற்குப் பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகர உத்தியோகபூர்வ நிகழ்வொன்றில் முகக்கவசத்தை அணியாமல் பங்குபற்றியிருந்தார். இது தொடர்பாக ஊடகங்களில் பரவலாக விமர்சிக்கப்பட்டாலும், அமைச்சர் தனது செயல் குறித்து எவ்விதமான மன்னிப்பையும் முன்வைக்கவில்லை (*Min. of Public Security goes 'without' facemask during official function*, 2021).

உலகெங்கிலும் நோய்க்கிருமியின் பரவலுக்கெதிரான போராட்டத்தில் சமூக இடைவெளியைப் பின்பற்றல் என்பது ஒரு முக்கியமான நடைமுறையாக இருந்து வருகின்றது. இருப்பினும் சமூக இடைவெளியானது அனைவருக்கும் சமமான வகையில் பயனுடையதாக இருந்தாலும்கூட, வெவ்வேறு பொருளாதாரப் பின்னணியில் உள்ளவர்களுக்கு இதனது பிரயோகம் சௌகரியமானதாக அமையவில்லை. சில சந்தர்ப்பங்களில் இந்த ஒழுங்குமுறைகள் பாரபட்சமானவையாகவும் நியாயமற்றவையாகவும் காணப்படுகின்றன. உதாரணமாக, பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பயணிகளுக்கிடையே ஒரு மீட்டர் இடைவெளியைப் பராமரித்தல், ஆசன இருக்கைகளில் ஐம்பது வீதமான பயணிகளை மாத்திரம் அனுமதித்தல் போன்றவற்றைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. வாடகை மோட்டார் சேவைகள், மோட்டார் கார்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் போன்றன அதிகபட்சம் இரண்டு பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியதாவிருந்தது (*COVID-19 BEST PRACTICE RESPONSE: PASSENGER TRANSPORT GUIDANCE IN SRI LANKA*, 2020). யதார்த்த நிலையினை கருத்தில் கொள்கின்ற போது இந்த ஒழுங்குவிதிகள் நடைமுறைச் சாத்தியம் குறைந்தனவாகக் காணப்படுகின்றன. தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் தனது கோபத்தினை வெளிப்படுத்திய போது:

இந்தப் புதிய ஒழுங்குவிதிகள் முட்டாள்தனமானவை. ஏனெனில் அவற்றை அமுலாக்கம் செய்வது எவருக்குமே நடைமுறைச் சாத்தியமானதல்ல. கொவிட் பரவுவதற்கு முன்னர்கூட, நாங்கள் குறைந்தபட்ச வருமானத்தையே ஈட்டினோம். ஆசனங்களில் ஐம்பது வீதமானவர்களை மாத்திரமே ஏற்ற முடிந்தால் வாகனத்தை வீதிக்கு எடுத்துச்செல்வது நிதி ரீதியாகச் சாத்தியமானதல்ல. ஒரு பயணியை ஏற்ற பிறிதொரு பயணியை இறக்கும் வரை காத்திருப்பது சாத்தியமல்ல. தனியார் போக்குவரத்துக்கள் ஒருபோதும் இவ்வாறு செயற்பட்டதில்லை. இந்த ஒழுங்குவிதிகளின்படி நாங்கள் செயற்பட வேண்டுமானால் பேரூந்தின் செயல்பாட்டுச் செலவைக்கூட என்னால் ஈடுசெய்யமுடியாது. அதனால் என்னுடைய பேரூந்துகளை வீட்டில் வைத்திருக்கவே நான் விரும்புகின்றேன்[3].

எவ்வாறெனினும் ஒழுங்குவிதிகளின் நடைமுறைச் சாத்தியமற்ற தன்மையை உணர்ந்துகொண்டு அரசாங்க அதிகாரிகள் அவற்றை மாற்றுவதற்குப் பதிலாக அவற்றின் அமுலாக்கத்தினைத் தளர்த்தியுள்ளனர். பெருந்தொற்றுக் காலத்தில் பொதுப் போக்குவரத்தில் சமூக இடைவெளியைப் பேணுதல் என்பது ஒருபோதும் வெற்றிகரமானதாக அமையவில்லை. ஏனெனில், அது சாத்தியமற்றதொரு விடயமாகும். இதனால் பணியிடங்கள் மற்றும் கல்விசார் நிறுவனங்கள் போன்றவற்றில் சமூக இடைவெளியைப் பேணுதல் என்பதும் தேவையற்றதாகும். நெரிசல்மிக்க பொதுப்போக்குவரத்தில் பயணம் செய்த பின்னர் பணியிடங்கள் அல்லது கல்விசார் நிறுவனங்களில் சமூக இடைவெளியை உண்மையாகப் பேணுதலின் நோக்கம் தோல்வி கண்டது. சமூக இடைவெளியைப் பேண அரசாங்கம் இதனைவிட மிகச் சிறந்த கொள்கைத் தீர்வுகளை முன்வைத்திருக்க முடியும் என்பதல்ல அதன் அரத்தம். உண்மையில் கொவிட் ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் அமுலாக்கம் செய்தல் போன்றவற்றில் காணப்பட்ட நியாயமற்ற மற்றும் தனிப்பட்ட ஏற்பாடுகளின் தன்மை குறித்து தான் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

ஒழுங்குவிதிகளை அமுலாக்கம் செய்யும்போது கவர்ச்சியான சில தந்திரோபாயங்களை முன்னிலைப்படுத்தியிருந்தது. குறிப்பிட்ட ஒழுங்குவிதியினை நடைமுறைப்படுத்துவது சாத்தியமற்றதாகின்ற போது அரசாங்கம் அதனை அமுலாக்கம் செய்யும் முயற்சியை சற்றுத் தளர்த்துவதோடு குறிப்பிட்ட ஒழுங்குமுறைகள் சரியான முறையில் அமுலாக்கம் செய்யப்படுகின்றன என்ற கருத்தினைப் பரப்புவதற்காகத் தனக்கு விசுவாசமுள்ள ஊடக நிறுவனங்களைப் பயன்படுத்துகிறது.

3 மாத்தறை மாவட்டத்தினைச் சேர்ந்த பேருந்து உரிமையாளர் ஒருவருடனான கலந்துரையாடல், 20 நவம்பர் 2020.

உதாரணமாக, முழு போக்குவரத்துத்துறையும் தளர்த்தப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கமைவாக இயங்கியபோது இராணுவமும் பொலிஸ்படையும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறும் தனியார் பேரூந்துகளை எவ்வாறு சோதனையிடுகின்றன என்பதனை ஊடக அலைவரிசைகள் காட்டின. எனவே, அரசாங்கத்தின் கொவிட் ஒழுங்குவிதிகள் ஊடகங்களைப் பயன்படுத்துவதனூடாக மிகச் சிறப்பாக அமுலாக்கப்பட்டன.

மேலும், போக்குவரத்துத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் நிதிசார் பிரச்சினைகளைக் குறைப்பதாக அரசாங்கம் உறுதியளித்தது. அதன்படி, 2020 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் சகல ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் போன்றோருக்கு தலா ஐயாயிரம் ரூபா வீதம் ஒரு கொடுப்பனவினை வழங்கியிருந்தது (*Rs. 5,000 allowance for private bus drivers & conductors*, 2020). மேலும் மத்திய வங்கியானது குத்தகை நிறுவனங்களுக்கு (Leasing Companies) பேரூந்து உரிமையாளர்களது குத்தகைத் தவணைகளைச் செலுத்துவதற்கான ஒரு சலுகைக் காலத்தை வழங்குமாறு அறிவுறுத்தியது. எனினும் குத்தகைக்கான தவணைப் பணத்தைக் காலந்தாழ்த்திச் செலுத்துதல் என்பது ஒரே விதமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை எனத் தெரிகிறது. முன்னர் குறிப்பிட்ட தனியார் பஸ் உரிமையாளரின் கருத்துப்படி, சிலர் இந்தச் சலுகையைப் பெற்றிருந்தாலும்கூட சில குத்தகை நிறுவனங்களானவை தவணைப் பணத்தைச் செலுத்த எடுக்கப்பட்ட கூடுதல் காலத்திற்கான மேலதிக வட்டிப்பணத்தை அறவிட்டிருந்தன. போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கம் சில நிவாரணங்களை வழங்கிய போதும் கொவிட் ஒழுங்குமுறைகளுக்கு இணக்கமான வகையில் போக்குவரத்துத்துறை செயற்படுவதற்கு அவை போதுமானதாக இருக்கவில்லை. இதனாலேயே கொவிட் செயலணியானது சில ஒழுங்குவிதிகளை தளர்ந்த வகையில் அமுலாக்குவதற்கான தீர்மானத்தை எடுத்திருந்தது எனலாம்.

மேலும், தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளானவை பொதுவாக இறுதிச்சடங்குகள், திருமணங்கள், வேறுபட்ட சமய நிகழ்வுகளுடன் தொடர்புடைய கலாசார சடங்குகள் போன்றவற்றைச் சாதாரண பிரசைகள் கடைபிடிப்பதனை தடைசெய்திருந்தன. ஆயினும் அரசாங்கத்திலிருக்கும் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் நண்பர்களுக்கு இது பொருந்தாது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மறைந்த ஆறுமுகம் தொண்டமான் அவர்களுக்கு ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் பங்குபற்றுதலுடன் தலவாக்கலையில் நடந்த பொது இறுதிச்சடங்கில் இது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது. (கீழேயுள்ள படம் 2ஐப் பார்க்கவும்) தீவிரமடையக்கூடிய பெருந்தொற்றுக்கான ஆபத்து

தெளிவாகப் புலப்பட்ட போதிலும் சனாதிபதி கொவிட் ஒழுங்குவிதிகள் தொடர்பாகக் கவலைப்படாமல் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தப் பாராளுமன்றத் தேர்தலை நடாத்த முடிவுசெய்திருந்தார். மேலும் சனாதிபதி 'கிராமத்துடனான கலந்துரையாடல்' (Gama Samaga Pilisandara) என்ற நிகழ்ச்சிக்காக நூற்றுக்கணக்கான கிராமவாசிகள், அரச அலுவலர்கள் எனப் பலரையும் அழைத்துவந்து தான் உருவாக்கிய கொவிட் ஒழுங்குவிதிகளை மேலும் புறக்கணித்தார் (கீழேயுள்ள படம் 1ஐப் பார்க்கவும்).



*படம் 1: சனாதிபதி ஹல்டுமுல்ல பிரதேசத்திலுள்ள கிராமங்களுக்கு விஜயம் செய்தல் (25ஆம் திகதி செப்டெம்பர் 2020)*

Source: *Make people living is a battle ...*, 2020.




*படம் 2: ஆ. தொண்டமான் அவர்களது இறுதிச்சடங்கு ஊர்வலம், 29ஆம் திகதி மே 2020.*

Source: *Curfew declared in Nuwara Eliya as Thondaman's funeral cavalcade enters town*, 2020.

கொவிட் சட்டங்களானவை அரசியல் உயர் குழாத்தினருக்கு மட்டுமல்லாது அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் கூட தளர்த்தப்பட்டன. பெருந்தொற்றுக்கெதிராகப் போராடுவதற்காகப் பொறுப்பாக்கப்பட்ட உயர் அதிகாரிகளின் தயவுடன், கொழும்பு நகர நட்சத்திர விடுதிகள் பலவற்றில் ஆளுங்கட்சியினது அரசியல் பிரமுகர்கள் மற்றும் அவரது நண்பர்கள் பிறந்தநாள் கொண்டாட்டங்களை நடத்திய செய்திகளும் காணப்படுகின்றன. ஆயினும் சாதாரணப் பிரசைகளுக்கு ஒழுங்குவிதிகளை அமுலாக்கம் செய்யும்போது அதிகாரிகள் மிகக் கடுமையாக நடந்துகொண்டனர். அத்தகையதொரு உதாரணத்தைப் பார்த்தோமேயானால், 30ஆம் திகதி யூன் 2021 அன்று ஒழுங்குவிதிகளை மீறி இடம்பெற்ற திருமணமொன்றைப் பொலிஸார் அதிரடிச் சோதனை நடாத்தியதாகவும் அந்தத் திருமணத்தில் பங்குகொண்ட 20 பங்கேற்பாளர்களும் அதே வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவித்தார் (*The wedding that violated quarantine regulation*, 2021). சமூக இடைவெளி தொடர்பான

ஒழுங்குவிதிகளை அமுலாக்கம் செய்வதில் இசைவற்ற தன்மை மற்றும் தம்மவர் நலன் பேணும் தன்மை (Favouritism) ஆகியன செல்வாக்குச் செலுத்தியிருந்தன என்பது தெளிவாகத் தெரிகின்றது.

## *பயணக்கட்டுப்பாடுகள், முடக்குதல்கள் மற்றும் தனிமைப்படுத்தல்*

நோய்க்கிருமியின் ஆக்ரோசமான பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, அரசாங்கம் அவ்வப்போது பயணக்கட்டுப்பாடுகள், முடக்குதல்கள், நோய்க்கிருமியின் தொற்றுக்குள்ளானவர்கள், தொற்றுக்குள்ளாக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுபவர்கள் தொடர்பாக பல கடுமையான ஒழுங்குவிதிகளை விதித்தது. பெருந்தொற்றின் ஆரம்பக்கட்டத்தில் மாகாணங்களுக்கிடையே, குறிப்பாகப் பரவல் கணிசமாகக் காணப்பட்ட மேற்கு மாகாணத்திற்குள்ளேயும் வெளியேயும் மக்கள் பயணஞ்செய்வதனைத் தடுக்கப் பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இத்தகைய நடவடிக்கைகள் மருத்துவ அடிப்படையிலும் குறிப்பிட்ட தருணத்திற்கும் தேவையானது என்பதிலும் இரண்டு கருத்துக்கு இடமில்லை. ஆயினும் இந்நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்ட விதமானது ஏற்கனவே சமூகத்திலிருந்த அநீதிகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளை மீள உயிர்த்தெழச் செய்ததோடு அதனை மேலும் அதிகப்படுத்தி சமூகத்தின் பல பகுதிகளுக்கும் பாரதூரமான எதிர் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நூலின் இரண்டு அத்தியாயங்கள் பெருந்தொற்றானது ஓரங்கட்டப்பட்ட நிலையிலுள்ள சமூகங்களை எவ்வாறு பாதித்துள்ளது என்பதனை வெளிப்படுத்துவதற்காக, உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆடைத்தொழிற்சாலைப் பணியாளர்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் போன்றோரின் அனுபவங்கள் மீது பிரத்தியேகக் கவனத்தைச் செலுத்தியுள்ளன. இதனால் இந்த அத்தியாயம் முடக்குதல் மற்றும் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளினால் பாரபட்சப்படுத்தப்பட்ட சமூகங்களினது அனுபவங்களின் பொதுவான வடிவங்களைக் கவனங்கொள்கின்றது. வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்காக வேறுபட்ட சமூக வர்க்கங்கள் வெவ்வேறு அளவுகளில் சமூக இடைத்தொடர்புகளை மேற்கொள்கின்றன என்பது நன்கு அறியப்பட்டதொரு விடயமாகும். ஆகவே முடக்குதல்கள் மற்றும் தனிமைப்படுத்தல்களானவை சகலரையும் ஒரே விதத்தில் பாதிப்பதில்லை. உடல் செயற்பாடு தேவையில்லாத அலுவலகஞ்சார் தொழில்களைப் புரிபவர்கள் (White-collar job holders) பலர் இணையவழித் தளங்களினூடாகத் தமது தொழில் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க முடிந்தது. முறையான ஊதியத்தைப் பெறக்கூடிய தொழிலில் இருப்பவர்கள் தங்களது தொழிலைத் தக்க வைத்துக்கொண்டதோடு

வீட்டிலிருந்தவாறே ஊதியத்தைப் பெறக்கூடிய நிலையும் காணப்பட்டது. முறைசாராத் துறையில், குறிப்பாக நகர்புறங்களில் வாழுகின்றவர்களின் வருமானமானது தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளால் கடுமையான பாதிப்புக்குள்ளாகியது[4]. இந்நிலைமைகளில் வாழும் மிகக்குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கான அரசாங்கத்தின் நிதியுதவியானது மிகக் குறைவாகக் காணப்பட்டது (*Protest in Wanathamulla demanding more relief amidst COVID-19,* 2020). குறைந்த வருமானத்தைக் கொண்ட மோதரை பிரதேசத்துக் குடியிருப்பாளர் ஒருவர் தமது மோசமான நிதிநிலைமை பற்றிக் குறிப்பிடும் போது:

> சகலருக்கும் எரிவாயு வழங்கும் முறையொன்று காணப்படவில்லை. அரசாங்கம், கட்டடம் - C இலுள்ள கடைகளுக்குச் செல்வதற்கான ஒரு பொறிமுறையை நியமிக்கப்பட்ட அலுவலர்களூடாக ஒழுங்கு செய்திருந்தது. எனினும் எங்களது சொந்தக் கடைகளில் அடிப்படைப் பொருட்களான மரக்கறி, மீன், இறைச்சி, மருந்துகள் மற்றும் பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் பயன்படுத்தும் சுகாதாரப் பொருட்கள் போன்றவற்றை வாங்குவதற்குக் கூட எங்களிடம் பணமில்லை (Gunasekera, 2020).

இதன் விளைவாக பல ஏழை மக்கள் தமது வாழ்வாதாரம் இழக்கப்பட்டமையினால் ஏற்பட்ட துன்பத்தைப் போக்க எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்காத ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் அரசாங்க நிதி உதவிகள் மற்றும் உணவுப் பொருட்களை விநியோகப்பதில் அரசாங்க அலுவலர்களின் சலுகை அடிப்படையிலான நடாத்துகை குறித்தும் ஆர்ப்பாட்டம் செய்தனர் (*Protest in Wanathamulla demanding more relief amidst COVID-19* (2020) *News First,* 2020).

அதிக சனநெரிசலான பகுதிகளில் வசிப்பவர்களின் வாழ்க்கை தனிமைப்படுத்தல் மற்றும் முடக்குதல் தொடர்பான ஒழுங்குவிதிகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டது. கட்டடத் தொகுதி ஒன்றில் வசிக்கும் குறைந்த வருமானத்தைக் கொண்ட பிறிதொரு குடியிருப்பாளர் தனது நிலைமையை விளக்கிய போது:

> எமது வீடுகள் 450 சதுர அடிக்கும் குறைவானவை. ஒவ்வொரு வீடுகளும் 550 சதுர அடியைக் கொண்டன எனக் கூறப்பட்டாலும் நடைபாதையையும் சேர்த்து கணிப்பிட்டால் மாத்திரமே அந்தளவான இடத்தினைக் கொண்டிருக்கும். இங்குள்ள 927 வீடுகளில் கிட்டத்தட்ட 870 இலிருந்து 880 வீடுகளில் குடும்பங்கள் வசிக்கின்றன.

4 நகர்ப்புறத்தில் வசிப்பவர்களைப் போல, கிராமப்புறங்களில் வாழ்பவர்கள், விவசாயத்தில் ஈடுபடுபவர்கள் போன்றோர் தனிமைப்படுத்தப்பட்டதால் அதிகம் பாதிப்படையவில்லை.

> சில குடும்பங்களில் ஏழிலிருந்து எட்டுக் குடியிருப்பாளர்கள் வாழ்கின்றனர். இன்னும் சில குடும்பங்களில் அதனை விட அதிகமான குடியிருப்பாளர்கள் வாழ்கின்றனர். கொரோனாவிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்காக எம்மை நாமே சிறை வைத்துக் கொண்டுள்ளோம். ஆனால் இது இறுதியில் பல தனிப்பட்டவர்களுக்கு கடுமையான மன மற்றும் உளவியல் ரீதியான பிரச்சினைகளை ஏற்படுத்தும் (Gunasekera, 2020).

முன்னர் குறிப்பிட்டபடி, ஊடகங்களினூடாக கொவிட் தொற்றுநோயாளர்களைப் பிரபல்யப்படுத்தி அறிக்கை செய்வதனூடாக இந்தச் சமூகங்கள் மேலும் ஓரங்கட்டப்பட்டு, அவர்கள் சமூகத்திற்கான ஒரு அச்சுறுத்தல் எனவும் முத்திரை குத்தப்பட்டனர். உயர் தொழில்நுட்பம் கொண்ட ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி இந்தப் பகுதிகளைக் கண்காணிப்பு செய்தமையானது அத்தகையதொரு கண்ணோட்டங்களுக்கு மேலும் ஊட்டமளித்துள்ளது. ஊடகப் பேச்சாளரும் உதவிக் காவல்துறை அத்தியகட்சருமான அஜித் ரோஹன குறிப்பிடுகையில், முடக்கப்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மக்கள் பின்பற்றுகிறார்களா என்பதனைக் கண்காணிக்க ஆளில்லா விமானங்களது காட்சிப் பதிவுகளைப் பயன்படுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டார் (*15 arrested from lock-down areas following drone monitoring op*, 2020).

தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளைக் கடுமையாக அமுலாக்குவதற்கு ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தும் முதலாவது அல்லது ஒரே நாடு இலங்கை அல்ல. ஆயினும், இந்தக் கொள்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரயோகமானது பின்தங்கிய சமூகங்களைத் தொந்தரவாகவும் சுகாதார அபாயமாகவும் நோக்கியதோடு அவர்களை குற்றவாளிகள் மற்றும் சமூகத்திற்கான அச்சுறுத்தல் எனவும் அடையாளப்படுத்தியது. அவங்கா பெர்னான்டோ (Awanka Fernando) குறிப்பிடுகையில், "சில சமூகங்கள் கொண்டிருந்த விரோதத் தன்மையான குற்றஞ்சாட்டுதலானது அவர்களது தற்காப்பற்ற நிலையை மேலும் வலுப்படுத்தியது" (Gunasekera, 2020). மேலும், முடக்குதல் தொடர்பான ஒழுங்குவிதிகளை அமுலாக்குவதற்காக நிலைநிறுத்தப்பட்ட அதிகாரிகள் சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, சட்டத்திற்குப் புறம்பான வகையில் மீறுபவர்களைத் தண்டித்தார்கள். பெருந்தொற்றினால் உருவாகிய இந்தச் சிக்கல் நிலையானது ஏழைகள், பலவீனமாவர்கள் மற்றும் பாரபட்சப்படுத்தலுக்கு உள்ளாக்கியவர்களை இன்னமும் கூடுதலாகப் பாதிப்படையச் செய்தது. பெருந்தொற்றுக்கெதிரான போராட்டத்தினை ஒரு யுத்தம் என தனது சொல்லாட்சி திறத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் தனிநபர்களை

உரிமைகளைக் கொண்ட பிரசைகளாகக் கருதாது அவர்களை ஓர் அச்சுறுத்தலாகக் கருதி சமூகங்களை நடாத்துவதற்கான ஒரு தளத்தை முன்னிலையில் நின்று செயற்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியது. பின்வரும் இரண்டு படங்களும் ஏழைகளும் பலவீனமானவர்களும் எவ்வாறு கொடூரமான ஒழுங்குவிதிகளால் பாதிக்கப்பட்டனர் என்பதைக் காட்டுகின்றன.



*படம் 3: ஊரடங்குக் காலத்தில் வெளியே வந்தவர்கள் வீதியில் மண்டியிட்டு இருத்தப்பட்டனர்.*

Source: *Srinivasan, 2021.*




*படம் 4: ஊரடங்குக் காலத்தில் கேரம் விளையாடியவர்கள் துரத்தியடிக்கப்பட்டனர்.*

Source: *Hiru News (screenshot).*

படம் 4 ஆனது முச்சக்கர வண்டியின் இளஞ்சாரதி ஒருவர், விளையாடுகின்ற கேரம் பலகையைத் தலைக்கு மேலே பிடித்துக் கெண்டிருக்கின்ற ஒரு காட்சியாகும். இந்தக் காட்சியானது சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு விசுவாசமான தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தினது செய்தித் துண்டிலிருந்து எடுக்கப்பட்டதாகும். படம் 3 ஆனது வீட்டிற்கு வெளியே வந்தவர்கள் வீதியில் மண்டியிடப்படுத்தப்பட்ட ஒரு சூழலை வெளிப்படுத்துகிறது. படம் 4 ஆனது அடையாளப்படுத்துவது என்னவெனில், ஒழுங்குவிதிகளை மீறியவர்களுக்குத் தண்டனைகள் வழங்கப்பட்டதைத் தொலைக்காட்சி நிறுவனம் பாராட்டியதை வெளிப்படுத்துகிறது. இத்தகைய ஒருதலைப்பட்சமான ஊடகங்களினது அறிக்கையானது தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதி மற்றும் சட்டங்களை மீறுகின்றவர்களுக்கு வழங்கப்படுகின்ற கடுமையான நடாத்துகையை நியாயப்படுத்தும் அதேவேளை, அதிகாரத்திலுள்ளவர்கள் மீறும் போது அமைதியாகவும் இருக்கின்றன என்ற செய்தியையும் வெளிப்படுத்துகின்றது.

## சமூகப் படிநிலைகளை உயிர்த்தெழச்செய்தல்

பெருந்தொற்றானது கண்மூடித்தனமாகப் பரவினாலும் நோய்க்கிருமியின் தாக்கம் சமூகத்திலுள்ள பல்வேறு குழுக்களால் வெவ்வேறு வகையில் உணரப்பட்டது. உதாரணமாக, மேலே கூறப்பட்டவை வெளிப்படுத்துவது போன்று உயர்தரமான வீட்டு வசதிகளைக் கொண்ட செல்வந்தர்களை விட சேரிப்புறங்களில் வசிக்கும் ஏழைகள் இந்த நோய்க்கிருமியினால் அதிகமாகப் பாதிப்படைந்தனர். நோய்க்கிருமியை விட இந்த அத்தியாயத்தில் ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டதன் படி கொவிட் பதில் நடவடிக்கைகள் சமூகத்தினது ஏற்றத் தாழ்வுகளை தெளிவான வகையில் உயிர்த்தெழச் செய்துள்ளன.

ஏனைய நாடுகளைப் போன்று மிகமுக்கியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாட்டினுள் நோய்க்கிருமி பரவுவதனைத் தடுக்க இலங்கை அரசாங்கம் பலவிதமான வெளிநாட்டுப் பயணக் கட்டுப்பாடுகளை விதித்தது. முதலில், விமான நிலைய அதிகாரிகள் கடுமையான ஒழுங்குவிதிகளைப் பிரயோகிக்காமல் சகல பயணிகளையும் சோதனையிட்டு நாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதியளித்தனர். ஆயினும் பின்னர் பெருந்தொற்றினது தீவிரத்தன்மைக்குப் பதில் நடவடிக்கையாக ஒழுங்குவிதிகள் மேலும் கடுமையாக்கப்பட்டன. அதன்படி, வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருவோர் குறிப்பிட்ட விடுதி அல்லது அரசாங்கத்தினால் பராமரிக்கப்படும் நிலையம் ஒன்றில் குறிப்பிட்ட காலத்துக்கு தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்ற ஒழுங்குவிதி கட்டாயமாக்கப்பட்டது. எனினும் விசேட சுற்றுலா பயணிகள் மற்றும் மிக முக்கியமான ஆட்கள் (VIPs) போன்றோர் இந்த வேண்டுகோள்களிலிருந்து விலக்களிக்கப்பட்டு, தொடர்ந்தும் பயணம் செய்பவர்களாகவும் காணப்பட்டனர்.

அதாவது, அமுலாக்கத்திலிருந்த மேலதிகமான நடவடிக்கைகள் வழக்கமான பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்பது எதிர்பார்க்கப்பட்ட விடயமாக இருந்தாலும்கூட கொள்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் இந்த அசௌகரியத்தை மேலும் தீவிரப்படுத்தியது. உதாரணமாக, பெருந்தொற்றின் ஆரம்ப நாட்களில் மக்கள் தாம் எங்கே தனிமைப்படுத்தப்பட வேண்டும் என்பது தொடர்பான விருப்பத் தெரிவினைக் கொண்டிருக்காததோடு தமக்கு ஒதுக்கப்பட்ட தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. இவர்களில் சிலர் மட்டக்களப்பு, வவுனியா போன்ற தூர இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கொழும்பை அடைய பல மணித்தியாலங்கள் பிரயாணித்த பின்னர் தமது தனிமைப்படுத்தல் இடங்களுக்குச் செல்ல மீண்டும் நீண்டநேரம் பயணம் செய்வது

சந்தேகத்திற்கிடமின்றி மிகவும் எரிச்சலூட்டுவதாக இருந்தது. பின்னர், தனியார் துறையினர் கட்டணத்தை விதிக்கும் தனிமைப்படுத்தல் வசதிகளை வழங்க முன்வந்தாலும் அந்தச் செலவை தாங்கக்கூடியவரால் மாத்திரமே அதன் நன்மையை அனுபவிக்க முடிந்தது. ஆரம்ப நாட்களில் சிறந்த வசதிகளைக் கொண்ட விடுதிகளில் தனிமைப்படுத்தப்படுதலை தேர்தெடுத்த பயணிகள் அதற்கான பணத்தினை விமானச் சீட்டின் செலவோடு சேர்த்து ஏற்க வேண்டியிருந்தது. இந்த ஒழுங்குபடுத்தல் நடவடிக்கையானது வீட்டுப்பணிப்பெண்கள் மற்றும் வேறு தொழில்களைப் புரிகின்ற ஏழை வெளிநாட்டு தொழிலாளர்கள் நாடு திரும்புவதைச் சிக்கலுக்குள்ளாக்கியது. பயணக்கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக, அதிகரித்த விமானச்சீட்டுக்களின் செலவுகள், தனிப்பட்ட தனிமைப்படுத்தல் வசதிகள் தொடர்பான கூடுதல் செலவுகள் பற்றிய எதிர்பார்ப்பானது பெருந்தொற்றின் ஆரம்பக்கட்டத்தில் பல வெளிநாட்டுத் தொழிலாளர்களைத் தொடர்ந்தும் வெளிநாட்டிலேயே தங்கியிருக்கச் செய்தது. மத்திய கிழக்கில் தொழில் புரிகின்ற இலங்கை விமானச்சேவையின் சிரேஷ்ட முகாமையாளர் ஒருவர் வெளிநாடுகளில் இருக்கும் குடிபெயர்ந்த தொழிலாளர்களின் மோசமான நிலை (பெருந்தொற்றின் ஆரம்பக்கட்ட காலங்களில்) பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டார்:

> பெருந்தொற்று ஆரம்பமாகியதிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய ஒழுங்குவிதிகள் விமானச் சீட்டின் விலையை அதிகரித்தன. தனிமைப்படுத்தலோடு தொடர்பான செலவுகளையும் எமது விமானச் சீட்டுக்கள் உள்ளடக்க வேண்டியிருந்தமையினால் விமானச் சீட்டின் விலை இன்னும் அதிகரித்தது. ஏற்கனவே பல தொழிலாளர்கள் தொழிலை இழந்திருந்த நிலையில் வசிப்பதற்கு ஓர் இடமோ, உணவைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளோ அவர்களுக்கு இருக்கவில்லை. அதனால் அரசாங்கம் விமான நிலையத்தைத் திறந்தபோதும் கூட நாட்டிற்கு திரும்புவதற்கான விமானச் சீட்டினை அவர்களால் வாங்க முடியவில்லை. அங்கிருக்கின்ற இலங்கை தூ தரகத்திலிருந்து எவ்விதமான உதவியையும் பெறமுடியாததால் பல இலங்கையர்கள் என்னைத் தொடர்புகொண்டோ அல்லது நேரில் சந்தித்தோ இலங்கை விமானச் சேவையினால் (Sri Lankan Airlines ) தமக்கு ஏதும் உதவிசெய்ய முடியுமா என்று கோரினர்.[5]

5 மத்திய கிழக்கு நாடொன்றினது இலங்கை விமானச்சேவையின் வதிவிட முகாமையாளர் ஒருவருடனான கலந்துரையாடல், 10 ஆம் திததி பெப்ரவரி 2021.

1.2 மில்லியனுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான வெளிநாட்டு இலங்கையர்களே வெளிநாட்டு வருமானத்தின் பிரதான ஆதாரமாகவும் தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய ஆதரவுத்தளமாகவும் இருந்தனர். எனினும் அரசாங்கத்தின் சிரத்தைக் குறைவால் பாதிக்கப்பட்டனர். நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள கோட்டாபய ராஜபக்ஷவிற்கு பெரும் எண்ணிக்கையான தொழிற்படையைத் தனியொரு சக்தியாகத் தாய்நாட்டிற்கு மீண்டும் அழைத்துவருவதென்பது சவால் நிறைந்த விடயமாகும். எனினும் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட கணிசமான சர்வதேச உதவித்தொகையில் சிறிய தொகையை மாத்திரமே அரசாங்கம் இதுவரை செலவு செய்திருந்தமை தொடர்பான அரசாங்கத்தினது சொந்தக் கணக்குப் பதிவுகளின் (பெருந்தொற்றுக் காலத்தில் இலங்கையின் சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான விரிவான விளக்கத்தினை இறுதி அத்தியாயத்தில் பார்க்கவும்) அடிப்படையில் பார்க்கும்போது, இந்தப் பிரசைகள் குழுவானது தமது நாட்டுக்குத் திரும்புகின்ற பயணத்துக்காக ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்தாமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும்.

அரசாங்க தொழில்கள் மற்றும் முறையான சம்பளத் தொழில்களைக் கொண்டவர்கள் (வருமான வழிகளோடு ஒப்பிடுகையில்) முறைசாராத் துறையிலுள்ளவர்களை விடக் குறைவாகவே பாதிப்படைந்துள்ளனர். பல நாடுகளில் ஏழைகள் அல்லது முறைசாரா பொருளாதாரத்தில் தொழில் புரிகின்ற மக்கள் போன்றோரையே அந்நாட்டு உதவித் திட்டங்கள் தேர்தெடுக்கின்றன. அதனால் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களினூடாகவோ அல்லது குறிப்பிட்ட நபரின் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது என்ற நிபந்தனையின் அடிப்படையிலோ உதவியைப் பெற வாய்ப்பில்லை (*Coronavirus bailouts: Which country has the most generous deal*, 2020). உதாரணமாக கனடா பெருந்தொற்றினால் வருமானத்தை இழந்தவர்களுக்கு மாதம் 2000 கனேடிய டொலர்களை (£1,150; $1,400)] நான்கு மாதங்கள் வரை வழங்கிய அதேநேரம், கொஸ்ராரிக்கா (Costa Rica) என்ற நாடு பெருந்தொற்றினால் வேலைகளை இழந்தவர்களுக்கு மாதாந்தம் 220 டொலர் (£177) கொடுப்பனவை வழங்கியது. எனினும், இலங்கை அரசாங்கத்தினால் கொவிட்டினால் நிதி ரீதியாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தகைய தேசிய மட்ட நிதிசார் உதவியினை வழங்க முடியவில்லை. எனவே பல்வேறு வருமான மட்டத்திலுள்ளவர்கள் பெருந்தொற்றினால் உருவாகிய நிதி நெருக்கடியை அரசின் தலையீடு இல்லாத நிலையில் தனிப்பட்ட குடும்பங்களே தாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.

பெருந்தொற்றுக் காலத்தில் சமூகத்தினைச் சேமமாக வைத்திருந்தமை தொடர்பாக அரசாங்கமானது துறைசார் வல்லுனர்களைப் போர் வீரர்களாகப் பாராட்டுகின்றதொரு உள ரீதியான பிரச்சாரத்தினை மேற்கொண்டது. மருத்துவ நிபுணர்கள், இராணுவ உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள், உள்ளூர் மட்டப் பணியகத்தினர் ஆகியோர் ஆற்றிய பங்களிப்பினைப் பாராட்டிப் பல விளம்பரப் பாதாதைகள் அமைக்கப்பட்டன. எனினும் முடக்குதல் மற்றும் தனிமைப்படுத்தல் காலங்களில் சேவைகளை விநியோகித்தவர்கள், பல்பொருள் அங்காடிகளில் தொழில் புரிந்தோர், வாடகை மோட்டார் சாரதிகள் போன்றோர் வழங்கிய பங்களிப்பு பாராட்டப்படவில்லை. இவ்வாறு செய்வதனால் அவர்களது சேவை குறைவாக மதிப்பிடப்பட்டது மட்டுமல்லாமல் அவர்கள் தாங்களாகவே எதிர்கொள்ளும் ஆபத்தும் அறியப்படாததாக இருந்தது. வைத்தியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு தடுப்பூசி போடுவதில் காட்டப்பட்ட முக்கியத்துவமும் அவசரமும் சமூகத்தை இயக்கமுடையதாக வைத்திருப்பதற்கு உடலால் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு (Blue-collar workers) காட்டப்படவில்லை. உண்மையில் கற்பித்தல் நடவடிக்கைகள் முற்றுமுழுதாக இணையவழியில் நடாத்தப்பட்ட போதும் வாடகை மோட்டார் வாகன சாரதிகள் அல்லது பல்பொருள் அங்காடி தொழிலாளர்களை விட பல்கலைகழக ஆசிரியர்களுக்கே அரசாங்கம் முன்னுரிமை அளித்தது. அக்கிலே எம்பம்பே அவர்களது 'பிண அரசியல்' (Necropoltics) விளக்குவது போல், அரசாங்கத்தின் கொவிட் தடுப்பு தந்திரோபாயமானது எந்த உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை மற்றும் எவை அப்புறப்படுத்தப்பட வேண்டியவை என்ற சமூக ஒழுங்கை தெளிவாக நிறுவியுள்ளது (Mbembe, 2003).

## கொவிட் பதில் நடவடிக்கையை அரசியல்மயமாக்குதல்

பெருந்தொற்றுக்குச் சனாதிபதி பதிலளித்த விதம் அவர் தனது அரசியலை சமாளிப்பதற்காகத் தெரிவுசெய்த ஒரு வழி என்பது மிகத் தெளிவாக வெளிக்காட்டப்பட்டது. அதிகாரத்தை ஒருங்கிணைத்தல், பணியகத்தினையும் சிவிலியன்களின் அலுவல்களையும் இராணுவமயமாக்கல், தனது பொருளாதார அரசியல் இலக்கினை தடையின்றி அமுலாக்குவதற்கான பாதையைச் சுத்திகரித்தல் போன்ற பரந்த அரசியல் இலக்குகளை அடைவதனை எதிர்பார்த்து, அவரது பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. அதற்கு உதாரணமாக, சுகாதார நெருக்கடியின் மத்தியிலும் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க சனாதிபதி முடிவெடுத்தார்.

அலன் கீனன் குறிப்பிடுவது போன்று:

> இலங்கை அரசாங்கம் நாட்டின் நவீன வரலாற்றில் முதற்தடவையாக பாராளுமன்றத்தின் மேற்பார்வை இல்லாமல் ஆட்சி செய்யும் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. இது ஒரு கடுமையான அரசியலமைப்பு நெருக்கடியை ஏற்படுத்தலாம். நவம்பரில் தெரிவுசெய்யப்பட்டு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத நிலையில், சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனக்கிருந்த அசாதாரண சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 2ஆம் திகதி மார்ச் பாராளுமன்றத்தைக் கலைத்து 25ஆம் திகதி ஏப்ரலில் பொதுத்தேர்தலை நடாத்தத் திட்டமிட்டார். மார்ச் பிற்பகுதியில் கொவிட் அவசரநிலை தீவிரமடைந்ததால் தேசியத் தேர்தல் ஆணைக்குழு வாக்கெடுப்பை கால வரையறையின்றி தாமதப்படுத்தியது. புதிய தேர்தல் திகதி முடிவு செய்யப்படாத நிலையில் மூன்று மாதங்கள் மட்டுமே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதாகத் தொடர்ந்திருக்கலாம் என அரசியலமைப்பு கூறுகிறது. 2ஆம் திகதி யூன் என்ற கால எல்லை காலாவதியாவதற்கு முன்னர், சனாதிபதி அல்லது நீதிமன்றங்கள் தீர்க்கமான முடிவினை எடுக்காவிட்டால் இலங்கை ஒரு ஆபத்தான நிலப்பரப்பாக உருவாகலாம் (Keenan, 2020).

சனாதிபதி ராஜபக்ஷ பாராளுமன்றம் ஒன்று இல்லாதிருத்தல் மற்றும் பெருந்தொற்றினை எதிர்த்துப் போராடுவதற்கான ஒழுங்குவிதிகளின் சட்ட ரீதியான செல்லுப்படித்தன்மை இல்லாமை போன்றவற்றைத் தொடர்ச்சியாகப் புறக்கணித்து வந்தார் (Sumanthiran, 2021). அவர் பாராளுமன்றத்தைப் புறக்கணித்தது மட்டுமல்லாமல், தான் அதிகாரத்திற்கு வருவதற்கு உதவி புரிந்த அரசியல்வாதிகளையும் புறக்கணித்தார். உதாரணமாக, பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், தனது சொந்தக்கட்சியின் நிபுணர்களான தொற்றுநோயியல் முன்னோடியான பேராசிரியர் விதான மற்றும் சமூக வைத்திய நிபுணர் கலாநிதி பெர்னாண்டோ பிள்ளே போன்றவர்களின் நிபுணத்துவத்தை பயன்படுத்தாமை மற்றும் நாட்டின் பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கைகளை முன்னெடுக்க இராணுவத் தளபதியை நியமித்தமை குறித்தும் சனாதிபதியைச் சாடியிருந்தார் (*MP Sumanthiran speech on the Parliament*, 2021). சகலவற்றுக்கும் மேலாக, நிறைவேற்று சனாதிபதிக்குப் பரந்த அதிகாரங்களையும் அதிகளவான விலக்கு சக்தியையும் வழங்குகின்ற பிரச்சினைக்குரிய 20ஆவது அரசியலமைப்புத் திருத்தமானது ஒரு நெருக்கடியான நிலைமையில் மிக விரைவாகக் கொண்டுவரப்பட்டது (Srinivasan, 2020b).

பெருந்தொற்றின் முதலாம், இரண்டாம் அலைகளைக் கட்டுப்படுத்துவதில் ஒப்பீட்டளவில் கிடைத்த வெற்றியைச் சனாதிபதி தமது ஆட்சி சட்டரீதியானது என்பதை நியாயப்படுத்தப் பயன்படுத்திக் கொண்டார். பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னரான காலத்தில் அரசாங்கத்தின் சாதனை பற்றிய விடயங்களை அரச சார்பு செய்தித்தாள்கள் “இலங்கையும் அதனது சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பெருந்தொற்றுக்கான பூகோள பதில் நடவடிக்கையின் குறிக்காட்டியில் ஒன்பதாவது இடத்தில் இருப்பதாகப் பாராட்டியிருந்தன” (*SL ranked 9th in Global Response to Infectious Diseases* (*GRID*) *index*, 2020). எவ்வாறெனினும் மூன்றாவது அலையினால் பெருந்தொற்றானது தீவிரமடைந்த போது, இந்த வெற்றிகரமான கதையாடலை நீண்ட காலத்துக்கு நீடிக்க முடியவில்லை. அது மட்டுமல்லாமல் மிக ஆழமடைந்து வந்த நிதி நெருக்கடியின் பின்னணியில், சனாதிபதியினது கொள்கைகள் மற்றும் நடத்தைகள் மிக கூர்மையாகக் கண்காணிக்கப்பட்டதோடு அவை நாடளாவிய ரீதியில் பரந்த ஆர்ப்பாட்டங்களையும் ஏற்படுத்தின. விவசாயிகள் உரம் கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்: சிவில் சமூக நிறுவனங்கள் அரசாங்க ஆதரவுடன் இடம்பெற்ற காடழிப்பு மற்றும் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்திற்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன: ஆசிரியர்கள், மாணவர்கள், பல அரசியல் நிறுவனங்கள் ஆகியன தனியார்மயப்படுத்தல், கல்வியை இராணுவமயப்படுத்தல் என்பவற்றுக்காக ஆர்ப்பாட்டம் செய்தனர்: அதேநேரம் ஆசிரியர்கள் தமது சம்பள முரண்பாடுகளை தீர்க்கக்கோரி இணையவழிக் கற்பித்தலைப் புறக்கணித்து நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

எவ்வாறெனினும் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை ஒரு சாக்காக பயன்படுத்தி அதிகரித்து வரும் எதிர்ப்பை அடக்குமாறு அரசாங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டது. நோய்க்கிருமி குறைவாகப் பரவுகின்ற சந்தர்ப்பத்தில், தளர்த்தப்பட்ட சமூக இடைவெளிக்கான இடைவெளிகள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கடுமையாக விதிக்கப்பட்டன. கொவிட்-19 விரைவான பரவலைத் தடுப்பதற்காக மறு அறிவித்தல் வரும்வரை ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டங்கள் போன்றவற்றைத் தடைசெய்யுமாறு சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன பொலிசாருக்கு அறிவுறுத்தினார். ஆயினும் சனநாயக உரிமைகளை ஆர்பாட்டக்காரர்கள் பயன்படுத்துவதனைத் தடுக்க முடியவில்லை. பல ஆர்பாட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டனர், தாக்கப்பட்டனர். பிணை பெற்ற பின்னரும் கூட தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு வலுக்கட்டாயமாகக் கொண்டு செல்லப்பட்டனர். செயலாளர் ஜோசெப் ஸ்டாலின் உள்ளிட்ட

ஆசிரிய சங்க உறுப்பினர்கள் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை மீறியமைக்காகக் கைது செய்யப்பட்டு, பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பட்டனர். இதேபோல அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமஹே மற்றும் அவரது ஆதரவாளர்கள் பொதுவான தனிமைப்படுத்தல் சட்டங்களைப் பின்பற்றாது 15ஆம் திகதி யூலை 2021 இல் நாவலப்பிட்டியில் இடம்பெற்ற போராட்டத்தில் பங்குபற்றினர். இதன்போது இந்த சுகாதார ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படவில்லை (பல எதிர்ப்புப் பிரச்சாரங்கள் சுகாதார ஒழுங்குவிதிகளைச் சுட்டிக்காட்டியே இடைநிறுத்தப்பட்டன). எனவே அரசாங்கத்தின் பெருந்தொற்றுப் பதில் நடவடிக்கையானது சுகாதார நெருக்கடியை நிர்வகிப்பதனை மாத்திரம் இலக்காகக் கொள்ளாமல் சனாதிபதியின் பரந்த அரசியல் நிகழ்ச்சி நிரலைப் பூர்த்திசெய்யவும் முற்படுகிறது.

## முடிவுரை

இலங்கையில் பெருந்தொற்றினை ஆளுகை செய்தலின் பரிமாணத்தினையும், அது பிரசையின் சனநாயக அரசியல் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கத்தினையும் இந்த அத்தியாயம் பரீட்சித்திருந்தது. தொற்றுநோய் மற்றும் நச்சுயிரியல் நிபுணர்களின் ஆலோசனைக்குப் பதிலாக சனாதிபதியின் ஆளுகைக்கான பகுத்தறிவின் அடிப்படையிலேயே அரசாங்கத்தின் கொவிட் பதில் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. கொவிட் பெருந்தொற்றின் கீழ் இயல்பாக்கப்பட்டிருந்த விதிவிலக்கு நிலையானது, சர்வாதிகாரப் பாணியிலான ஆட்சியினை முன்னெடுப்பதற்கான கோட்டாபய ராஜபக்ஷவின் அபிலாசையை நிறைவேற்றியது: அ) நிறைவேற்று சனாதிபதியின் கைகளுக்கு அரசாங்கத்தின் மூன்று துறைகளினதும் அதிகாரத்தினைக் கொண்டுவந்தமை ஆ) நிறைவேற்றுத்துறை கொண்டிருந்த தடைகளையும் சமனிலைகளையும் நீக்கி, தனது ஆட்சிக்குத் தடையானவற்றை இல்லாதொழித்தமை இ) விமர்சனம் மற்றும் கருத்து வேறுபாடுகளின் அடிப்படையிலான சனநாயகச் சமூகத்திற்குப் பதிலாக நன்நடத்தை மற்றும் கீழ்ப்படிவுள்ள சமூகத்தினைக் கொண்டிருத்தல் ஈ) தனிப்பட்ட ஆட்களின் தேவைகள் மற்றும் நலன்களை விட பேரின மட்ட பொருளாதார வெளியீடுகள் மற்றும் ஒட்டுமொத்த மக்களை மையப்படுத்தியதொரு அரசாங்கம். எனவே சனாதிபதியின் அரசியல் இலக்கை நோக்கி அமைந்த பெருந்தொற்றுக்கெதிரான போராட்டமானது நாட்டின் சனநாயக நிறுவனங்களுக்கு எதிரான ஒரு அரசியல் தாக்குதல் என்றே கண்டுகொள்ளமுடிகிறது.

சிவிலியன்களின் நடவடிக்கைகளில் இராணுவம் தலையிடுவதற்கான சுமுகமான பாதையினை அரசாங்கத்தின் கொவிட் பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகள் வழங்கியிருந்தன. கொவிட் நெருக்கடி முடிவுக்கு வந்தாலும்கூட, இந்த புதிய சாதாரண (New normal) நிலைமை தொடர்ந்திருப்பதற்கான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. சிவில் விடயங்களில் இராணுவத்தின் தலையீடு அதிகரித்து வருவதனால் சிவில் சேவையிலுள்ள ஊழல், தவறான முகாமைத்துவம், சோம்பேறித்தனம் கொண்ட ஊழியர்கள் அசெகரியத்தை எதிர்கொள்கின்றனர் என்பது உண்மை.

சனாதிபதிக்கு ஒத்துப்போகின்ற தெரிவுகளை மேற்கொள்கின்ற நிலைமையை இலங்கையினது கொவிட் பெருந்தொற்றினை ஆளுகை செய்கின்ற அணுகுமுறை பிரதிபலிக்கின்றது. அவருக்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர்கள் போலல்லாது, நாட்டின் அரசியல் நடைமுறைகளுக்குப் புறம்பான வகையில் கொவிட் சுகாதார நெருக்கடியினை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளில் சனாதிபதி தன்னை அதிகாரத்துக்குக் கொண்டுவந்தவர்களை உள்வாங்கவில்லை. புதிய தொழில்நுட்ப-சார் அரசியல் வர்க்கத்தினரை (New technocratic political class) தனக்கு அருகில் கொண்டுவந்த சனாதிபதி கோட்டாபய, தனது மூத்த சகோதரரான மகிந்த ராஜபக்ஷவின் பழைய அரசியல் மேட்டுக்குடியினரை ஓரங்கட்டினார். இந்தத் தெரிவானது தனது வசதிக்காகவா அல்லது ஒரு தந்திரோபாயமாகவோ எடுக்கப்பட்ட முடிவு என்பது வேறு விடயம். எனினும் இந்தப் புதிய அதிகார வர்க்கத்தினது கூட்டமானது முழுத் திட்டத்தினையும் பாழாக்குவதோடு, அதன் விளைவுகள் பெருந்தொற்று முடிவடைந்த பின்னரும் நீடித்து இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

ஏனைய நாடுகளினைப் போன்று இலங்கையின் கொவிட் பதில் நடவடிக்கைகளானது ஒட்டுமொத்த சனத்தொகையினது சுகாதாரத்தினையும் பேணிப் பாதுகாப்பதனை இலக்காகக் கொண்டிருந்தது. இதனால் இறப்பு மற்றும் தொற்றுக்களின் புள்ளிவிபரம், பொருளாதாரக் குறிகாட்டிகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியினைப் பிரபலமாக்கல் என்பனதான் மிக முக்கிய விடயங்களாகக் கருதப்பட்டனவே தவிர, பெருந்தொற்றினால் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள், அது ஏற்படுத்திய பாதிப்புகள் குறித்து கவனஞ்செலுத்தப்படவில்லை. பெருந்தொற்றுக்கு உட்பட்டவர்களை சுற்றிவளைத்து அவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு கொண்டு செல்கின்ற போது ஒட்டு மொத்த மக்களுக்கும் எதிரானவர்களாக தொற்றுக்குள்ளானவர்களை ஒரு அச்சுறுத்தலாக முத்திரை குத்தி, தனது சொந்த மக்களுக்கு எதிரான ஒரு போராட்டமாகவே அரசாங்கம் பதில் நடவடிக்கைகளை

முன்னெடுத்தது. இது பெரும்பாலும் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு (சமூகத்திலிருந்த) எதிரானதாக இருந்ததோடு, படிநிலையாக்கங்களை மேலும் உயிர்தெழச் செய்து அதனை இன்னும் அதிகப்படுத்தியது. எனவே கொவிட் பதில் நடவடிக்கைகளை ஆளுகை செய்தலானது, கௌரவமான வாழ்க்கையை அனுபவிக்கக்கூடிய ஒரு சனநாயக மற்றும் சமத்துவவாத சமூகத்தினை உருவாக்கவில்லை. மாறாக கருத்து வேறுபாடுகள், விமர்சனங்கள் என்பவற்றைப் பொறுத்துக்கொள்ளாத ஒரு சமூகத்தில் பெரும்பாலான பிரசைகள் உரிமைகளை சுதந்திரமான வகையில் அனுபவிக்க இயலாதவர்களாக ஒரு வெறும் பிரசை அந்தஸ்துடன் மட்டும் வாழ்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு பயன் என்பதனை அடிப்படையாகக் கொள்ளும் கொள்கைகள் மற்றும் குழு அரசியல் இடம்பெறுவதற்கான ஒரு சூழலும் கொவிட் பதில் நடவடிக்கைகளை ஆளுகை செய்தலினால் ஏற்பட்டுள்ளது.

## உசாத்துணைகள்:

*15 arrested from lock-down areas following drone monitoring op* (2020) *News First.* Available at https://www.newsfirst.lk/2020/11/12/15-arrested-from-lock-down-areas-following-drone-monitoring-op/ (Accessed: 02 July 2021).

Chen et al. (2021) 'What factors drive the satisfaction of citizens with governments' responses to COVID-19?', *International Journal of Infectious Diseases*, 102, pp. 327-331.

*COVID-19 BEST PRACTICE RESPONSE: PASSENGER TRANSPORT GUIDANCE IN SRI LANKA* (2020) *The Chartered Institute of Logistics and Transport.* Available at

https://www.ciltinternational.org/news/covid-19-best-practice-response-passenger-transport-guidance-in-sri-lanka/ (Accessed: 05 July 2021).

*Coronavirus bailouts: Which country has the most generous deal?* (2020) *BBC News*. Available at: https://www.bbc.com/news/business-52450958 (Accessed: 15 June 2021).

Fonseka, B. and Dissanayake, U. (2021) 'Sri Lanka's Vistas of Prosperity and Splendour: A Critique of Promises Made and Present Trends' *Centre for Policy Alternatives*. Available at: https://www.cpalanka.org/wp-content/uploads/2021/07/Sri-Lankas-

Vistas-of-Prosperity-and-Splendour-A-Critique-of-Promises-Made-and-Present-Trends.pdf (Accessed: 20 July 2021).

Graham, E. (2020) 'The armed forces and COVID-19', *IISS*, 08 April. Available at: https://www.iiss.org/blogs/analysis/2020/04/easia-armed-forces-and-covid-19 (Accessed: 23 June 2021).

Gunasekera, D. (2020). 'Life in high-rise buildings amidst isolation', *The Morning*, 06 December. Available at https://www.themorning.lk/life-in-high-rise-buildings-amidst-isolation/?fbclid=IwAR2OmpzKYpYKbcii794d8n5iK5K8mKttKet9nYT3cRdI-fNQkN2KXtrinnY (Accessed: 27 June 2021).

*Health guidelines made compulsory* (2020) *Daily News*. Available at: https://www.dailynews.lk/2020/10/12/local/231231/health-guidelines-made-compulsory (Accessed: 15 July 2021).

*Intelligence units to trace contacts of COVID – 19 patients* (2020) *News First*. Available at: https://www.newsfirst.lk/2020/04/18/intelligence-units-to-trace-contacts-of-covid-19-patients/ (Accessed: 28 June 2021).

Keenan, A. (2020) 'Sri Lanka's Other COVID-19 Crisis: Is Parliamentary Democracy at Risk?', *Crisis Group*, 29 May. Available at: https://www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/sri-lankas-other-covid-19-crisis-parliamentary-democracy-risk (Accessed: 17 June 2021).

*Mask Police 'lift' people in Sri Lanka* (2021) *Gravitas*. Available at https://www.youtube.com/watch?v=cwfvJ6NBb1I (Accessed: 30 June 2021).

*Militarisation of COVID response, the looming refugee crisis, and Nepal's PM under pressure* (2020) *Himal Southasian*. Available at: https://www.himalmag.com/southasiasphere-issue-4/ (Accessed: 05 July 2021).

*Min. of Public Security goes 'without' facemask during official function* (2021) *Newshub.lk*. Available at https://newshub.lk/en/2021/05/10/min-of-public-security-goes-without-facemask-during-official-function/ (Accessed: 25 June 2021).

*MP Sumanthiran speech on the Parliament* (2021) *JK Lanka Tamil*. Available at https://www.youtube.com/watch?v=3A-Vqj2qctw

(Accessed: 24 June 2021).

Perera, S. (2020) 'When the Pandemic is a Portal to Militarization', *Groundviews*, 30 May. Available at: https://groundviews.org/2020/05/30/when-the-pandemic-is-a-portal-to-militarization/ (Accessed: 17 July 2021).

*Police arrest 238 for not masking* (2021) *Daily News*. Available at http://www.dailynews.lk/2021/05/07/law-order/248647/police-arrest-238-not-masking (Accessed: 05 July 2021).

*Protest in Wanathamulla demanding more relief amidst COVID-19* (2020) *News First*. Available at: https://www.newsfirst.lk/2020/11/26/protest-in-wanathamulla-demanding-more-relief-amidst-covid-19/ (Accessed: 15 July 2021).

*Rs. 5,000 allowance for private bus drivers & conductors* (2020) *Ceylon Today*. Available at: https://archive.ceylontoday.lk/news-more/13721 (Accessed: 13 July 2021).

*SL ranked 9th in Global Response to Infectious Diseases (GRID) index* (2020) *The Morning*. Available at: https://www.themorning.lk/sl-ranked-9th-in-global-response-to-infectious-diseases-grid-index/ (Accessed: 20 July 2021).

*Sri Lanka Army constructs 1200-bed hospital in Seeduwa for COVID-19 patients* (2021) *Colombo Page*. Available at http://www.colombopage.com/archive_21A/May08_1620487579CH.php (Accessed: 17 June 2021).

*Sri Lanka Coronavirus – Worldometer* (2021) *Worldometers*. Available at: https://www.worldometers.info/coronavirus/country/sri-lanka/ (Accessed: 15 June 2021).

*Sri Lanka makes masks mandatory under new quarantine laws; to impose fine if rule violated* (2020) *The New Indian Express*. Available at https://www.newindianexpress.com/world/2020/oct/16/sri-lanka-makes-masks-mandatory-under-new-quarantine-laws-to-impose-fine-if-rule-violated-2211071.html (Accessed: 22 June 2021).

Srinivasan, M. (2020a) 'COVID-19 Sri Lankan military is helping the country fight the pandemic', *The Hindu*, 15 April. Available at: https://www.thehindu.com/news/international/covid-19-

sri-lankan-military-is-helping-the-country-fight-the-pandemic/article31350778.ece (Accessed: 27 June 2021).

Srinivasan, M. (2020b) 'Sri Lanka: Controversial 20th Amendment passed', *The Hindu*, 22 October. Available at: https://www.thehindu.com/news/international/sri-lanka-controversial-20th-amendment-passed/article32921800.ece (Accessed: 04 July 2021).

Sumanthiran, M.A. (2021) 'Covid-19, Old Laws & The Government's Mismanagement', *Colombo Telegraph*, 06 May. Available at: https://www.colombotelegraph.com/index.php/covid-19-old-laws-the-governments-mismanagement/ (Accessed: 03 July 2021).

*The wedding that violated quarantine regulation* (2021) *Ada Derana*. Available at http://www.adaderana.lk/news/75029/wedding-party-violating-health-protocols-raided-20-attendees-quarantined (Accessed: 10 July 2021).

# 4

# வாழ்வா அல்லது வாழ்வாதாரமா? இலங்கையின் கொவிட்-19 பதில் நடவடிக்கையில் தேய்ந்து போகும் சேமநலன்

*நிபுணிகா ஓ. லேக்கம்வசம்*

## அறிமுகம்

ஐக்கிய நாடுகள் சபையினால், இரண்டாம் உலகப் போரிற்குப் பின்னர் இடம்பெற்ற மிகப்பெரிய சோதனை அல்லது பரீட்சை எனப் பெயரிடப்பட்ட கொவிட்-19 என்னும் பெருந்தொற்றானது 2019இன் கடைசிக் காலாண்டில் சீனாவின் வூகான் நகரில் தோன்றி இன்று பூகோளப் பெருந்தொற்றாகப் பல துறைகளிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளமையை உணர முடிகின்றது. உலகெங்கிலுமுள்ள பல நாடுகள் நோய்க்கிருமி பரவுவதனைத் தடுக்கவும் இறப்பு எண்ணிக்கையைக் குறைக்கவும் கடுமையான முடக்குதல் மற்றும் சமூக இடைவெளிக் கொள்கைகள் போன்றவற்றைச் செயற்படுத்தியுள்ளன. முடக்குதல் நிலையானது இறப்பு வீத அதிகரிப்பினைக் கட்டுப்படுத்துவதில் வினைத்திறனானதாக இருந்தாலும்கூட, பல சந்தர்ப்பங்களில் வாழ்வு மற்றும் வாழ்வாதாரம் என்பனவற்றில் ஒரு விட்டுக்கொடுத்தல் நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் அமுல்ப்படுத்தப்பட்ட மிகவும் கடுமையான முடக்குதல் நிலையானது தொற்று விகிதத்தினைக் குறைப்பதற்குப் பெரிதும் உதவியாக இருந்தது. எனினும் அத்தகைய சட்டங்களை இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளில் தவறாக அமுலாக்கிய போது அவை பல துன்பமான அனுபவங்கள் ஏற்படக் காரணமாகின. இலங்கையிலும்

அவ்வாறானதொரு சூழ்நிலையே காணப்பட்டது. மார்ச் 2020இல் நோய்க்கிருமி பரவத் தொடங்கியபோது கடுமையான முடக்குதல் நிலையைத் திணித்தமை, சமூக ஒன்றுகூடல்களை முற்றுமுழுதாக சகித்துக்கொள்ளாமை, உலக சுகாதார நிறுவனத்துடன் மிக நெருக்கமாக செயலூக்கமான வழியில் தொழிற்பட்டமை போன்றவற்றினூடாகப் பெருந்தொற்றினது சுகாதாரப் பாதிப்புகளைக் குறைப்பதில் இலங்கை வெற்றிகண்டது (Ranaraja, 2020). கொவிட்டினது இரண்டு அலைகளின் பின்னர் யூன் 2021இல் இருக்கின்ற தற்போதைய நிலைமை ஆரம்பகட்ட வெற்றியினைப் பிரதிபலிக்கவில்லை. இறப்பு விகிதம் அதிகரித்து வருவதோடு, இலங்கைச் சமூகத்தின் பல துறைகள் பாதகமான பொருளாதாரத் தாக்கத்தை உணர்ந்துள்ளன.

இந்த அத்தியாயத்தின் நோக்கம் என்னவெனில், அளவு மற்றும் பண்புசார் நோக்கினூடாகப் பொருளாதார நிவாரணத்தை வழங்குவதில் அரசாங்கத்தின் சேவை வழங்கல் பொறிமுறை தொடர்பான மக்களின் உணர்வுகளை முன்வைப்பதாகும். நடைமுறையில் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் முன்வைக்கப்படுகின்ற பிரதான தருக்கம் என்னவெனில், வாழ்வும் வாழ்வாதாரமும் (Lives and livelihoods) எதிர்மறையான தொடர்பைக் கொண்டுள்ளன என்பதாகும். கொவிட் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் வாழ்வாதாரத்தை அதிகமாக சீர்குலைக்கின்றன. இலங்கை உட்பட சகல நாடுகளும் இந்தத் தருக்கத்தின் அல்லது விவாதத்தின் சிறப்பினை ஏற்றுக்கொண்டாலும் அரசுகள் இவ்விரண்டுக்குமிடையே அனுசரணை செய்து விவேகமான முறையில் சேமநல ஆட்சியினைக் கவனமாகத் திட்டமிட்டு நடத்துமேயானால் வாழ்வுக்கும் வாழ்வாதாரத்திற்குமிடையேயான ஈடுகட்டல் நிலை என்பது அவசியமற்ற ஒன்று என இந்த அத்தியாயம் வாதிட எதிர்பார்க்கின்றது. சுதந்திரத்திற்கு முன்னர் சேமநலன் (Welfare) குறித்து இலங்கை அரசு கொண்டிருந்த நீண்டகாலக் கருத்தியல் ஈடுபாட்டின் பின்னணியில் (Jayasuriya, 2000; 2004) இந்த அத்தியாயமானது சமூக ஆதரவினை வழங்குவதற்காக தற்போதைய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட கொள்கை ஆரம்பிப்புக்களானவை பெருந்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதுகாப்பின்மைகளைச் சாதகமான முறையில் பதிலளிக்கப் போதுமானதாகக் காணப்பட்டனவா என்பதை மதிப்பீடு செய்கின்றது.

இரண்டாம் நிலைத் தரவுகளை அதிகமாகப் பயன்படுத்தும் இந்த அத்தியாயமானது, பூகோள மற்றும் தேசியப் பொருளாதாரத்தைச் சுருக்கமாக மதிப்பீடு செய்வதோடு தேசியப் பேரினமட்டப் போக்கில் வலுவான கவனத்தைச் செலுத்த முற்படுகின்றது. அடுத்ததாக 2021இன் முதலாவது காலாண்டில் நடாத்தப்பட்ட ‘கொவிட்-19 காலத்தில்

சமூக-பொருளாதாரக் குறிகாட்டி' என்ற உயர்மட்டக் கணக்கெடுப்பின் முடிவுகளினூடாக பாதிக்கப்பட்ட மக்களின் நுட்பமான அனுபவங்களை மையமாகக் கொண்டும் தொழில்வாய்ப்பைப் பாதுகாத்தல், தொழிலை இழந்தவர்களுக்கு ஆதரவை வழங்குதல் தொடர்பான அரசாங்கத்தின் நடத்தைப் பற்றிய தேசிய மட்ட விவாதங்கள் குறித்தும் இது கலந்துரையாடுகின்றது. அத்தோடு பெருந்தொற்றைச் சமாளிப்பதில் அரசின் வகிபங்கு, பெருந்தொற்றினால் ஏற்பட்ட சமத்துவமின்மைகள் போன்றவற்றைப் பற்றியும் இந்த அத்தியாயம் கலந்துரையாடுகின்றது. இதற்காக இந்த அத்தியாயம் பெருந்தொற்றானது வாழ்வாதாரத்தில் ஏற்படுத்திய பாதிப்புகள் தொடர்பான குடும்பங்களின் பொதுவான புரிதல், பெருந்தொற்றினால் உருவாகிய வெவ்வேறான பொருளாதார யதார்த்தங்கள், பெருந்தொற்றினால் உருவாகிய பொருளாதாரப் பாதிப்பைக் குறைக்க சமூகத்தின் பல பிரிவுகளால் கையாளப்பட்ட உத்திகள், கணக்கெடுப்பினூடாக மக்களின் புரிதலின்படி அரசாங்கத்தின் சேமநலன்சார் பொறிமுறைகளின் வினைத்திறன் போன்றன குறித்தும் கவனங்கொள்கின்றது.

## கொவிட் – 19இன் பொருளாதாரப் பாதிப்பு குறித்த சுருக்கமான விளக்கம்: பூகோள மற்றும் உள்நாட்டுப் பார்வை

### *பூகோளப் பார்வை*

பூகோளப் பொருளாதாரத்தில் கொவிட்-19 பாதிப்பானது கடுமையான வகையில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இப்பாதிப்புகளிலிருந்து மீண்டெழுதல் என்பது மெதுவானதாக இருக்கும் என்றும் பிராந்தியங்களுக்கிடையே அது சமனிலையற்றதாக இருக்குமெனவும் கணிக்கப்பட்டுள்ளது (*The Global Economic Prospects*, 2021). இப்பெருந்தொற்றானது உலகம் பூராகவுள்ள நாடுகளின் அரச கொள்திறன் (State capacity), ஊழியச் சந்தைகள் (Labour markets), நிதிக் கொள்கைகள் போன்றவற்றிலுள்ள குறைபாடுகளை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது. 2020இனது பூகோள மொத்த உள்நாட்டு உற்பத்தியானது, 5.2%இனால் குறைவடையும் என உலக வங்கி யூன் 2020இல் தெரிவித்திருந்தது (The Global Economic Outlook, 2020). இது பல தசாப்தங்களின் பின்னர் ஏற்பட்ட மோசமான பூகோள மந்தநிலையாக இப்பெருந்தொற்றினைக் கருத வழிசமைத்திருக்கிறது. உலகின் அநேகமான பிராந்தியங்களில் பொருளாதார வளர்ச்சி கணிசமான அளவிற்கு குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மீள் எழுதல் தொடர்பான கணிப்புக்கள் சமனிலையற்ற தன்மையை

எதிர்வு கூறுவதனால் அபிவிருத்தி அடைந்துவருகின்ற மற்றும் குறை அபிவிருத்தி கொண்ட பிராந்தியங்கள் அதிக வறுமை நிலைக்குத் தள்ளப்படலாம். அத்தோடு இந்தப் பிராந்தியங்கள் அடைந்துகொண்ட தசாப்த கால அபிவிருத்தியின் முன்னேற்றமானது பின்னடைவினையும் சந்திக்கலாம் எனவும் எதிர்வுகூறப்படுகின்றது. உலக வங்கி பின்வரும் அவதானிப்பினை மேற்கொண்டுள்ளது:

> மீண்டெழுதலானது சமனிலையற்ற ஒன்றாகவும் அமெரிக்கா போன்ற பெரிய பொருளாதார நாடுகளின் எதிரொலியினையும் பிரதிபலிக்கின்றது. காரணம் சமமற்ற தடுப்பூசிப் பெறுகையானது அதிகமாக இருக்கின்ற நிலையில் பல நாடுகளுக்கு பெருமளவான நிதி தேவைப்படுகின்றது. எழுச்சியடைந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் (Emerging Markets and Developing Economies-EMDEs) அதிகரித்த கொவிட்-19 தொற்றுக்கள், தடுப்பூசியைப் பெறுவதிலுள்ள சிரமங்கள் மற்றும் பேரினப் பொருளாதார ஆதரவிலிருந்து பகுதியளவில் விலகுதல் ஆகியன காணப்படுகின்றன. இந்நிலைமையானது வெளிநாட்டுக் கேள்விகளை வலிமைப்படுத்துதல் மற்றும் பொருள் விலை அதிகரிப்பினால் அடையக்கூடிய நன்மையையும் இழக்கச் செய்துள்ளது. 2022 ஆகின்றபோது பூகோள வெளியீடானது பெருந்தொற்றுக்கு முன்னர் எதிர்பார்த்ததைவிட 2% குறைவானதாகத் தொடர்ந்திருக்கும். அத்தோடு எழுச்சியடைந்து வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் (EMDEs) மூன்றில் இரண்டு பகுதியளவானவை பெருந்தொற்றுக்கு முன்னைய வருடத்தில் இழந்த ஆள்வீத வருமானத்தை முழுமையாக மீண்டும் அடையமுடியாததொரு நிலையிலும் காணப்படும் (*The Global Economic Prospects,* 2021, p. xvii).

யூன் 2021இல் புரூக்கிங்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் பின்வருமாறு எதிர்வுகூறப்பட்டுள்ளது. "வறிய நாடுகளே அதிகமான விலையை செலுத்த வேண்டியிருக்கும்" (Yeyati and Filippini, 2021, p. 5). இந்த அறிக்கையானது அரசாங்கத்தின் பதில் நடவடிக்கைகளை வினைத்திறனான வகையில் அமுலாக்கம் செய்வதற்கான பிரதான மூன்று காரணிகளை அடையாளப்படுத்துகின்றது: அதன்படி, நடைமுறையிலிருக்கும் சமூக ஆதரவு உட்கட்டமைப்பு, டிஜிட்டல் விநியோகத்தின் வலிமை மற்றும் நிகழ்நேரக் கண்காணிப்பு (Real-time tracking) போன்றவற்றை அடையாளப்படுத்துகிறது (ibid, p.

14).[1] அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அதிக சதவீதமான தொழில் வாய்ப்புகள் தொழிலாளர்களின் நேரடி வருகையை வேண்டி நிற்கின்றன என அறிக்கை வலியுறுத்துகின்றது. கொவிட்-19 இனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறைந்தளவு ஊதியம், அதிகமான தொடர்புகளைப் பேணவேண்டிய தொழில்கள் போன்றவற்றை தீவிரமாகப் பாதித்துள்ளன. இதனால் உருவாகிய பொருளாதார அதிர்வுகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஊழியச் சந்தையைப் பாதிப்படையச் செய்துள்ளன எனவும் அந்த அறிக்கை குறிப்பிடுகின்றது (ibid). அதனால், இந்தப் பொருளாதாரங்களுக்கு இணைவான மற்றும் வினைத்திறனான சேமநல நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. டெசர்ப் (Decerf et al, 2020, pp. 23-4) முதலானோர் வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்திற்கான தொடர்பு பற்றிப் பகுப்பாய்வு செய்கின்ற போது:

> தொற்றுவிகிதம் தொடர்பாகத் தரப்பட்ட தரவுகளின்படி, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைவிட அபிவிருத்தியடைந்த நாடுகள் பலமடங்கு உயர்வான இறப்புவீத செலவீனத்தை எதிர்கொள்கின்றன. காரணம் அவர்களுடைய மக்கள் தொகையானது அதிகமான வயது முதிர்ந்தவர்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. அத்தோடு நீண்டகால ஆயுட் காலத்தினையும் அச்சமூகத்தினர் கொண்டுள்ளனர். மறுபுறமாக வறுமையான நாடுகளான அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அவர்களது மக்களில் பெரும்பான்மையானோர் நாங்கள் குறிப்பிடும் வறுமைக் கோட்டிற்கு அண்மித்த வருமானத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இதன் காரணமாக அதிகரித்த இறப்பிற்கான செலவீனத்தை விட, அதிகரித்த வறுமைக்கான சேமநல செலவுகள் வறிய நாடுகளுக்கு அதிகமாகக் காணப்படுகின்றன. இது தனிநபர் வருமானத்தில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

இந்த அத்தியாயத்தின் அடுத்து வரும் பகுதிகளானவை, இந்த நிலைமையில் வறுமையைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இலங்கையினூடாக ஆராய்கின்றன.

---

1 ஜெயாட்டி மற்றும் பிலிப்பீனி (Yeyati and Filippini, 2021) ஆகியோரின் கருத்துப்படி, பெருந்தொற்றினைச் சமாளிப்பதில் ஏலவேயுள்ள சமூக ஆதரவு உட்கட்டமைப்புகள் முக்கியமானவையாகும். பெருந்தொற்றினது தன்மையினால் ஏலவே உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் பொறிமுறைகளுக்கமைவாக விரைவான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையொன்று காணப்படுகிறது. டிஜிட்டல் விநியோகமானது முடக்குதல் நிலையின் நிவாரணங்கள் குடும்பங்களைச் சென்றடைவதை உறுதிசெய்ய உதவுகிறது. அதேநேரத்தில் மேம்பட்ட பகுப்பாய்வு மற்றும் தரவுகளைப் பயன்படுத்தி நிகழ்நேர கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் அரசாங்கங்கள் மிகவும் துல்லியமான தரவுகளைக் குறிப்பிட்ட காலத்துக்குள் பெற்றுக்கொள்கின்றன. குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலைமையைப் புரிந்துகொள்வதில் நிகழ்நேரக் கண்காணிப்பு முக்கியமானதாகும் (Yeyati and Filippini, 2021, p. 14).

## *இலங்கைப் பொருளாதாரத்தில் கொவிட்-19இன் தாக்கமும் தேசிய பேரினப் போக்கும்: ஒரு சுருக்கமான பார்வை*

2021ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தி பற்றிய புதுத்தகவல் சேர்ப்பில் (Sri Lanka Development Update) இலங்கையின் பொருளாதாரமானது 2020ஆம் ஆண்டில் 3.6% வீழ்ச்சி கண்டதாக உலக வங்கி பதிவுசெய்துள்ளது (*Sri Lanka Development Update: Economic and Poverty Impact of COVID-19*, 2021). கொவிட்டினால் ஏற்பட்ட பொருளாதார இறுக்கங்கள் பற்றிய புள்ளிவிபர சுருக்கத்தினை முன்வைக்கும் இந்த அறிக்கையானது மேலும் குறிப்பிடுவது என்னவெனில் 3.1% பொருளாதார வளர்ச்சி, குறைவான தனியார் துறைப் பங்குபற்றல் மற்றும் ஏற்றுமதிப் பொருளாதாரம் ஆகியவற்றின் பின்னணியில் பொருளாதார நெருக்கடியானது தீவிரமானதாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டது (ibid). கைத்தொழில்த்துறையானது மொத்தமாக 6.9% பின்னடைவையும் சேவைகள் மற்றும் விவசாயத்துறைகள் முறையே 1.5% மற்றும் 2.4% பின்னடைவையும் சந்தித்தன (ibid, p.11). கைத்தொழில்த்துறையின் தொழில் இழப்புக்களானவை வருமான விநியோக வளைவில் (Income distribution curve) கீழ்த்தர மத்திய வர்க்கத்திலுள்ளவர்களைக் காத்திரமான வகையில் பாதித்தன. இவர்களைத் தவிர தனியார்துறை மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சொந்தமாக வியாபாரம் செய்யும் உரிமையாளர்களையும் மிக மோசமாகப் பாதித்தன (ibid). அத்தோடு 27% இலங்கையர்கள் மட்டுமே தொலைவிலிருந்து பணியாற்றக்கூடிய தொழில்களைக் கொண்டிருந்தனர் என்றும் நகர்ப்புறங்களிருந்து அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கே இந்த வாய்ப்புக்கள் காணப்பட்டன எனவும் இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது (ibid, p. 31).

'இலங்கை: 2020 பொருளாதாரத்தின் நிலை' (Sri Lanka: State of the Economy 2020) என்ற அறிக்கை வெளியீட்டின் போது (*Sri Lanka: State of the Economy 2020 ; Institute of policy studies Sri Lanka*, 2020) கொள்கைக் கற்கைக்கான நிறுவனத்தின் (Institute of Policy Studies) நிபுணர் குழுவானது பெருந்தொற்றானது எவ்வாறு ஏற்றத்தாழ்வுகளை விரிவுபடுத்தியுள்ளது என்பது பற்றி விவாதித்தது. குறிப்பாக அதிகரித்து வரும் கடன் மட்டம் மற்றும் மோசமடைந்த நிதி நிலைமை ஆகியவற்றின் பின்னணியில் பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையை தணிக்கும் திறமை இல்லாதிருப்பதன் பின்னணியிலேயே நிபுணர்குழு பெருந்தொற்று ஏற்படுத்திய ஏற்றத்தாழ்வுகள் பற்றிக் கலந்துரையாடியது. இந்தப் பின்னணியில், மொத்தத் தொழிற்படையில் 68% ஆக இருக்கின்ற முறைசாராத்துறையில் தொழில்புரியும் தொழிலாளர்கள் தாம் இதுவரை

காலம் சேமித்த சேமிப்பை உயிர் வாழ்வதற்காகச் செலவு செய்ததோடு கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கு எவ்விதமாக முதலீடுட்டையும் செய்யாது விலகி கடுமையான பொருளாதார இறுக்கத்தினை அனுபவித்து வருவதாகக் கூறப்படுகின்றது (Nisha Arunatilake as reported by Weerasekera, 2020). கொள்கைக் கற்கைக்கான நிறுவனத்தினது (IPS) பிறிதொரு ஆய்வொன்றில், தற்காலிகத் தொழிலின் ஆபத்துத் தன்மை (2018ஆம் ஆண்டு காணப்பட்ட 2.8 மில்லியன் தனியார்துறை ஊழியர்களில் 60% ஆனோர் நிரந்தரமற்ற தொழிலாளர்கள் ஆவர்) குறிப்பாக தொழில் பாதுகாப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்ற நன்மைகள் இல்லாமை குறித்தும் கலந்துரையாடுகிறது (Jayawardena, 2020). அத்தோடு தொழில் பாதுகாப்பை போலல்லாது, ஊழியச் சந்தைப் பாதுகாப்பினை இலங்கை வழங்காமையையும் எடுத்துக் காட்டுகின்றது. மேலும், வேலையின்மைக் காப்புறுதி மற்றும் பெருந்தொற்றுக் காலத்தில் தொழிலாளர்களின் தொழில் ஸ்திரமற்றதன்மையை அதிகரிக்கின்ற காரணிகள் பற்றியும் இது கவனஞ்செலுத்துகின்றது (ibid; *Most Sri Lanka workers without formal protection amid Covid-19 shock: IPS study*, 2020).

ஒக்டோபர் 2020இல் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி, தொழில் புரிவோர் சனத்தொகையில் 2.4% சரிவு ஏற்பட்டதாகவும் தனியார்துறை வேலை வாய்ப்புப் புள்ளிவிபரங்களில் பாரிய சரிவு அல்லது வீழ்ச்சியேற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது (*Recent Economic Developments: Highlights of 2020 and Prospects for 2021,* 2020). பொதுத்துறையில் ஒரு வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டிருந்தாலும் தொழிலற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் போன்ற அரசாங்க வேலைவாய்ப்புத் திட்டங்களால் பொதுத்துறை வேலையின்மைப் புள்ளிவிபரங்களை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடிந்தது (ibid). எனினும் இந்தத் திட்டங்களின் நிலைத்துநிற்கும் தன்மை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஏனையவற்றைப் போல மத்திய வங்கி அறிக்கையும் பெருந்தொற்றுக் காலத்தில் முறைசாரா தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைளின் தேவையை ஒப்புக் கொள்கிறது.

கொவிட்-19 ஆனது நாட்டின் வேலைவாய்ப்பு, வறுமை போன்றன மீது செலுத்தும் தாக்கத்தினை மதிப்பீடு செய்யும் உலக வங்கியின் 2021ஆம் ஆண்டிற்கான இலங்கை அபிவிருத்தி பற்றிய புதுத்தகவல் சேர்ப்பு என்ற அறிக்கையின்படி, பேரினத் தொழில்வாய்ப்புப் புள்ளிவிபரங்களை பாதிக்கும் மூன்று முக்கியமான காரணிகள் எடுத்தியம்பப்பட்டுள்ளன. குறைவான வருமானம் பெறுபவர்கள், சமூகப் பாதுகாப்பின்றிய முறைசாரா ஊழியர்கள் மற்றும் முறைசாராத் தொழிலாளர்களின் சில பிரிவினர் (உதாரணம் ஆடைத்தொழிற்சாலைத்

தொழிலாளர்கள்) போன்றோர் கொவிட் நிலைமையினால் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர் (*Sri Lanka Development Update: Economic and Poverty Impact of COVID-19*, 2021). வேலையிழப்பின் தாக்கத்தினைக் குறைப்பதற்காக வழங்கப்பட்ட உதவிகளைக் கருத்திற்கொண்டு, இந்த அறிக்கையானது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான இரண்டு நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுகின்றது. முதலாவதாக, தற்போது நடைமுறையிலுள்ள *சமுர்த்தி* போன்ற சேமநல நிகழ்ச்சித்திட்டங்களூ டாக ஆதரவளித்தல் மற்றும் குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு தற்காலிகக் கொடுப்பனவுகளை வழங்குதல் போன்ற பிரதான இரண்டு நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுகின்றது (ibid). அடுத்து வரும் பகுதிகளில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினது சோஷல் இன்டிகேட்டர் என்ற கணிப்பீட்டு ஆய்வுப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட 'கொவிட்-19 காலத்தில் சமூக-பொருளாதாரக் குறிகாட்டி' என்ற கணிப்பீட்டின் தரவுகளைப் பயன்படுத்தி (2021 இன் முதற்காலாண்டுப் பகுதியில்), இந்த அத்தியாயமானது மக்களின் நுட்பமான அனுபவங்கள் மீது கவனஞ்செலுத்தி அரசாங்க நிவாரணத் திட்டங்கள் குறித்த பார்வையினை மதிப்பீடு செய்கிறது.

## வாழ்வும் வாழ்வாதாரமும்: இலங்கையில் கொவிட் – 19 ஏற்படுத்திய பொருளாதார அச்சுறுத்தல்கள்

### *கொவிட்-19 காலத்தில் அரசினைக் கட்டியெழுப்புதல்*

ஜெயாட்டி மற்றும் பிலிப்பீனி (Yeyati and Filippini, 2021) ஆகியோர் குறிப்பிட்ட அரச கொள்திறன் குறித்த மூன்று வெற்றிகரமான காரணிகளின் அடிப்படையில் இலங்கையினை மதிப்பீடு செய்தால் இலங்கையானது டிஜிட்டல் விநியோகம் மற்றும் நிகழ்நேரக் கண்காணிப்பு ஆகிய இரண்டினையும் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவாகப் புலப்படுகிறது. இதனால் வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தில் கொவிட்-19 பாதிப்பு கடுமையானதாகக் காணப்படுகிறது. இலங்கையில் இணையவழிப் பாவனை குறித்த புள்ளிவிபரங்களின்படி, நகர்ப்புறங்களினது இணையப் பாவனையானது கிராமப்புறப் பாவனையை விட இருமடங்கானது என்பதனை வெளிப்படுத்துகின்றன (*Sri Lanka Development Update: Economic and Poverty Impact of COVID-19*, 2021, p. 30). இந்தப் பின்னணியில் இலங்கையில் ஒரேயளவான, சுமூகமான டிஜிட்டல் விநியோகம் என்பது சாத்தியமற்ற தொலைதூ ரக் கனவாகக் காணப்படுகின்றது. மாறுபட்டு செல்கின்ற தொற்றுநோய் விகிதங்களைக்கூட அரசாங்கம் துல்லியமாகக் கணிக்க முடியாத

நிலையில் உடனுக்குடன் நிகழ்நேரக் கணிப்பினை மேற்கொள்வது இத்தருணத்தில் சாத்தியமற்றதாகும். வேண்டுமென்றே குறைக்கப்பட்ட சோதனைகள் மற்றும் தகவல்களை சரியாக வெளிப்படுத்தாமை போன்றன கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகியுள்ளன (Gunasekera, 2021; Jayasinghe, 2020). அத்தோடு மோசமான வகையில் திட்டமிடப்பட்ட நடமாடுதல் தொடர்பான கட்டுப்பாடுகளை முறையாக அமுலாக்கம் செய்யமுடியாத நிலையும் கூட இறப்பு விகித அதிகரிப்பு மற்றும் பாரிய பொருளாதார முடக்கம் போன்றவற்றுக்குக் காரணமாக அமைந்தது. இந்தப் பின்னணியில் பெருந்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதாரத் தாக்கத்தினை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்துவதில் ஏலவேயிருக்கின்ற சமூக ஆதரவுக் கட்டமைப்புகளை மதிப்பீடு செய்தலும் மிக முக்கியமானதாகும்.

பாதிக்கப்பட்ட குழுக்களை அதிலிருந்து விடுபடச் செய்வதற்காக முன்னெடுக்கப்படுகின்ற ஆரம்பிப்புகளானவை (ஏற்கனவே நடைமுறையிலிருந்த மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தியவை) எவ்வாறு வெற்றிகரமாக உள்ளன என்பதற்கான கலந்துரையாடல் கீழே இடம்பெறுகிறது. இலங்கை ஒரு சேமநலன் அரசாக அதன் நிலைமை மிகவும் பரிதாபகரமாகக் காணப்படுகிறது என்பதனை நாம் மனதிற்கொள்ள வேண்டும். இது பெருந்தொற்றினால் உருவாகியதொரு நிலைமையல்ல. முன்னரே காணப்பட்ட நிலைமையினை பெருந்தொற்று தீவிரப்படுத்தியுள்ளது. இலங்கை அரசு மேலும் இறுக்கமான வகையில் நவதாராளவாதக் கொள்கைகளைக்[2] கடைப்பிடிக்கின்றது. இதனால் சமூகப் பாதுகாப்பானது குறைவடைந்து வருவதோடு நிறைவேற்று அதிகாரம் மற்றும் பாதுகாப்பு என்பன மத்தியமயப்படுத்தப்பட்ட போக்கும் தென்படுகின்றது. இவற்றைப் பெருந்தொற்றினால் இலகுவாக நியாயப்படுத்த முடிகின்றது. இந்நூலில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் மற்றும் கல்வி தொடர்பான அத்தியாயங்களில் நவதாராள மனப்பான்மை/ போக்குகள் சமூகத்தின் பல துறைகளில் எவ்வாறு ஊடுருவியுள்ளன எனக் கலந்துரையாடப்படுகின்றது. இந்த அத்தியாயமானது வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தில் இதன் பாதிப்புகள் குறித்துக் கவனங்கொள்கின்றது.

2 நவ-தாராளவாதம் என்பது பல கருத்துக்கள் மற்றும் அர்த்தங்களைக் குறிக்கும் ஒரு பதமாகும். எவ்வாறெனினும் நவ-தாராளவாதம் என்பது பொதுவாக பொருளாதார மீள்கட்டமைப்புப் பற்றியதாகும். அதிலும் குறிப்பாக பொருளாதார மீள்விநியோகம் மற்றும் சமூக சேமநலன் ஆகியவற்றினை எதிர்க்கின்ற அங்கீகாரத்தினைக் கொண்ட மூலதனத்தினால் வடிவமைக்கப்படும் ஒரு வகையான பொருளாதார மீள்கட்டமைப்பு என்பதே நவ-தாராளவாதம் ஆகும் (Venugopal, 2015).

## *பெருந்தொற்றுக் காலத்தில் வழங்கப்பட்ட அரசாங்க உதவிகளும் பொதுமக்களின் பார்வையும்*

'கொவிட்-19 காலத்தில் சமூக-பொருளாதாரக் குறிகாட்டி' என்ற உயர்மட்டக் கணக்கீட்டில்,[3] வேலைவாய்ப்பினைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் முயற்சிகள் தொடர்பாக 57% ஆனோர் அதிருப்தி வெளியிட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 59.8% ஆனோர் நகர்ப்புறத்தைச் சார்ந்தவர்களாகவும் 50.5 % ஆனோர் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். 67.8% ஆனவர்கள் தாம் மோசமான நிதி நிலைமையை எதிர்கொண்டதாகவும் இதில் அதிக எண்ணிக்கையானவர்கள் கிராமப்புறத்தைச் சார்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். எனினும் பேரினப் பொருளாதாரப் புள்ளிவிபரங்களின்படி, பெருந்தொற்றினால் கிராமியப் பொருளாதாரம் குறைந்தளவு பாதிக்கப்பட்டதாகவும் கிராமியப் பொருளாதாரத்தின் உயிர்நாடியான விவசாயத்தைவிட, கைத்தொழில்த்துறையே கடுமையான வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் இந்தக் கணிப்பீட்டின் அவதானம் முக்கியமானதாகும். பெருந்தொற்றினது பொருளாதாரத் தாக்கத்திலிருந்து விடுபடுவதற்காகப் பின்பற்றப்பட்ட உத்திகள் பற்றி வினாவப்பட்ட போது, 9.7% ஆனோர் (நகர்ப்புறத்தவர்கள் 2.3% மற்றும் கிராமப்புறத்தவர்கள் 11.8%) தாம் அடிக்கடி அரசாங்க உதவியைப் பெற்றதாகக் குறிப்பிட்டனர். அதேவேளை 28.5% ஆனோர் (நகர்ப்புறத்தவர்கள் 18.3% மற்றும் கிராமப்புறத்தவர்கள் 31.4%) தாம் எப்போதாவது ஒரு தடவை அரசாங்க உதவியைப் பெற்றதாகக் குறிப்பிட்டனர். அதிகமானவர்களால் பயன்படுத்தப்பட்ட உத்தியாக செலவுகளைக் குறைத்தல் காணப்பட்டது. இதற்கடுத்ததாக, தாம் வைத்திருந்த சேமிப்புக்களைப் பயன்படுத்தியதாகவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தமையினைக் கணிப்பீட்டின் மூலம் அறிய முடிகின்றது. கடனட்டை மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்தல் (42.1%), நகைகளை அடகுவைத்தல் அல்லது வங்கிக் கடன்களைப் பெறுதல் (42.2%), கடன் வழங்குநர்களிடமிருந்து கடன்களைப் பெறுதல் (29.5%), குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து உதவியைப் பெறுதல் (37.7%) போன்ற உத்திகளையும் பயன்படுத்தியுள்ளதாக கணப்பீடு குறிப்பிடுகின்றது. சேமநலன் தொடர்பாக அரசாங்கம் முன்வைத்த தகவல்களைவிட இது வேறுபட்டதாகக் காணப்படுகிறது. உத்தியோகபூர்வ அரசாங்க கதையாடலினைவிட வேறுவிதமான

---

3 இந்தக் கணிப்பீட்டில் "அடிக்கடி" மற்றும் "சில நேரங்களில்" எனப் பதிவுசெய்யப்பட்ட பதில்கள் மட்டுமே பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்பதை நினைவில் கொள்க. "ஒரு தடவை" எனப் பதிவுசெய்யப்பட்ட பதில்கள் விலக்கப்பட்டுள்ளன.

பதிவினை இது முன்வைக்கின்றது. அதாவது அரசாங்கம் கொவிட்-19 இலிருந்து விடுபடுவதற்கான உத்தியை மக்கள் தாமாகவே கையாள வேண்டும் என்றும் அரசாங்கம் சேமநலன்சார் கடமைகளிலிருந்து குறிப்பிடத்தக்களவு ஒதுங்கியிருந்தமையையும் கணிப்பீட்டின் தரவுகள் வலியுறுத்துகின்றன. தரவினைப் பகுப்பாய்வு செய்கின்றபோது தேசிய மட்டத்தில் அரசாங்கத்தின் நடத்தை குறித்துக் கவனஞ்செலுத்துவது மிக முக்கியமானது ஏனெனில், அது கணிப்பீட்டின் முடிவுகளுக்கு வெளியேயான கதையாடல்கள் குறித்த பார்வையினை வழங்குகின்றது.

தேசிய மட்டத்தில் இடம்பெறுகின்ற கொள்கை விவாதங்களுக்குள் நுழையும் முன்னர் மீன்பிடி மற்றும் விவசாயம் போன்ற இரண்டு எடுத்துக்காட்டுக்களினூடாக அரசாங்கத்தின் கொள்கைத் தவறுகள் எவ்வாறு கணிப்பீட்டுத் தரவுகளுக்கு அப்பால் சில வகையான கருத்துக்களை முன்னெடுக்க உதவுகின்றன என்பது பற்றிக் கீழே தரப்படுகின்றது.

## *மீன்பிடி மற்றும் விவசாயம்: அரசாங்கம் போதுமானளவு செய்கின்றதா?*

முதலாவது கொவிட்-19 பெருந்தொற்று அலையினால் சிறிய அளவிலான மீன்பிடித்துறையானது நாடாளவிய ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. நாட்டினை முழுமையாக முடக்கியமையினால், வீழ்ச்சியடைந்த கேள்வி மற்றும் நிரம்பல் நிலையினால் முதலாம் அலையின் இறுதிப் பகுதியில் 50-65% ஆன உற்பத்திச் சரிவு குறித்து உலக வங்கி அறிக்கையொன்றைப் பதிவுசெய்துள்ளது (Jayamanne, 2020 குறிப்பிட்டதன்படி). மேலும் ஏப்ரல் 2020இல் சர்வதேச வர்த்தக உறவுகள் (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ) வீழ்ச்சியடைந்திருந்ததோடு எவ்விதமான மாற்று வருமானங்களும் இல்லாத நிலைமையும் காணப்பட்டது. எனினும் யூன் 2020இல் இருந்து மீன்பிடித்துறையானது மெதுவாக ஆனால் நிலையான வகையில் மீண்டெழுந்து கொண்டிருந்தது. எவ்வாறெனினும் பெருந்தொற்றின் இரண்டாவது அலையானது பேலியகொட மீன்சந்தைக் கொத்தணியோடு ஆரம்பமாகியது. இதனைத்தொடர்ந்து சில மாதங்களுக்குள் மீன் விற்பனையானது மீண்டும் சடுதியாகக் குறைவடைந்தது. மீனை வாங்குதல் தொடர்பான பயத்தினால் பொதுமக்கள் மீனைக் கொள்வனவு செய்ய அச்சமுற்றனர். இதனால் மீனவர்களும் அவர்களது குடும்பங்களும் பாதிக்கப்பட்டன. சரியான தகவல்களைப் பரப்பி இந்தப் பயத்தை இல்லாது செய்வதில் அரசாங்கம் தோல்வியடைந்திருந்தது (ibid). போதுமான நிதிசார் உதவிகளையும் வழங்க அரசாங்கத்தினாலும்

இயலவில்லை. இத்தகைய நிலையில் அரசாங்கம் மேற்கொண்ட மிகக் குறிப்பிட்டுக் கூறக்கூடிய தலையீடு என்னவெனில், உலர்ந்த மீன்கள் (கருவாடு) பாவனையினை ஊக்குவித்தமையும் ஒக்டோபர் 2020இன் கடைசிப் பகுதிகளில் மீன்கள் முழுவதையும் கொள்வனவு செய்தமையுமாகும் (*Sri Lanka : The government decides to buy all the fish harvest*, 2020).

மீன்பிடித்துறையானது இந்த அதிர்ச்சிகளிலிருந்து மீண்டுவருவதற்கு இன்னமும் முயற்சி செய்துகொண்டிருந்த நிலையில் மூன்றாவது அலை ஏற்பட்டிருந்தது. மூன்றாவது அலையை அரசாங்கம் தவறாகக் கையாண்டமை மற்றும் நடமாடுதல் தொடர்பான கட்டுப்பாடுகள் போன்றவற்றினால் சிறிய அளவிலான மீன்பிடித்துறை மேலும் பாதிக்கப்பட்டது. பின்னர் மே மாதம் 2020இல் 146 கொள்கலன்களுடன் எக்ஸ்பிரஸ் பேர்ல் ( X-Press Pearl) கப்பல் கொழும்பிற்கு அண்மித்த கடற்கரையில் தீப்பற்றிய அனர்த்தமானது மீன்பிடித்துறை எதிர்கொண்ட பிறிதொருவிதமான பாரிய அதிர்ச்சியாகும் (Sirilal and Illmer, 2021; Perera, 2021). இதனது பாதிப்புகள் பல தசாப்தங்களுக்குக் காணப்படலாம் அல்லது பல தசாப்தங்களின் பின்னர் ஏற்படலாம். கப்பலின் சிதைவுப் பொருட்களானது இலங்கைக் கடல் வாழ் உயிரினங்களின் பெருக்கத்துக்குக் கெடுதலை ஏற்படுத்தலாம். இது கடல்வாழ் உயிரினங்களின் மீது பல ஆண்டுகளுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தலாம் என நம்பப்படுகின்றது. இது மீன்பிடித்துறை எதிர்கொள்ளுகின்ற கடுமையான விளைவுகளை எடுத்துக் காட்டுகிறது. ஒரு விரிவான நிவாரணப் பொதித்தொகுப்பு இல்லாது நாட்டின் மேற்குக்கரையைச் சேர்ந்த மீனவர்களது வாழ்வாதாரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டமையினால் அவர்கள் தமது பிரச்சினைகளை ஏற்கனவே வெளிப்படுத்தி வந்தநிலையில், அரசாங்கம் அவர்களுக்கு ஒதுக்கியிருக்கும் காப்பீட்டுப்பணத்தின் அளவு குறித்து தாம் திருப்தியடையவில்லை என்பதனையும் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர் (ibid). 35 வருட காலமாக மீன்பிடித்துறையிலிருந்த ரியூலின் பெர்னாண்டோ குறிப்பிடுகையில்:

> பவளப்பாறைகளில்தான் மீன்களின் இனப்பெருக்கம் இடம்பெறுகின்றது. ஆபத்தான இரசாயனங்கள் காரணமாக இனப்பெருக்கம் இடம்பெறுகின்ற இடங்கள் எல்லாம் அழிக்கப்படுகின்றன என அதிகார சபைகள் கூறகின்றன. கடலில் குதித்து இறப்பதனைத் தவிர வேறு வழியில்லை (Fernando as quoted in Sirilal and Illmer, 2021).

விவசாயத்துறையில் 2.4% வீழ்ச்சியினை உலக வங்கி மதிப்பிட்ட போதும் (*Sri Lanka Development Update: Economic and Poverty Impact of COVID-19,* 2021) மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

வெளியிட்ட தகவல்களின்படி, கொவிட்-19 தொடங்கியதன் பின்னர் கணிப்பீட்டில் பங்குபற்றிய 69.5% ஆன கிராமப்புற ஆட்கள் கடுமையான நிதி நிலைமையினை எதிர்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளனர் (இது நகர்ப்புற பின்னணியைக் கொண்டவர்களைவிட 7.6% அதிகரிப்பாகும்). தேசிய மட்டத்தில் அரசாங்கக் கொள்கைகளின் தவறுகள் இதற்குரிய சாத்தியமான விளக்கமாக அமைவதோடு இது இந்நிலைமை மேலும் தீவிரமடைவதற்கான காரணியாகவும் அமையலாம். மே 2021இல் இலங்கை அரசாங்கம் ஒரு வருடத்தில் இறக்குமதிச் செலவில் 400 மில்லியன் டொலரைச் சேகரிக்கும் நோக்கில் இரசாயனப் பசளைகளைத் தடைசெய்தது. (*Sri Lanka farmers, local bodies to be taught produce organic fertilizer after import ban*, 2021). இந்தக் கொள்கையானது எதிர்பாராது மற்றும் யோசனையின்றி மேற்கொள்ளப்பட்டதொன்று மாத்திரமல்ல, திடமான விஞ்ஞான அடிப்படையில் மேற்கொள்ளப்படாத ஒன்றாகவும் காணப்படுகின்றது (See Waliwitiya, 2021; 'Fertiliser ban could have disasterous outcome', 2021; *Sri Lanka - Ban on agrochemicals*, 2021). இறக்குமதிச் செலவினங்களைச் சேகரிப்பதற்காகவே இத்தகைய கொள்கை உருவாக்கப்பட்டது என்ற நோக்கம் அடிப்படையற்றது. ஏனெனில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதி போன்ற அவசியமற்ற இறக்குமதிகளுக்குச் செலவிடுவதில் அரசாங்கம் ஆர்வமாக உள்ளது.

பெரும்பாலான கிராமப்புற மக்கள் நெல், தேயிலை, இறப்பர், இலவங்கப்பட்டை, கறுவா போன்ற விவசாய நடவடிக்கைளை மேற்கொள்வதால் இரசாயனத் தடையானது கிராமப்புறப் பொருளாதாரத்தில் ஒரு அச்சுறுத்தும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஜயசூரிய (Jayasuriya, 2021) இதனை வெறும் வார்த்தைகளை அடித்தளமாகக் கொண்ட கொள்கை (Policy underpinned by hearsay) என அழைப்பதோடு இது 25% நெல் உற்பத்தி, 35% தேயிலை உற்பத்தியினது விளைச்சல்களில் சராசரியான சரிவினை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிடுகிறார். இரசாயன உரங்கள் இல்லாததொரு நிலையில் அதனை ஈடுகட்டச் சேதனப் பசளைகளை உற்பத்தி செய்யும் திறனையும் நாடு கொண்டிருக்கவில்லை (ibid). புதிய இரசாயனத் தடையுடன் உணவுப் பற்றாக்குறையும் ஏற்படலாம் என சிலர் அஞ்சுகின்றனர் (*Fertilizer shortage could lead to food shortage in Sri Lanka, warn farmers*, 2021). பதிலளிக்கத் தேவையில்லாத சனாதிபதி என்ற தீமையான விடயத்தினை இந்த நெருக்கடி பிரதிபலிக்கிறது. தவறான ஒருவரின் கைகளில் அதிகாரம் குவிக்கப்படும் போது கடுமையான சேதத்தினை அது ஏற்படுத்துகிறது. இது பொதுமக்களுக்குப் பதிலளிக்கத் தேவையில்லாத அரசாங்கமாக இலங்கை அரசாங்கம் மாறி வருவதனைத் தெளிவாகக் காட்டுகிறது.

அத்தோடு பொது விசாரணை மற்றும் விவாதங்களின்றி தன்னிச்சையான முடிவுகள் எவ்வாறு ஒரு நெறிமுறையாக சாதாரணமாக்கப்படுகின்றன என்பதும் வெளிப்படுத்துகிறது. பெருந்தொற்றினால் ஏற்பட்ட பொருளாதாரச் சிரமங்களுக்குப் பதில் நடவடிக்கையாக இலங்கையில் சேமநலன் ஆளுகையை நிர்வகிப்பதில் அரசாங்கத்தின் நடத்தையை பற்றி இனி நோக்கலாம்.

## *இலங்கை அரசாங்கமும் கொவிட்-19 சேமநல நடவடிக்கைகளும்: அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றது மற்றும் நிதிகள் எங்கே போகின்றன?*

மார்ச் 2020இல் இலங்கை அரசாங்கம் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கான பல சலுகைகளை அறிவித்தது. நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்த சனாதிபதி விசேட செயலணியானது பத்து சலுகைத் திட்டங்களை அடையாளப்படுத்தி அதற்குத் தகுதியானவர்களையும் தெரிவுசெய்தது. அதன்படி, 5,000 ரூபாய் கொடுப்பனவுக்காக வயது முதிர்ந்த பிரசைகள், விசேட தேவையுடையவர்கள், சிறுநீரக நோயாளிகள், சமுர்த்திப் பயனாளிகள், விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டத்திற்குப் பதிவுசெய்தவர்கள் போன்றோர் அடையாளப்படுத்தப்பட்டனர் (*Sri Lanka : Sri Lanka government grants more concessions to public affected by COVID-19 pandemic*, 2020). மேலும் பெருந்தொற்றினால் உருவாகிய பொருளாதாரச் சிரமங்களை எதிர்கொள்ளும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் மாதாந்தம் 5,000 ரூபாய் கொடுப்பனவு அறிமுகப்படுத்தப்பட்டது(ibid). இந்த நடவடிக்கைகள் பெருந்தொற்று முடியும்வரை தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் செயற்பாடுகளுக்காக இலங்கை சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து பல நன்கொடைகள் மற்றும் மானியங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொண்டது. இவற்றில் சிலவற்றினை பெயர் குறிப்பிடுவோமானால் செப்டம்பர் 2020இல் உலக வங்கி தொழில்வாய்ப்பினைப் பாதுகாத்தல் உள்ளிட்ட கொவிட்-19 நிவாரண செயற்பாடுகளுக்காக 184.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்காக ஒதுக்கியிருந்தது (*World Bank Supports Sri Lanka With $56 Million to Mitigate COVID-19 Impacts*, 2020). யூன் 2020இல் இலங்கை தேசத்தின் கொவிட்-19 நிவாரண செயற்பாடுகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை மானியமாக வழங்கியிருந்தது (*ADB Approves $3 Million Grant to Assist Sri Lanka's Response to COVID-19*, 2020). இதற்கு மேலதிகமாக மார்ச் 2020இல் சனாதிபதி கோட்டாபய

ராஜபக்ஷவினால் *இட்டுகம* (Itukama) என்ற இலங்கைக்கான கொவிட்-19 நிவாரண நிதியம் ஒன்றும் தாபிக்கப்பட்டது. இது மாதாந்தம் சராசரியாக 7 மில்லியன் பொதுமக்கள் நன்கொடையினை ஏப்ரல் 2021 வரைப் பெற்றுக்கொண்டது (*Sri Lanka : Remaining balance of 'ITUKAMA' COVID–19 Fund to be allocated for vaccination drive*, 2021). இந்த நிதியத்துக்கான பங்களிப்புக்கள் தன்னார்வத்தின் அடிப்படையில் காணப்பட்டதோடு இவற்றுக்கான நிதிகள் பெரும்பாலும் பொதுமக்கள், வெளிநாட்டவர்கள் மற்றும் சில உள்ளூர் நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்றன (ibid).

இந்த நடவடிக்கைகளானவை இலங்கை அரசு தொடர்பான சில முக்கிய விடயங்களை எடுத்துக்காட்டுகின்றன. அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வேலையின்மை வீதங்களுடன் ஒப்பிடுகையில் நிவாரண உதவியாக வழங்கப்பட்ட 5,000 ரூபாய் கொடுப்பனவு என்பது போதாததொரு தொகையாகும். நாடு எதிர்கொண்டு வரும் பேரினப் பொருளாதார ஸ்திரத்தன்மையின்மையைக் கருத்திற்கொண்டு, ஒன்றுமில்லாமல் இருப்பதனை விட ஏதாவது சிறிதேனும் கிடைப்பது சிறந்தது என ஒருவர் வாதிடலாம். எனினும் பேரினப் பொருளாதாரத் தோற்றம் இருண்டதாக இருக்கின்றதொரு நிலையில் மே 2021இல் 3.6 பில்லியன் செலவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான ஆயத்தங்களை அரசாங்கம் மேற்கொண்டது. அமைச்சர்களுக்கான சொகுசு வாகன இறக்குமதியானது அவசரகால நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் குறைந்தளவான வசதிகளை வழங்கும் ஒரு நடவடிக்கை அது எனவும் குறிப்பிட்டிருந்தது (*Preparations to import Luxury vehicles for MPs at a cost of over 3.6 billion rupees*, 2021). இலங்கை மத்திய வங்கி இந்த நகர்வு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றதொரு அறிவிப்பினை வெளியிட்டது (*Sri Lanka CB did not approve luxury SUV imports for MPs: Governor*, 2021). இதனைத்தொடர்ந்து பொதுமக்களின் பெரும் எதிர்ப்பிற்கு மத்தியில் அரசாங்கம் அத்தீர்மானத்தைக் கைவிட வேண்டியேற்பட்டது. ஜனதா விமுக்தி பெரமுனவின் (Janatha Vimukthi Peramuna) பாராளுமன்ற உறுப்பினரான அனுரகுமார திசாநாயக்க, சொகுசு வாகனங்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக இறக்குமதி செய்யும் நகர்வானது அரசாங்கத்தின் தற்போதைய நடத்தையை விமர்சிக்கும் பின்வரிசைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவினைப் பெறவே என தனது சந்தேகத்தினை வெளிப்படுத்தியிருந்தார் (*Sri Lanka says state luxury SUV imports for MPs halted following outcry*, 2021). ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் திசாநாயக்க பின்வருமாறு கூறியிருந்தார்:

> நானும் சில ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர்களும் 15, 000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான வாகனங்களை கொள்வனவு செய்தபோது இன்னும் சிலர் அதிகபட்ச தொகைக்கு வாகனங்களை கொள்வனவு செய்தார்கள். இந்தக் காலகட்டத்தில் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் வாகனங்கள் பற்றி பேச முடியுமா? பாராளுமன்ற உறுப்பினரின் காலத்தில் அவரது கடமைகளை ஆற்றுவதற்காக ஒரு வாகனத்தை வழங்குவது அவசியமானது என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். பி.சி.ஆர். சோதனைகள், தடுப்பூசிகள் போன்றவற்றிற்குப் பணம் இல்லாத நிலையில் அவசர சிகிச்சைக்கான படுக்கைகள் குறைவாகவும், இந்நாட்டு மக்கள் தாம் நோய்க்கிருமியின் தொற்றுக்கு ஆளாகிவிடுவோமோ என்று அஞ்சி இறக்கும் பயத்தில் இருக்கின்ற நிலையில் இதுவொரு மனிதாபிமானமற்ற மனநிலையைக் காட்டுகின்றது (ibid).

அடுத்ததாக ‘இட்டுகம: கொவிட்-19 சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தினது’ வகிபங்கு மிகவும் முக்கியமானது. இது வெற்று அரசொன்றிற்கான தெளிவானதொரு உதாரணமாகும்[4]. பொதுமக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் தலையீட்டின் அளவானது பிரச்சினைக்குரியதாகக் காணப்படுகின்றது. மேலே கூறப்பட்டவாறு நிதியத்துக்கான பணமானது பெரும்பாலும் பொதுமக்களிடமிருந்தே கிடைக்கப்பெற்றது. இந்த நூல் பூராகவும் அதிகாரத்திற்கு வருவதற்கு வாக்களித்த மக்களிற்கு அரசாங்கம் பதிலளிக்க விரும்பாத தன்மை வெளிப்படுத்தப்படுகிறது.

இதனை மனதில் வைத்துக்கொண்டு நிதியத்தின் பணமானது புத்திசாதுரியமான வகையில் பயன்படுத்தப்பட்டதா மற்றும் சேமநலன் திட்டங்களுக்காக எவ்வளவு செலவளிக்கப்பட்டது போன்ற முக்கிய கேள்விகள் இப்பொழுது எழுகின்றன. மார்ச் 2021இல் வெரிற்றே ஆய்வானது (Verité Research) நிவாரணப் பணிகளுக்கான இட்டுகம நிதியத்தின் நிதிகள் மற்றும் சமூக சேமநலன் நிகழ்ச்சித் திட்டத்துக்கான ஒதுக்கீடுகள் குறித்த தகவல்களை விசாரணை செய்து தகவல் அறிவதற்கான வேண்டுகோள் ஒன்றினை சனாதிபதி காரியாலயத்திற்கு முன்வைத்தது. செயலகத்தினால் நிதியத்தின் 6% (105 மில்லியன்) செலவுகளுக்குக் கணக்கினைக் காட்டக்கூடியதாக

4 வெற்று அரசு என்பது “ஒரு அரசாங்கத்திற்கும் அது வழங்கும் சேவைகளுக்கான நிதிக்கும் இடையிலான வித்தியாச அளவைக்” குறிக்க பயன்படுத்தப்படும் ஒரு உருவகச் சொல்லாகும் (Milward and Provan, 2000, p. 362). அரசாங்கங்கள் பொதுச் சேவைகளை வழங்க வெளியார் முகவர் நிறுவனங்களைப் பயன்படுத்தும் சூழல்களில் இந்தச் சொல் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. தற்போதைய சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் தான் மேற்கொள்ளவேண்டிய சில ஆரம்பிப்புகளுக்கு நிதியளிக்க பொதுமக்களைப் பயன்படுத்துகிறது. இதனால் சில முக்கிய செயல்பாடுகளை வெளியாருக்குக் கொடுத்துள்ளது. அவ்வாறாயின் இங்கு முக்கியமான கேள்வி என்னவென்றால், அரசின் பங்கு யாது?

இருந்தது. இவையும் சோதனைகள், தனிமைப்படுத்தல் வசதிகள் மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கே செலவு செய்யப்பட்டிருந்தன (*The government spent only 6% of the Itukama COVID-19 fund balance,* no date). மீதமுள்ள நிதியானது தடுப்பூசித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது (*Sri Lanka : Remaining balance of 'ITUKAMA' COVID–19 Fund to be allocated for vaccination drive,* 2021). பின்னர் மே 2021இல் சனாதிபதி ஊடகப்பிரிவினால் வெளியிட்ட அறிவித்தலின்படி, சமூக சேமநலனுக்கு எவ்விதமான ஒதுக்கீடுமின்றிய நிலையில் நிதியத்தின் 23% செலவுகளுக்கான கணக்குகள் முன்வைக்கப்பட்டிருந்தன (Thomas, 2021). சமூக சேமநல நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவுவதே நிதியம் ஆரம்பிப்பதற்கான நோக்கமாகக் காணப்பட்டாலும் அத்தகைய செயற்பாடுகளுக்கு நிதியத்திலிருந்து எவ்வித பணமும் செலவளிக்கப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது.

இறப்பு வீதத்தைக் குறைக்கவும் நாட்டின் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவும் தடுப்பூசிகள் அவசியமானவை. எனினும் பல சர்சைகளுக்குள்ளாகியிருக்கும் தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டம் பற்றி இந்த அத்தியாயம் கலந்துரையாடுவதனை தவிர்த்துள்ளது. எனினும் தடுப்பூசி நிகழ்ச்சித் திட்டத்தினைத்[5] தவறாகக் கையாளுவதானது நாட்டின் பொருளாதாரத்தில் நீண்டகாலத்திற்குக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தலாம். இது வாழ்வு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான பொறுப்புக்களை அரசாங்கம் சரிவர நிறைவு செய்யாமையினை எடுத்துக்காட்டுகிறது. பயணக்கட்டுப்பாடுகளைக் கருத்திற்கொள்ளாது ஆடைக் கைத்தொழிற்சாலை பணியாளர்களுக்குத் தடுப்பூசிகள் வழங்குமாறு கோரியபோது தடுப்பூசி இயக்கம் குறித்த நம்பிக்கை கேள்விக்குறியாகியது. ஏனெனில் செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று அவர்களது வேண்டுகோள் கவனத்திற் கொள்ளப்படவில்லை (Gunasekera, 2021; Glover, 2021). தடுப்பூசி ஒருபுறமிருக்க, வேகமாகப் பரவுகின்ற நோய்க்கிருமியினால் பாதுகாப்பாகத் தொழில் செய்கின்ற நிலைமைகளையும் இழந்து தொற்றுநோயினால் கடுமையாகப் பாதிப்பிற்குள்ளான குழுவாக அவர்கள் மாறியுள்ளனர் (Glover, 2021). சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் அவலநிலையானது பிறிதொரு தனி அத்தியாயத்தில் மேலும் ஆழமாகக் கலந்துரையாடப்படுகின்றது. இந்தப் பின்னணியில் பெர்னாண்டோ (2021)

5 அஸ்ட்ரா-செனிக்கா தடுப்பூசியின் இரண்டாவது ஊசி கிடைக்காமை, நாட்டின் முழு மக்கள் தொகைக்கும் தேவையான தடுப்பூசிகள் இல்லாமை, அங்கீகரிக்கப்பட்ட சில தடுப்பூசிகளின் செயல்த்திறன் மற்றும் பல்வேறு வருமான மட்டங்களைக் கொண்ட குழுக்களுக்குத் தடுப்பூசிகளை சமமாக விநியோகித்தல் போன்ற பல விசனங்கள் காணப்படுகின்றன.

குறிப்பிடுவதன்படி, பெருந்தொற்றைக் கையாளுவதில் "நான் இதனைச் சிறப்பாகச் செய்தேன்" என்ற அணுகுமுறையிலிருந்து விலகி "நாம் இதனை இணைந்து செய்வோம்" என்ற பொறுப்புத் தன்மை கொண்ட அணுகுமுறைக்கு மாறுவதற்கு சரியான தருணம் இலங்கைக்குக் கிடைத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மே 2021இல் இடம்பெற்ற பிறிதொரு மிக முக்கியமான விடயம் என்னவெனில், 625 மில்லியன் ரூபாய் பணத்தினை வெளிப்புற உடற்பயிற்சி நிலையத்துக்கு ஒதுக்கீடு செய்தமையானது பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்தின் பொறுப்பற்ற மற்றும் அக்கறையற்ற நடத்தைப் பாங்கினை வெளிப்படுத்துகிறது (Husain, 2021; 'Cabinet approves Rs 625 million to establish 500 outdoor fitness centers using containers', 2021). நாடு மோசமான மூன்றாவது அலையால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் சமூக ஊடகங்களில் அதிகரித்து வந்த பொதுமக்களின் விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் வகையில், நாமல் ராஜபக்ஷ தனது முகநூல் புத்தகத்தில் (Facebook) அரசாங்கம் பெருந்தொற்று நிலைமைக்கு முன்னுரிமை அளிக்கும் என்றும் வெளிப்புற உடற்பயிற்சி நிலையங்களுக்கான பூர்வாங்க வேலைகள் மட்டும் இப்பொழுது முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார் ('Cabinet approves Rs 625 million to establish 500 outdoor fitness centers using containers', 2021). கொவிட்-19 உடன் தொடர்பான நிவாரணப் பணிகளுக்கு இந்தப் பணம் நிதி அமைச்சுக்குத் தேவைப்பட்டால் அத்தகையதொரு அவசரகால நிலைக்காக தாம் அதனைக் கொடுக்கத் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (Husain, 2021).

## *சேமநல நிதிகளை முகாமை செய்தலும் நிர்வகித்தலும்*

சேமநலன்சார் நிதிகளை ஒதுக்கீடு செய்வதில் குறைவான அக்கறையை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது என்ற உண்மையினை கண்கூடாகக் காணக்கூடிய நிலையில், கொவிட்-19 தொடர்பான சேமநலப் பொறிமுறைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகளை அது எவ்வாறு வினைத்திறனாக முகாமை செய்கிறது என்ற கேள்வியும் எழவே செய்கிறது. நிதிகளை விநியோகித்தல் அல்லது பகிர்ந்தளித்தலை நிர்வகித்தல் என்பது இந்நூலின் பிறிதொரு அத்தியாயத்தில் மிக விரிவாகக் கலந்துரையாடப்படுகிறது.

டிசம்பர் 2020 ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கைக்கான டிரான்ஸ்பேரன்சி இன்ரநெஷனல் (Transparency International, Sri Lanka) நிறுவனமனது 5,000 ரூபாய் அத்தியாவசிய மாதாந்தக்

கொடுப்பனவு வவுனியாவில் 28 பேருக்கு நிராகிக்கப்பட்ட அனுபவங்களைக் கொண்டு சேமநல நிதிகளை நிர்வகித்தல் தொடர்பாகத் தனது குரலை வெளிக்காட்டியது (*Ensuring COVID-19 relief reaches Sri Lanka's people*, 2020). குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்த சிலருக்கு கொடுப்பனவுக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பங்கள் கொடுக்கப்படாததோடு கிராம நிர்வாகத்தினால் முறையான விளக்கமும் அளிக்கப்படவில்லை. கொவிட்-19 நிவாரண உதவிகளை வழங்குவதில் காணப்பட்ட நிர்வாகத் திறமையின்மைக்கு இதுவோர் உதாரணமாகும். உதவிகளை விநியோகிக்கும் பொறிமுறை முழுமையும் நிர்வாகத் திறமையின்மையிலிருந்து அரசியல் ஆதாயங்களுக்காகக் கையாளுதல் மற்றும் சில சந்தர்ப்பங்களில் களவாடுதல் போன்ற சர்ச்சைகள் போன்றவற்றால் கறைபடிந்துள்ளது (ibid).

மே 2020இல் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரான மகிந்த தேசப்பிரிய கொவிட்-19 நிவாரண நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்பாகத் தேர்தல் ஆணைக்குழு பெற்றுக்கொண்ட முறைப்பாடு ஒன்றினை வெளியிட்டிருந்தார் (*Remove politicians from Covid-19 relief programme*, 2020). அரசியல் சகாயத்தினை நல்குவதற்காக வாக்காளர் பதிவுப் பட்டியலில் மோசடிகளை மேற்கொள்ளுதல், இடம்பெறவுள்ள தேர்தல்களைக் கருத்திற்கொண்டு அரசியல் கட்சிகளைப் பிரபல்யமடையச் செய்ய சேமநலக் கொடுப்பனவுகளை வழங்குதல், அரசியல் விசுவாசம் காரணமாக தகுதியுள்ள ஆட்களின் சேமநலக் கொடுப்பனவைப் பறித்தல் போன்றன உள்ளிட்ட முறைகேடுகளை அக்கடிதம் சுட்டிக்காட்டியிருந்தது (ibid). கொடுப்பனவுகளைப் பறித்தல் தொடர்பாக பல அனுபவங்களை பொன்சேகா (2020) பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> ஒன்றுபட்ட சுயதொழில் தொழிலாளர்கள் சங்கத்தினது (United Self Employed Workers' union) தலைவரின் கருத்துப்படி, புறக்கோட்டையில் மாத்திரம் கிட்டத்தட்ட 50,000 வரையான சுயதொழில் மேற்கொள்கின்ற தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். எனினும் அவர்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு கொடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டார். ஒரு சிலரே ஏப்ரல் மாதக் கொடுப்பனவை மே மாதத்தில் பெற்றுக்கொண்டு மே மாதக் கொடுப்பனவிற்காகக் காத்திருக்கின்றனர்... ஹட்டன், வட்டவளை ஆகிய பிரதேசங்களிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் மே மாதக் கொடுப்பனவிற்காக சுமார் இரண்டு வாரங்களாக தமது உள்ளூ ராட்சி அரசாங்க நிறுவனங்களுக்குச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். பயனாளிகளுக்குக் கொடுப்பனவை விநியோகம் செய்வதற்கான பணத்தை அதிகாரிகள் அரசாங்கத்திடமிருந்து பெறவில்லையென அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 5,000 ரூபாய் அத்தியாவசியக் கொடுப்பனவை விநியோகிப்பதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் 100,000 ரூபாவை மாத்தறை மாவட்ட கிழக்கு கித்தலகம (Kithalagama) பிரதேசத்தைச் சேர்ந்த மோசடியான உத்தியோகத்தர் ஒருவர் களவாடியமை தொடர்பாகவும் பொன்சேகாவினது கட்டுரை சுட்டிக்காட்டுகிறது (ibid).

மேலும் நடுத்தர வருமானமுடைய பெண் ஒருவர், அரச உத்தியோத்தர் ஒருவருடனான முறைசாராக் கலந்துரையாடலின் போது நிர்வாகக் குறைபாட்டின் பிறிதொரு மிக முக்கியமான அம்சமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது[6]. ஜூன் 2021இல் மேலே குறிப்பிடப்பட்ட பெண் வெளிநாட்டிலிருந்து திரும்பி விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த தனது கணவருக்கான நடமாடும் அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்காக கிராம சேவையாளரை அணுகியுள்ளார். சகல ஆவண அலுவல்களும் முடிவடைந்த பின்னர் அத்தியாவசியக் கொடுப்பனவினைப் பெறவுள்ளவர்களின் பட்டியலில் அவரது பெயரையும் உள்ளடக்க வேண்டுமா எனக் கிராம சேவையாளர் அவரைக் கேட்டுள்ளார். கொடுப்பனவு விநியோகித்தலில் முறையான ஒருங்கிணைப்பு காணப்படாமையையும் சில பிரதேசங்களில் வாய் வார்த்தைகளை நம்பியே இத்தகைய கொடுப்பனவு விநியோகம் இடம்பெறுவதனையும் காணமுடிகிறது. கொடுப்பனவு தேவைப்பட்ட 28 கிராமவாசிகளுக்கு எவ்விதமான விளக்கமும் வழங்கப்படாமல் மறுக்கப்பட்டு சரியான ஒருங்கிணைப்பு பொறிமுறை இல்லாத நிலையில் தேவையில்லாத மற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

இந்த அத்தியாயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் தெளிவுபடுத்துவது எதனையெனில், சமூகத்தின் வேறுபட்ட வருமானங்களைக் கொண்ட குழுக்களை ஒரேவிதமாகப் பெருந்தொற்று பாதிக்கவில்லை என்பதையும் பெருந்தொற்றுத் தொடர்பான அரசாங்கத்தின் சேமநலன்சார் பதில் நடவடிக்கைகள் தொடர்பாக மக்கள் திருப்தியடையவில்லை என்பதனையுமாகும். பெரும் எண்ணிக்கையானவர்கள் முறைசாராத் துறையில் தொழில்புரிபவர்களாகக் காணப்பட்டமையினால் தொலைதூரத்திலிருந்து தொழில்செய்வதற்கு மாறியமையானது ஏற்கனவே சமூகத்தில் காணப்பட்ட அசமத்துவத்தினை மேலும் அதிகப்படுத்துவதாக அடையாளம் காணப்படுகின்றது. பொருத்தமான ஊழியச் சந்தைப் பாதுகாப்பு மற்றும் தொழில்

6 சட்டஞ்சார் தொழில் புரியும் ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 11 ஆம் திகதி ஜூன் 2021.

அற்றோர்களுக்கான காப்புறுதி போன்றன இல்லாததொரு நிலையில் தனது சனத்தொகையில் மிகவும் கீழ்மட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பை வழங்குவது தொடர்பான அரசின் வகிபங்கு மிகமுக்கியமானதாக மாற்றமடைந்தது. எனினும் இலங்கை அரசாங்கம் தனது விருப்பத்தின்படியே நிவாரணப் பொதிகளை வழங்குவதனைக் கையாண்டது.

இந்தப் பின்னணியில் நான்கு காரணங்களுக்காக கொவிட்-19 இனால் ஏற்பட்ட பொருளாதாரச் சிரமங்களைக் குறைப்பதில் இலங்கை அரசு தோல்வி கண்டிருந்தது. முதலாவது, அரசு ஒரு வெற்று அரசாக மாறி தான் ஆற்றவேண்டிய வகிபங்கினை தனியார் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆற்றுகின்ற நிலைமையினைச் சாதாரண விடயமாக கண்டுகொண்டமையினை அவதானிக்க முடிகிறது. அத்தோடு பெருந்தொற்றிலிருந்து விடுபடுவதற்குத் தமது சொந்த உத்திகளைப் பிரசைகள் பயன்படுத்த மறைமுகமான வகையில் பிரசைகளைத் தள்ளுவதனையும் காணலாம். இவ்வாறு மக்களைப் பாதுகாக்கின்ற பிரதான பொறுப்பிலிருந்து அரசு விலகிக்கொள்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இதனால், அரசு தனது சேமநலம் சார்ந்த மூலக்கூறுகளிலிருந்து விடுபடுவதோடு அவசரகால நிலைமையில் பிரசைகளே அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டிய நிலைக்கும் தள்ளியுள்ளது. அடுத்ததாக பெருந்தொற்றுச் சூழலில் நேரடியாக எவ்விதமான வகையிலும் பொறுப்பேற்காத கொள்கைகளை உருவாக்குவதற்கு அதிகளவு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது. இது பொருளாதாரப் பிரச்சினையைக்கொண்ட இலங்கை போன்ற நாடுகளுக்கு பொருத்தமற்றதாகும். மூன்றாவதாக, உதவியினை விநியோகத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றில் தவறான நிர்வகிப்பும் பொருத்தமற்ற தன்மையும் காணப்பட்டமையானது பெருந்தொற்றுக் காலத்தில் சமூகப் பாதுகாப்பு நன்மைகளைக் கொண்டிராத சமூகத்தினை மிகக்கடுமையாகப் பாதித்ததெனலாம். இறுதியாக அரசானது தாறுமாறான வகையில் மக்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் கொள்கைகளை தன்னிச்சையான முறையில் உருவாக்குகிறது போன்று தென்படுகிறது. முடிவாக இலங்கையின் சேமநல அரசானது எவ்வாறு மிக வினைத்திறனானது என்பதனை எடுத்துக்காட்டுவதற்கான ஒரு பரீட்சையாகப் பெருந்தொற்றுக் காணப்பட்டது என்பதோடு ஒரு தேசமாக நாம் எவ்வாறு தோல்வியடைந்தோம் என்பதனையும் எடுத்துக்காட்டியுள்ளது.

## உசாத்துணைகள்:

*ADB Approves $3 Million Grant to Assist Sri Lanka's Response to COVID-19* (2020) *Asian Development Bank*. Available at: https://www.adb.org/news/adb-approves-3-million-grant-assist-sri-lanka-s-response-covid-19 (Accessed: 30 June 2021).

*BBC News* (2020) 'Coronavirus: Greatest test since World War Two, says UN chief', 1 April. Available at: https://www.bbc.com/news/world-52114829 (Accessed: 27 June 2021).

'Cabinet approves Rs 625 million to establish 500 outdoor fitness centers using containers' (2021) *NewsWire*, 4 May. Available at: https://www.newswire.lk/2021/05/04/cabinet-approves-rs-625-million-to-establish-500-outdoor-fitness-centers-using-containers/ (Accessed: 1 July 2021).

Decerf, B., Ferreira, F.H.G., Mahler, D.G., Sterck, O. (2020) *Lives and Livelihoods: Estimates of the Global Mortality and Poverty Effects of the COVID-19 Pandemic*. 13549. Bonn: Institute of Labor Economics (IZA). Available at: https://www.econstor.eu/bitstream/10419/223991/1/dp13549.pdf.

*Ensuring COVID-19 relief reaches Sri Lanka's people* (2020) *Transparency.org*. Available at: https://www.transparency.org/en/blog/ensuring-covid-19-relief-reaches-sri-lankas-people (Accessed: 1 July 2021).

Fernando (2021) 'Covid - Let's Migrate From "I did It Best" To "Let's Do It Together"', *Colombo Telegraph*, 7 May. Available at: https://www.colombotelegraph.com/index.php/covid-lets-migrate-from-i-did-it-best-to-lets-do-it-together/ (Accessed: 1 July 2021).

'Fertiliser ban could have disasterous outcome' (2021), 10 June. Available at: http://island.lk/fertiliser-ban-could-have-disasterous-outcome/ (Accessed: 25 July 2021).

Fonseka, P. (2020) *Swindlers deal to deprive Rs. 5000 allowance*, *Daily Mirror*. Available at: https://www.dailymirror.lk/recomended-news/Swindlers-deal-to-deprive-Rs-5000-allowance/277-190489 (Accessed: 1 July 2021).

Glover, S. (2021) *Sri Lankan garment workers 'hit by third wave'*, *Ecotextile News*. Available at: https://www.ecotextile.com/2021062427983/

materials-production-news/sri-lankan-garment-workers-hit-by-third-wave.html (Accessed: 1 July 2021).

Gunasekera, T. (2021) *Patriot, Bared*, *Colombo Telegraph*. Available at: https://www.colombotelegraph.com/index.php/patriot-bared/ (Accessed: 30 June 2021).

Husain, J. (2021) *Namal Says Project To Establish 500 Outdoor Gyms Only After Covid-19 Third-Wave Ends*, *Daily Mirror*. Available at: https://www.magzter.com/stories/Newspaper/Daily-Mirror-Sri-Lanka/Namal-Says-Project-To-Establish-500-Outdoor-Gyms-Only-After-Covid-19-Third-Wave-Ends (Accessed: 1 July 2021).

Jayamanne, D. (2020) *Taking Stock of Growing 'Fish-phobia'*, *CeylonToday*. Available at: https://ceylontoday.lk/news/taking-stock-of-growing-fish-phobia (Accessed: 1 July 2021).

Jayasinghe, C. (2020) *Sri Lanka needs to ramp up daily PCR testing to 40-50,000 a day: Dr Rannan-Eliya*, *EconomyNext*. Available at: https://economynext.com/sri-lanka-needs-to-ramp-up-daily-pcr-testing-to-40-50000-a-day-dr-rannan-eliya-75755 (Accessed: 30 June 2021).

Jayasuriya, L. (2000) *Welfarism and Politics in Sri Lanka: Experience of a Third World Welfare State*. The University of Western Australia. Available at: https://research-repository.uwa.edu.au/en/publications/welfarism-and-politics-in-sri-lanka-experience-of-a-third-world-w (Accessed: 1 July 2021).

Jayasuriya, L. (2004) 'The Colonial Lineages of the Welfare State', in Kelegama, S. (ed.) *Economic Policy in Sri Lanka: Issues and Debates*. First edition. Thousand Oaks, California: SAGE Publications Pvt. Ltd, pp. 403–425.

Jayasuriya, R. (2021) 'The coming full-blown crisis in agricultural sector courtesy of a shortsighted fertilizer ban', *LankaWeb*, 16 June. Available at: https://www.lankaweb.com/news/items/2021/06/16/the-coming-full-blown-crisis-in-agricultural-sector-courtesy-of-a-shortsighted-fertilizer-ban/ (Accessed: 1 July 2021).

Jayawardena, P. (2020) 'talkingeconomics - COVID-19 and Sri Lanka's Labour Market Gaps: Permanent Protection for Temporary Employees', *Institute of Policy Studies*, 9 September. Available

at: https://www.ips.lk/talkingeconomics/2020/09/09/covid-19-and-sri-lankas-labour-market-gaps-permanent-protection-for-temporary-employees/ (Accessed: 29 June 2021).

Milward, H. B. and Provan, K. G. (2000) 'Governing the Hollow State', *Journal of Public Administration Research and Theory: J-PART*, 10(2), pp. 359–379.

*Most Sri Lanka workers without formal protection amid Covid-19 shock: IPS study* (2020) *EconomyNext*. Available at: https://economynext.com/most-sri-lanka-workers-without-formal-protection-amid-covid-19-shock-ips-study-76369 (Accessed: 29 June 2021).

*Fertilizer shortage could lead to food shortage in Sri Lanka, warn farmers* (2021). *Newsfirst Sri Lanka*. Available at: https://www.youtube.com/watch?v=GmjFkbQfFv8 (Accessed: 1 July 2021).

Perera, M. M. (2021) *Colombo, Express Pearl disaster worries Catholics and civil society*, *AsiaNews*. Available at: http://www.asianews.it/news-en/Colombo,-Express-Pearl-disaster-worries-Catholics-and-civil-society-53291.html (Accessed: 1 July 2021).

*Preprations to import Luxury vehicles for MPs at a cost of over 3.6 billion rupees* (2021) *Sri Lanka News - Newsfirst*. Available at: https://www.newsfirst.lk/2021/05/24/preprations-to-import-luxury-vehicles-for-mps-at-a-cost-of-over-3-6-billion-rupees/ (Accessed: 1 July 2021).

Ranaraja, M. (2020) 'Notes from Colombo: Sri Lanka Weathers the Covid-19 Storm', *The Asia Foundation*, 8 July. Available at: https://asiafoundation.org/2020/07/08/notes-from-colombo-sri-lanka-weathers-the-covid-19-storm/ (Accessed: 27 June 2021).

*Recent Economic Developments: Highlights of 2020 and Prospects for 2021* (2020). Colombo: Central Bank of Sri Lanka. Available at: https://www.cbsl.gov.lk/en/publications/economic-and-financial-reports/recent-economic-developments/recent-economic-developments-2020 (Accessed: 29 June 2021).

*Remove politicians from Covid-19 relief programme* (2020) *anka Mirror*. Available at: https://srilankamirror.com/news/18247-remove-politicians-from-covid-19-relief-programme (Accessed: 1 July 2021).

Sirilal, R. and Illmer, A. (2021) 'X-Press Pearl: The "toxic ship" that caused an environmental disaster', *BBC News*, 10 June. Available at: https://www.bbc.com/news/world-asia-57395693 (Accessed: 1 July 2021).

'Socio-Economic Index in the face of COVID-19' (2021) *Centre for Policy Alternatives*, 30 June. Available at: https://www.cpalanka.org/socio-economic-index-in-the-face-of-covid-19/ (Accessed: 30 June 2021).

*Sri Lanka - Ban on agrochemicals* (2021). Available at: https://www.hortibiz.com/news/?tx_news_pi1%5Bnews%5D=41137&cHash=dd059427406ea8fe24400acd2ef06b52 (Accessed: 25 July 2021).

*Sri Lanka CB did not approve luxury SUV imports for MPs: Governor* (2021) *EconomyNext*. Available at: https://economynext.com/sri-lanka-cb-did-not-approve-luxury-suv-imports-for-mps-governor-82962 (Accessed: 1 July 2021).

*Sri Lanka Development Update: Economic and Poverty Impact of COVID-19* (2021). Washington, DC: The World Bank Group. Available at: https://thedocs.worldbank.org/en/doc/15b8de0edd4f39cc7a82b7aff8430576-0310062021/original/SriLanka-DevUpd-Apr9.pdf.

*Sri Lanka farmers, local bodies to be taught produce organic fertilizer after import ban* (2021) *EconomyNext*. Available at: https://economynext.com/sri-lanka-farmers-local-bodies-to-be-taught-produce-organic-fertilizer-after-import-ban-82690 (Accessed: 1 July 2021).

*Sri Lanka : Remaining balance of 'ITUKAMA' COVID–19 Fund to be allocated for vaccination drive* (2021a) *Colombopage*. Available at: http://www.colombopage.com/archive_21A/May10_1620667307CH.php (Accessed: 30 June 2021).

*Sri Lanka : Remaining balance of 'ITUKAMA' COVID–19 Fund to be allocated for vaccination drive* (2021b) *ColomboPage*. Available at: http://www.colombopage.com/archive_21A/May10_1620667307CH.php (Accessed: 1 July 2021).

*Sri Lanka says state luxury SUV imports for MPs halted following outcry* (2021) *EconomyNext*. Available at: https://economynext.com/

sri-lanka-says-state-luxury-suv-imports-for-mps-halted-following-outcry-82413 (Accessed: 1 July 2021).

*Sri Lanka : Sri Lanka government grants more concessions to public affected by COVID-19 pandemic* (2020) *Colombo Page*. Available at: http://www.colombopage.com/archive_20A/Mar31_1585667258CH.php (Accessed: 1 July 2021).

*Sri Lanka: State of the Economy 2020 | Institute of policy studies Sri Lanka* (2020). Available at: https://www.ips.lk/sri-lanka-state-of-the-economy-2020-2/ (Accessed: 29 June 2021).

*Sri Lanka : The government decides to buy all the fish harvest* (2020) *Colombo Page*. Available at: http://www.colombopage.com/archive_20B/Oct28_1603897849CH.php (Accessed: 1 July 2021).

*The Global Economic Outlook During the COVID-19 Pandemic: A Changed World* (2020) *World Bank*. Available at: https://www.worldbank.org/en/news/feature/2020/06/08/the-global-economic-outlook-during-the-covid-19-pandemic-a-changed-world (Accessed: 28 June 2021).

*The Global Economic Prospects* (2021). Washington, DC: The World Bank Group. Available at: https://openknowledge.worldbank.org/bitstream/handle/10986/35647/9781464816659.pdf (Accessed: 28 June 2021).

*The government spent only 6% of the Itukama COVID-19 fund balance* (no date) *Publicfinance.lk*. Available at: https://publicfinance.lk/en/topics/The-government-spent-only-6-of-the-Itukama-COVID-19-fund-balance-1620900512 (Accessed: 1 July 2021).

Thomas, K. (2021) *What Happened To The Itukama Fund?* Available at: https://roar.media/english/life/current-affairs/what-happened-to-the-itukama-fund (Accessed: 1 July 2021).

Venugopal, R. (2015) 'Neoliberalism as concept', *Economy and Society*, 44(2), pp. 165–187. doi: 10.1080/03085147.2015.1013356.

Waliwitiya, R. (2021) *Sri Lanka fertilizer ban haphazard, modern tech, risk management the answer: researcher*, *EconomyNext*. Available at: https://economynext.com/sri-lanka-fertilizer-ban-haphazard-modern-tech-risk-management-the-answer-researcher-81643 (Accessed: 25 July 2021).

Weerasekera, H. (2020) ‘talkingeconomics - Building Back Better: Reviving Sri Lanka’s Economy Beyond COVID-19’, *Institute of Policy Studies*, 19 October. Available at: https://www.ips.lk/talkingeconomics/2020/10/19/building-back-better-reviving-sri-lankas-economy-beyond-covid-19/ (Accessed: 29 June 2021).

*World Bank Supports Sri Lanka With $56 Million to Mitigate COVID-19 Impacts* (2020) *World Bank*. Available at: https://www.worldbank.org/en/news/press-release/2020/09/11/world-bank-supports-sri-lanka-with-usd56-million-mitigate-covid-19-impacts (Accessed: 30 June 2021).

Yeyati, E. L. and Filippini, F. (2021) *Social and economic impact of COVID-19*. 158. Washington, D.C.: Brookings Institution. Available at: https://www.brookings.edu/wp-content/uploads/2021/06/Social-and-economic-impact-COVID.pdf.

# 5

# இனத்துவ-மையவாத பெருந்தொற்று ஆளுகை: இலங்கையின் கொவிட் பதில் நடவடிக்கைகளில் முஸ்லிம் சமூகம்

*சகினா மொய்னுதீன்*

## அறிமுகம்

"தொற்றுநோய்களானவை சகலருக்கும் எதிரான யுத்தமாக, மருத்துவ ரீதியாகத் திகிலூட்டுகின்ற அனுபவத்தினை ஏற்படுத்துகின்றன" (Strong, 1990, p. 258). பலருக்கும் தெரிந்திருக்காத 'தொற்று நோய் உளவியல்' என்ற சொல்லாடலானது பொது ஒழுங்கொன்றிற்கு இயல்பாக அல்லது உடனடியாக ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் குறித்து விபரிக்கிறது. இதனை இலங்கையின் பெருந்தொற்றுப் பின்னணியில் அவதானிக்க முடிகிறது. அதாவது பெருந்தொற்றினை ஆளுகை செய்தலில் அரசு கடைப்பிடிக்கும் இனத்துவ- மையவாத[1] தன்மையினை (Balasundaram, 2016) குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினை நோக்கிய அதிகபடியான கண்காணிப்பு, களங்கப்படுத்துதல் மற்றும் பாரபட்சம் என்ற வடிவங்களினூடாகத் தெளிவாகக் காணமுடிகிறது. "பகுத்தறிவுக்குப் புறம்பான நிலை, அச்சம், சந்தேகம் போன்றன வழக்கமாகப் பெருந்தொற்றுடன் இணைந்திருக்கின்ற நிலையில், தொற்றுநோய்க்குள்ளானவர்களும் தொற்றுநோயினைக் காவுபவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களும் பெருந்தொற்றைச் சாக்காக வைத்துக்கொண்டு களங்கப்படுத்தப்படுகிறார்கள். இது வேண்டுமென்றே

1 இனத்துவச் சார்பு ஆட்சி (Ethnocracy) என்பது இனத்துவக் கணிப்புகளின் (Ethnic calculations) அடிப்படையில் நடத்தப்படும் ஆட்சி முறையைக் குறிக்கிறது. இது தேர்தல்களிலும் கொள்கை உருவாக்கத்திலும் அல்லது அவசரகால நிலைமைகளைக் கையாளும் போதும் இடம்பெறலாம்.

தவிர்த்தல், தனிமைப்படுத்தல், துஷ்பிரயோகத்திற்குள்ளாகுதல் போன்றவற்றுடன் ஆரம்பிக்கின்றது... அதிருப்தியானவர்களின் தனிப்பட்ட ரீதியிலான பயம் ஒரு சந்தர்ப்பத்தில் கூட்டுத்தன்மை பொருந்திய தொடர்ச்சியான துன்புறுத்தலுக்கு வழிசமைக்கிறது" (Ibid, p. 253). பெருந்தொற்றுக் காலத்தில், இஸ்லாமிய நம்பிக்கையைக் கொண்டவர்கள் தொற்றுக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில் அவர்களைக் கண்டுபிடித்தல், இறந்த உடல்களை அகற்றுதல் உள்ளிட்ட அனைத்திலும் 'இரண்டாம் தரம்' என்பது தெளிவாகப் புலப்பட்டது. இது நெருக்கடி நிலையை நிருவகிப்பதில் அரசாங்கத்தின் இயலாமை குறித்த மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப உதவியது. அத்தோடு அற்ப அரசியல் ஆதாயங்களுக்காக முஸ்லிம் சமூகத்திற்கெதிராக நிலவும் பாரபட்சங்களை வலுப்படுத்தவும் தீவிரப்படுத்தவும் உதவியது. இனத்துவ-மையவாத மற்றும் சனநாயகத்திற்கெதிரான ஒரு ஆளுகையினை எவ்விதமான பாதகமான விளைவுகளையும் எதிர்கொள்ளாமல் மேற்கொள்ளவதற்கான ஒரு சுமுகமான பின்னணியைப் பெருந்தொற்று இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கியிருந்தது.

இந்த அத்தியாயமானது அரசாங்கத்தின் பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகளானவை சமூகத்தில் ஏற்கனவேயிருந்த அசமத்துவத்தினை உயிர்த்தெழச் செய்து, நாட்டின் இனக்குழுக்களிடையே ஆழமான பிளவுபடுத்தலை எவ்வாறு ஊக்குவித்தன என்பது தொடர்பான முக்கிய பார்வைகளின் சுருக்கத்தினை வழங்குகிறது. இவ்வத்தியாயமானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் "சோஷல் இன்டிகேட்டர்" என்ற கணிப்பீட்டு ஆய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட தேசியமட்டக் கருத்துக் கணிப்பு, கள ஆய்வு, பண்புசார் விடயப் பகுப்பாய்வு என்பவற்றினூடாகப் பெற்றுக் கொண்ட தரவுகளின் அடிப்படையில் வடிவமைக்கப்படுகிறது.

## பெருந்தொற்றும் பொதுமக்களின் உள இயல்பு நிலையும்

சனாதிபதியும் அவரது சகாக்களும் பல சந்தர்ப்பங்களில் ஒரு யுத்தத்திற்கான போராட்டம் போன்று இந்தச் சுகாதார நெருக்கடியினைக் கையாளமுடியும் என தமது நம்பிக்கையினையும் உறுதியினையும் வெளிப்படுத்தியிருந்தனர். முன்னணித் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்று ஒளிபரப்பிய 'இலங்கையில் கொவிட்-19 நெருக்கடி' பற்றிய நேர்காணல் ஒன்றில் பங்குபற்றிய இலங்கை இராணுவத் தளபதியான ஜெனரல் ஷவேந்திர சில்வா (இவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் தலைவர் மற்றும் கொவிட்-19 தொற்றுநோயைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைவரும் ஆவார்) முப்படைகளின்

வலிமையையும் அது குறித்து சனாதிபதி கொண்டுள்ள நம்பிக்கையையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதோடு 2009இல் பயங்கரவாதம் 'தோற்கடிக்கப்பட்டது' போன்று கொவிட்-19 நோய்ப்பரவலையும் 'வெற்றிகரமாகக்' கட்டுப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டிருந்தார் (*Full-Video of Army Commander speaks to Indeewari Amuwatte on battle against COVID-19 @HydePark*, 2020). இராணுவ ஆளணியினைக் கொண்டு பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்த முயன்ற அரசாங்கத்தினது நிலைப்பாடானது நோய்க்கிருமி என்பது தோற்கடிக்கப்பட வேண்டிய எதிரி என்ற எண்ணத்தினை உருவாக்கியது. இதனை அடைவதற்காகப் பயன்படுத்தப்பட்ட உத்தியாக நன்நடத்தை என்ற விடயம் காணப்படுகிறது. அரசின் உத்தரவுகளை, உதாரணமாக கொவிட்-19 கட்டுப்பாடுகளை மீறுதல் அல்லது அரசாங்கத்தினைக் கேள்விகேட்டல் போன்றவற்றுக்காக ஆட்கள் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டனர் (*Sri Lanka investigates troops over 'humiliation' of Muslims*, 2021). பொதுச்சுகாதார நெருக்கடியாக நிலவும் பெருந்தொற்றினை இராணுவத்தன்மை கொண்ட தேசியப் பாதுகாப்புப் பிரச்சினையாக வலியுறுத்துவதானது தேவையற்ற அதிகாரச் சுரண்டலுக்கு வழிவகுத்தது. பெருந்தொற்றுக்கான பதில் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது வைத்தியக்குழாத்தினரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டல் போன்றவற்றினூடாகச் சிவிலியன்கள் தலைமையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. கொவிட் பற்றிய தரவுகளின் அடிப்படையில் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது 'கீழ்ப்படிவுக்கான' அழைப்பு மக்களுக்கு விடுக்கப்பட்டது. அத்தோடு பெருந்தொற்றினைச் சகல சமூகங்களும் ஒன்றாக இணைந்து எதிர்கொள்ளமல் அதற்குப் பதிலாக 'தேசபக்தி அல்லது நாட்டுப்பற்று' என்பதற்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பெருந்தொற்றானது சமூக ஒற்றுமையினையும் பிறிதொருவர் மீதான இரக்கத்தினையும் வலுப்படுத்தக்கூடிய ஒன்றாகக் காணப்பட்டாலும் அது பலவிதமான சமூகப் பிளவுகளையும் ஏற்படுத்தலாம். சில குழுக்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவதோடு, அவர்கள் நியாயமற்ற பழிவாங்கல்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். இது சமூகத்தினுள்ளே சமூக ஒழுங்கின்மை பற்றிய உணர்வினை ஏற்படுத்துகிறது (Reicher and Stott, 2020). இலங்கையில் அவசரகால நிலைக்குப் பதிலளிக்கின்றபோது அவசரம் என்ற பெயரில் பரந்த கண்காணிப்பு மற்றும் அச்சுறுத்தல் ஊடாக சிவில் சுதந்திரங்கள், உரிமைகள் போன்றன நசுக்கப்பட்டன. சனநாயகக் கூட்டுப்பொறுப்பு, வெளிப்படைத்தன்மை ஆகியவற்றுக்கான செயல்முறைகள், பொறிமுறைகள் போன்றன அவசரகால நிலைக்கு முகங்கொடுத்தல் என்ற பெயரில் மீறப்பட்டன. உயிருக்கு

அச்சுறுத்தலான நிலையொன்றில் வலுவான தலைவரொருவரின் கீழ் அணிதிரளவேண்டிய தேவை வலியுறுத்தப்பட்டது. மேற்கூறிய மீறல்கள் சனநாயகத்திற்கு எதிரான ஆளுகையாகக் காணப்பட்டாலும் பெருந்தொற்றினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதலுக்காகவே இவை மேற்கொள்ளப்பட்டன என நியாயப்படுத்தப்பட்டன. இது நோய்க்கிருமிகளால் பாதிக்கப்பட்டவர்களைப் பரிவுடன் அணுகாமல் ஒரு தற்காப்பு நோக்கிய உள இயல்பு நிலையினை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. இதுவும்கூட சமரசம் இல்லாத இனத்துவம் சார்ந்த தேர்தல் கணிப்புகளால் மேலும் ஊட்டமளிக்கப்பட்டது. புதிய அரசியல் சக்தியினால் சமூகத்தில் அதிகரித்துக் காணப்பட்ட அச்சமும் கவலையும் சாதகமாகப் பயன்படுத்தப்பட்டன. நிறுவனமயப்படுத்தப்பட்ட ஓரங்கட்டலுக்குத் தேவையான அரசியல் ஆதரவினைத் திரட்ட ஊடகங்கள் உதவின. நோய்க்கிருமியைப் பரப்புகின்ற முக்கிய குற்றவாளிகளாக முஸ்லிம் சமூகத்தை இனங்காட்டவும் அவர்களைக் களங்கப்படுத்தவும் அவர்களது உரிமைகளைக் கட்டுப்படுத்தவும் அரசாங்கத்தினால் ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன.

கொவிட்-19 இனால் இறந்த இஸ்லாமிய சமூகத்தினரின் உடல்களைப் புதைப்பதற்கு எதிரான தேசியவாதக் குரலானது மோசமான சுலோகமாகிய ‘ஒரு சட்டம்-ஒரு நாடு’ என்பதனை மீண்டும் புதுப்பிப்பதற்கான சரியான தருணத்தை வழங்கியிருந்தது. முஸ்லிம்கள் பிரச்சினைகளை உருவாக்குபவர்கள் எனச் சித்திரிக்கப்பட்டனர். பொது இழிவுபடுத்தல் அல்லது களங்கப்படுத்தலுக்கான பொருளாகவும் பாரபட்சத்துக்கான இலக்காகவும் அவர்கள் ஆக்கப்பட்டனர். இந்த அபிப்பிராயமானது ஏப்ரல் 2019ஆம் ஆண்டு பயங்கரவாதத் தாக்குதலிலிருந்து ஒரு புது உத்வேகத்துடன் தொடர்ந்த ஒன்றாகும். பெருந்தொற்றுக்கு எதிரான யுத்தத்தில் முஸ்லிம்களின் நம்பிக்கை, பெறுமதிகள், கலாசாரம் என்பன ஈடு இணையில்லாச் சேதத்தினை எதிர்கொண்டன. போருக்குப் பின்னரான இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான சிந்தனைகள் அல்லது உணர்வுகள் எவ்வாறு வேகமாக உருவாகின என்ற விடயத்தினை சுருக்கமாக நோக்குவதனூடாக, இன்றைய கொவிட்-19 யதார்த்த வாழ்வில் அந்த உணர்வுகளின் வெளிப்பாடுகள் இடம்பெறுகின்ற கட்டமைப்பினை இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

## யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் இனத்துவ – மத ஆளுகையின் பரிமாணங்கள்

2009இல் ஆயுத ரீதியான போராட்டங்கள் முடிவுக்கு வந்தமையானது வெற்றிக்களிப்பு/ வெற்றியுணர்வு என்பதன் எழுச்சியையும் (Kumarasinghe, 2016) சிங்கள-பௌத்த அடையாளத்தைப் பாதுகாப்பதற்கான தேவையொன்றின் அவசியத்தையும் வலியுறுத்தியது (*New party aims to safeguard Sinhala identity*, 2016). சிங்கள-பௌத்த சமூகத்தினரிடையே அதிகரித்து வரும் பொருளாதார அழுத்தங்கள், பொருளாதார அனுகூலங்களில் முஸ்லிம்களின் ஏகபோகத்தன்மை போன்றனவற்றால் எழுச்சியடைந்த ஏமாற்றங்களானது தேசியவாத அரசியல் சக்திகளால் தாம் இழந்தவற்றினை மீட்டெடுப்பதற்கான கோரிக்கையினை முன்வைக்கவும் வன்முறைகளைத் தொடர்வதற்கான சூழ்நிலையையும் ஏற்படுத்தின (Zuhair, 2016). தேசியவாத அரசியல் கட்சிகளான ஜாதிக ஹெல உருமய (Jathika Hela Urumaya), தீவிரத்தன்மை பொருந்திய இனத்துவ-மதக் குழுக்களான பொது பல சேனா (Bodu Bala Sena), சிங்கள ராவய (Sinhala Ravaya), இராவண பலய (Ravana Balaya) போன்றவை இனத்துவம் சார்ந்த தேசியவாதக் கலந்துரையாடல்கள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாகுவதற்கான நிலைமைகளைத் தூண்டின. இதற்கு அரசின் ஆதரவும் (நேரடியாகவும் மறைமுகமாகவும்) காணப்பட்டது. அதிகரித்த தேசியவாதக் கருத்துப் போக்குகள், பெரும்பான்மைச் சமூகத்தினரால் உணரப்பட்ட பாதுகாப்பின்மைகள் போன்றன உறுதிப்படுத்தப்பட்டன (*Sri Lanka: Preliminary findings of Country Visit to Sri Lanka by the Special Rapporteur on freedom of religion or belief*, 2019).

சனநாயக அரசியலுக்கான செழிப்பான வரலாறு, சமய சுதந்திரத்தினைப் பாதுகாக்கக் கூடிய வளமான சட்ட விதிகளின் கட்டமைப்புகள் போன்றன காணப்பட்டாலும் இனவாதம், வெறித்தன்மையான வன்முறை, இஸ்லாமிய எதிர்ப்பு, இனவாத அவதூறுகள், வெறுப்புப் பேச்சு ஆகியன யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் முஸ்லிம்கள் மீது தொடரப்பட்டன. இது பல சந்தர்ப்பங்களில் சமூகங்களுக்கிடையே பாரியளவான வன்முறைகளை வெளிக்கிளப்பியது. 2015இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கமானது அடிப்படைச் சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றினை வலுப்படுத்துவதாக உறுதியளித்திருந்தது. எனினும் சிறுபான்மைச் சமூகங்களுக்கெதிராக வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றபோது அதனால் அவற்றை நிறுத்த முடியவில்லை. அத்தோடு நாட்டில் ஏற்பட்ட இனத்துவ–மத நல்லிணக்கமின்மைக்குத் துணைபுரிந்தவர்களுக்கு எதிரான சட்ட

நடவடிக்கைககளை எடுப்பதற்கும் அவ்வரசாங்கம் தவறியிருந்தது. இது எவ்விதமான அச்சுறுத்தலுமின்றி தேசியவாத மற்றும் தீவிரசக்திகள் நாட்டில் உலாவுவதற்கும் பெரும்பான்மை-சிறுபான்மையினச் சமூகங்களிற்கிடையே பகைமையுணர்வை அதிகரிக்கவும் வழிசமைத்தது (*President pardons Gnanasara Thero, 2019; Mayberry*, 2019).

நாட்டின் பொருளாதாரத்தின் மீது முஸ்லிம்கள் கொண்டுள்ள ஆதிக்கம், வேகமான சனத்தொகை அதிகரிப்பினூடாக இலங்கையின் மக்கள் தொகையை மாற்றியமைத்தல், அதற்காகப் பெரும்பான்மைச் சமூகத்தின் இனப்பெருக்கத்தினைப் பாதிக்கக் கூடிய வகையில் உணவு, உடை, ஏனைய பொருட்களில் ஆபத்தான மூலக்கூறுகளைச் சேர்ப்பதன் மூலம் சிங்கள பௌத்தர்களை மாசுபடுத்தி நாசப்படுத்துதல், முஸ்லிம் நிபுணர்களால் மலட்டுத்தன்மையை ஏற்படுத்துதல் போன்றன முஸ்லிம் சமூகத்திற்கெதிரான வன்முறையினைத் தூண்டிய குற்றச்சாட்டுக்களில் சிலவாகும். ஏப்ரல் 2019இல் இடம்பெற்ற வெறியாட்டமான ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலில் 260இற்கும் மேற்பட்ட கிறிஸ்தவ வழிபாட்டாளர்கள் கொல்லப்பட்டமையும் பலரை அது காயப்படுத்தியமையும் முஸ்லிம் சமூகத்திற்கெதிராகக் காணப்பட்ட சீற்றத்தினை மேலும் அதிகரித்தது. அத்தோடு பெரும்பான்மைச் சமூகத்திடமிருந்து மட்டுமல்லாது ஏனைய சிறுபான்மைச் (சிங்கள கத்தோலிக்கர்கள்) சமூகத்தினரிடமிருந்தும் முஸ்லிம் சமூகத்தினர் அந்நியப்படுத்தப்பட்டனர்.

எதிர்காலம், செழுமை, மகிமை என்ற ஆணைக்கான முன்மொழிவுடன் சிங்கள பௌத்தத் தேசியவாத அடிப்படையில் பிரச்சாரத்தினை முன்னெடுத்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (Sri Lanka Podujana Peramuna) கட்சியானது சனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் மகத்தான வெற்றியைப் பெற்றுக்கொண்டது. குறிப்பாக பாராளுமன்றத் தேர்தலில் தற்போதைய சனாதிபதிக்குச் சார்பாக அவரது பிரதிநிதிகளுக்குப் பெரும்பான்மையினத்தவர் ஆதரவாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (*Srinivasan, 2019; Sri Lanka election: Rajapaksa brothers win 'super- majority'*, 2020). இந்தத் தேர்தல் வெற்றியானது முன்னொருபோதும் இல்லாதவாறு சிங்கள இனத்துவ பெரும்பான்மையினரால் ஆதரவளிக்கப்பட்டதும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை முழுமையாக நிராகரித்தமையும் ஆழமான பிளவுபட்ட சமூகமொன்றின் இருத்தலையும் வெளிக்காட்டுகிறது (Thiruvarangan, 2020). எல்லாவற்றையும் விட தேசியப் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கக் கூடிய ஒரு வலுவான மேலாதிக்கம் கொண்ட தலைவர் ஒருவரின் தேவையினைத் திறம்பட

சித்திரிக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவானது ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலைப் பயன்படுத்தியது (*Gotabaya named as SLPP's presidential candidate*, 2019).

பெருந்தொற்று உச்சகட்டத்திலிருந்த போது பாராளுமன்றத்தினைக் கலைத்தமை, பாராளுமன்ற மேற்பார்வை மற்றும் கூட்டுப்பொறுப்பு இல்லாமல் ஒரு தொகையான விசேட செயலணிகளை உருவாக்கியமை போன்றன (ஆளுகையின் சனநாயக வடிவங்கள் குறித்துப் பெரிதுபடுத்தாமல்) சனநாயகத்திற்கெதிரான உத்வேகத்தினைத் தீவிரப்படுத்தியிருந்தன. கொவிட்-19 இனது தாக்கத்தினைக் குறைப்பதற்கான செயன்முறைகளை முன்னெடுத்தல், வறுமை ஒழிப்பிற்கான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல், வாழ்வாதார அபிவிருத்திகளுக்கு ஆதரவளித்தல், பொருளாதார மறுசீரமைத்தலினை முன்னெடுத்தல், தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களுக்கு இராணுவத் தலைமைத்துவத்தின் கீழான செயலணிகள் பொறுப்பாக்கப்பட்டன (*Sri Lankan Parliament dissolved; elections set for April, 2020; The appointment of the two presidential task forces*, 2020).

தமது தேர்தல் வெற்றியினைத் தொடர்ந்து தாம் பிரகடனப்படுத்திய நிகழ்ச்சிநிரலை வலுப்படுத்துவதற்கு ராஜபக்ஷ அணியினர் அதிக காலத்தினை வீணடிக்கவில்லை. பௌத்த கலாசார பாரம்பரியத்தின் சிறப்பினை மீள உறுதிப்படுத்துவதற்காகச் சனாதிபதியும் அவரைத் தொடர்ந்து பிரதம மந்திரியும் புனித பௌத்தத் தலங்களிலேயே தமது சத்தியப் பிரமாணத்தினை எடுத்துக்கொண்டனர். சனாதிபதியின் அழைப்பின் பேரில் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் கூடி அரசாங்கத்தின் கொள்கைகளை அமுலாக்குதல் தொடர்பான மகாசங்கத்தின் கருத்துக்களை முன்வைக்க ஒரு பௌத்த ஆலோசனைப் பேரவை (*Buddhist Advisory Council)* உருவாக்கப்பட்டது (*Buddhist Advisory Council commends President for walking the talk*, 2020). இந்நிலையில் 2020ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டின் கொவிட்-19 தொற்றுநோய் இலங்கையினைத் தாக்கியது.

## முஸ்லிம் சமூகமும் பெருந்தொற்றும்

ஏப்ரல் 2020இல் பாராளுமன்றத்தின் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடனான அரசியல் பேட்டியொன்று ஓர் அரச சார்புச் செய்தி அலைவரிசையினால் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இதன்போது அங்கு பிரசன்னமாகியிருந்த அரசாங்க அமைச்சர்களாலும் அந்தப் பேட்டியின்

தொகுப்பாளராலும் முஸ்லிம் சமூகத்திற்கெதிரான இழிவான இனத்துவ அவதூறுகள் புள்ளிவிபர ரீதியாகவும் (பொய்யாகவும்) வார்த்தைஜால ரீதியாகவும் முன்வைக்கப்பட்டன. இது முஸ்லிம் சமூகத்ததிற்கெதிரான விரோதப் போக்கினை மட்டுமன்றி சமூகத்தின் முழுமைக்கும் முஸ்லிம்கள் நிலைத்திருக்கும் ஓர் அச்சுறுத்தல் என்ற தொனியைப் பிரதிபலித்தது (*Derana TV Chathura's double standards exposed: citizens enraged over racist slurs of Derana TV anchor*, 2020). அத்தோடு ஒருவிதமான இனத்துவ நடத்தையை முன்னெடுப்பதில் ஊடகங்களின் வகிபங்கினையும் அது எடுத்துக்காட்டியிருந்தது. கொரோனா நோய்க்கிருமியை 'மிகவேகமாகப் பரப்புவர்கள்' முஸ்லிம்களே என்ற கருத்து முதன் முதலாக பெருந்தொற்றின் ஆரம்பக்கட்டங்களில் (மார்ச் 2020 தொடக்கத்தில்) அங்கு பிரசன்னமாகியிருந்த அரசாங்க அமைச்சர்களாலும் அந்தப் பேட்டியின் தொகுப்பாளராலும் NOCPCO இன் தலைவரால் முதன்முதலாக தொலைக்காட்சி நேர்காணலின் போது முன்வைக்கப்பட்டது. அவர் விசேடமாகக் குறிப்பிட்டது என்னவெனில், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற புத்தளத்திற்கு வெளிநாடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையான ஆட்கள் திரும்புவதாகவும் அவர்கள் உள்ளூர் பொலிஸ் நிலையங்களில் தங்களைப் பதிவுசெய்வதைத் தவிர்த்ததாகவும் அவர் குறிப்பாகச் சுட்டிக்காட்டினார். அவர்கள் நோய்க்கிருமியினால் பாதிக்கப்பட்டிருந்தாலும், நன்நடத்தையில்லாமல் அந்தப் பகுதியில் சுற்றி நோய்க்கிருமியைப் பலருக்குப் பரப்புவதாகவும் இதன் விளைவாக புத்தளத்தில் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவினை அறிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார் (ibid). புத்தளம் முழுமையாக முடக்கப்பட்டதனைத் தொடர்ந்து இதே போன்ற விளக்கம் முஸ்லிம் சமூகத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்களான கண்டி மாவட்டத்தில் அக்குரனை, களுத்துறை மாவட்டத்திலுள்ள அட்டலுகம தொடர்பாகவும் முன்வைக்கப்பட்டது (*Sri Lanka extends indefinite curfew to Kandy and Puttlam, Akurana under lockdown*, 2020).

ஆரம்பத்தில் நோய்க்கிருமியின் தீவிரம் குறித்துக் குறைவாக மதிப்பிட்டதோடு பின்னர் விரைவாகவும், வினைத்திறனாகவும் பதிலளிக்கத் தவறிய அரசாங்கம் பொதுச்சுகாதார நெருக்கடியினைத் தணிப்பதில் அவர்களது தோல்வியை மறைக்க முஸ்லிம் சமூகத்தைக் குற்றவாளிகளாக்க வேண்டியிருந்தது. முஸ்லிம் சமூகக் கிராமங்கள் அல்லது அவர்களது வசிப்பிடங்களில் அடையாளம் காணப்பட்ட நோய்த்தொற்று விகிதங்கள் பற்றிய விசேட குறிப்புகள் அரச சார்பு ஊடக அலைவரிசைகளில் முன்னிலைப்படுத்தப்பட்டன/சிறப்புச் செய்திகளாக்கப்பட்டன. முஸ்லிம் சமூகமானது தனிமைப்படுத்தல்

விதிகளை மீறுகின்றது என்றும் இதன்மூலம் நோய்க்கிருமி பரவுகின்றது என்ற கருத்தும் தவறாக ஆவணப்படுத்தப்பட்டது. பெருந்தொற்றின் இரண்டாவது அலையின் போது தனது அனுபவம் மற்றும் பிரச்சினைகள் பற்றி பேசும் அட்டலுகமவைச் சேர்ந்த குடியிருப்பாளரால் இது மேலும் வலியுறுத்தப்பட்டது.

> தனியார் சிகிச்சையகம் ஒன்றை வைத்திருக்கும் பண்டாரகம மாவட்ட வைத்தியசாலையின் மருத்துவர் ஒருவரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து எனது கிராமமானது இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது. காய்ச்சல் போன்ற அறிகுறிகளுடன் பலர் அவரை அணுகியதனால் கொவிட்-19 மூலம் இந்தக் கிராமம் பாதிக்கப்பட்டிருக்கலாமென அந்த மருத்துவர் கருதினார். இதில் விசித்திரமான விடயம் என்னவெனில் பல ஊடக நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையான இராணுவக் குழுக்களுடன் எனது கிராமத்துக்குள் நுழைந்தன. நாங்கள் இதுகுறித்து அதிர்ச்சியடைந்ததோடு அச்சுறுத்தலுக்கும் உள்ளானோம்; என்ன நடக்கிறது என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. மக்கள் பலவந்தமாக அவர்களது வீடுகளைவிட்டு வெளியே இழுத்துச் செல்லப்பட்டார்கள். எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், அதிகாரிகளைக் கேள்வி கேட்டவர்கள், அல்லது தாம் தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக வீட்டிற்குள் தங்களை பூட்டிக் கொண்டவர்கள் முதலானோருக்கு சீற்றமுள்ள அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. அதாவது அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதவர்களுக்குப் பன்றி இறைச்சியை சாப்பிடச் செய்வதாக அச்சுறுத்தப்பட்டது. எனது கிராமத்திலிருந்து ஒரு தொகுதியானவர்கள் தாமாகவோ அல்லது பலவந்தமாகவோ பி.சி.ஆர். பரிசோதனைக்காகக் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களில் சுமார் 1080 ஆட்கள் யாழ்ப்பாணம், பண்டாரவளை, மட்டக்களப்பு, பேருவளை போன்ற இடங்களிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டனர். எங்களில் சுமார் 40-50 வரையான ஆட்கள் ஒரு பேரூந்தில் ஏற்றப்பட்டோம். யன்னல்களைத் திறக்க எங்களுக்கு அனுமதியிருக்கவில்லை. எங்கள் பயணம் தனிமைப்படுத்தல் நிலையங்களை நோக்கித் தொடங்குவதற்கு முன்னர் கிட்டத்தட்ட மூன்று மணித்தியாலயங்களாக நாங்கள் இவ்வாறு வைக்கப்பட்டோம். இவையனைத்தும் சம்பவ இடத்திலிருந்த ஊடக ஆளணியினரால் கனகச்சிதமாக ஆவணப்படுத்தப்பட்டன. எனது கிராமத்துக் குடியிருப்பாளர்களின் கொவிட்-19 சோதனை முடிவுகள் நேர்மறையாகக் காணப்பட்டன என அதிகாரிகள் கூறினர். எனினும் எங்களில் எவருக்கும் அந்த முடிவுகளைப் பார்க்க முடியவில்லை. எங்களில் சிலர் பி.சி.ஆர். சோதனைக்காக தாம் தொடர்பான விபரங்களை வழங்கியிருந்தனர். எனினும் அவர்கள் பி.சி.ஆர். அல்லது ஆன்டிஜென் சோதனைகளுக்கு உட்படுத்தப்படவில்லை. பி.சி.ஆர். அல்லது ஆன்டிஜென் சோதனைகளைச் செய்யாதவர்கள் உட்பட

எங்கள் அனைவருக்கும் கொவிட்-19 நேர்மறை எனக் கூறப்பட்டதோடு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டோம். தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்ட எங்களில் பெரும்பாலானோர் 14 நாட்களுக்குப் பின்னர் வீடு திரும்புவதற்கு பெரிதும் சிரமப்பட்டோம். ஏனெனில் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து வீட்டிற்குத் திரும்புவதற்கான போக்குவரத்து வழங்கப்படவில்லை. எனது கிராமத்தில் பெரும்பாலானவர்கள் தினக்கூலிகள். எங்கள் மத்தியில் பலருக்கு இது செலவு கூடியதொரு பயணமாக இருந்தது. காரணம் இந்த நேரத்தில் வாடகைக்குத் தனியார் வாகனங்கள் அரிதாக இருந்ததால் நாங்கள் திரும்பவும் வீட்டிற்கு வர அதிகமான பணத்தை தனியார் வாகன உரிமையாளர்கள் அறவிட்டனர். இரண்டரை மாதங்களாக நாங்கள் முழு முடக்கத்திலிருந்தோம். எங்கள் கிராமம் இராணுவத்தினரால் சூழப்பட்டுச் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது. அரசாங்கத்தினால் 5,000 ரூபாய் கொடுப்பனவு இரண்டு தடவைகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டதோடு காலாவதியான உணவுப் பொருட்களைக் கொண்ட அத்தியாவசியப் பொருட்களின் பொதி ஒன்றும் வழங்கப்பட்டது[2].

இனத்துவஞ்சார் அரசியல் முறைமைகளில் அரச இயந்திரமானது ஆதிக்கம் வகிக்கின்ற இனக்குழுவினால் கட்டுப்படுத்தப்படுகிறது. அத்தோடு அரசினால் அமுலாக்கப்படுகின்ற கொள்கைகள் சமூகத்திலுள்ள ஏனைய சிறுபான்மைக் குழுக்களைப் புறக்கணிப்பதோடு ஆதிக்கம் வகிக்கின்ற இனக்குழுவிற்குச் சாதகமாகவும் அவை உருவாக்கப்படுகின்றன. பல்வேறு அரச நிறுவனங்கள் பெரும்பான்மையினரைத் திருப்திப்படுத்துவதற்காக கொவிட்-19 நெருக்கடிக்கு எதிராகப் போராடுதல் என்ற போர்வையில் முஸ்லிம் விரோதப் பிரச்சாரத்தை (மறைமுகமாகவும் வெளிப்படையாகவும்) ஊக்குவித்து அதனை முன்னின்று நடாத்திய போது இது தெளிவாகப் புலப்பட்டது. இதற்கான சிறந்த உதாரணம் கீழே தரப்பட்டுள்ள கேலிச் சித்திரங்களாக சமூக ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இந்தச் சித்திரங்களில் கொவிட்-19 இனால் இறந்த ஆட்கள் தொடர்பாக அரசாங்கத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட கட்டாயத் தகனக் கொள்கையானது பெரும்பான்மையின மக்களின் நுகர்வுக்காக மிகத் திறமையாகக் கையாளப்பட்டது.

2 பண்டாரகம பிரதேசத்தினது அட்டலுகம பகுதியைச் சேர்ந்த சிறிய அளவு வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 18 ஜூன் 2021.




Source: Cartoonist Pradeep, 2021




Source: Cartoonist Pradeep, 2020

கொவிட்-19இனால் இறந்தவர்களை அகற்றுவது தொடர்பாக உலக சுகாதார நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் இலங்கையின் சுகாதார அமைச்சினால் 27ஆம் திகதி மார்ச் 2020இல் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் காணப்பட்டது. ஆயினும் அடக்கம் செய்வதனை சுகாதார வழிகாட்டுதல்கள் அனுமதித்திருந்த போதும் இஸ்லாமிய நம்பிக்கையைக்கொண்ட ஒருவர் மரணமடைந்தபோது குடும்பத்தினது தொடர்ச்சியான ஆட்சேபனைகளை மீறி இறந்தவர்களை அதிகாரிகள் வலுக்கட்டாயமாகத் தகனம் செய்தனர். இதன் பின்னர் தகனத்தை மாத்திரம் அனுமதிக்கும் வகையில் சுகாதார வழிகாட்டல்கள் திருத்தப்பட்டன. இதனைத்தொடர்ந்து 11ஆம் திகதி ஏப்ரல் 2020இல் உத்தியோகபூர்வ தகனக்கொள்கை நடைமுறைக்கு வந்தது. விசேட சுகாதார வழிகாட்டுதலின் கீழ் கொவிட்-19 நோயினால் இறந்தவர்களை அடக்கம் செய்ய 190இற்கும் மேற்பட்ட நாடுகள் அனுமதித்திருந்த நிலையில் எந்தவொரு உறுதியான விஞ்ஞான ஆதாரமும் இல்லாமல் கிட்டத்தட்ட ஒருவருட காலமாக கட்டாயத் தகனக் கொள்கையை செயல்படுத்திய விசித்திரமான நாடாக இலங்கை இருந்தது.

இறந்தவர்களைத் தகனம் செய்வதானது கண்ணியமாக அடக்கம் செய்கின்ற இஸ்லாமிய போதனைகளுக்கு எதிரானதாகும். கட்டாயத் தகனக் கொள்கையானது முஸ்லிம்களின் அடிப்படை மத உரிமைகளைப் பறிப்பது மட்டுமன்றி, முஸ்லிம்களின் மத நடைமுறையானது நோய்க்கிருமி பரவுவதற்கும் காரணமாக அமைகிறது என்ற கருத்துப் பரவுவதற்கும் வழிசமைத்தது. கொவிட்-19 இனால் இறந்த நபர்களை அடக்கம் செய்வதற்கெதிரான தடையினை விலக்குமாறு அரசாங்கத்தினை அழுத்தம் விடுத்தமையானது முஸ்லிம்களுக்கெதிரான கறைபூசும் பிரச்சாரத்தினை அதிகரித்தது. இது தொடர்பான விவாதங்கள் முஸ்லிம்களுக்கெதிரான நிலைப்பாட்டினை ஏற்படுத்தியதோடு அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட

கட்டாயத் தகனக்கொள்கையினையும் அவை நியாயப்படுத்தின. உலக சுகாதார நிறுவனத்தினது வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல் மற்றும் கட்டாயத் தகனத்தில் எவ்விதமான விஞ்ஞான அடிப்படையும் இல்லை எனக் குறிப்பிட்ட துறைசார் விஞ்ஞானிகள், வைத்திய நிபுணர்கள் போன்றோரின் கருத்துக்கள் ஓரங்கட்டப்படடன. அத்தோடு அரசசார்பு, அச்சு, இலத்திரனியல் ஊடகங்களில் இதற்கான தெளிவுபடுத்தலும் தடைப்படுத்தப்பட்டது.

நோய்க்கிருமியின் உருவாக்கம், இயலுமை போன்றவை சரியாக அறியப்படாத நிலையில், கொவிட்-19 இனால் இறந்த உடல்களை அடக்கம் செய்கின்ற போது நிலக்கீழ் நீர் மாசுபடுத்தப்பட்டு தொற்றுப் பரவுவதற்கான அபாயம் அதிகரிக்கும் என தலைமை தொற்றுநோய் நிபுணரும் அரசாங்கத்திலுள்ள பல அரசியல்வாதிகளும் வாதிட்டனர். இந்தக் கூற்றுக்கள் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படாவிட்டாலும்கூட இந்தக் கொள்கை தொடர்பாக கேள்வியெழுப்புபவர்களுக்கு மிக வலுவான வகையில் இந்தப்பதில் ஒப்புவிக்கப்பட்டது. வேடிக்கையான விடயம் என்னவெனில், குடும்ப உறுப்பினர்களுக்கு சோதனை முடிவுகளை சரிபார்ப்பதற்கான போதுமான கால எல்லையோ அல்லது சந்தர்ப்பமோ வழங்கப்படாமல் சோதனை முடிவுகள் வெளியாகியவுடன் தகனம் உடனடியாக இடம்பெற்றது. பல சந்தர்ப்பங்களில் தொற்றை உறுதிப்படுத்துவற்கான வேண்டுகோளானது (இரண்டாவது தடவை சோதனையை மேற்கொள்வதற்கான) இறந்தவர்களின் குடும்பங்களால் முன்வைக்கப்பட்டபோது அவை வைத்தியசாலை அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டன. அன்பிற்குரியவர்களின் தகனத்தை அனுமதிக்கும் பத்திரங்களில் கையெழுத்திடுமாறு இறந்தவர்களின் குடும்பங்கள் பலவந்தப்படுத்தப்பட்ட பொழுதும் அவர்கள் இறந்தவர்களின் உடலைப் பார்வையிடக்கூட அனுமதிக்கப்படவில்லை (*Coronavirus funerals: Sri Lanka's Muslims decry forced cremation*, 2020).

பி.பி.சி. உலக சேவைக்கு அளித்த நேர்காணலில் இலங்கை சுகாதார அமைச்சினைச் சேர்ந்த மருத்துவ நோய்க்கூற்றியல் ஆலோசகரான வைத்தியர் ஷன்னபெரேரா அவர்கள் குறிப்பிடுகையில் "அரசாங்கத்திற்கு முஸ்லிம்கள் தொடர்பாக எவ்விதமான எதிர்ப்பும் இல்லை. எனினும் இந்த நோய்க்கிருமியானது அங்கீகரிக்கப்படாத நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுமோ என்ற அச்சம் இருக்கிறது. ஒருவேளை விரும்பத்தகாத ஒருவர் பிறிதொருவரின் உடலுக்கு அதனைச் தொற்றச்செய்து ஒரு உயிரியல் ஆயுதமாகப் பயன்படுத்தலாம்" (*Small fear whether the dead bodies with the virus can be used as biological weapons*, 2020). அரசினால் திணிக்கப்பட்ட கட்டாயத் தகனக் கொள்கைக்காக அரச பல்கலைக்கழகங்களின் கல்வியியலாளர்களும்

ஆதரவாக வாதிட்டனர். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மெத்திகா விதானகே என்பவர் அரசினால் திணிக்கப்பட்ட கட்டாயத் தகனக் கொள்கைக்காக திடமான வகையில் பரிந்து பேசிய ஒருவராவார். இவர் புதைக்கப்பட்ட சடலங்களிலிருந்து நோய்க்கிருமிகள் நிலக்கீழ் நீரை மாசுபடுத்தும் என வாதிட்டார். நிலக்கீழ் நீர் மாசுபடுதல் தொடர்பாகப் பெரும் பிழைகள் மற்றும் முரண்பாடுகள் காணப்பட்டாலும் இந்தக் கொள்கைக்கு ஒரு விஞ்ஞான ரீதியான அடித்தளம் இருப்பதாகக்கூறி இதனைப் பிரபல்யப்படுத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டன (*CCPSL says no solid evidence indicating burial of COVID-19 victims increases spread of virus*, 2021*; Sri Lanka can bury COVID-19 victims: SLMA*, 2021*;* Marsoof, 2020).

அரசின் தலைமையிலான பொய்யான பிரச்சாரம் தொடர்ச்சியாக இடம்பெற்றது. அத்தோடு முன்னணிக் கல்வியியலாளர்கள், தொற்றுநோய் நிபுணர்கள் உள்ளிட்ட பலரால் ஆதரிக்கப்பட்ட இந்தக் கொள்கையானது பின்னர் பல சிங்கள மற்றும் முஸ்லிம் அல்லாத ஏனைய சமூகங்களிடையேயும் இது தொடர்பான கூட்டான மனநிலையினை ஏற்படுத்தியது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் சிங்கள, தமிழ், மலையகத் தமிழ் சமூகங்களைச் சார்ந்த பெரும்பாலானோரின் கருத்துப்படி சில சமயக்குழுக்களின் கலாசார/சமய நடைமுறைகள் கொவிட்-19 பரவுவதற்கான அதிகமான சாத்தியக் கூறுகளைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். இக்கூற்றை எதிர்த்தவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சார்ந்தவர்கள். மேலும் பெருந்தொற்றுக் காலத்திலான நியாயமான நடாத்துகை குறித்து கருத்துத் தெரிவிக்கையில் சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பதிலளிப்பாளர்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலான பதிலளிப்பாளர்கள் அரசாங்கத்தின் கொவிட் விதிகள் (வழிகாட்டுதல்கள்) சமூகத்திலுள்ள வேறுபட்ட இனக்குழுக்களிடையே நியாயமற்ற முறையில் அமுல்ப்படுத்தப்பட்டதாக உணர்ந்துள்ளனர் ('Socio-Economic Index in the face of COVID-19', 2021).

கொவிட்-19இனால் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது பொதுச்சுகாதாரத்திற்கு ஆபத்து என்பதனை நிரூபிப்பதற்கான எவ்வித ஆதாரங்களும் இல்லையென இலங்கை சமூக மருத்துவர்களின் கல்லூரி (*CCPSL says...*, 2021) மற்றும் இலங்கை வைத்திய சங்கம் (*Sri Lanka can bury...*, 2021)ஆகியன அறிக்கைகளை வெளியிட்டு தெளிவுபடுத்தியிருந்தன. உலகப் புகழ்பெற்ற நோய்க்கூற்றியியல் மற்றும் நோய்க்கிருமியியல் நிபுணரான ஹாங்காங் பல்கலைக்கழகத்தின்

தலைமைப் பேராசிரியராகக் கடமையாற்றும் மலிக் பீரிஸ் (*World renowned virologist Prof. Malik Peiris refutes claims that burials transmit COVID-19*, 2020), சார்ஸ் (Sars) பெருந்தொற்றுக்கான நோய்க்கிருமியைக் கண்டுபிடித்த முன்னணி விஞ்ஞானியாவார். இவர் கட்டாயத் தகனக்கோட்பாட்டை விமர்சித்துப் பின்வருமாறு குறிப்பிட்டார். "கொவிட்-19 என்பது நீரில் பரவும் நோயல்ல. அது இறந்த உடல்கள் மூலம் பரவுகிறது என பரிந்துரைக்க நான் எந்த ஆதாரத்தையும் காணவில்லை. ஒரு நோய்க்கிருமி உயிருள்ள இழைகளில் மட்டுமே பெருகமுடியும். ஒரு நபர் இறந்தவுடன் நோய்க்கிருமிகள் பெருகுவதற்கான திறன் குறைகிறது. இறந்த உடல்கள் ஓடும் நீரில் புதைக்கப்படுவதில்லை. நீங்கள் உடலை ஆறடி கீழே ஊடுருவ முடியாதவாறு பொதிசெய்து அடக்கம் செய்யும்போது அது ஓடும் நீரை மாசுபடுத்துவது என்பது சாத்தியமற்றதாகிறது."

பெருந்தொற்றுக் காலத்தில் அரசாங்கத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட பாரபட்சமான கொள்கைகளுக்கெதிராக பல ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் பயணத்தடைகளினால் பல கட்டுப்பாடுகளும் காணப்பட்டன. பெருந்தொற்றுக் காலத்தில் அரசாங்கம் இனவாத சீட்டாட்டத்தை (Racist card) ஆடுகிறது என்பதும் பாரபட்சத்தை நிறுவனமயப்படுத்துகிறது என்பதும் மிக வெளிப்படையானதாகவிருந்தது. எனினும் இது குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகளால் கொடுக்கப்பட்ட அழுத்தங்களுக்குக் குறைந்தளவான முக்கியத்துவமே கொடுக்கப்பட்டது (Ranawana, 2020). ஆர்ப்பாட்டங்களானவை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சமூக ஊடகத்தளங்களினூடாக வேகமாகப் பரவி உலகின் பல முஸ்லிம் நாடுகளின் கவனத்தை ஈர்த்தன. பாரபட்சமான கொள்கைகளுக்கெதிரான மனுக்களை விசாரிக்க இலங்கையின் உயர்நீதிமன்றம் மறுத்திருந்தது. பெருந்தொற்றுக் காலத்தில் கட்டாயத்தகனம் தொடர்பான பிரச்சினைக்கான தீர்வொன்றினைப் பெறுவதற்காக சர்வதேச உதவியை நாடுமளவுக்கு முஸ்லிம் சமூகம் நிர்ப்பந்திக்கப்பட்டது. ஐ.நா விசேட அறிக்கையாளர்கள் ஏப்ரல் 2020 மற்றும் ஜனவரி 2021இல் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதி அடக்கம் செய்ய விரும்புபவர்களின் விருப்பங்களை மதிக்குமாறும் முஸ்லிம்களின் உணர்வுகளைப் புறக்கணிப்பது இன்னும் சிக்கலான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்பதைப் புரிந்துகொள்ளுமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தினர். பெப்ரவரி-மார்ச் 2021இல் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் (United Nations Human Rights Council) 46 ஆவது அமர்வில் 57 உறுப்பு நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்பு நிறுவனத்தினால் (Organisation of Islamic Cooperation) இந்தப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்டன.

46ஆவது அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் உருவாக்கப்பட்ட தீர்மானத்தை இலங்கை எதிர்கொள்ள வேண்டியிருந்த நிலையில் இஸ்லாமிய ஒத்துழைப்பு நாடுகளினதும் தென்னாசிய அயல் நாடான பாகிஸ்தானினதும் ஆதரவு தேவைப்பட்டது (*Sri Lanka does away with forced cremations after PM Imran Khan reportedly raises issues*, 2021). கட்டாயத்தகனத்தை ரத்துச் செய்வதற்கான சில காரணங்களில் இதுவும் ஒன்றாகவிருக்கலாம் (Fonseka and Dissanayake, 2021). தடை நீக்கப்பட்ட பின்னர் இறந்தவர்களை அடக்கம் செய்தலுடன் தொடர்புடைய மாசுபடுத்தல் தொடர்பான விவாதங்களுக்கான எந்தக் காரணமும் வழங்கப்படவில்லை. எனினும் இனத்துவ மையவாத தீயை தொடர்ந்தும் எரியச்செய்வதற்காகவும் கொவிட்டினால் இறந்தவர்களைப் புதைப்பதற்கான அனுமதி தொடர்பாக பொதுமக்களிடையே சலசலப்பை ஏற்படுத்துவதற்காகவும் கிழக்குமாகாணத்திலுள்ள ஓட்டமாவடிக் கிராமத்தில் தகனம் செய்ய அனுமதிக்கப்பட்டது.

ஏற்கனவே நிரூபித்துள்ளதன்படி பெருந்தொற்றுக் காலத்தில் முஸ்லிம்களால் எதிர்கொள்ளப்பட்ட திட்டமிட்ட அநீதிகள் அரச அல்லது சமூக ஊடகங்களில் மட்டுமல்லாது, பல்வேறு அரசகொள்கைளுக்கும் நிறுவனமயப்படுத்தப்பட்ட பாரபட்சமானது விரிவுபடுத்தப்பட்டிருந்தது. இது சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்களின் அடிப்படை உரிமைகளை தடைசெய்வது மட்டுமல்லாமல் (இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் மட்டும்) ஒட்டுமொத்த சகவாழ்வு மற்றும் இன நல்லிணக்கத்திற்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. தவறான பிரச்சாரமானது சமூகங்களுக்கிடையிலான நம்பிக்கையை மெதுவாக அழிப்பதோடு நிலையான சனநாயகத்துக்கான வாய்ப்புக்களைக் கெடுத்து சமூகத்தினுள் சனநாயக விழுமியங்கள் கடுமையாகச் சீரழிவதற்கு வழிவகுத்துள்ளது.

## முடிவுரை

அரசாங்கத்தின் யுத்தம் என்ற சொல்லாடல், கடுமையான ஒழுங்குமுறைகள் போன்றன நோய்க்கிருமிகளால் இலகுவாகப் பாதிப்படையக் கூடிய சமூகத்தவர்களைச் சமுதாயத்துக்கான ஓர் அச்சுறுத்தலாகவும் நோய்க்கிருமியினால் தாக்கப்பட்டவர்களை குற்றவாளிகளாகச் சித்திரிக்கவும் உதவின. இந்தப் பாதிப்பு உணர்வானது கொவிட் பதில் நடவடிக்கைகளை இராணுவம் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததன் மூலம் மேலும் அதிகரித்துள்ளது. இது இனத்துவ தேசியவாதம் என்ற பாரிய சூழ்ச்சித் திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்கள் வெறுமனே அப்புறப்படுத்தப்பட வேண்டிய உடல்கள் எனக்கருத வழிசெய்தது. இன, கலாசார, பொருளாதார ரீதியான சிறுபான்மையினர்

‘ஒரு நாடு - ஒரு சட்டம்’ என்ற பெரும்பான்மைச் சமூகத்தின் உணர்வுகளுக்கு முற்றிலும் வசதியான அல்லது திருப்தியான கொள்கைகள், சட்டங்கள் மற்றும் செயல்முறைகளை ஏற்றுக்வதற்குப் பழக்கப்படுத்தப்பட்டனர். இந்தநிலையில் இலங்கையில் கொவிட்-19 பொதுச்சுகாதார நெருக்கடியில் முஸ்லிம் சமூகத்தினர் எவ்வாறு விசேடமாக இலக்கு வைக்கப்பட்டனர் என்பதனை இந்த அத்தியாயம் தெளிவுபடுத்தியுள்ளது.

சிங்களவர்கள் மற்றும் தமிழ் சகாக்களைப் போன்று முஸ்லிம்களும் நோய்க்கிருமியின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் திணிக்கப்பட்ட பல்வேறு பெருந்தொற்று ஒழுங்குவிதிமுறைகளால் சவால்கள் பலவற்றை எதிர்கொண்டுள்ளனர். ஆயினும் இனத்துவ மையவாத அரச இயந்திரத்தின் கைகளில் முஸ்லிம் சமூகமானது கடுமையான, அவதூறான மற்றும் நியாயமற்ற வகையிலான ஒழுங்குவிதிகளின் அமுலாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டது. ராஜபக்ஷ அரசின் பெருந்தொற்று ஆளுகையில் முஸ்லீம் சமூகத்தினர் இரட்டைப் பழிவாங்கலுக்கு ஆளாகினர். இது இலங்கை எந்தளவு ஆழமான இனத்துவ மையவாத அரசாட்சியினால் வேரூன்றியுள்ளது என்பதனைக் காட்டுகிறது. இனத்துவ அடிப்படையிலான பெருந்தொற்று ஒழுங்குவிதிகளை உருவாக்குதல் மற்றும் அமுலாக்குதலில் வாக்குகளைப் பெறுவதற்கு ஆர்வமுள்ள இனத்துவ அரசியல்வாதிகளிடமிருந்து மட்டுமல்லாமல் பல கல்வி கற்ற கல்வியியலாளர்கள், சிரேஷ்ட பணிக்குழாத்தினர் போன்றோரிடமிருந்தும் இதற்கான ஒப்புதல் கிடைக்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அனர்த்தங்களும் பேரழிவுகளும் சமூகப்பிணைப்பை வலுப்படுத்தி மக்களை ஒன்றிணைக்கின்றன என்ற பிரபல கருத்துக்கு எதிராக, நோய்க்கிருமியும் அரசாங்கத்தின் பதில் நடவடிக்கைகளும் சகவாழ்விற்கான வாய்ப்புக்களை (குறிப்பாக சிங்கள-முஸ்லிம் உறவுகள் தொடர்பான) மேலும் சீர்குலைத்துள்ளன என்பதனை இந்த அத்தியாயம் காட்டுகிறது. ராஜபக்ஷ அரசாங்கமானது (அப்போது நிலவிய முஸ்லிம் எதிர்ப்பு உணர்வுகளைப் பயன்படுத்தி அதிகாரத்திற்கு வந்த) கொவிட் பதில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரச சார்பு, அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பன முஸ்லிம் சமூகத்தினைச் சமுதாயத்துக்கான ஓர் அச்சுறுத்தலாக அடையாளப்படுத்தியதை வெளிப்படையாக அல்லது மறைமுகமாக ஆதரித்தது. இதன் விளைவாக ஏற்கனவே ஈஸ்டர் ஞாயிறு பயங்கரத் தாக்குதலினால் இறுக்கமடைந்த சமூகங்களுக்கிடையிலான உறவுகள் மேலும் மோசமடைந்தன.

இந்த அத்தியாயமானது கொவிட்-19 கொள்கை உருவாக்கத்தினால் முஸ்லிம் சமூகம் பாதிப்படைந்ததனை முன்னிலைப்படுத்துகிறது. அதேவேளை ஒரு பரந்த கண்ணோட்டத்தில் பெரும்பான்மைசார் அரச கட்டமைப்பினது (ஒவ்வொருவரும் உரிமைகளை அனுபவிக்கும் பிரசைகளாக நடாத்தப்படாத) ஆளுகை செய்தலின் தீவிரமான வடிவங்களால் சிறுபான்மையினத்தவர் எதிர்கொள்ளும் பொதுவான அவலநிலையும் வெளிப்படுத்தப்படுகிறது. இங்கு தற்போது என்ன தேவையெனில், கடந்த காலத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்டு ஆளுகை செய்தலில் பன்மைத்துவவாதம் மற்றும் சனநாயக விழுமியங்களைத் தாபிக்கவேண்டும். எனினும் தற்போதைய நிலையில் அவற்றைப் பெரும்பாலும் காணமுடியாதுள்ளது. நிறைவேற்றுத்துறையிடம் அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டுள்ள நிலையில் தன்னிச்சை மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டங்களின் பயன்பாடானது இலங்கை சமூகத்தினுள்ளே சனநாயக அடிப்படைகளை எவ்வாறு ஆழமான வகையில் அழிவடையச் செய்கிறது என்பதைக் காணும்போது அது மிகவும் கவலையளிக்கிறது.

## உசாத்துணைகள்:

'Socio-Economic Index in the face of COVID-19' (2021) *Centre for Policy Alternatives*, 30 June. Available at: https://www.cpalanka.org/socio-economic-index-in-the-face-of-covid-19/ (Accessed: 30 June 2021).

Balasundaram, N. (2016) 'Sri Lanka: An Ethnocratic State Preventing Positive Peace', *Cosmopolitan Civil Societies: An Interdisciplinary Journal*, 8 (3), pp. 38-58.

*Buddhist Advisory Council commends President for walking the talk* (2020) *Presidential Secretariat*. Available at: https://www.presidentsoffice.gov.lk/index.php/2020/09/18/buddhist-advisory-council-commends-president-for-walking-the-talk/ (Accessed: 19 June 2021).

Cartoonist Pradeep (2020) *Facebook*. Available at: https://www.facebook.com/CartoonistPradeep/photos/2808197036062999 (Accessed: 25 June 2021).

Cartoonist Pradeep (2021) *Facebook*. Available at: https://www.facebook.com/CartoonistPradeep/photos/2839047026311333 (Accessed: 25 June 2021).

*CCPSL says no solid evidence indicating burial of COVID-19 victims increased spread of virus* (2021) *Daily FT*. Available at: https://www.ft.lk/news/CCPSL-says-no-solid-evidence-indicating-burial-of-COVID-19-victims-increases-spread-of-virus/56-710986 (Accessed: 21 June 2021).

*Coronavirus funerals: Sri Lanka's Muslims decry forced cremation*. (2020) *BBC*. Available at: https://www.bbc.com/news/world-asia-53295551 (Accessed: 05 June 2021).

*Derana TV Chathura's double standards exposed: citizens enraged over racist slurs of Derana TV anchor* (2020) *Colombo Telegraph*. Available at: https://www.colombotelegraph.com/index.php/derana-tv-chathuras-double-standards-exposed-citizens-enraged-over-racist-slurs-of-derana-tv-anchor (Accessed: 20 June 2021).

Fonseka, B. and Dissanayake, U. (2021) 'Sri Lanka's Vistas of Prosperity and Splendour: A Critique of Promises Made and Present Trends', *Centre for Policy Alternatives*. Available at: https://www.cpalanka.org/wp-content/uploads/2021/07/Sri-Lankas-Vistas-of-Prosperity-and-Splendour-A-Critique-of-Promises-Made-and-Present-Trends.pdf (Accessed: 22 July 2021).

*Full-Video of Army Commander speaks to Indeewari Amuwatte on battle against COVID-19 @HydePark* (2020) *Ada Derana*. Available at: https://www.youtube.com/watch?v=cJbQNnzoEx0 (Accessed: 20 June 2021).

*Gotabaya named as SLPP's presidential candidate* (2019) *Daily Mirror*t. Available at: https://www.dailymirror.lk/top_story/Gotabaya-named-as-SLPP%E2%80%99s-Presidential-Candidate/155-172682 (Accessed: 18 June 2021).

Kadirgamar, A. (2013) 'The Political Economy of Anti-Muslim Attacks', *Colombo Telegraph*, 03 March. Available at: https://www.colombotelegraph.com/index.php/the-political-economy-of-anti-muslim-attacks/ (Accessed: 10 June 2021).

Kumarasinghe, U. (2016) 'The Genesis of Sinha le', *Sunday Observer*, 31 January. Available at: http://archives.sundayobserver.lk/2016/01/31/fea14.asp (Accessed: 10 June 2021).

Marsoof. A. (2020) 'Debunking The Claim Against Burial Of Covid-19 Victims: A Response To Professor Vithanage', *Colombo Telegraph*,

12. Available at: https://www.colombotelegraph.com/index.php/debunking-the-claim-against-burial-of-covid-19-victims-a-response-to-professor-vithanage/ (Accessed: 21 June 2021).

Mayberry. (2019) 'Suspicion stalks Sri Lanka's Muslim community after bombings', *Aljazeera*, 26 April. Available at: https://www.aljazeera.com/news/2019/4/26/suspicion-stalks-sri-lankas-muslim-community-after-bombings (Accessed: 15 June 2021).

*New party aims to safeguard Sinhala identity* (2016) *Daily Mirror*. Available at: https://www.dailymirror.lk/102081/new-party-aims-to-safeguard-sinhala-identity (Accessed: 10 June 2021).

*President pardons Gnanasara Thero* (2019) *Daily FT*. Available at: https://www.ft.lk/front-page/President-pardons-Gnanasara-Thero/44-678714 (Accessed: 15 June 2021).

Ranawana, A. (2020) 'Showing no compassion towards Muslim sentiments is shameful and dangerous', *Economynext*, 18 December. Available at: https://economynext.com/showing-no-compassion-towards-muslim-sentiments-is-shameful-and-dangerous-77047/ (Accessed: 18 July 2021).

Reicher, S. and Stott, C. (2020) 'On order and disorder during the COVID-19 pandemic', *British Journal of Social Psychology*, 59, pp. 694–702.

*Small fear whether the dead bodies with the virus can be used as biological weapons – Dr. Channa Perera tells BBC* (2020) *BBC.* Available at: Small fear whether the dead bodies with the virus can be used as biological weapons - Dr. Channa Perera tells BBC https://english.theleader.lk/news/690-small-fear-whether-the-dead-bodies-with-the-virus-can-be-used-as-biological-weapons-dr-channa-perera-tells-bbc (Accessed: 05 June 2021).

*Sri Lanka can bury COVID-19 victims: SLMA* (2021) *Newsfirst*. Available at: https://www.newsfirst.lk/2021/01/03/sri-lanka-can-bury-covid-19-victims-slma/ (Accessed: 21 June 2021).

*Sri Lanka does away with forced cremations after PM Imran Khan reportedly raises issues* (2021) *The International News*. Available at: https://www.thenews.com.pk/latest/796072-sri-lanka-does-away-with-forced-cremations-after-pm-imran-speaks-about-minority-muslims (Accessed: 14 July 2021).

*Sri Lanka election: Rajapaksa brothers win 'super-majority'* (2020) *BBC*. Available at: https://www.bbc.com/news/world-asia-53688584 (Accessed: 18 June 2021).

*Sri Lanka extends indefinite curfew to Kandy and Puttlam, Akurana under lockdown* (2020) *Economynext*. Available at: https://economynext.com/sri-lanka-extends-indefinite-curfew-to-kandy-and-puttalam-akurana-under-lockdown-62832/ (Accessed: 20 June 2021).

*Sri Lanka investigates troops over 'humiliation 'of Muslims* (2021) *Aljazeera*. Available at: https://www.aljazeera.com/news/2021/6/21/sri-lanka-investigates-troops-over-humiliation-of-muslims (Accessed: 21 July 2021).

*Sri Lanka: Preliminary findings of Country Visit to Sri Lanka by the Special Rapporteur on freedom of religion or belief* (2019) *United Nations Office of the High Commissioner*. Available at: https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=24918 (Accessed: 15 June 2021).

*Sri Lankan Parliament dissvolved; elections set for April* (2020) *Al Jazeera*. Available at: https://www.aljazeera.com/news/2020/3/2/sri-lankan-parliament-dissolved-elections-set-for-april (Accessed: 20 June 2021).

Srinivasan, M. (2019) 'Gotabaya wins in presidential poll', *The Hindu*, 17 November. Available at: https://www.thehindu.com/news/international/gotabaya-rajapaksa-wins-sri-lankan-presidential-election-official-results/article29998767.ec (Accessed: 17 June 2021).

Strong, P. (1990) 'Epidemic psychology: a model', *Sociology of Health*, 12(3). pp. 249-259.

*The appointment of the two presidential task forces* (2020) *Centre for Policy Alternatives*. Available at: https://www.cpalanka.org/the-appointment-of-the-two-presidential-task-forces/#_ftn1 (Accessed: 20 June 2021).

Thiruvarangan, M. (2020) 'Sri Lanka Elections: The SLPP's formidable majority doesn't bode well for pluralism', *The Wire*, 10 August.

Available at: https://thewire.in/south-asia/sri-lanka-podujana-peramuna-elections-rajapaksa-sinhalas-tamils (Accessed: 18 June 2021).

*World renowned virologist Prof.Malik Peiris refutes claims that burials transmit COVID-19 – Island* (2020) *Newswire*. Available at: https://www.newswire.lk/2020/12/15/world-renowned-virologist-prof-malik-peiris-refutes-claims-that-burials-transmit-covid-19-islan/ (Accessed: 21 June 2021).

Zuhair, A. (2016) 'Dynamics of Sinhala Buddhist Ethno nationalism in Post-War Sri Lanka', *Centre for Policy Alternatives*. Available at: https://www.cpalanka.org/wp-content/uploads/2016/04/Dynamics-of-Sinhala-Buddhist-Ethno-Nationalism-in-Post-War-Sri-Lanka.pdf (Accessed: 10 June 2021).

# 6

# இலவசமில்லாத கல்வி: பெருந்தொற்றுக் காலத்தில் இலங்கையின் கல்விசார் கொள்கைப் பதில் நடவடிக்கையில் அரசு-பிரசை உறவுகள்

*ஹசினி லேக்கம்வசம்*

## அறிமுகம்

உலகம் பூராகவுமுள்ள சகல மனிதர்களும் எதிர்கொள்ளுகின்ற தீவிரமான சவால்களில் ஒன்றாக கொவிட்-19 பெருந்தொற்றுக் காணப்படுகிறது. இது எமது உயிரினங்களின் உயிர்வாழ்தலை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி வருவதோடு, ஒரு வருடத்திற்கும் மேலான பெருந்தொற்றுடனான போராட்டத்தின் பின்னர் அரசாங்கங்களானவை மருத்துவம், ஏற்பாட்டியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் போன்ற பரப்புகளில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு வினைத்திறனாகப் பதிலளிக்க முற்பட்டபோது ஏற்பட்ட அழுத்தங்களுக்கு அவை வளைந்துகொடுக்க ஆரம்பித்துள்ளன. பல நாடுகளில் இந்த அழுத்தங்கள் வித்தியாசமாக உணரப்படுகின்றன. நாடுகளுக்கிடையிலான இந்த வேறுபாடுகள் அவற்றின் வசமுள்ள வளங்களினால், பிரதானமாகப் பொருளாதாரத்தினால் ஏற்படுகின்றன. நோய்க்கிருமியானது எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் சகலரையும் தொற்றக்கூடிய இயல்பினைக் கொண்டிருக்கின்றபோதும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் சமூகப் பொருளாதார வடிவமைப்பிற்கேற்ப அந்நாடுகள் அதிகமான தொற்றுக்கு ஆளாவதோடு அது ஒன்றன்பின் ஒன்றாக ஏற்படுத்தும் விளைவுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

ஏலவே, வெறும் பிரச்சினைகளுக்கு மத்தியில் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளுடன் போராடிக்கொண்டிருக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையில் இலங்கை கொவிட்-19 இனது இடையூறுகளால் அதிகம் பாதிப்படையக் கூடியதாக இருந்தது. இது பொருளாதாரத்தில் தொடங்கி பல துறைகளிலும் தெளிவாகத் தெரிந்தது. விசேடமாக 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னர் பரந்த நிவாரணப்பொதி எதுவும் இல்லாது மட்டுப்படுத்தப்பட்ட நடமாடுதல் நிலைமைகளினால் வருமானம் குறைவடைந்த நிலையில் முறைசாராத் துறையிலுள்ள பலர் உயிர்வாழ்வதற்குப் போராட வேண்டியநிலை காணப்பட்டது. உள்நாட்டுப் பொருளாதாரங்கள் சரிந்து கொண்டிருந்தமையால், அது ஏனைய பரப்புகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியதோடு தொழில்வாய்ப்பைத் தேடுவதற்காகக் கொவிட்-19 நெறிமுறைகளை மக்கள் மீறுவதற்கும் வழிசமைத்தது. மேலும், அதிகரித்த வீட்டு வன்முறை, துஷ்பிரயோகம் போன்றவற்றிற்கும் வழிசமைத்ததோடு தமது உயிர்வாழ்தலுக்காக செலவளிக்கக்கூட முடியாத குடும்பங்களின் கல்வியையும் சீர்குலைக்கின்றது.

இந்தப் பின்னணியில் பெரும் சவால்களுக்கு மத்தியிலும் பெருந்தொற்றுக் காலத்தில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற துறைகளில் ஒன்றான கல்வி பற்றிக் கவனஞ்செலுத்தப்படுகின்றது. அரசினால் நிதியளிக்கப்படுகின்ற கல்வி (State-sponsored education) அல்லது 'இலவசக்கல்வி' (Free education) என்ற வரைவினுள் நின்றுகொண்டு பெருந்தொற்றானது அரசு-பிரசை உறவை எவ்வாறு பாதித்துள்ளது என்பதனை இந்தக் கட்டுரை விபரிக்க முற்படுகிறது. இந்த நிலையில் நாட்டின் இலவசக்கல்வியினை வெளிப்படையான சமத்துவத்துடன் பராமரிப்பது சாத்தியமானதா என்பதை இக்கட்டுரை பிரதிபலிக்கிறது. இலவசக்கல்வியானது தனியே அரசின் திறனில் மாத்திரமன்றி அதனது செலவளிக்கும் திறனிலும் தங்கியுள்ளது. இந்நிலையில் அரசின் பொறுப்புக்கள் மற்றும் அவற்றிற்கு என்ன இடம்பெறுகிறது என்ற வினாக்களும் மேலெழுகின்றன. பெருந்தொற்று நிலைமையைக் கருத்திற்கொண்டு சகலருக்கும் சமமான வகையில் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமான வசதியை வழங்காமல் கல்வியானது இணையவழிக் கல்வியாக மாறவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. சனநாயக உறுதிப்பாடுகளின் மீதே இலங்கையின் இலவசக்கல்வி கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில், வேறுபட்ட வகையில் கல்வியினைப் பெறுகின்ற நிலையினை சமனாக்க அரசு தவறியமை மற்றும் கல்விசார் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான உந்துகை போன்றன சனநாயகப் பிணைப்பின் மையத்தை விட்டுக்கொடுப்பது போலத் தெரிகிறது. இந்தப் பின்னணியில்

இலவசக்கல்வி இலங்கையில் இல்லாமல் போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படலாம் என இந்தக் கட்டுரை வாதிடுகிறது.

இணையக்கல்விக்கு மாறுவதன் மூலம் ஏற்படும் அடிப்படையான ஆபத்து என்னவெனில், நாங்கள் உரிமையாகப் பெறவேண்டியவை மற்றும் 'சிறப்பான வாழ்க்கை' என்பதனை அடைந்துகொள்வதற்குத் தேவையானவை என்பவற்றைப் பெற்றுக்கொள்ளப் பணத்தை செலவழிக்கவேண்டும் என்ற நிலை சாதாரணமாக்கப்பட்டுள்ளது/ இயல்பானதாக்கப்பட்டுள்ளது. இணையக் கல்வியானது பெருந்தொற்றினால் உருவாகிய தனிமைப்படுத்தல் நிலைமையில் இடம்பெறும் ஒரு நிகழ்வு அல்ல. இது பணத்தை ஒரு தொழிற்பாட்டிற்கான மூலமாகக் கொள்ளும் விரிவாக்கப்பட்ட தனியார்மயப்படுத்தலுக்குள்ளாகும் கல்விப் பரப்புடன் இணைந்தது என்பதனை நாம் மனதிற்கொள்ளுதல் வேண்டும். இலவசக்கல்வியினைப் பெற்றுக்கொள்வதற்காகப் படிப்படியாகப் பணத்தினை செலவளிப்பதில் தொடங்கி, ஒருவிதமான சரிவுப் பாதையில் எம்மைத் தள்ளி தனியார்மயப்படுத்தப்பட்ட பல கல்வி நடவடிக்கைகளை உருவாக்குவதற்கும் அவற்றிற்கு அதிக சலுகைகளை வழங்குவதற்மான சூழ்நிலையினையும் திறந்து வைத்துள்ளது.

இலங்கையின் உயர்கல்வித்துறையில் தொழில்புரியும் எனது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் இந்த விடயத்தை நான் விளக்க முற்படுகின்றேன். அத்தோடு நான் பங்குபற்றிய பண்புசார் கலந்துரையாடல்கள் சிலவற்றினதும் அடிப்படையில் இவ்விடயத்தினை ஆராயவுள்ளேன். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணிப்பீட்டு ஆய்வுப் பிரிவான சோஷல் இன்டிகேட்டர் என்பதனால் முன்னெடுக்கப்பட்ட 'கொவிட்-19 காலத்தில் சமூக-பொருளாதாரக் குறிகாட்டி' என்ற ஆய்வின் கண்டுபிடிப்புக்களும் இந்தக் கட்டுரையின் கலந்துரையாடல்களுக்குத் துணைபுரிகின்றன. இந்தக் கணிப்பீடானது பெருந்தொற்றின் இரண்டாம், மூன்றாம் அலைக் காலப்பகுதியில் இடம்பெற்றமையினால் அக்காலப்பகுதியினது யதார்த்த நிலைமையினைப் பிரதிபலிக்கிறது. இதற்கு மேலதிகமாக செயற்பாட்டாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களின் குடும்பங்கள் போன்றவர்களைத் தனியாகவும் குழுவாகவும் நேர்காணல் செய்து, அது தொடர்பான பண்புசார் கலந்துரையாடல்களையும் இக்கட்டுரை பயன்படுத்துகிறது. இந்தக் கட்டுரையானது இலங்கையில் கல்வி பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகத்தினையும் பெருந்தொற்றுக்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட மாற்றங்கள் பற்றியும் பெருந்தொற்றுக் காலத்தில் கல்வித்துறையானது விசேடமாக எதிர்கொண்ட சவால்களையும் விபரிக்கிறது. அடுத்த பகுதியானது இந்த மாற்றங்களின் பாதிப்புகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அது தொடர்பான சில அவதானிப்புக்களையும் முன்வைக்கிறது.

## இலங்கையில் கல்வி

இலங்கையில் இலவசக்கல்வியானது வேறு எந்தவொரு நோக்கத்திற்குமாக இல்லாமல் வெறுமனே கருத்தியல் ரீதியான ஒரு செயற்திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டதொன்றாகும். அதாவது சமூகப் பொருளாதார வேறுபாடுகள் தனிநபர்கள் கல்வியைப் பெறுவதனைத் தடுப்பதனால் அந்த வேறுபாடுகளை இல்லாதொழித்து சிறப்பான வாழ்க்கையை வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை அடைந்துகொள்வதற்காக இலவசக்கல்வி இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் என்ற சமத்துவவாதக் கருத்தியலினால் இது ஊக்குவிக்கபட்டது. சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் என்ற சமத்துவவாதக் கருத்தியலினால் இது ஊக்குவிக்கப்பட்டது. அத்தோடு சட்டம், மருத்துவம் போன்ற கௌரவமான தொழில்களைப் பின்தங்கிய நிலையிலுள்ள சமூகக்குழுக்கள் பெறுவதற்கான சமூக அசைவிற்கான வாய்ப்புக்களைத் திறந்து விடுவதனையும் இலவசக்கல்வி எதிர்பார்த்தது (Jayasuriya, 1969, p.170). அப்போது கல்வித்துறையின் நிறைவேற்று அமைச்சராக இருந்த சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கராவினால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் இலவசக்கல்வி முறைமையானது காலனித்துவ ஆட்சிக்காலத்தின் இறுதிப்பகுதியிலும் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்திலும் “மிகச்சிறந்த சமூக மட்டமாக்கியாக” (Greatest social leveler) (Amarakeerthi, 2020), “கல்வி என்பது செல்வந்தர்களின் சலுகை” என்ற எண்ணத்தினை அகற்றும் நோக்குடன் செயற்பட்டது (ibid). இந்த இலவசக்கல்வியானது அடையப்பெற்ற சமூகநீதி (Social justice) எவ்வாறு, நீண்டகாலத்திற்குச் “சனநாயக நிலைநிறுத்தலை ஏற்படுத்தி சமூக ரீதியாகப் பாரபட்சங்களுக்குள்ளாகியவர்களை வலுப்படுத்தியுள்ளது” என்பதனை வெளிப்படுத்துகிறது. இதுவே குடியுரிமையின் அடித்தளமாகும். பிரேசில் நாட்டுக் கல்வியியலாளரான போலோ பிறேறே (Paulo Freire) என்பவர் கல்வியானது அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டவர்களின் முறைசார்ந்த சமத்துவமின்மையினை இல்லாதொழித்து அவர்களை விடுவிக்கும் ஒன்று என வலியுறுத்திய நிலையில், இலங்கையில் அத்தகையதொரு உணர்வுநிலையினை ஏற்படுத்தக்கூடிய “கோட்பாடு மற்றும் அரசியல் விளக்கமாகவே” இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது (Sivamohan, 2021).

எனினும் இலவசக்கல்வியின் பிரதான நோக்கமும் அதனை நடைமுறைப்படுத்தியமைக்கான தர்க்கமும் அண்மைக்காலமாக அழுத்தங்களுக்கு முகங்கொடுத்துள்ளது. ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைப் போன்று மோசமடைந்துவரும் இலங்கையின்

பொருளாதாரமானது சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund) மற்றும் உலகவங்கி போன்ற பூகோள நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களைப்பெற நிர்ப்பந்தித்துள்ளது. இத்தகைய கடன்களானவை கல்வி உட்பட நாட்டின் பல துறைகளையும் பாதிப்படையச் செய்துள்ளன. உண்மையில் எந்தத்துறை கடனைப் பெற்றுள்ளதோ அத்துறையானது சில விசேட நிபந்தனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதன் விளைவாக இலங்கையின் கல்வித்துறையின் தன்மை மற்றும் போக்கானது அரசின் சுமையினைக் குறைக்கக்கூடிய திசையில் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது (பொதுச் செலவினங்களில் பெரும் பகுதியினைக் குறைத்தல் மற்றும் பொதுத்துறையினை சுருக்குதல்). அத்தோடு பொருளாதார முன்னேற்றம் என்ற பெயரில் 'ஊழியச் சந்தைக்குப்' (Punchi, 2001; Perera, 2021) பட்டதாரிகளைத் தயார்ப்படுத்தும் முறையை நோக்கியும் அது நகர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த மாற்றங்கள் பெரும்பாலும் நவ-தாராளவாதத்துக்கான அறிகுறிகளாகும். இந்த சொல்லானது (நவ-தாராளவாதம்) வளர்ச்சியினை நோக்காகக்கொண்ட பொருளாதாரக் கொள்கைப் பொதி, தீவிரமான மற்றும் சர்வாதிகார அடிப்படைக்கான ஒரு கருவி, இல்லாதவர்களின் செலவில் இருப்பவர்களைச் செழிப்படையச் செய்வதற்கான ஓர் அரசியல் திட்டம் மற்றும் மீள்பங்கீடு, சனநாயகமயமாதல் மற்றும் சமூக சேமநலன் போன்றவற்றினை எதிர்க்கின்ற அரசியல்-பொருளாதாரத் திட்டம் என வேறுபட்ட அர்த்தங்களிலும் விளங்கிக் கொள்ளப்படுகிறது (Venugopal, 2015). நவ-தாராளவாதம் பற்றிய எனது புரிதலானது இடதுசாரி விமர்சனத்துடன் இணைந்ததாகும். அதன்படி மூலதனம் என்பது ஆழமான வகையில் அரசியல் சார்ந்தது. அதாவது சமத்துவமின்மை மற்றும் அதனடிப்படையிலான அதிகார உறவுகள் எழுச்சியடைதலுடன் மூலதனம் என்ற எண்ணக்கரு தொடர்புபடுகிறது. அதேவேளை அரசியலற்ற நெறிமுறைகளால் அது வடிவமைக்கப்படுகின்றது (சந்தை அடிப்படையிலான முறையினை உருவாக்குவதற்காகச் சமூகத்தினை முழுமையாக ஒரேவிதமாக்குதல்).

நவ-தாராளவாதமானது கல்வியின் உள்ளடக்கத்திலும் நிறுவனக் கட்டமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்த எதிர்பார்க்கிறது. சந்தைத் தேவையினைப் பூர்த்திசெய்வதற்குத் தேவையான திறன்கள் மற்றும் போட்டித் தன்மையினை வழங்குதல் (Perera, 2021), பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி போன்ற சமூகத்தின் அனைத்து தேவைகளையும் வழங்குவது தொடர்பாக அரசிற்கு எவ்விதமான பொறுப்பும் கிடையாது என்ற நிலையில் தனது தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொறுப்புத்தன்மை கொண்ட தனிநபர்களுக்கான ஒழுக்க ரீதியான நெறிமுறைகளை ஊக்குவித்தல் போன்றவற்றிற்காக கல்வியின் உள்ளடக்கத்தில் மாற்றத்தினை ஏற்படுத்த

விளைகிறது. தனிநபர்கள், நிறுவனங்கள், அமைப்புகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், பெற்றோர்கள் மற்றும் ஒவ்வொரு தனிநபர்களும் தமக்கான சொந்த சேமநல விடயங்களுக்கான பொறுப்பினை எடுக்க (விருப்பத்துடன்) வேண்டும் (Davies and Bansel, 2007,p. 251). நவ-தாராளவாதமானது பொதுமக்களுக்கான கல்வி தொடர்பான நிறுவனக் கட்டமைப்பில் குறிப்பாக பொதுச் செலவீனங்களில் குறிப்பிடத்தக்களவு குறைப்பொன்றினை எதிர்பார்க்கின்றது. கூட்டு சேமநலனுக்கு அவசியமானது என்ற வகையில் சந்தை முறைமைக்காகவே இவ்வாறு மறுசீரமைக்கப்படுகிறது (ibid, p. 254).

இலங்கையின் அரசகல்வியானது குறிப்பாக உயர் கல்வி கடந்த இரண்டு தசாப்தங்களாக இத்தகைய மாற்றங்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கின்றது என்பதனை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும் (Perera, 2021). இத்தகைய நிலையில் இணையக்கல்வி, வேலைவாய்ப்புகளுக்கான கதையாடல்கள் என்பன பெருந்தொற்றுக் காலத்தில் அதிகரித்துள்ளதோடு கல்வியில் மேலும் பல மாற்றங்கள் உருவாகுவதற்கான சூழலும் ஏற்பட்டுள்ளது.

## கொவிட் – 19 காலத்தில் கல்வி

மேலோட்டமாகப் பார்த்தால் பெருந்தொற்றின் தாக்கத்தினால் ஏனைய துறைகளை விட கல்வித்துறையில் ஒப்பீட்டளவில் குறைந்தளவான புகார்களே காணப்படுகின்றன. கொவிட்-19இனால் குறைந்தளவான இடையூறுகள் ஏற்பட்ட துறைகளில் கல்வியும் ஒன்றாகும். குறிப்பாக வீட்டிலிருந்து வேலை செய்யக்கூடிய ஏற்பாடுகளினால் தொடர்ந்திருக்கும் திறனை கல்வி கொண்டிருந்தது. எனினும் துறைசார் மேலோட்டமான பார்வைகள் அவ்வாறு காணப்பட்டாலும் இந்த மேலோட்டமான பார்வையானது பல கடினமான யதார்த்தங்களை மறைக்க முற்படுகிறது. இந்தப் பகுதியானது கல்வித்துறையிலுள்ளோர்களால் கடைப்பிடிக்கப்பட்ட உத்திகள் (கொடுப்பவர்கள் மற்றும் பெறுபவர்கள்) மற்றும் அடிமட்டத்தில், கீழ்மட்டத்தில் அவை ஏற்படுத்திய தாக்கம் என்பவற்றினையும் விபரிக்கிறது.

### *கடைப்பிடிக்கப்பட்ட உத்திகள்*

"உலகெங்கிலும் நோய்க்கிருமியினைக் கட்டுப்படுத்துவதற்கான பிரதான பதில் நடவடிக்கையாக முடக்குதல்களும் சமூக இடைவெளிக்கான வேறு சில வழிமுறைகளும் காணப்பட்டன. அதன் விளைவாக பல நாடுகளில் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள்

மூடப்பட்டுள்ளன. பெருந்தொற்றுக் காலத்தில் தடையற்ற கல்வியினை உறுதிப்படுத்துவதற்காக கல்வி நடவடிக்கைகள் இணையக்கல்விக்கு மாற்றப்பட்டுள்ளன (Toquero, 2020). இணையவழி முறைகளை நோக்கிய இந்தச் சடுதியான மாற்றமானது இணையக் கற்றல் என்பதற்குப் பதிலாக 'நெருக்கடிக் கற்றல்' என்ற சொற்பிரயோகத்தினால் பிரதியீடு செய்யப்பட்டிருக்கிறது (Pace et al., 2020). ஆயினும் இணையக் கல்வியின் அளவு மற்றும் விசாலம் என்பன சூழலுக்குச் சூழல் தெளிவாக வேறுபட்டுக் காணப்படுகின்றன. உதாரணமாக 'பெருந்தொற்றுக் காலத்தில் கல்வித்துறை தொடர்பான பூகோளமட்டப் பதில் நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தினால் 2020ஆம் ஆண்டு தொகுக்கப்பட்ட அறிக்கையானது, அவுஸ்ரேலியா போன்ற நாடுகள் கல்வி நடவடிக்கைகளைத் தொடர நிகழ்நிலைத் தளங்களுக்குப் பொருத்தமான ஏற்பாடுகளை எவ்வாறு முழுமையாக மேற்கொண்டுள்ளன என்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் பெருந்தொற்றைச் சமாளித்து கல்வி நடவடிக்கைகளை தொடர பல முறைசாரா வழிவகைகளில் தங்கியுள்ளன என்றும் குறிப்பிடுகிறது. ஆஜன்ரீனா இதற்குச் சிறந்த உதாரணமாகும். அங்கு நிகழ்நிலைத் தளங்களில் கற்றலுக்கான வளங்களை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கிடைக்கப்பெறச் செய்வதோடு கற்றல் சாதனங்களைக் கிடைக்கப்பெறச் செய்வதற்காக சுழற்சி முறையில் பணியாற்றியும் சில சமயங்களில் தமது மாணவர்களில் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்தவர்களுக்கு உணவினையும் வழங்குகின்றனர். பெல்ஜியம், இஸ்ரேல் போன்ற நாடுகளில் இணையக் கல்வியினை பெறுவதில் சிரமமுடையவர்களுக்காக தேசியத் தொலைக்காட்சிகளில் பாட அலகுகள் ஒளிபரப்புச் செய்யப்படுவதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன (ibid).

இலங்கையிலும் தடையில்லாத வகையில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுதலை உறுதி செய்ய மேற்கூறப்பட்ட முறைகள் சில நடைமுறைப்படுத்தப்பட்டன. அரச கல்வித்துறையில், உயர்கல்வியில் விசாலமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக உயர் கல்வியில் கல்வி நடவடிக்கைகளைத் தொடருவதற்காக கற்றல் முகாமைத்துவ முறைமைகள் (Learning management systems) என்பன நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டன. எனினும் அரசின் நெறியாள்கைக்குட்பட்ட நிதியினால் இயங்குகின்ற இரண்டாம் நிலைக்கல்வி (பாடசாலைக் கல்வி) அத்தகைய மத்தியமயப்படுத்தப்பட்ட முறைமைகளைக் கையாளுவதற்காக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை. பல பாடசாலைகள் தாங்கள் ஏற்கனவே கொண்டிருந்த சாதனங்களைப் பயன்படுத்தி இணையக் கல்வியினை மேற்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தன. இரண்டாம் நிலைக்கல்வியிலும் சரி உயர்நிலைக்

கல்வியிலும் சரி இணைய வசதியினைப் பெறுதல் (தேவையான இணைப்பினைக் கொண்டிருத்தல் மற்றும் சாதனம்) என்பது வெறுமனவே ஆசிரியர் மற்றும் மாணவரது விடயமாகவே கருதப்பட்டது. இரண்டாம் நிலைக்கல்வி மட்டத்தில் தொழில்புரிகின்ற ஆசிரியர்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட பணிகளைச் செய்வதற்கு எவ்விதமான நிறுவன ரீதியான தளங்களும் இல்லாமையினால் இது தொடர்பாக பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்ற கருத்து காணப்படுகிறது.

எனவே பயன்படுத்தப்படும் உத்திகள் சிலவேளை பயனற்றவையாகக் காணப்படுகின்றன. காரணம் அதற்கான சாதனங்கள் மற்றும் இணைய வசதிகள் போன்றனவற்றை பெரும்பாலானோர் கொண்டிருக்காமையேயாகும். உதாரணமாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்ட கணிப்பீட்டின்படி, பெருந்தொற்றின் முதலாவது கட்டத்தில் ஆய்வுக்கு பங்குபற்றியவர்களில் (தேசியமட்ட மாதிரி) 4 வீதமான பாடசாலை செல்லும் மாணவர்களும் 0.9 வீதமான உயர்கல்வி மாணவர்களும் தமது கல்வியினை முழுமையாக நிறுத்தியிருந்தனர் (இணைப்பு 3இலுள்ள அட்டவனை 45 மற்றும் 46ஐப் பார்க்கவும்).

இந்தக் கணிப்பீடானது இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பாகவும் தனது கவனத்தைச் செலுத்தியிருந்தது. ஆய்விற்கான மாதிரியில் கிட்டத்தட்ட அரைவாசி எண்ணிக்கையினர் (முதலாந்தர, இரண்டாம்நிலை மற்றும் உயர்மட்டக் கல்வியில் ஈடுபடுகின்ற குடும்ப உறுப்பினர்களைக் கொண்டிருந்தனர்) தமது குடும்பத்திலுள்ள அனைவரும் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்வதற்குப் போதுமான இலத்திரனியல் சாதனங்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டனர். 31.5% ஆனவர்கள் தாம் மற்றைய குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டியிருப்பதாகவும் 5.6% ஆனவர்கள் மற்றவர்களிடமிருந்து கடனாகப் பெறவேண்டியிருப்பதாகவும் குறிப்பிட்டனர். தேவையான சாதனங்கள் இல்லாமையினால் கல்விசார் நடவடிக்கைகளிலிருந்து முற்றிலும் விடுபட்டுள்ளதாக 2% ஆனவர்கள் குறிப்பிட்டனர் (இணைப்பு 3இல் அட்டவணை 49ஐப் பார்க்கவும்). இணைய வசதிகள் மற்றும் நிதிநிலைமைகள் தொடர்பாகவும் இதேவிதமான கருத்து நிலைப்பாடு காணப்பட்டது (இணைப்பு 3இல் அட்டவணை 50 மற்றும் 51ஐப் பார்க்கவும்)

'கொவிட்-19 காலத்தில் சமூக-பொருளாதாரக் குறிகாட்டி' என்ற உயர்மட்டக் கணிப்பீட்டின் அறிக்கையிலும் கிராம-நகரப்புற அடிப்படையில் ஒரு தனித்துவமான வேறுபாடு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இலத்திரனியல் சாதனங்களைக் கொண்டிருத்தல் நல்ல இணைய

இணைப்பு வசதியினைக் கொண்டிருத்தல் மற்றும் இணையக் கல்விக்காகச் செலவளிப்பதற்கான திறன் ஆகிய மூன்று விடயங்களிலும் கிராமப்புற நபர்களைவிட நகர்ப்புற பகுதியினைச் சேர்ந்தவர்கள் அதிகமான திறன் மட்டத்தினைக் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தப்பட்டது (p.18). அரச கல்வியினைத் தொடரும் மாணவச் சனத்தொகையில் (இரண்டாம் நிலை மற்றும் உயர்நிலை) பெரும்பாலானவர்கள் கிராமப்புறத்தினைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுவதனால் கணிப்பீடு குறிப்பிடுவதனைவிட இலவசக்கல்வியினால் பயன் பெறுபவர்களிடையேயான இந்த யதார்த்த நிலை இன்னும் பரவலாகக் காணப்படுகிறது.

இங்கு வலியுறுத்திக் கூறப்பட வேண்டியது இணையக் கல்வியினால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அல்ல. இங்கு பார்க்கப்பட வேண்டியது என்னவெனில், மீறப்பட்டுள்ள ஒழுக்கரீதியான தார்மீக உறுதிப்படுத்தல்கள்/ ஈடுபாடுகள் பற்றியே கவனங்கொள்ள வேண்டியுள்ளது. சமத்துவம் என்ற கொள்கைக்கு தன்னை உறுதியளித்துள்ள ஒரு கல்வி முறைமையில் (சகலரும் சம சந்தர்ப்பமாகக் கல்வி வசதியினைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள்) ஒரு நபராயினும்கூட அத்தகையக் கல்வியினைப் பெறுவதற்குத் தேவையான வசதிகளைப் பெறமுடியாதிருப்பவராயின் கல்வி என்ற பாரிய முறைமையினது அடிப்படைத் தார்மீக உறுதிப்பாடுகள் விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன என்றே மனங்கொள்ள வேண்டியுள்ளது.

கடுமையான அசமத்துவ பின்னணியில் நாடு பூராகவுமுள்ள பல ஆசிரியர், மாணவர் குழுக்கள் தமது கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளுக்காக பல்வேறு பொறிமுறைகளைப் பயன்படுத்தி வருகின்றனர். இரண்டாம் நிலைக் கல்வியை கற்பிக்கும் பாடசாலை ஆசிரியர்களது குழுவொன்றுடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் பாடசாலையானது நகர்ப்புற மத்திக்கு அருகில் உள்ளதா, இல்லையா[1] என்பதனைப் பொறுத்து பாடத்தின் உள்ளடக்கம், இணையத்தில் எவ்வளவு கற்பிக்கப்பட்டுள்ளது குறித்த கடுமையான ஏற்றத்தாழ்வுகள் தெரியவந்தன. இந்த யதார்த்த நிலையானது கணிப்பீட்டுக் கண்டுபிடிப்புக்களுடன் ஒத்துப்போவதாகக் காணப்படுகின்றது. அதேவேளை குறிப்பாக இணையத்தள வசதிகளைப் பெறுதல் தொடர்பான குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை கிராமப்புற- நகர்ப்புற அடிப்படையில் அவதானிக்க முடிகிறது (இணைப்பு 3இல் அட்டவணை 49, 50, 51ஐப் பார்க்கவும்). மாணவர்கள் நிகழ்நிலைக் கல்வியில் பங்குபற்றும் விகிதம், ஆசிரியர்கள் இணைய வசதிகளை அணுகக்கூடிய இயலளவினைக்

1 மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டத்து ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 27 ஆம் திகதி மே 2021.

கொண்டிருத்தல், மற்றும் பெற்றோர்-ஆசிரியருக்கிடையிலான கூட்டங்கள் போன்றன தொடர்பாகவும் கிராமப்புற- நகர்ப்புற வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த நிலையில், கிராமப்புற பாடசாலைகளை விட நகர்ப்புறப் பாடசலைகள் மிகவும் முன்னேற்றகரமான நிலையில் காணப்பட்டன.

நிகழ்நிலை வகுப்புக்களில் கலந்துகொள்ளும் கிராமப்புறப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் நிகழ்நிலை வகுப்புக்களை நடாத்துவதற்குத் தேவையான இணைய சமிஞ்சைகளைப் பெறுவதற்காக அருகிலுள்ள ஏரிக்கு வேலை செய்யும் ஒவ்வொரு நாளிலும் கிட்டத்தட்ட ஆறு மணித்தியாலயங்கள் செலவிட வேண்டியிருப்பதாகக் குறிப்பிட்டார். குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு தொகையான பாட உள்ளடக்கம் வழங்கப்படுவதனை உறுதி செய்யவேண்டும் என ஆசிரியர்கள் மீது நிர்வாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதால் ஆசிரியர்கள் இத்தகைய கடுமையான நிலைக்கு முகங்கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றிய நகர்ப்புற மற்றும் கிராமப்புற ஆசிரியர்கள் தமது பாடசாலைகள் நிகழ்நிலையூடாக (மதப் பாடல்களைப் பாடுவது போன்ற ஒத்திசைவு நடவடிக்கைகள் மற்றும் மாணவர்களின் வெசாக் கொண்டாட்டங்களின் புகைப்படப் பதிவுகளைத் தொகுத்தல் போன்ற ஒத்திசைவற்ற நிகழ்வுகள்) வெசாக்கிற்கான கலாசார நடவடிக்கைகளை நடாத்துமாறு அழுத்தம் கொடுத்தாகக் குறிப்பிட்டனர்.

எவ்வாறாயினும் ஆரம்பப் பாடசாலை மற்றும் கிராமப்புற தேசியப் பாடசாலையைச் சேர்ந்த இரண்டு அதிபர்களுடனான நேர்காணலில் அவர்கள் இது தொடர்பான எந்தவித உறுதிப்படுத்தலையும் வழங்கவில்லை.[2] இரண்டு ஆசிரியர்களும் நிகழ்நிலைக் கல்வியுடன் தொடர்புடைய சிரமங்களை ஏற்றுக்கொண்டிருந்தாலும் அவர்கள் நேரடியாகப் பதிலளிக்க வேண்டிய வலயக்கல்வி அலுவலகத்திலிருந்து எந்தவிதமான கடுமையான அழுத்தங்கள் குறித்தும் குறிப்பிடவில்லை. எனினும் அவர்களால் முடிந்தளவு கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வழிகாட்டுதல்கள் காணப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டனர். ஆயினும் அவ்விருவரும் நிகழ்நிலைக் கல்வி தொடர்பாக எவ்விதமான நிறுவன ரீதியான ஏற்பாடுகளும் காணப்படவில்லை என்பதனை ஏற்றுக்கொண்டதோடு ஆசிரியர்கள் தமக்குரிய சொந்த வளங்களை அல்லது சாதனங்களைப் பயன்படுத்தும் நிலைக்கு ஆளாக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டனர். இந்த நிலைமையினால் பாடசாலைகளுக்கிடையிலும் பாடசாலைக்குள்ளும் வெளிப்படையான படிநிலை ஒருங்கிணைப்பொன்று நிலவியது. உதாரணமாக

2 குருணாகல் மற்றும் வலப்பனை பிரதேச பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 5 ஆம் திகதி ஜுன் 2021.

ஆகக்குறைந்தது வட்சப்புடன் (Whatsapp) கூடிய திறன்பேசி (Smart phone) ஒன்றைக் கொண்டிருந்தால் மட்டுமே கல்வி நடவடிக்கைகளில் பங்குபற்ற முடியுமாகவிருந்தது. இதனால் சில மாணவர்கள் கல்விச் செயன்முறையிலிருந்து முற்றுமுழுதாக விடுபடவேண்டியேற்பட்டது. சேமநல அரசின் பரந்த பரப்பொன்றில் இந்த தனிப்பட்ட நிகழ்வுகள் எத்தகைய பாதிப்புகளைச் செலுத்துகின்றன என்பது பற்றிப் பின்னர் கலந்துரையாடலாம்.

பாடசாலை செல்லும் சிறுவர்களின் தாய்மார்களிடையே நடாத்தப்பட்ட மற்றுமொரு குழுக்கலந்துரையாடலில் பங்கேற்ற ஒருவர் குறிப்பிடும்போது, கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கான மாற்றுவழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக அருகிலுள்ள நகரத்தில் முன்கூட்டியே அறிவிக்கப்பட்ட ஒரு இடத்திற்குச் சென்று கல்வி கற்கும் ஆவணங்களைப் பிரதிசெய்து எடுக்கவேண்டும் என்ற கருத்தினை அவர் முன்வைத்திருந்தார்.[3] நிகழ்நிலைக் கல்வியை விட பொருளாதார ரீதியாக இந்தமுறை மிகவும் சாத்தியமானதாக இருக்கும் அதேவேளை பெருந்தொற்றுக் காலகட்டத்தில் தொடர்ச்சியாக இடம்பெறமுடியாத நிலையும் காணப்பட்டது. உண்மையில் ஆசிரியர் குழு குறிப்பிட்டதன்படி, அவர்களுடைய மாணவர்களில் சிலர் முற்றுமுழுதாக இணைய வசதி இல்லாத மிகவும் பின்தங்கிய/ தொலைதூர இடங்களில் வாழ்பவர்கள் என்றும் இதனால் வரையறுக்கப்பட்ட உணவு விநியோகம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட நடமாடுதல் போன்றவற்றைக் கொண்ட நாட்டு முடங்கல் நிலையில் தாம் வாழ்கின்ற பகுதிகளிலிருந்து அருகிலுள்ள நகரத்திற்கு வருவது மிகவும் கடினமானது என்றும் குறிப்பிட்டனர். இதன்விளைவாக பல மாணவர்கள் ஒரு பொதுவான இடத்தில் விநியோகிக்கப்பட்ட கற்றல் ஆவணங்களைப் பெறமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அத்தகையதொரு நிலையில் குழுவில் இருந்த ஒருவர், ஒரு தொகுதியான மாணவர்கள் அவ்வாறான அருகிலுள்ள நகரமொன்றுக்கு அடிக்கடி வருகை தராமையினால் பரீட்சை ஒன்றை தவறவிட்டதோடு தமது கற்றல் செயற்பாடுகளுக்கான பின்னூட்டலைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தையும் இழந்திருந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

உயர்கல்வி நிறுவனமொன்றில் கற்பிக்கும் தனிப்பட்ட அனுபவமும் இப்பிரச்சினையை மேலும் வெளிச்சம் போட்டுக்காட்ட உதவுகிறது. நிகழ்நிலையின் ஊடாக நடாத்தப்படும் பாடங்களில் அந்தப் பாடத்திற்காகப் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கையிலிருந்து வழக்கமாகப்

3 மொனராகலை பிரதேசத்தில் பாடசாலை செல்லும் மாணவர்களது தாய்மாருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 6 ஆம் திகதி மார்ச் 2021.

பங்குபற்றும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவானதாகும். அத்தோடு மூடிழ் (Moodle) என்ற நிறுவனத்தளத்தில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையைவிட வட்சப் குழுவில் பங்குபற்றுபவர்களது எண்ணிக்கை அதிகமானதாகும். ஏனெனில் மூடிழ் அதிகளவான இணையத் தரவினை நுகர்வதனாலாகும். சில துரதிஷ்டமான சந்தர்ப்பங்களில் சில மாணவர்கள் தமது இறுதிப் பருவத் தேர்வுகளைப் பூர்த்திசெய்யமுடியாத நிலைமைக்கும் தள்ளப்பட்டுள்ளனர் (நிகழ்நிலையில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கும் சமர்ப்பிக்கப்பட்ட பருவ இறுதிப் பரீட்சை விடைத்தாள்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன).

இந்த நிலைமைகளின் தாக்கம் என்னவாக இருக்கிறது? அடுத்த பகுதியானது இலவசக்கல்வி வலியுறுத்தும் சமத்துவம் மற்றும் அது முன்னிறுத்தும் சமமாகக் கிடைக்கப் பெறுதல் என்ற வரைவினுள் நின்றுகொண்டு இந்தப் பிரச்சினையை விபரிக்க முற்படுகிறது.

## *தாக்கம்*




Source : Bandara , 2021

ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு கல்வித்துறைக்குப் பெருந்தொற்றினால் ஏற்பட்ட சமத்துவமின்மைகள்/ஏற்றத்தாழ்வுகள் இலங்கைக்கு மாத்திரம் உரியதொரு விடயமன்று. இது பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் காணப்படுகிறது. உதாரணமாக, பாகிஸ்தானில் நிகழ்நிலைக் கல்வியினால் “விரும்பப்பட்ட முடிவுகளை அடைய முடியாத நிலைமை” நிரூபிக்கப்பட்டுள்ளது. இங்கு பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் தொழில்நுட்பம் மற்றும் நிதிப்பிரச்சினைகள்

காரணமாக இணையத்தளத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளனர் (Adnan and Anwar, 2020, p. 45). உண்மையில் அபிவிருத்தியடைந்த நாடுகளின் கவர்ச்சிகரமானப் பேரினப் பொருளாதாரக் குறிகாட்டிகள் சமூக முறைமையுடன் இணைந்த கடுமையானதும் உண்மையானதுமான ஏற்றத்தாழ்வுகளை மறைக்க முற்படுகின்ற நிலையில் சமத்துவமான கிடைக்கப் பெறுதல் என்பது பற்றி சிந்திப்பது யதார்த்தமற்றது. உதாரணம் லீ மற்றும் லலாணி (Li and Lalani (2020) போன்றோர் ஐக்கிய அமெரிக்காவில் கிட்டத்தட்ட 25% ஆன 15 வயது மாணவர்கள் கல்வி கற்பதற்கான கணனியினைக் கொண்டிருக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். வர்த்தகம் மற்றும் அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் சம்மேளனத்தின் (United Nations Conference on Trade and Development –UNCTAD) டிஜிட்டல் பொருளாதாரத்தின் தலைவரான ரொப்யோன் பிரட்ரிக்சன் (Torbjörn Fredriksson) அவர்கள் , ஏற்கனவே காணப்பட்ட டிஜிட்டல் பிளவு மேலும் எவ்வாறு அதிகரிக்கலாம் எனவும் "அதிகரித்த டிஜிட்டல் நிலைமாற்றத்தினால் டிஜிட்டல் இயந்திரங்களைக் கொண்டிராதவர்கள் இழப்புக்களை எதிர்கொண்டு மேலும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்..." எனவும் குறிப்பிட்டிருந்தார் (*Coronavirus reveals need to bridge the digital divide*, 2020). நிச்சயமாக இதன் தாக்கம் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அதிகரித்துக் காணப்படுவதோடு இதன் விளைவாக வெளிப்படையான ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்கலாம்.

தற்போதைய நிலையில் நோயக்கிருமியின் நிலைமையைக் கருத்திற்கொண்டு இலங்கையின் கல்வியில் அதன் தாக்கம் பற்றிய ஆய்வுகள் சிறிதளவான முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கலாம். எனினும் பின்தங்கிய பின்னணியிலுள்ள பலர் தமது கல்வியினை மேற்கொள்கின்ற அரசகல்வி நிறுவனங்கள் குறுகியகால அறிவித்தலோடு நிகழ்நிலைக் கல்விக்குமாற எடுத்துக்கொண்ட தீர்மானமானது ஆழமான விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. ஜெயரத்ன (Jayaratne (2020) என்பவர் இணையம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் பற்றாக்குறையானது சில சந்தர்ப்பங்களில் மாணவர் தங்களது நண்பர்களைத் தமக்குப் பதிலாக ஒப்படைகளைச் செய்து சமர்ப்பிக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கான குறிப்புக்களைப் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறானதொரு அடிப்படை நிலையில் அலுவல்களை வழக்கம்போல தொடருவதற்கான சனாதிபதியின் உத்தரவு மற்றும் அது தொடர்பான தாமதம் அல்லது குறை பற்றித் தெரிவிக்க நியமிக்கப்பட்ட விசேட செயலணி போன்றன பெரும் விமர்சனத்தை எதிர்கொண்டன. சிலர் இந்த உத்தரவானது எவ்வாறு வார்த்தைகளால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றிக்

குறிப்பிடும் போது, தனிப்பட்ட வெற்றி அல்லது தோல்வி என்பது முறையான ஏற்றத்தாழ்வினால் அன்றி அவர்களது ஈடுபாடு அல்லது இல்லாமையினால்தான் (வெற்றி தோல்வி) ஏற்படுகிறது என்ற அர்த்தத்தில் (Ranasinghe, 2020) நவதாராளவாத விழுமியங்கள் பரவுதலுக்கான ஒரு சமிக்ஞை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலே விபரிக்கப்பட்ட கணிப்பீட்டின் கண்டுபிடிப்புக்களானவை பெருந்தொற்றுக் காலகட்டத்தில் கல்வியினைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட கட்டுப்பாடுகள் பற்றிப் பேசுகின்றன. மேலும் நிகழ்நிலைக்கல்வி தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கைகள் திருப்தி மட்டத்தினை வெளிப்படுத்துகின்றன. பதிலளித்தவர்களில் அரைவாசிக்கும் சற்று அதிகமானோர் தாம் திருப்தியடைந்ததாக தெரிவித்திருந்தனர் (இணைப்பு 3இல் அட்டவணை 53ஐப் பார்க்கவும்) கிட்டத்தட்ட அரைவாசி எண்ணிக்கையினர் நிகழ்நிலைக் கல்வி தொடர்பாக அதிருப்தியை வெளிப்படுத்தியமையானது பொதுவாகப் பல விடயங்களைப் பிரதிபலிக்கிறது. கீழே விபரிக்கப்பட்டது போன்று ஏற்றத்தாழ்வுகள் வலுவாக்கப்படுதல் மற்றும் அதிகரித்தல் ஆகியன நிகழ்நிலைக் கல்வியை நோக்கிய திடீர் மாற்றத்தினால் ஏற்பட்ட பிரதான விளைவுகளாகும். முறைசாராக் கருத்துப் பரிமாறல் ஒன்றில் ஆரம்பப்பள்ளியில் மூன்று குழந்தைகளின் தாயாக நிகழ்நிலையில் கல்வி கற்பதற்கான கிடைக்கப் பெறுகை என்பது ஒரு பிரச்சினையாக இல்லாவிட்டாலும்கூட நிகழ்நிலையில் கல்வி கற்பதால் மிகச் சிறிய இளம் சிறார்களின் கண்கள், தோள்ப்பட்டை, தசைகள், முதுகெலும்பு போன்றன மீது ஏற்படுத்தப்படும் மிகைப்படுத்தப்பட்ட அழுத்தத்தினால் தீங்கு விளைவிக்கும் சுகாதார விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.[4] இரண்டாம் நிலை, உயர்நிலை நிறுவனங்கள் ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்கள்[5] மற்றும் எனது சொந்த அனுபவங்களின்படி, ஒவ்வொரு தனிபட்ட கல்வியியலாளர்களதும் நிலை இவ்வாறு தான் இருக்கும் என்பது தெரியவருகிறது.

நிகழ்நிலைக் கல்வியானது குறிப்பாகக் கலப்புச் சூழலில் அல்லது ஒன்றிணைக்கப்பட்ட சூழலில் அதனைப் பயன்படுத்தும் போது சில நன்மைகள் காணப்பட்டாலும்கூட (Dede, 2008) அறிவுசார் ரீதியாக அது சமூக மற்றும் ஆக்கபூர்வமான உந்துதல்களுக்கு தீங்கு விளைவிப்பதாகக் காணப்படுகிறது. கல்விக் கோட்பாட்டின் இந்தப் போக்கானது மாணவரை

4 பாடசாலை செல்லும் மாணவர் ஒருவரது தாயாருடனான முறைசாராக் கலந்துரையாடல் (மெய்நிகர்), 12 ஆம் திகதி ஜூன் 2021.

5 மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டத்து ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 27 ஆம் திகதி மே 2021 ; உயர்கல்வி நிறுவனத்தின் இரு ஆசிரியர்களுடனான முறைசாராக் கலந்துரையாடல் (மெய்நிகர்), 19 ஆம் திகதி ஏப்ரல் 2021.

மையப்படுத்திய உருவாக்கம் (Leaner center creation) / சூழல் மற்றும் விடயதானத்தின் அடிப்படையில் (Context-and content-dependent) அறிவினை உருவாக்குதல் என்பதனை உருவாக்க முயற்சிசெய்கிறது (Rovai, 2004; Liaw, 2001). அர்பா மற்றும் பென்துயுனன் பிச் (Arbaugh and Benbunan-Fich, 2006, p. 443) குறிப்பிடுவதன்படி, பாரம்பரிய வகுப்பறைகளின் நேரம், இருப்பிடம் போன்ற அம்சங்களை நிகழ்நிலைக் கல்வி கொண்டிருப்பதில்லை. ஓர் உயர்ந்த தொடர்பாடலுக்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பு மற்றும் சந்தர்ப்பங்களை வழங்கும் ஒன்றாக பாரம்பரிய வகுப்பறை காணப்படுவதால் நிகழ்நிலைக் கல்வியானது போதாததொரு மாற்றீடாகவும் காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். தரமான அல்லது மேம்பட்ட நிகழ்நிலைப் பின்னணியில் அத்தகைய நிகழ்நிலைக் கல்வி முன்னெடுக்கப்பட்டாலும் ஆசிரியர்கள் மட்டுமன்றி கல்வியினைக் கற்கும் சகலரும் சமத்துவமான கிடைக்கப்பெறுகை மற்றும் சமமான வசதிகளைக் கொண்டிருக்கவேண்டும். இங்குதான் வெளிப்படையான சமத்துவமின்மைகள்/ ஏற்றத்தாழ்வுகள் தொடர்பான பிரச்சினைகள் மேலெழுகின்றன.

நான் பங்குபற்றிய, பெருந்தொற்று தொடர்பான பல பண்புசார் கலந்துரையாடல்களில், இந்தப் பிரச்சினைகளே முக்கியமானவையாகக் காணப்பட்டன. அவ்வாறான கலந்துரையாடல் ஒன்றில் சிறுவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இலத்திரனியல் சாதனங்களின் பாவனையானது குடும்பத்திற்கும் அயலவர்களுடனான உறவுகளுக்கும் எத்தகைய பாதிப்பினை ஏற்படுத்தியது என்பது முன்னிலைப்படுத்தப்படடிருந்தது. வீட்டினுள்ளே சகோதரர்கள் தாம் அனைவரும் குறைந்தபட்சம் நிகழ்நிலைக் கல்வியினூடாக இடம்பெறும் கல்வி நடவடிக்கைகளில் சிலவற்றிலாவது பங்குபற்றுவதனை உறுதிசெய்வதற்காக விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஏனெனில் பெற்றோர்களால் குடும்பத்திலுள்ள அனைவருக்கும் தனிப்பட்ட இலத்திரனியல் சாதனங்களை வாங்க இயலாத நிலைமை காணப்பட்டது. திறன்பேசி சாதனத்தை வைத்திருப்பவர்கள்கூட தமது அயல் வீட்டுக்காரர்களுடன் கூட்டாகப் பயன்படுத்த முடியாத நிலையும் காணப்பட்டது. காரணம் திறன்பேசி வசதிகளுக்கான செலவினை பெரிதும் சிரமத்துக்குள்ளாகியே சமாளிக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது[6].

உயர்கல்வியில் நிகழ்நிலைக் கல்வி நோக்கிய திடீர் மாற்றமானது, நிறுவனமட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் அதிகரித்த ஏற்றத்தாழ்வுகளை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்

6 இரண்டாம் நிலைக் கல்வியைக் கற்கும் செயற்பாட்டாளர் குழுவொன்றுடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 7 ஆம் திகதி ஏப்ரல் 2021.

மத்தியில் ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. மறுபுறமாக அலுவலக நோக்கத்திற்காக படிவங்களினது பெட்டிகளில் விடயம் இடம்பெற்றுள்ளது எனக் குறிப்பிடவும் மாணவர்கள் பட்டதாரிகளாக வெளியேறியமையை உறுதிசெய்வதற்காக விடயங்களை செய்து முடிக்குமாறு அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டன. இத்தகைய பட்டதாரிகள் ஒரு தோல்வியடைந்து கொண்டிருக்கும் பொருளாதார முறைமைக்கு விடப்படும்போது அந்த முறைமையினால் அவர்களை உள்வாங்க முடியாமல் போகிறது. மறுபுறம் இதற்குப் பின்னால் உத்தரவுகளை முன்னிலைப்படுத்துகின்ற நிலைப்பாடுகள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன. இத்தகைய தார்மீகத் தன்மை கொண்ட பிரச்சினைகளை கையாளுவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆசிரியர்கள் முரண்பட்டுக் கொள்கின்றனர். குறிப்பாக பரீட்சைகள் நிகழ்நிலையில் இடம்பெறுகின்றபோது பல மாணவர்கள் கற்றலுக்கான வளங்கள் இல்லாது பெரும்பிரச்சினைகளை எதிர்கொள்வதோடு, அந்த இலக்குகளை அடைவதற்காக மாணவர்களைத் தயாரிப்பது தொடர்பான தார்மீகக் கடமையும் ஆசிரியர்களுக்குக் காணப்படுகிறது. கோரிக்கைகளானது சிதைவடைந்த நிலையில் மாணவர்களுக்கு உரியநேரத்தில் தமது வேலைகளை முடிக்க முடியாததொரு நிலை காணப்படுகிறது. இதனால் ஆசிரியர்கள் நிகழ்நிலைக் கல்வியினால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக ஓர் உறுதியான நிலைப்பாட்டினை எடுக்கமுடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

மேற்கூறப்பட்ட நிலைமையில் எமது சமூகத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ள அடிப்படை கொள்கைகள் நுட்பமாகவும் திடமாகவும் மீள் பேரம்பேசலுக்குள்ளாகியுள்ளன. இது சமூகமொன்றினது சமூக ஒப்பந்தம் என்பதன் அடிப்படையினை ஒருவகையில் மாற்றத்திற்குள்ளாகியுள்ளது.

## இதன் அர்த்தம் என்ன?

ஒரு அரசியல் சமூகமாக நாம் எங்கே சென்று கொண்டிருக்கின்றோம்? இந்த அனுபவங்கள் எமக்கு எதனைச் சொல்கின்றன? சமூக இருப்பின் கொள்கைகள் எதனைச் சொல்கின்றன, பூகோளப் பெருந்தொற்றுச் சூழலில் இந்தக் கொள்கைகள் எவ்வாறு பரிணமிக்கின்றன? தீர்மானம் எடுத்தலில் அவசரகாலத் தன்மையானது இவற்றினை வினைத்திறனாக நியாயப்படுத்தப் போதுமானதா? இலங்கையினது சமூக ஒப்பந்தத்தில் இந்தப் பரிணாமம் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினைகளின் பிரதிபலிப்புகள் பற்றி நோக்கும்போது தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்ற புதிய கருத்தியல் மற்றும் உளவியல்

பரப்புகளுடன் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இரண்டு கருப்பொருட்கள் தோற்றம் பெற்றுள்ளன. இந்த இரண்டு கருப்பொருட்களும் பரந்த நவதாராள முறைமை என்பதற்குள் அடக்கப்படுவதோடு உண்மையில் அதிலிருந்து தோன்றிய ஒன்றாகவும் காணப்படுகின்றன.

## *நவதாராள அடிப்படை*

இரண்டாம் நிலை கல்வியோடு தொடர்புடைய ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர்கள் போன்றோருடனான கலந்துரையாடல்களில் தொடர்ச்சியாக விவாதிக்கப்படும் கருப்பொருளாக இலவசக்கல்வி நடைமுறையில் இருந்தாலும் பெருந்தொற்றுக் காலத்தில் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதானது முற்றுமுழுதாகத் தனிப்பட்ட மாணவன், பெற்றோர், ஆசிரியர் அல்லது சில சமயங்களில் அதிபர்களிடம் விழுந்துள்ளது பற்றிய விடயம் காணப்பட்டது. துன்பகரமான நிகழ்வு என்னவெனில், தமது பிள்ளைகளின் கல்வியைத் தொடருவது தனிப்பட்டவரின் பொறுப்பு என்ற நிலைமை இயல்பாக்கப்பட்டுள்ளதோடு அவர்களுடைய உரிமைகள் பற்றிய எந்தவிதமான கலந்துரையாடல்களும் இடம்பெறாத நிலையும் காணப்படுவதாகும். எவ்விதமான கேள்விகளும் கேட்கப்படாத நிலையில் கல்விக்கான சமத்துவமான கிடைக்கப் பெறுகையினை உறுதிப்படுத்தும் பொறுப்பிலிருந்து சேமநல அரசு முற்றுமுழுதாக விடுபட்டுள்ளது.

இந்த ஆய்வுக்காக அதிபர் ஒருவருடன் இடம்பெற்ற நேர்காணலில் இது தெளிவாகப் புலப்பட்டது. தெளிவான வகையில் தொழில்சார் ஒழுக்கத்தினைப் பின்பற்றுகின்ற ஒருவராக நிகழ்நிலைக் கல்வி தொடர்பான கட்டமைப்புசார் பிரச்சினையினைத் தனிநபருடைய அர்ப்பணிப்புடன்கூடிய விடயமாக அவர் கண்டுகொண்டிருந்தார். இதில் தனிப்பட்ட உத்வேகம் மற்றும் அர்ப்பணிப்பு என்பன குறித்த சில பிரச்சினைகள் காணப்படுவதோடு மாணவரோ, ஆசிரியரோ ஒருவர் நிகழ்நிலையினூடாக கல்வி நடவடிக்கைகளில் பங்குபற்றுவது தொடர்பான கட்டமைப்புசார் தடைகள் வெறுமனே தனிநபர் தெரிவுகளுடன் தொடர்புடையனவாகக் குறைத்து மதிப்பிடும் நிலைமை ஏற்படுகின்றது. இந்த நிலைமையில் முறைமையினை எவ்விதமான தொந்தரவுக்கும் ஆளாக்காமல் தாமாகவே அனைத்து வேலைகளையும் செய்பவர்கள் (அரசாங்கத்திடம் பணம் இல்லையில்லையா[7]) அவர்களது தொழில் ஒழுக்கம் தொடர்பாகப் பாராட்டப்படுகின்றனர். எனினும்

7 வலப்பனை பிரதேச பாடசாலை அதிபருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 5 ஆம் திகதி ஜூன் 2021.

இலவசக்கல்வியில் நிறுவனப் பொறுப்புடைமை என்பது முற்றிலும் கவனிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. நிகழ்நிலையில் கல்விசார் நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் ஒத்திசைவில்லாத நேரக் கற்றலுக்குத் தேவையான கற்றல் ஆவணங்களின் கிடைக்கப் பெறுகை தொடர்பாகக் காணப்பட்ட குறைந்தளவான நிறுவன ஆதரவுகள் குறித்து ஒருபோதும் கேள்வியெழுப்பப்படவில்லை. மாறாக இந்த கற்பித்தல் முயற்சிகளுக்காக நிதிச்செலவினைத் தாமே சுமந்துகொண்டு எப்படியாவது தமது கற்பித்தல் பணிகளைத் தொடருகின்ற ஆசிரியர்களது அர்ப்பணிப்பு மற்றும் ஊக்கம் அல்லது ஒழுக்கநெறி போன்றனதான் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன.

இந்த அதிபர் இன்னும் ஒருபடி மேலே சென்று தனது பாடசாலை ஆசிரியர்களின் இணையத்தரவுப் பொதியினை வாங்க முடியாதவர்களுக்கு தானே செலவழித்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறன்பேசியை வாங்கமுடியாத பெற்றோர்களுக்கு, அவர்கள் தமது குழந்தைகளின் எதிர்காலத்துக்காக சேமித்து வைத்திருக்கும் சேமிப்பினைப் பயன்படுத்தி திறன்பேசியினைப் பெற்றுக்கொள்ளுமாறும் அந்த அதிபர் அறிவுறுத்தியுள்ளார். காட்டப்படும் ஈடுபாடு, நேர்மை வாய்ந்த தன்மை ஆகியன பாராட்டுவதற்குரியதாகக் காணப்பட்டாலும் உரிமைகள் பற்றிய கலந்துரையாடல் உருவாகுவதற்கான எவ்விதமான சாத்தியமும் ஏற்படாததொரு ஆபத்தான நிலைமையும் காணப்படுகிறது.

உயர்கல்வியில் இந்த விடயம் ஓரளவுக்கு மேலோங்கியதாகக் காணப்படுகிறது. காரணம் இது தொடர்பாகப் பல்கலைக்கழகப் பரப்பில் கடந்த காலங்களில் இடம்பெற்ற போராட்டங்களாகும். சம சந்தர்ப்பமான கிடைக்கப்பெறுகை, பீடங்களின் மீதான அழுத்தங்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்கள் பலவீனமாகவேனும் பீட மட்டத்தில் கூட்டுத் தீர்மானமெடுத்தல் செயன்முறையினால் இடம்பெற்றன. நிறுவன ரீதியாக அளிக்கப்பட்ட கற்றல் முகாமைத்துவ முறையானது தங்கள் விருப்பப்படி ஆசிரியர்கள் கற்பித்தலை மேற்கொள்வதற்காகக் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளது. இது ஆசிரியர்கள் தமது நிகழ்நிலைக் கல்விக்காகத் தனிப்பட்ட ரீதியில் செலவளிக்க வேண்டிய தேவையினை இல்லாது செய்ததோடு மாணவர்களுக்கும்கூட நிகழ்நிலைக் கல்வி நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கான செலவினையும் குறைத்ததெனலாம்.

இதன் மூலம் பல்கலைக்கழகங்களில் அனைத்தும் சிறப்பாக இடம்பெறுகிறது என்பதனை சுட்டிக்காட்டுவது அல்ல இதன் நோக்கம். ஏலவே குறிப்பிட்டது போன்று வினைத்திறன் தொடர்பான குழப்பமான நிலைமையானது நிர்வாகப் பக்கத்தில் மட்டுமல்ல மாணவர்களின்

பக்கத்திலும் காணப்படுகிறது. மாணவர்கள் பட்டம்பெறும் அவசரத்தில் உள்ளனர். வேலைவாய்ப்பினைப் பெறுதல் தொடர்பான தடைகள் அதிகரித்துவரும் நிலையில் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி தொழில்வாய்ப்புக்காக எதிர்பார்த்திருக்கும் நிலையிலேயே அவர்கள் கடுமையான ஏமாற்றத்திற்கு ஆளாகின்றார்கள். வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களானவை ஏற்கனவே அரசியல் வலையமைவின் கட்டுப்பாட்டுக்குக் கீழுள்ள நிலையில் பெருந்தொற்றினால் மென்மேலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். இந்நிலையானது புதிய பட்டதாரிகளை விரக்தியில் தள்ளியுள்ளது. பொருளாதாரத்தில் காணப்படும் கட்டமைப்பு ரீதியான இடைவெளியானது தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதோடு பட்டதாரிகள் தொழில்வாய்ப்பினைப் பெறமுடியாது இருப்பதற்கு காரணம், பல்கலைக்கழகமானது தேவையான திறன்களை உருவாக்கத் தவறியமையாகுமெனக் குற்றஞ்சாட்டப்படுகிறது. வினைத்திறனாக அத்தகைய திறன்களைப் பட்டதாரிகளிடையே உருவாக்குமாறு பல்கலைக்கழக ஆசிரியர்கள் உந்தப்படுகிறார்கள்.

## *நவதாராளவாத ஒழுக்கமும் நெறிமுறைகளும்*

பகுத்தறிவுக்கு அப்பால் உரிமைகள் மற்றும் தகுதிகள் பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்ற நிலையில், மேலே கூறப்பட்டது போல நபர்களின் பொறுப்புகளை/ பதில்களை வழிகாட்டுவதில் நெறிமுறைகள் வினைத்திறனானவையாகக் காணப்படுகின்றன. நெறிமுறைகள் தொடர்பாக அதிக நம்பிக்கையினைக் கொண்டிராதவர்களும்கூட உரிமைகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைப்பதில்லை. கோரிக்கைகளை நடைமுறைச் சாத்தியமாக்கும் அரசியல் ரீதியான ஏற்பாடுகள் பற்றிச் சிந்திக்காமல் விடயங்களை செய்து முடிக்கவேண்டும் என்ற மனநிலைக்கு அதிக முன்னுரிமை கொடுக்கின்றனர். இந்த வகையான மனநிலையினை இயல்பானதாக்கும் நவதாராளவாதச் சிந்தனைகளின் தனியாள்வாதத் தர்க்கத்தினை இது நிலைநிறுத்துவதாக அமைகிறது. இந்த நிலைமையானது தமது உரிமைகளில் ஆகக்குறைந்த சிலவற்றையாவது எவ்வாறு பலர் விட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது என்பதனைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக அவர்களை மாற்றியுள்ளது.

சிக்கலான இந்தப் பின்னணியில் இலவசக்கல்வி மற்றும் அதனது எதிர்காலப் போக்கு பற்றியும் பரிசீலிக்க வேண்டியுள்ளது. தமக்கு அல்லது தமது அன்புக்குரியவர்களது கல்வியினைப் பெற்றுக்கொள்ளுதல் தனிப்பட்ட அல்லது குடும்பங்களின் பொறுப்பு எனப் பிரசைகள் கருதுகின்ற நிலையானது இலவசக்கல்வி என்ற

எண்ணக்கருவினை வெற்றானதாக்குகிறது. இது பின்னர் கல்வி என்பது தனிப்பட்டவரின் பொறுப்பு மற்றும் தெரிவு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு பின்னர் ஒரு பண்டமாக மாறும் அபாயத்தன்மையோடு காணப்படுகிறது. பெருந்தொற்றுக்கு மத்தியிலும் கல்விக்கான தனியார்மயமாக்கலின் பல வடிவங்கள் எழுச்சியடைகின்ற போக்கினையும் அடையாளம் காணமுடிகிறது. கணிப்பீடு வெளிப்படுத்தியதன்படி, பாடசாலை செல்லும் சிறார்களினைக்கொண்ட குடும்பங்களிலிருந்து பதிலளித்தவர்களில் 79.7% ஆனோர் தொற்றுநோய்க் காலத்திலும் தனியார் வகுப்புக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றதாகக் குறிப்பிட்டனர் (இணைப்பு 3 அட்டவணை 54 மற்றும் 55ஐப் பார்க்கவும்).

இலவசக்கல்வி பகுதியளவில் சரிந்து கொண்டிருக்கும் நிலையில் கல்விக்கான தனியார் வடிவங்கள் பெரும்பாலும் தடையின்றித் தொடருகின்ற நிலையானது நாம் நவதாராளவாத சட்டகத்தினுள் எமது முன்னுரிமைகளை நிலைநிறுத்தியதனால் தான் என்பது தெட்டத்தெளிவாகப் புலப்படுகிறது. எமது எண்ணப்பாங்கில் ஏற்பட்ட மாற்றமே பரந்த கல்விப் பரப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கும் அதன் பாதிப்புகளுக்கும் காரணமாக அமைகிறது. இந்த ஆய்வுக்காக நேர்காணல் செய்யப்பட்ட இரண்டு அதிபர்களில் ஒருவர் ஆசிரியர்களால் தமது கடமைகளைத் தீவிரமாக மேற்கொள்ள முடியும் என்பதற்கான சிறந்த உதாரணமே தனியார் வகுப்புக்கள் என அவர் அவற்றை உயர்வாகப் பேசினார். தனியார் வகுப்புக்களில் ஆசிரியர் கொண்டிருக்கும் அதிகரித்த பொறுப்புத்தன்மையானது அவர்களுக்குக் கிடைக்கப் பெறும் செயற்றிறன் அடிப்படையிலான வெகுமதியினாலேயே ஏற்படுவதாகக் குறிப்பிட்டார். இந்த விதமான கருத்து நிலையானது கல்வியினை மேலும் பணமாக்குவதற்கான ஒரு நிலையினை ஏற்படுத்துவதோடு இலவசக்கல்வியின் கருத்தியல் அர்ப்பணிப்பின் பேரில் முழுமையாக பண்டமயமாதலுக்கும் ஆளாகிறது.

இந்தக் கலந்துரையாடலானது சமகாலக் கல்வியில் அதிகரித்து வரும் நவதாராளவாத பின்னணியில் அரசியல் சமூகமாக நாம் எமது சனநாயக அர்ப்பணிப்புகள்/ ஈடுபாடுகளை மெதுவாக ஆனால் நிச்சயமாக கைநழுவவிட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதனைச் சுட்டிக்காட்ட முயலுகிறது. எழுச்சியடைந்து வரும் இந்தப் பின்னணியில் ஒழுக்க ரீதியான அர்ப்பணிப்புக்களானவை சந்தைப் பொறிமுறைக்கேற்றவாறு மீள்வரையறை செய்யப்படுகின்றன. அதன்போது தனிப்பட்ட ஈடுபாடு மற்றும் பொறுப்புத்தன்மை என்பன மேலும் வலியுறுத்தப்படுவதோடு இந்தப் பாரபட்சம் தொடர்பான உரிமைக்கோரலானது சோம்பேறித்தனத்துக்கான ஒரு சாக்கு என அது நிராகரிக்கப்படுகிறது. புதுவிதமான சிந்தனைக்கு மாறிக்கொண்டிருக்கும் முறைமையில் தற்போது இலவசக்கல்வியானது

பணத்தினால் இயங்குகின்ற கல்விமுறைமைக்குத் தேவையான குறைந்தபட்ச முன்னேற்றத்தினைக் கொண்டதொரு வெறும் அலங்காரமாகவே காணப்படுகிறது.

## முடிவுரை

கல்வி என்ற அரியத்தினூடாகத் பெருந்தொற்றானது அரசு - பிரசை என்ற உறவில் ஏற்படுத்திய தாக்கத்தினைப் புரிந்துகொள்வது தான் இந்த அத்தியாயத்தின் முயற்சியாகும். பெருந்தொற்று மற்றும் அமுலாக்கப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகள் என்பனவே திடீரென நிகழ்நிலைக் கல்விக்கு மாறுவதற்கான நியாயப்படுத்தல்கள் என்பதே இந்த அத்தியாயத்தின் புறப்பாடாக இருந்தது. எனினும் பெருந்தொற்றுக் காலத்தில் கல்வியைக் கற்பதற்கான நிறுவன ரீதியான ஏற்பாடுகள் இடம்பெறாது இணைய இணைப்பினை ஏற்படுத்தல் மற்றும் தேவையான சாதனங்களைப் பெறுவதில் தனிப்பட்ட மாணவர்களின் திறனில் தங்கியிருக்கின்றதொரு நிலையில் இலவசக்கல்வி என்று அதனைத் தொடர்ந்து அழைக்க முடியுமா என இந்த அத்தியாயம் கேள்வியெழுப்புகிறது. சமத்துவவாதக் கொள்கைகள்/அர்ப்பணிப்புகள் மீது கட்டியெழுப்பப்பட்ட இலவசக்கல்வி விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளதோடு பல சந்தர்ப்பங்களில் தெளிவான பாரபட்சங்களையும் சமூகத்தில் அதிகரித்துள்ளது.

பெருந்தொற்று முடிவடைந்த பின்னரும் இதன் தாக்கங்கள் இருக்கும் எனவும் இது பெருந்தொற்றுக்கு முன்னரான யதார்த்தங்களாலேயே இடம்பெற்றது எனவும் இந்த அத்தியாயம் வலியுறுத்துகிறது. நிகழ்நிலைக் கல்வியானது எவ்விதமான மாற்றீடும் இல்லாத நிலையில் உள்வாங்கப்பட்ட ஒன்று என்றும் நிறுவன ரீதியான ஆதரவு வழங்கப்படாமல் எதிர்காலத்துக்கு முற்றிலும் அவசியமானது என்பதும் இலவசக்கல்வியினை ஆக்கிரமித்து கல்வியினைப் பணமாக்குதலுக்கான ஆரம்பகட்டச் செயற்பாடாகவே இதனைக் கொள்ளமுடிகிறது. கல்வியினைப் பெறுதலானது பணமாக்கலுக்கு ஆளாகின்றபோது இதற்கான பொறுப்பு அரச நிறுவனங்களைச் சார்ந்ததாக இருக்கமாட்டாது. சேமநலன் தொடர்பான சகல விவாதங்களும் சந்தைத் தர்க்கத்தினால் பிரதியீடு செய்யப்படும். அத்தோடு கடுமையான மற்றும் பரந்த ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியில் உரிமைகளைக் கோருதல் என்பதும் சாத்தியமற்றதாகிறது.

இந்த அலுவல்கள் தொடர்பாகக் குறைந்தளவான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. அத்தோடு பொறுப்புக்களைத் தனிநபருக்குரியதாக்குதல் என்பது இயல்பாக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் பரவிவரும் தாராளவாத நெறிமுறைகள் வியாபித்துள்ள அக்கறையற்ற

தன்மையினால் வெளிப்படையாகத் தெரிகின்றன. கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவர்கள் நிகழ்நிலைக் கல்வி தொடர்பாக குறைந்தளவான குறைநிறைகளை வெளிப்படுத்துகின்றனர். கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவர்கள் கல்வி முடிவடைந்தவுடன் திறமையான மாணவர்கள் நாட்டினதும் வீட்டினதும் பொருளாதாரத்துக்குப் பங்களிக்க முடியும் என நம்ப வைக்கப்படுகிறார்கள். தெளிவான வகையில் எதிர்மாறான நிலைப்பாடானது காணப்படுகின்ற போதிலும் வினைத்திறனான பகுத்தறிவு மற்றும் அவசரத்தினால் உந்தப்பட்டு இது இயல்பானதொரு விடயம் என சிந்திக்கின்ற தன்மையும் ஏற்பட்டுள்ளது.

கல்வியினூடாக நவதாராளவாதம் படிப்படியாக ஒருங்கிணைக்கப்பட்டுக் கொண்டிருப்பதோடு பெருந்தொற்றானது இம்மாற்றத்தினை அதிகரிக்கச் செய்து அதனை நியாயப்படுத்தவும் முயல்வதனை இங்கு அவதானிக்க முடிகிறது. கல்வி என்பது சமூக நீதி மற்றும் மக்களின் உரிமைக்கான ஒரு ஊடகமாக இல்லாமல் ஒரு பண்டமாக தனிநபர்களின் பொருளாதார நலன்களைப் பராமரிப்பதாகக் காணப்படுகிறது. இந்த நிலையில் கல்வி என்பது இந்த மாற்றத்தினை விரும்பத்தக்க வகையில் மேற்கொள்வதற்காக சமத்துவம் என்ற பாசாங்கினைப் பயன்படுத்தி சந்தையின் தேவைக்கேற்ற வகையில் கல்வியானது நிலைமாற்றம் செய்யப்படுகிறது.

## உசாத்துணைகள்:

Adnan, M. and Anwar, K. (2020) 'Online Learning amid the COVID-19 Pandemic: Students' Perspectives', *Journal of Pedagogical Sociology and Psychology*, 2(1), pp. 45–51.

Amarakeerthi, L. (2020) 'Let's Make Our Education "More Open Than Usual"', *Colombo Telegraph*, 16 December. Available at: https://www.colombotelegraph.com/index.php/lets-make-our-education-more-open-than-usual/ (Accessed: 24 July 2021).

Arbaugh, J. B. and Benbunan-Fich, R. (2006) 'An Investigation of Epistemological and Social Dimensions of Teaching in Online Learning Environments', *Academy of Management Learning & Education*, 5(4), pp. 435–447.

Bandara, S. (2021) *Facebook*. Available at: https://www.facebook.com/ArtOfSajith/photos/a.281558598710607/1858830217650096/?type=3 (Accessed: 24 July 2021).

*Coronavirus reveals need to bridge the digital divide* (2020) *UNCTAD*.

Available at: https://unctad.org/news/coronavirus-reveals-need-bridge-digital-divide (Accessed: 24 July 2021).

Davies, B. and Bansel, P. (2007) 'Neoliberalism and education', *International Journal of Qualitative Studies in Education*, 20(3), pp. 247–259. doi: 10.1080/09518390701281751.

Dede, C. (2008) 'A Seismic Shift in Epistemology', *EDUCAUSE Review*, 43(3), pp. 80–81.

Jayaratne, H. (2020) 'Covid-19 Through The Perspectives Of Children & Youth', *Colombo Telegraph*, 3 July. Available at: https://www.colombotelegraph.com/index.php/covid-19-through-the-perspectives-of-children-youth/ (Accessed: 24 July 2021).

Jayasuriya, J. E. (1969) *Education in Ceylon before and after independence: 1939-1968*. 1st edition. Associated Educational Publishers.

Li, C. and Lalani, F. (2020) *The COVID-19 pandemic has changed education forever. This is how*, *World Economic Forum*. Available at: https://www.weforum.org/agenda/2020/04/coronavirus-education-global-covid19-online-digital-learning/ (Accessed: 24 July 2021).

Liaw, S.-S. (2001) 'Designing the hypermedia-based learning environment', *International Journal of Instructional Media*, 28(1), pp. 43–56.

Pace, C., Pettit, S. and Barker, K. (2020) 'Best Practices in Middle Level Quaranteaching: Strategies, Tips and Resources Amidst COVID-19', *Becoming: Journal of the Georgia Association for Middle Level Education*, 31(1), pp. 2–13. doi: 10.20429/becoming.2020.310102.

Perera, K. (2021) '"Marrying the Monster": World Bank Loans and English Language Projects in Sri Lankan Universities', *University of Colombo Review*, 2(1), pp. 42–60.

Ranasinghe, P. (2020) 'Zooming of Education', *Groundviews*, 21 June. Available at: https://groundviews.org/2020/06/21/zooming-of-education/ (Accessed: 24 July 2021).

Rovai, A. P. (2004) 'A constructivist approach to online college learning', *The Internet and Higher Education*, 7(2), pp. 79–93. doi: 10.1016/j.iheduc.2003.10.002.

Sivamohan, S. (2021) 'Kuppi Talk: setting the terms of the debate on

education', 3 February. Available at: http://island.lk/kuppi-talk/ (Accessed: 24 July 2021).

'Socio-Economic Index in the face of COVID-19' (2021) *Centre for Policy Alternatives*, 30 June. Available at: https://www.cpalanka.org/socio-economic-index-in-the-face-of-covid-19/ (Accessed: 30 June 2021).

Toquero, C. M. (2020) 'Challenges and Opportunities for Higher Education Amid the COVID-19 Pandemic: The Philippine Context', *Pedagogical Research*, 5(4). Available at: https://eric.ed.gov/?id=EJ1263557 (Accessed: 24 July 2021).

Venugopal, R. (2015) 'Neoliberalism as concept', *Economy and Society*, 44(2), pp. 165–187. doi: 10.1080/03085147.2015.1013356.

# 7

# எண்ணெய்ச் சட்டியிலிருந்து நெருப்புக்குள்: கொவிட் பதில் நடவடிக்கைகளும் உள்நாட்டுக்குள் குடிபெயர்ந்த ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களும்

*கௌஷினி தம்மாலகே*

## அறிமுகம்

கொவிட்-19 பெருந்தொற்றானது சமூகத்தின் பல துறைகளை அச்சுறுத்தலுக்குள்ளாக்கி, உலகினைப் பெரும் சவாலுக்குட்படுத்தி வருகிறது. தேசிய உள்நாட்டுப் பொருளாதாரங்கள் இதன் தாக்கங்களினால் தள்ளாடிக் கொண்டிருப்பதோடு சில சந்தர்ப்பங்களில் முழுமையான சரிவின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. நோய்க்கிருமியானது மாற்றமடைந்து வருவதோடு கிட்டத்தட்ட கட்டுப்படுத்த முடியாத அளவுக்குப் பரவிவருகிறது. வைத்தியத் துறையானது திறம்பட பதிலளிப்பதற்காகப் போராடுகிறது. நாட்டினை முடக்குதல் மற்றும் சமூக இடைவெளி ஆகியன வினைத்திறனான கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளாக நிரூபிக்கப்பட்டன. வாழ்வாதாரங்களை இழந்த உயிர்கள் காப்பாற்றப்படுகின்றன. ஆடைத்துறையினது கேள்விகளில் பாரியளவான சரிவுகள், கொள்முதல் ஆணைகள் தொடர்ச்சியாக இரத்துச்செய்தல் போன்றவற்றுக்கான நியாயப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலீட்டாளர்கள் தமது செலவுகளைக் குறைத்தமையால் தொழிற்சாலைகளும் தமது இழப்புக்களைக் குறைக்க முயற்சிக்கின்றன. இவற்றினைத் தவிர்க்க முடியாமையினால் ஊதிய வெட்டுக்கள் மற்றும் பணிநீக்கங்கள் போன்றன தொழிலாளர்களை முன்னரைவிட கடுமையான சூழ்நிலைக்குத்

தள்ளியுள்ளன. இந்தச் சூழ்நிலையில் இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் தொழிலாளர்களின் அனுபவங்களின் மீது கவனஞ்செலுத்தி மூலதனம்-கூலி தொடர்பில் பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கங்கள், இந்தச் சமநிலை தொடர்பாக அரசு வகிக்கும் நடுநிலையான தொழிற்பாடு பற்றி விபரிப்பதாக இவ்வத்தியாயம் அமைகிறது.

பொதுவான விளக்கங்கள் மற்றும் பரந்துபட்ட நூல்கள் வெளிப்படுத்துவதன்படி சுதந்திர வர்த்தக வலயத் தொழிலார்கள் என்போர் சமூகத்தில் பெரிதும் ஒடுக்கப்பட்டதொரு குழுவாகக் காணப்படுகின்றனர். கலாசார நெறிமுறைகள் மற்றும் சாதாரண கதையாடல்களில் சமூகத்தின் விளிம்பில் அவர்கள் வைக்கப்பட்டுள்ளதோடு அதிகாரமற்ற குரலில்லாத ஒரு குழுவினராக அவர்கள் வரையறுக்கப்பட்டுள்ளனர். பெருந்தொற்றானது சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் நிலைமையினைக் கடினமாக்கியதோடு ஆழமான பாதிப்பிற்கும் ஆளாக்கியுள்ளது. இந்த அத்தியாயத்தில் முதலாவதாக பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள அதிகரித்த பாதுகாப்பற்ற நிலைமை மற்றும் பாதிப்புகள் தொடர்பான பொருளாதார அனுபவங்கள் விபரிக்கப்படுகின்றன. இரண்டாவதாக, பெருந்தொற்றினால் அவர்களது தொழில் மற்றும் தனிப்பட்ட வாழ்வில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களும் இதன்விளைவாக அவர்கள் சமாளிக்க வேண்டிய தீவிரமான சிரமங்களும் விபரிக்கப்படுகின்றன. மூன்றாவதாக, ஏற்கனவே காணப்பட்ட விளக்கங்களானவை பெருந்தொற்றுக் காலத்தில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களை மேலும் ஓரங்கட்ட எவ்வாறு பங்களித்துள்ளன மற்றும் அத்தகைய கீழ்த்தரமான விளக்கங்கள் மேலும் எவ்வாறு பரிணாமமடைந்துள்ளன என்பதும் நோக்கப்படுகிறது. இறுதியாக, கூட்டாகக் கருதப்படும் ஒரு சமூகத்தின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த மூலதனத்தை உடைமையாகக் கொண்டவர்கள், அதனைப் பயன்படுத்துபவர்களின் வகிபங்கு மற்றும் தொழிலாளர்களுக்கு கிடைக்கப்பெறச் செய்வதற்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் போன்றன பற்றியும் பரீட்சிக்கப்படுகிறது. பகுப்பாய்வுக்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலை பண்புசார் தரவுகள் பயன்படுத்தப்படுகின்றன.

## பின்னணி

1970களின் பிற்பகுதியில் திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து சுதந்திர வர்த்தக வலயங்களானவை (Free Trade Zones) இலங்கையின் கிராமப்புறப் பெண்களின் உழைப்பை மூலதனப்படுத்தும் தொழில்வாய்ப்புக்களினூடாக ஒரு நவதாராளவாதப் பரப்பினை (Jawardena, 2020) உருவாக்கியுள்ளன. அவர்கள் "ஏற்றுமதி

சார்ந்த கைத்தொழில்மயமாக்கலை நோக்கிய மகத்தான பொருளாதார மாற்றத்தின் முதுகெலும்பாக இருந்திருக்கிறார்கள்"(Hancock, 2006, p. 1). ஹேவாமன்னே அவர்கள் பெண்களின் தருணத்திற்கேற்றவாறு நடக்கும் தன்மை, கீழ்ப்படிவு, இணையாக சம்பாதிக்கும் தன்மை என்பவற்றுடன் தொடர்புடைய ஆணாதிக்க மனப்பாங்கானது இந்த இடங்களில் வேண்டுமென்றே எவ்வாறு பெண்மைப்படுத்தப்படுகிறது (Hewamanne, 2020, p. 3) என விபரித்த அதேவேளை குணதிலக (Gunathilake, 2019) என்பவர் பெண்களின் இந்தக் கீழ்ப்படிவு ஏற்பாட்டின் மூலம் பூகோள மூலதனம் எவ்வாறு இலாபத்தை உறிஞ்சுகிறது அல்லது பிரித்தெடுக்கிறது எனக் குறிப்பிடுகிறார்.

பால்நிலையில் மட்டுமன்றி இந்த இளம்பெண்கள் பொருளாதார, சமூக ரீதியாக பின்தங்கிய பின்னணி மற்றும் குறைந்த கல்வி மட்டத்தை (Hewamanne,2017), கொண்டவர்களாக இருக்கின்றனர். இதனால் பூகோளத் தொழிற்சாலைகளின் தேவைக்கான வினைத்திறனான தொழிலாளர் வகைக்குத் தேவையான பொருத்தமான விண்ணப்பதாரர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இந்தப் பெண்கள் பெரும்பாலும் வெவ்வேறு இடங்களை வதிவிடங்களாகக் கொண்டவர்களாக இருப்பதனால் சுதந்திர வர்த்தக வலயத்துக்கு அண்மையிலுள்ள இடங்களில் தமது சொந்தச் செலவில் வசித்து வருகின்றனர். இந்த இருப்பிடங்களின் வருந்தத்தக்க நிலைமைகள் நன்கு அறியப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட ஒன்றாகும் (Hewamanne, 2003, 2017, 2019, 2018; Jayawardena, 2017, 2020; Hancock, Middleton, and Moore, 2012).

இந்தக் கடினமான சூழலிலிருந்து மேலெழுந்து வருகின்றவர்களுக்குக் கிடைக்கப்பெறும் அடையாளம் என்னவெனில் 'வலயப்பெண்' (Zonal girl) என்பதேயாகும். இவர்கள் சுரண்டப்பட்டு மாசுபடுத்தலுக்காளாகி கலாசாரங்களினால் கேள்விக்குள்ளாக்கப்படும் ஆட்களாகக் காணப்படுகின்றனர். எனவே ஒழுக்கமின்மை, விபச்சாரம், கருக்கலைப்பு மற்றும் தங்களது ஒழுக்க ரீதியான தரங்களால் பாதிப்படைபவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் அயலவர்களால் 'தையல் துண்டுகள்' (Juki pieces) என்றும் சுதந்திர வர்த்தக வலயம் 'பொது விபச்சார வலயம்' என்றும் குறிப்பிடப்படுவதனையும் காணலாம் (Hewamanne, 2003; Jayawardena, 2017; Attanpola, 2006; Hancock, 2006).

தொழிற்சாலையில் அவர்கள் வாழ்க்கை சிறப்பானதாக இல்லை. தொடர்ச்சியான அடைவுமட்டத்தினை எட்டுவதற்காகக் கடுமையான அழுத்தங்கள், கட்டாய மேலதிகச் சுழற்சிமுறைப் பணி, மேற்பார்வையாளர்களால் துன்புறுத்தப்படல் (வாய்மொழி, உடலியல் ரீதியாக) போன்றவற்றுக்கு ஆளாகின்றனர். இறுதியில் உளவியல் ரீதியான

பாதிப்பினை எதிர்கொள்ளவும் நேரிடுகிறது. கைத்தொழில்மயமாதல் முறைமையினால் பாதிப்படைந்தவர்களாக, வலிமையற்றவர்களாக, அடிமைப்படுத்தப்பட்டவர்களாக மற்றும் கீழ்ப்படுத்தப்பட்டவர்களாக மாறியுள்ளனர் (Jayawardena, 2017; Hancock, 2006).

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து இரண்டு அனுமானங்களைப் பெறக்கூடியதாகவுள்ளது. முதலாவது, சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரிகின்ற பெண்கள் பொதுவாக சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளி மற்றும் பெண் என்ற அடிப்படையில் தொழில்புரியும் இடம், சமூகப்பரப்பு ஆகிய இரு இடங்களிலும் பாதிப்பிற்குள்ளாவதனைக் காணலாம். இரண்டாவதாக, அவர்கள் பிறந்த கிராமப்புற மற்றும் குடும்ப ஆணாதிக்க முறைமையின் செல்வாக்கிற்கு உட்பட்டவர்களாகக் காணப்படுவதனால் கைத்தொழில்த்துறை ஆணாதிக்கத்துக்கும், சுதந்திர வர்த்தக வலயத்தின் செல்வாக்கிற்கும் தாமாகவே கட்டுப்படுகின்றமையைக் காணலாம். இதனால் அவர்கள் அனுபவித்து வருகின்ற நிலைமைகள் மாற்றத்துக்குள்ளாக்கப்பட்டாலும் அவர்கள் ஓரங்கட்டப்படுதல் தொடர்ந்திருக்கும்.

இந்த அத்தியாயமானது கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் தொழிலாளர்கள் எவ்வாறு பாதிப்பிற்குள்ளாகின்றார்கள் என்றும் அவர்கள் எதிர்கொள்ளும் புதிய மற்றும் தீவிரமான பாதிப்புகள் எவை என்பதும் குறித்துப் பரீட்சிக்கின்றது. இது வெளிவாரியாகத் தென்படும் அதிர்ச்சி நிலைமைகளான கொவிட்-19 போன்றவை எவ்வாறு சமூகத்தில் ஓரங்கட்டல் இடம்பெறும் தளங்களை வலுப்படுத்தியுள்ளன என்றும் அவை எவ்வாறு ஓரங்கட்டலுக்களாகியுள்ள சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன என்பதனையும் வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

## பொருளாதாரப் பதற்றமும் உயிர்வாழ்வதற்கான போராட்டமும்

மார்ச் 2020இல் நாடு தழுவி அமுலாக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவினால் 275,000 சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் தமது வலயத்துக்கு அருகிலிருந்த தற்காலிக வதிவிடங்களிலே முடக்கப்பட்ட நிலையில் தமது ஜீவனோபாயத்துக்காகச் சம்பாதிக்க முடியாத நிலைமை ஏற்பட்டது (*UN(DER) PAID IN THE PANDEMIC: An estimate of what the garment industry owes its workers*, 2020, p. 28). தமது அவலநிலையைப் பற்றி கலந்துரையாடும் போது அவர்களது பொருளாதார நிலைமையே அதன் ஆரம்பப்புள்ளியாக அமைகிறது. இதுவே அவர்கள் எதிர்கொள்ளும் கட்டமைப்புச் சார்ந்த பல ஓரங்கட்டலுக்கான வேராக அமைகிறது.




Source: UN(DER) PAID IN THE PANDEMIC: An estimate of what the garment industry owes its workers (2020, p. 29).

பெருந்தொற்று தொடங்கியதிலிருந்து அவர்களது ஊதியமானது கணிசமானளவு வெட்டப்பட்டது. குறிப்பாக புதுவருட மற்றும் சேர்த்து வைக்கப்பட்ட ஊக்க ஊதியங்கள் ரத்துச் செய்யப்பட்டமை, சில சந்தர்ப்பத்தில் தொழிலிருந்து இடைநிறுத்தப்பட்டமை போன்றனவும் இடம்பெற்றன (*Sri Lankan garment workers decry violations of labor rights - UCA News*, 2020; Hari Tv, 2020). சாதாரண காலத்தில் மேலதிக நேர வேலை உட்பட அவர்கள் சராசரியாக 25,000 ரூபாய் ஊதியமாகப் பெற்றுக்கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும் (Hewamanne, 2021, p. 56). 'கொவிட்-19 பெருந்தொற்று: இலங்கை ஆடைத்தொழிற்சாலைத் தொழிலாளர்களது உரிமைகளைத் திரும்பப் பெறுதலுக்கான விளக்கம்' என்ற அறிக்கையில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களது ஊதியத்தில் கிட்டத்தட்ட 40% வெட்டப்பட்டமையினால் அவர்கள் பாதிக்கப்பட்டனர். இந்நிலையில் தொழிற்சங்கங்கள், தொழில்தருநர்கள் மற்றும் அரசாங்கம் ஆகியன ஒன்றிணைந்து முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்றினை 5ஆம் திகதி மே மாதம் 2020இல் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொண்டன. இந்த ஒப்பந்தமானது வேலை இடைநிறுத்தங்களைத் தடைசெய்தல், பெருந்தொற்றுக் காலத்தில் தொழிலுக்கு வருகின்ற/ வராத சகல ஊழியருக்கும் ஊதியத்தில் 50% இனை வழங்குதல், நிரந்தரத் தொழிலாளர்களது சமூகப்பாதுகாப்பு நிதியத்துக்குத் தொடர்ச்சியாகப் பங்களிப்பது போன்ற ஏற்பாடுகளைக்

கொண்டிருந்தன (*COVID-19 Pandemic: A Pretext to Roll Back Sri Lankan Garment Workers' Rights,* 2020; *UN(DER) PAID IN THE PANDEMIC: An estimate of what the garment industry owes its workers,* 2020). இருந்தபோதிலும் 32% ஆன சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் மே மற்றும் ஜூன் மாத ஊழியத்தைப் பெறவில்லை எனவும் அதனால் ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 88 மில்லியன் ரூபாய் பணம் தொழிலாளர்களால் மொத்தமாக இழக்கப்பட்டுள்ளதாகவும் தொழில்த் திணைக்களம் கண்டுகொண்டுள்ளது. தொழிலாளர்களின் இந்த இழப்பினை அரசாங்கத்தின் எந்தவொரு நிவாரணத் திட்டமும் ஈடுசெய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும் *(UN(DER) PAID IN THE PANDEMIC: An estimate of what the garment industry owes its workers,* 2020). மேலே உள்ள விளக்கப்படமானது சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் பெப்ரவரி தொடக்கம் மே 2020 வரையான ஊதிய இடைவெளியை விளக்குகிறது.

முடக்குதல் காலத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தினுள் அடைபட்டிருந்த ஊழியர்கள் எதிர்கொண்ட சம்பளவெட்டினால் அன்றாட வாழ்வில் அனுபவித்த பிரச்சினைகளைச் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர்களுள் ஒருவர் குறிப்பிடும் போது:

> அமைச்சர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழமையாகப் புதுவருடத்தில் வழங்கப்படுகின்ற சகல ஊக்க ஊதியப் பணத்தினையும் (Bonuses) கழித்துக்கொண்டு 14,500 ரூபாவை (ஆகக்குறைந்த ஊழியமாக) வழங்கினர். பலருக்கு தமது கடன்களை செலுத்தவோ, தமது விடுதிகளுக்கு வாடகையைச் செலுத்தவோ, வீட்டுப் பணத்தைச் செலுத்தவோ முடியவில்லை. சிலர் வேலைக்கு வருமாறு அழைக்கப்பட்டனர். இவர்களுக்கு முதல் இரண்டு மாதங்களுக்கும் அரைவாசிச் சம்பளமே வழங்கப்பட்டது. இது பின்னர் வழக்கமான சம்பளத்தில் கால்வாசியாகக் குறைவடைந்தது. பெருந்தொற்றின் இரண்டாவது அலை தாக்கியபோது அவர்கள் விரும்பிய நபர்களை சேவையிலிருந்து இடைநிறுத்தினார்கள். சிலர் நஷ்டஈடு கோரி வழக்குத்தாக்கல் செய்து அதனைப் பெற்றுக்கொண்டனர். எதிர்காலத்தில் வலயத்தில் தொழிலைப் பெற்றுக்கொள்ள இயலாமல் போய்விடலாம் என்ற பயத்தினால் இன்னும் பலர் அவ்வாறு செய்யவில்லை[1].

மூலதன உரிமையாளர்கள் ஊதியவெட்டுக்கள், வேலை இடைநிறுத்தம் என்பவற்றினூடாக ஊழியர்களைச் சுரண்டி தமது இலாபத்தினை அதிகரிக்கின்ற அதேவேளை (Hari Tv, 2020),

1 செயற்பாட்டாளர் ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 28ஆம் திகதி மே 2021.

தொழிலாளர்கள் ஆபத்தான நிலையில் அரசினது சேமநலன் திட்டங்களைப் பெறுவதிலிருந்தும் விலக்கிவைக்கப்பட்டிருந்தனர் (Arunathilake, 2013). தாம் தற்போது வாழும் இடங்களில் வதிவிட உறுதிப்படுத்தலினை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் அரசாங்கத்தில் வழங்கப்பட்ட அவசரகால நிவாரணமான 5,000 ரூபாயினைக்கூட அவர்களால் பெறமுடியாமல் இருந்ததிலிருந்து இது தெளிவாகப் புலப்படுகிறது. இந்த ஆய்வுக்காக நடாத்தப்பட்ட நேர்காணலில் பங்குபற்றிய தொழிலாளர் ஒருவர் “எனது கிராமத்துக்குச் செல்ல அவர்கள் எனக்கு ஊரடங்கு அனுமதி பத்திரம் ஒன்றினைக் கொடுக்கவில்லை. அவ்வாறு கொடுத்திருந்தால் எனது வதிவிட உறுதிப்படுத்தலை மேற்கொண்டு 5,000 ரூபாயைப் பெற்றிருப்பேன்[2].



Source : Artigala (2020)

பெருந்தொற்றுச் சூழ்நிலையில் முதலாளிகளோ அல்லது அரசோ தொழிலாளர்களின் பொருளாதார அவலநிலை குறித்து உணர்ந்திருக்கவில்லை. அதேவேளை ஊழியர்கள் அல்லது பிரசைகள் என்ற மட்டத்தில் தமது உரிமைகள் குறித்து தொழிலாளர்களும் கவலைப்படவில்லை. ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்த ஒரு குழுவினை மேலும் கடுமையான பொருளாதார ஓரங்கட்டலுக்கு பெருந்தொற்று உள்ளாக்கியது. பெருந்தொற்றுக்கு முன்னரான காலகட்டத்தில் வருமானத்தினை ஈட்டுவதனால் அவர்களது வாழ்வில் கிடைத்த சிறியளவிலான தீர்மானமெடுத்தல் செயன்முறையில் கிடைக்கப்பெற்ற அதிகாரத்தினையும் அவர்கள் இழந்தனர் (Hewamanne, 2021). எனவே

2 பியகம சுதந்திர வர்த்தக வலையத் தொழிலாளி ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 31ஆம் திகதி மே 2021.

கொவிட்-19 நிலைமையானது சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களது ஓரங்கட்டல் நிலையை மீண்டும் உயிர்த்தெழச்செய்து மோசமடையச் செய்யலாம்.

## கொவிட் – 19 நிலைமையில் சீர்குலையும் வாழ்க்கை நிலைமைகள்

கொவிட்-19இன் தாக்கம் பல்வேறு தரப்பினரால் வெவ்வேறு விதமாக உணரப்பட்டுள்ளது என்பது நன்கு தெரிந்த விடயமாகும். சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளி ஒருவர் இத்தகையதொரு நிலையில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதிப்படைந்த அடையாளத்துடன் கூடியதொருவராக நிலைநிறுத்தப்படுவதனைக் காணலாம். அது பெருந்தொற்றுக்கு முன்னரான காலத்தில் அவர்களது வாழ்க்கையில் காணப்பட்ட பலவிதமான பாதிப்புகளால் ஏற்பட்டதாகும். தொழிலாளர்கள், தனிப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் சுகாதார நெருக்கடியானது அவர்களது உரிமைகளை மீறக்காரணமாக அமைந்தது. இந்தப் பகுதியில், தொழிற்சாலைக்கு உள்ளேயும் அதற்கு வெளியேயும் ஏற்கனவே விட்டுக்கொடுத்தலுக்கு ஆளாகியிருந்த வாழ்க்கைத் தரமானது மேலும் எவ்வாறானதொரு சரிவினை எதிர்கொண்டது என நோக்கப்படுகிறது.

### *தொழில் வாழ்க்கை*

கொவிட்-19 முதலாவது அலையிலிருந்து இரண்டாவது அலை வரையான காலப்பகுதியில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் தமது தனிப்பட்ட பொருளாதாரத்தில் ஓர் அழிவடையும் நிலையினை எதிர்கொண்டமையினால் அவர்களது தரமான வாழ்க்கையில் சரிவுநிலை ஒன்றினை எதிர்கொண்டனர். இந்தப் பிரச்சினையானது பிரண்டிக்ஸ் கொத்தணி (Brandix Clusler) இனால் தொழிலாளர்களின் நிலைமை மேலும் மோசமடைந்தது. ஒக்டோபர் 2020இல் மினுவாங்கொடையிலுள்ள ஆடைத்தொழிற்சாலையில் அதிக எண்ணிக்கையானோர் கொவிட்-19 நோய்க்கிருமியின் தொற்றுக்குள்ளாகினர். தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர் ஒருவரது மேற்கோளொன்று இணையத்தளத்திலிருந்து எடுக்கப்பட்டு இங்கு மீண்டும் மறுபிரசுரம் செய்யப்படுகின்றது.

> நான் தற்போது மாத்தறையிலுள்ள குபுறுகமுவ (Kuburugamuwa) வைத்தியசாலையிலிருந்து கொரோனா நோய்க்கிருமிக்கான சிகிச்சையினைப் பெற்றுவருகின்றேன். எனது தொழிற்சாலையில் தொழில்புரிகின்ற 200 நபர்கள் இங்கு கொரோனா நோய்க்கிருமிக்காக சிகிச்சை பெற்றுவருகின்றனர். ஆரம்பத்தில் 600 தொழிலாளர்கள் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டபோது தொழில் ரீதியாகக் காணப்பட்ட அடைவுமட்டத்தினை எட்டுவதற்காக வேலைக்கு வருமாறு

தொழிலாளர்கள் கோரப்பட்டனர். இந்த நிலைமை அப்போதே அடையாளம் காணப்பட்டிருந்தால் நோய் இந்த வேகத்தில் பரவியிருக்கமாட்டாது. நாங்கள் இதனைக் கண்டறிந்தபோது எங்களைத் தொழிற்சாலைக்கு வருமாறு கேட்கப்பட்டதோடு பி.சி.ஆர். சோதனையும் மேற்கொள்ளப்பட்டது. அங்கேதான் எனக்கு கொவிட்-19 இருப்பது கண்டறியப்பட்டது. எனது குடும்பம் சுயதனிமைப்படுத்தலுக்குள்ளாகுமாறு தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் தொழிற்சாலையினால் வழங்கப்பட்டன. எனது அம்மா, அப்பா, சகோதரி ஆகியோருக்கான பி.சி.ஆர். சோதனைகள் நாளைக்கு மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நாங்கள் தொற்றுக்கு ஆளானபோது விக்டோரியா சீக்கிரட் வியாபாரக் குறியீட்டினது (Victoria's Secret Brand) துணிகளை தைத்துக் கொண்டிருந்தோம். இந்தியாவிலிருந்துதான் இந்தத் துணிகள் கொண்டுவரப்பட்டதாக வதந்தியொன்று காணப்படுகிறது. அதன் உண்மை/ பொய்த்தன்மை பற்றி எனக்கு தெரியாது (*Garment workers on the frontline of the pandemic outbreak in Sri Lanka*, 2020).




Source: Bandara (2021a).

தொற்றுக்குள்ளாகிய நிலையிலும் நீண்டநேரத்திற்குத் தொடர்ச்சியாக உட்கார்ந்திருத்தல் போன்ற பணிகளை தொழிலாளர் செய்யவேண்டிய நிலையில் எதிர்கொள்ளும் கடுமையான/ வேதனையான அனுபவங்களைப் புரிந்துகொள்ள வேறெந்த விதமான விளக்கங்களும் தேவையில்லை. அத்தோடு வேலைக்குச் சமூகமளிக்காதவர்களினது பணியினைச் செய்வதற்கு மேலதிகமான வேலை செய்தபோதும் அதேயளவான ஊதியத்தினையே பெற்றுக்கொண்ட சம்பவங்களும் காணப்படுகின்றன[3].

3 சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளி ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 28ஆம் திகதி மே 2021

அத்தகைய கடுமையான பணிகளில் ஈடுபடுபவர்களின் பொருட்டு தொழிற்சாலைகள் நோய்த்தொற்றுக்குள்ளாகாது தொழிற்சாலையில் 24 மணிநேரமும் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தடுப்பூசியோ அல்லது வேறு ஏதாவது சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான நடவடிக்கைகளையோ முன்னெடுக்கவில்லை (Hari Tv, 2020; Ruwanpura, Gunawardena, and Padmasiri, 2021). ஹேவாமன்னே (Hewamanne (2021, p. 65) குறிப்பிடுகையில் ஆடைத்தொழிற்சாலைக் கொத்தணியினால் சமூகத்தில் பெரும்பாலானோர் ஆபத்துக்குள்ளாகி அதனது பரவலைக் கட்டுப்படுத்த வேண்டியதொரு தேவை ஏற்படாதிருந்தால், இந்த நிலைமைகள் தொடர்ச்சியாக இருந்திருக்கலாம் என்ற கருத்தினை முன்வைத்திருந்தார்.

## *தனிநபர்/ தனிப்பட்ட வாழ்வு*

சமூக ஊடகங்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளிவந்த பல மூலங்கள் வெளிப்படுத்துவது என்னவெனில், நாடு முழுமையாக முடக்கப்பட்ட காலத்தில் தமது தங்குமிடங்களில் காணப்பட்ட பௌதீக ரீதியான பாதுகாப்பின்மையினால் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் கடுமையான பாதிப்புகளுக்காளாகியிருந்தனர். உண்பதற்குப் போதுமான உணவு கிடைக்காமை, விரக்தியடைந்த வாழ்க்கைத் துணையினால் உடலியல் துன்புறுத்தல், வன்முறைக்கு ஆளாதல், வீட்டு உரிமையாளர்களினது பாலியல் ரீதியான நெருக்கடிகள் (சில சமயங்களில் அதிகரித்துக் காணப்படுதல்) போன்றவற்றை அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலைமை காணப்பட்டது. நோய்க்கிருமி பரவிக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் சன நெருக்கடியான தங்குமிட ஏற்பாடுகளினாலும் இவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள் (Perera and Fernando, 2020). பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் செயற்பாட்டாளர் ஒருவர் குறிப்பிடும் போது:

> பி.சி.ஆர். சோதனையில் நேர்மறை (Positive) என அடையாளப்படுத்தப்பட்டவர்கள் வேலைக்குச் சமூகமளிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டனர். பின்னர் அவர்களுடன் இருந்த சகலரும் 14 நாட்கள் வீட்டுத் தனிமைப்படுத்தலில் இருக்குமாறு வேண்டப்பட்டனர். அவர்கள் மலசலகூடம் அல்லது குளியலறையினைப் பாவிக்க செல்லும்போது வீட்டு உரிமையாளர்கள் அவர்களை ஒரு பேயைப் பார்ப்பது போல பார்த்தனர். அவர்களுக்கு உண்ண எதுவுமிருக்கவில்லை. விட்டமின் C கூட இருக்கவில்லை. சுகாதாரப் பரிசோதகர்கள்கூட அவர்களைப் பரிசோதிக்க வருகை தரவில்லை. சில காலத்தின் பின்னர் சில வீட்டு உரிமையாளர்கள்

> அவர்களது தங்குமிடத்தினை காலிசெய்ய விரும்பினார்கள். காரணம் என்னவெனில், அதிக எண்ணிக்கையானவர்கள் ஒருகட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டபோது மலசலகூடங்கள் அடைத்துக் கொண்டதோடு மின்சாரக் கட்டணமும் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. மேலும் இன்னும் சில தொழிலாளர்கள் 30 நாட்களுக்கு மேல் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டிய நிலைமையும் காணப்பட்டது. அந்தக்கட்டத்தில் ஒருவர் நோய்த்தொற்றுக்கு ஆளாகும் போது மற்றையவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும். இந்தக் காலகட்டத்தில் இக்குழுவில் பிறிதொருவர் தொற்றுக்குள்ளாகும்போது மீண்டும் இரண்டு கிழமைகள் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டும். இவ்வாறானதொரு நிலையில் சிலர் நிரந்தரமாகத் தனிமைப்படுத்தலில் இருக்கவேண்டியதொரு நிலைமை காணப்பட்டது[4].

பயணக்கட்டுப்பாடுகள் மற்றும் குறைவடைந்த ஊதியங்களினால் தொழிலாளர் உணவுக்காகப் போராட வேண்டிய நிலைமை காணப்பட்டது. பலர் ஒரு நாளில் ஒருவேளை உணவு எனச் சமாளித்தனர். சிலர் வெறும் தேநீருடன், இன்னும் சிலர் பலாப்பழம் போன்று தமக்குக் கிடைக்கக் கூடியவற்றில் தங்கியிருக்கும் நிலைமையும் காணப்பட்டது. சிலர் வெறுமனே தண்ணீரோடு உயிர்பிழைத்திருந்தனர். கடனட்டைகளைப் பயன்படுத்தியே ஏதேனும் மளிகைப் பொருட்கள் வாங்கப்பட்டன. 6 மணியிலிருந்து ஊரடங்கு உத்தரவு அமுலாக்கப்படுவதனால் மாலை 2 மணிவரை அவர்கள் பணியாற்ற வேண்டியிருந்தமையினால் தமது வீட்டுக்குச் செல்வதுகூட சாத்தியமற்றதாகக் காணப்பட்டது (ibid; Wijesinghe, 2020).

இந்த வேறுபட்ட அனுபவங்கள் ஊடாக சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் சுரண்டலுக்குள்ளாகும் விதம் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சகலவிதமான பாரபட்சங்களும் அவர்களை பணிக்கமர்த்திய தொழில்தருநர்களினது ஆபத்தான கையகப்படுத்தல் மற்றும் அரசினால் அது தூண்டப்படுதல் போன்றவற்றினாலேயே இடம்பெறுகின்றன. தனிமைப்படுத்தல் அல்லது அழிவைத் தரக்கூடிய பெருந்தொற்றுக் காலத்தில் தொழில்புரிகின்ற சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் நிலைமையைக் கண்காணிப்பதிலிருந்து அரச அதிகார சபைகள் வேண்டுமென்றே விலகிச் சென்றிருந்தன. அத்தோடு ஆடைத் தொழிற்சாலைகளினுள்ளே கொவிட் நெறிமுறைகள் கடுமையாக மீறப்படுகின்றபோது அரச சுகாதார அமைப்புகள் தளர்வான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தன. தொழிலாளர்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கௌரவம் என்பவற்றின் இழப்பில் பூகோளப்

4 செயற்பாட்டாளர் ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 28ஆம் திகதி மே 2021.

பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முதலாளிகள் மற்றும் அவர்களது மூலதனச் சேகரிப்பை வலிமைப்படுத்த அரசு உடந்தையாக இருப்பதனை இது காட்டுகிறது.




Source: Bandara (2021b)

### *சமூகத்தினது தவறான அபிப்பிராயம்*

நோய்க்கிருமியினைக் காவுபவர்களில் மிகமுக்கியமான தரப்பினராக சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் கருதப்படுகின்ற நிலைமையொன்று காணப்பட்டது. இதற்குக் காரணம், அவர்களது தொழில் மற்றும் சமூக இருப்புத் தொடர்பாகக் காணப்பட்ட விளக்கங்களானவை அவர்களை அசுத்தமானவர்களாகவும் ஒழுக்க ரீதியாக வலிமையற்றவர்களாகவும் கண்டுகொண்டிருந்தமையாகும் (Preston and Firth, 2020, as cited in Hewamanne, 2021). அதேகாலகட்டத்தில் இடம்பெற்ற பேலியகொட மீன்சந்தைக் கொத்தணியோடு ஒப்பிடுகையில் மினுவாங்கொட பிராண்டிக்ஸ் கொத்தணியில் இது தெளிவாகப் புலப்பட்டது. பொதுசன ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் போன்றன பேலியகொட கொத்தணியைவிட கொவிட் நோய்க்கிருமிக்கான புதிய மூலமான மினுவாங்கொட கொத்தணி பற்றி அதிகம் பேசின. இந்தக் கலந்துரையாடலானது முன்னர் குறிப்பிட்ட சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களது மாசுபடுத்தல் என்ற விளக்கத்துடன் நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்பட்டது. ஒழுக்கமான பெண்கள் என்ற ஆணாதிக்க சித்திரிப்புக்களின் மீது கட்டியெழுப்பப்பட்டதாக இது காணப்பட்டது. இதனோடு ஒத்துப்போகாதவர்கள் எவ்வாறு பல்வேறு ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமைக்கு ஆளாகின்றனர் என்பதனையும் இது வெளிப்படுத்துகிறது. இது பற்றிய கதையாடல்கள் கொடுத்த துன்பம் மிகப்பெரியது என ஒரு பதிலளிப்பவர் குறிப்பிட்டிருந்தார்:

> தொழிலாளர்களில் பலர் தமது கிராமங்களுக்குத் திரும்பமுடியாத நிலையில் காணப்பட்டனர். காரணம் அவர்களது அயலவர்கள் 119இற்கு அழைப்பை ஏற்படுத்தி அதிகாரிகளுக்கு அவர்களது வருகை பற்றித் தெரிவிப்பார்கள் என்பதனாலாகும். எனக்குத் தெரிந்த ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு தொழிலாளி தனது தாயாரைப் பார்க்க பொலனறுவைக்குச் சென்று அங்கு புகையிரத நிலையத்தில் தாயாரைப் பார்த்துவிட்டு கொழும்புக்குத் திரும்பியிருந்தார். அவரது தாயாருடன் வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. காரணம் ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் நோய்க்கிருமியை கிராமத்துக்குள் கொண்டுவந்து விடுவார்கள் என்ற அச்சம் காணப்பட்டது. ஒரு கட்டத்தில் அவர்களால் வேலைக்குச் செல்லமுடியவில்லை, தமது தங்குமிடங்களில் வசிக்க முடியவில்லை, தமது சொந்த வீடுகளுக்கும் செல்லமுடியவில்லை[5]

அரசு, சமூகம் ஆகிய இரண்டும் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களை நகரத்துக்கு வெளியே வசிக்கின்ற வெளியாடகளாகவே கண்டுகொள்கின்ற நிலைமை காணப்படுகின்றது. வெளியாளாக/ வெளிநபராக நோக்குகின்ற நிலைமையானது அவர்களது உரிமைகள் பலவற்றினை மீறுவதாக அமைகிறது. இதன்போது அவர்களது பிரசன்னமானது ஏனைய பிரசைகளுடனான அன்றாட வாழ்கையிலோ அல்லது அரசுடனோ நிர்வாக ரீதியாகவோ எவ்விதமான அர்த்தத்தினையும் பதிவுசெய்யவில்லை (உத்தியோகபூர்வமாக நாட்டின் வதிவிடவாசிகளாகப் பதிவுசெய்யப்பட்டவர்களாகக் காணப்பட்டனர்). அட்டன்பொல (Attanapola, 2006) குறிப்பிடும் போது, இடமின்மை (Placelessness) என்பது தொழிலாளர்களை அத்தகைய பாதிப்பிற்காளாக்கும். கட்டமைப்புகளுக்கெதிராக திருப்பித் தாக்குவதற்குப் பதிலாக, எவ்விதமான துஷ்பிரயோகத்துக்கும் ஆளாகாமல் இருப்பதற்கான நிலைமையை ஏற்படுத்தியமைக்கு நன்றிக்கடன் செலுத்துதல் வேண்டும் என்ற மனநிலையினையே ஏற்படுத்தியுள்ளது. இந்த மனநிலையினை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்போது அவர்களைச் சுரண்டும் கட்டமைப்புகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். அத்தோடு அவர்களது சுரண்டலும் வெளியுலகிற்கு புலப்படாத அளவிற்கு இயல்பானதொன்றாக மாற்றமடைகின்றது.

அவர்களது பால்நிலை, பொருளாதார நிலைமை மற்றும் தொழில் ஆகியன அவர்களுக்கான தாழ்ந்த அனுபவங்களை வலுப்படுத்துவதோடு அவற்றைச் சரிப்படுத்தும் செயல்களுக்கான சாத்தியப்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்றன (Jordal, Öhman, and Wijewardene, 2020). கடுமையான மற்றும் அதிகரித்த ஓரங்கட்டல் நிலைமையானது பாலியல்

5 செயற்பாட்டாளர் ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 28ஆம் திகதி மே 2021.

போன்ற பல வகையான துன்புறுத்தல்களுக்கும் ஆளாவதற்கான சூழ்நிலையினை ஏற்படுத்தியிருந்தது. பியகம சுதந்திர வர்த்தக வலயத்தினைச் சேர்ந்த பதிலளிப்பாளர் ஒருவர் குறிப்பிடும்போது, வீட்டுக்குச் செல்வதற்காக ஊரடங்கு அனுமதிப் பத்திரம் ஒன்றைப் பெற பொலிஸ் அலுவலர் ஒருவரை அணுகியபோது அவரது வேலை முடிவடைந்த பின்னர் அவளை தனிப்பட்ட முறையில் அழைத்துச் செல்ல முன்வந்தமையானது அவரது தெளிவான மற்றைய நோக்கங்களை வெளிப்படுத்துகின்றது[6]. வேறும் பல சந்தர்ப்பங்களில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் பேரூந்துகளில் மூட்டைகட்டப்பட்டு அவர்களது மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். அங்கு அவர்கள் நகரத்தின் மத்தியில் கைவிடப்பட்டனர். தாமாகவே தமது வீட்டுக்குச் செல்வதற்கான சொந்த வழிகளைக் கண்டுகொள்ளுமாறு கூறி விடப்பட்டனர். நாடு முழுமையாக முடக்கப்பட்ட நிலையில் தங்குமிடங்களில் நீண்டகால கடுமையான வறுமைக்குப் பின்னர் சில தொழிலாளர்கள் கால்நடையாக நடந்து தமது வீட்டை அடைய இரண்டு நாட்கள் எடுத்துக்கொண்டனர்.[7]

இந்தக் குழுவினது குரலின் சாரம் வெளிப்படுத்துவது என்னவெனில் (தொழிலாளர் எதிர்த்துப் பேசுவதற்கான தகுதியினைக் கொண்டிருந்ததோடு, அவர்களது குரல் பெரிதாகக் கேட்பதில்லை) நிறுவன ரீதியாக இத்தகைய அலுவல்கள் அனுமதிக்கப்பட்டிருந்தமையையாகும். பல சந்தர்ப்பங்களில், தொழிலாளர்கள் இராணுவத்தினரால் குறுகிய அறிவிப்புடன் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு மூட்டை கட்டப்பட்டனர். சில சமயங்களில் அவர்களுக்கு கொவிட் தொற்று இல்லை என்பதற்கான வைத்திய ஆதாரங்கள் காணப்பட்டபோதும், அதனை விளக்குவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படாது வாகனங்களில் ஏற்றப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டனர் (De Silva, 2020). இந்த நடாத்துகை வெளிப்படுத்துவது எதனையெனில், அரச நிறுவனங்கள் கூட அவர்களைக் கௌரவத்துடன் நடாத்துவதற்கான நேரத்திற்கும் முயற்சிக்கும் தகுதியற்றவர்கள் எனக்கருதின என்பதனையேயாகும்.

---

6 பியகம சுதந்திர வர்த்தக வலய தொழிலாளி ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 31ஆம் திகதி மே 2021.

7 அரசு சார்பற்ற நிறுவன உறுப்பினர் ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 20ஆம் திகதி ஜுன் 2021.

இந்தப் பதிவுகள், குறிப்பாக பெருந்தொற்றுக் காலத்தில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களின் குரலற்ற தன்மையானது அவர்களது உரிமைகள் தீவிரமாக மீறப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இத்தகைய மீறல்கள் நீண்டகாலமாக காணப்படுவதனால் கண்ணுக்குப் புலப்படாததாக மாறியுள்ளது. மேலே கலந்துரையாடியதன்படி, சுகாதார நெருக்கடியினால் ஏற்பட்ட மேலதிக சவால்கள் அவர்களது குறைந்த பொருளாதாரச் சமூகப் பாதுகாப்பின் பின்னணியில் ஏற்கனவே விளிம்பு நிலையில் காணப்பட்டவர்களைத் தீவிரமான பாரபட்சத்திற்கு தள்ளின எனலாம். ஆயினும் ஒரு தொழிலாளர் படையாக அவர்கள் தமக்குள்ளே பிளவுபட்டுச் சிதைவடைந்துள்ள நிலையில், இதற்கு எதிராகத் தொழிற்சங்கமாக அல்லது வேறு ஏதாவதொன்றினை ஒழுங்குபடுத்தும் ஆற்றலற்ற நிலையில், இந்தக் கட்டமைப்பு ரீதியான தடைகளை அறிந்துகொள்ளவோ விலக்கிக்கொள்ளவோ முடியாத நிலையில் தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். தொழிலாளர்களின் கூட்டுத்தன்மை பொருந்திய அதிகாரத்தில் பிளவுநிலை ஒன்றினை ஏற்படுத்துவதில் தொழில்தருநர்களின் கூட்டுச்சக்தி முக்கிய வகிபங்கினை ஆற்றுகிறது. இந்த நிலையில் அடுத்த பகுதியானது சுதந்திர வர்த்தக வலயத்தினது அந்நியப்படுத்தும் சக்தியானது எவ்வாறு தொழிலாளர்கள் மீதும் அவர்கள் தமது உரிமைகளை அனுபவிப்பதிலும் தாக்கம் செலுத்துகிறது என்பது பற்றி விபரிக்க முற்படுகிறது.

## அரசு, மூலதனம் மற்றும் உழைப்பு

பெருந்தொற்றுச் சூழ்நிலையில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட பலதரப்பட்ட பாதிப்புகள் குறித்து அரசு மற்றும் தொழில்தருநர் ஆகியோரின் வகிபங்கு பற்றிப் புரிந்துகொள்ளவியலுமாறு இருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டதன்படி, அரசாங்கமும் தொழில்தருநர்களும் இந்த நிலைமையில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் எதிர்கொண்ட கஷ்டங்களின் போது விலகியே இருந்தனர். கடுமையான வழிகளின் ஊடாக, மூலதனத்தை திரட்டும் நோக்கங்களுக்காக சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களை தொடர்ச்சியாகப் பயன்படுத்திய நிலையில் எவ்வாறு பாராமுகமாக இருக்கமுடிகிறது என்பதே தெளிவில்லாததொரு விடயமாகக் காணப்படுகிறது.




Source: Bandara (2021c).

முதலாவதாக மூலதனம் என்ற விடயமானது தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் விபரித்ததன் அடிப்படையில் விபரிக்கப்படுகிறது. தொழிலாளர்கள் சுதந்திர வர்த்தக வலயத்தினுள் சிக்கிக்கொண்டு வீட்டுக்குச் செல்லமுடியாத நிலையில் (நோய்க்கிருமியைக் காவுபவர்கள் என்ற சமூகத்தின் பார்வை ஆகியவற்றின் பின்னணியில) தொழிற்சாலை உரிமையாளர்களும் முகாமையாளர்களும் அவர்களது பலவீனத்தினைத் தந்திரமாகப் பயன்படுத்தி உற்பத்திச் செலவினைக் குறைத்து தமது இலாப விகிதத்தினை அதிகரிக்கப் பயன்படுத்தினர். முதலில் தொழிற்சாலைக்கான போக்குவரத்து வசதிகள், தனிப்பட்ட தொழிலாளியின் பணிநேர அளவினை அதிகரித்தல் போன்றவற்றை மேற்கொண்டனர். பின்னர் தமது உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி குறைந்துள்ளது என்ற சாட்டுக்கூறி நிரந்தர உத்தியோகத்தர்களின் சமூகப் பாதுகாப்பு செலவினங்களைக் குறைத்தனர். அத்தோடு நோய்க்கிருமியின் தொற்றுக்குள்ளானவர்களின் வேலையை தொற்றுக்குள்ளாகாதவர்களின் மூலம் மேற்கொண்டு மேலதிக மணித்தியாலங்களுக்கோ, மேலதிக அடைவு மட்டங்களுக்கோ எவ்விதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படாமல் தொழிலாளர்களைச் சுரண்டினர்.[8] உற்பத்திச் செயன்முறையைத் தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறு நிர்வாகத்திடமிருந்து விடுக்கப்பட்ட கடுமையான அழுத்தங்கள் வெளிப்படுத்துவது எதனையெனில், உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி குறையவில்லை என்பதனையேயாகும். இலங்கையின் ஆடைத்தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கப்பெற்ற மேலதிக (பாரியளவான) சுகாதார ஆடைகளுக்கான கொள்முதல்

8 அரசு சார்பற்ற நிறுவன உறுப்பினர் ஒருவருடனான கலந்துரையாடல் (மெய்நிகர்), 20ஆம் திகதி ஜூன் 2021.

உத்தரவுகளை பற்றிய அறிக்கைகள் காணப்படுகின்றன (*Sri Lanka's apparel industry attracts over 500 mln USD orders for PPE,* 2020). இவை அனைத்துக்கும் மேலாக தொழிலாளர்களுக்கான பெருந்தேவை ஒன்று காணப்பட்ட நிலையில் GSP+ திட்ட சலுகைகள் கூட எவ்விதமான குறைப்புக்களையும் மேற்கொள்ளவில்லை (Hari Tv, 2020).

தொழிலாளியினை இவ்வாறு நடாத்துதலானது அவர்களது மனித மதிப்பு மற்றும் கௌவரம் என்பன வலுவாக மறுக்கப்படுதலை சுட்டிக்காட்டுகிறது. அத்தோடு அவர்களுக்கான குறைந்த ஊழியத்தினைச் சரிசெய்வது மாத்திரம் அவர்களுக்குப் போதுமானது எனக் கருதப்படுகிறது. உண்மையில் மூலதனத்திரட்டு, விரிவாக்கம் என்பவற்றில் மனித நபரை ஒரு பொருளாகக் குறைத்து மதிப்பிடுவதனை இது குறித்து நிற்கிறது. சுரண்டல் நிலைமையானது எவ்வாறு அரசின் நலன்களையும் தக்கவைத்துக் கொள்கிறது என இனி நோக்கலாம்.

ஹன்கொக் (Hancock, 2006) குறிப்பிடுவது போல, ஒரு நாட்டின வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும் பொருளாதாரத்தில் வருவாயைப் பெறுவதற்கான பிரதான மூலமாக பெண்களின் உழைப்பு காணப்படுகிறது. உழைப்புக்கும் மேலாக எது வருவாயைப் பெருக்குகிறது எனில் பெண்களின் உழைப்பினைச் சுரண்டுவதனாலேயே இலாப விகிதங்கள் அதிகரிக்கின்றன. சுரண்டலுக்கு உகந்த நிலைமைகளை உருவாக்குவதானது வருவாயினை எதிர்பார்க்கும் அரசுக்கு நேரடியாக நன்மையளிக்கிறது. ஹாவி (Harvey, 2007) மற்றும் போர்டியு (Bourdieu, 1998) ஆகியோர் இதேபோன்ற சிந்தனை நிலையைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். இவர்களது கருத்துப்படி, நவதாராள அரசு வருவாயினைப் பெற்றுக்கொள்வதற்காக முறைசாரா உழைப்பு மற்றும் அவர்களைக் கடுமையாகச் சுரண்டுதல் ஆகியவற்றில் தங்கியிருப்பதாக குறிப்பிடுகின்றனர். இந்த வகையில் அரசினது நிறுவனங்கள்கூட ஒன்றில் கண் தெரியாதது போல இருப்பதன் மூலம் அல்லது அது நடைபெறுவதற்குத் தீவிரமாக உடந்தையாக இருப்பதன் மூலம் உழைப்பினைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபடுகின்றன.

உழைப்பினைச் சுரண்டுதல் தொடர்பாக குருடர் போன்று இருப்பது இலங்கை அரசு மட்டுமல்ல பல அபிவிருத்தியடைந்த நாடுகள் கூட கேவலமான வகையில் இதற்குப் பெயர் போனவைகளாகக் காணப்படுகின்றன. நாட்டிலுள்ள அனைத்து தொழில்புரியும் குடிமக்களுக்கும் ஏனையவர்களுக்கும் தொழிலாளர் சட்டங்களைக் கொண்ட ஆளுகை ஒன்று காணப்பட்டாலும்கூட சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் என்போர் யதார்த்தத்திலிருந்து விடுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். மாறாக அந்தச் சட்டங்களால் எவ்விதமான நல்ல விளைவுகளும் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. நியாயமற்ற பணி,

நேரமாற்றங்கள், வேலைநாளில் மிகக்குறைவான ஓய்வுநேரம் மற்றும் பாதுகாப்பற்ற வேலை நிலைமைகள் ஆகியன சுதந்திர வரத்தக வலயத்தில் நிலவும் சில பிரச்சினைகளாகும். இவ்வாறான நிலைகள் அரச அலுவலர்கள், தொழிற்சாலை நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களது மனநிலையிலும் இயல்பாக்கப்பட்டுள்ளன (Skanthakumar, 2017). இந்த நிலைமையில் கொவிட்-19 உருவாகியபோது, முன்னர் குறிப்பிட்டது போன்று உழைப்பினைத் தொடர்ச்சியாகச் சுரண்டுவதனை அரசினது செயற்பாடுகளான தொழிலாளர்களுக்கு ஊரடங்கு அனுமதிப் பத்திரத்தினை வழங்க மறுத்தமை, நகர மத்தியில் அவர்களை கைவிட்டுச் சென்றமை, அவர்கள் எவ்வாறு வீட்டினைச் சென்றடைவார்கள் என்பதனை கருத்திற்கொள்ளாமை, மற்றும் அரசாங்கத்தின் நிவாரணப் பொதிமுறையினைப் பெறுவதற்கு தகுதியற்றதாக்கியமை போன்றன தெளிவாக வெளிப்படுத்தின. மூலதனம் மற்றும் அரசு என்ற இரண்டு விடயங்களிலும் ஒவ்வொன்றும் உழைப்பினைச் சுரண்டும் நோக்குடனே அணுகுவதனையும் அதனால் அவர்கள் கைவிடப்படும்போது மூலதனத்திரட்டு என்பது சாத்தியமாகிறது (Hewamanne, 2021). பரஸ்பர இருப்புக்காக அரசும் மூலதனமும் ஒன்றுடன் ஒன்று தங்கியிருக்கும் நிலையானது சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களது சுரண்டல் தொடர்ந்திருப்பதற்குக் காரணமாக அமைகிறது.

## முடிவுரை

இந்தக் கட்டுரையானது இலங்கை சுதந்திர வர்த்தக வலயத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் கொவிட் பெருந்தொற்றினால் எதிர்கொண்ட பாதிப்புகளை புரிந்துகொள்ள முயற்சித்திருந்தது. அரசாங்கத்தின் கொவிட் பதில் நடவடிக்கைகளானவை தெளிவான நிலையில் ஆழமாகக் காணப்பட்ட பாரபட்சங்களை மீள் உருவாக்கம் செய்ததோடு இந்தக் குழுக்களை மேலும் சுரண்டலுக்குள்ளாக்கின.

சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் சாதாரண நாட்களில்கூட வர்க்கம், பால்நிலை, சமூக கலாசார யதார்த்தங்களின் அடிப்படையில் பல வகையான பாரபட்சங்களுக்கு ஆளாகியிருந்தனர். ஏற்கனவே ஆழமான பாரபட்சங்களுக்கு ஆளாகியிருந்தவர்களின் நிலைமையானது கொவிட்-19 வருகையுடன் மோசமானதிலிருந்து பெரும் பேரழிவு கொண்டதாக மாற்றியுள்ளது. பெருந்தொற்றின் ஒவ்வொரு புதிய அலையுடன், சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்களது தனிப்பட்ட பொருளாதாரம் தொடர்ச்சியான வீழ்ச்சிநிலையை எதிர்கொண்டதோடு அவர்களது வாழ்க்கைத் தரத்திலும் ஒரு சரிவு நிலை ஒன்று ஏற்பட்டது. இந்நிலையில் அவர்களது பாரபட்சங்கள் இயல்பானதாகி கண்ணுக்குப்

புலப்படாததாக விளங்குவதோடு, கொவிட் பெருந்தொற்றுக் காலத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சுரண்டல் நிலைமைகளும் படிப்படியாக ஆழமாகியுள்ளன.

சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் பற்றிய எதிர்மறையான பார்வையானது பெருந்தொற்றினால் மேலும் அதிகரித்துள்ளது. அவர்களது தங்குமிடம் மற்றும் தொழில்புரியும் இடம் தொடர்பான ஏற்பாடுகளால் அவர்கள் நோய்க்கிருமியைக் காவுபவர்கள் என்ற நிலையிலும் நோக்கப்பட்டனர். பல ஆண்டுகளாக பெரும்பாலும் தசாப்தங்களாக ஆபத்தான நிலைமைகளோடு வாழ்ந்தமையினால் தொழிலாளர்கள் தாமாகவே இது தமது விதி என்று மனதளவிலான தீர்ப்பினைக் கொண்டிருந்தனர். நவதாராளவாதத்தின் பிளவுபடுத்தல் தன்மையினால் பாரபட்சத்துக்குள்ளாகும் நிலைமையானது மேலும் பலவந்தமாக திணிக்கப்பட்டுள்ளது. அதனால் தொழிலாளர்கள் இந்நிலைமைக்கு எதிராகச் செயற்படத் தம்மை ஈடுபடுத்துவதனைவிட தமது நாளை நிர்வகிக்கவே அவர்கள் தூண்டப்பட்டார்கள்.

இந்நிலைமைகளைச் சாத்தியப்படுத்துவதில் அரசு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டினதும் வகிபங்கினை தவிர்க்கமுடியாது. இவ்விரண்டும் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளியினை வெறுமனே ஒரு பண்டமாக நோக்குகின்றன. அத்தோடு குறைந்தளவான ஊதியத்தினை வழங்கி அவர்களது மனித மதிப்பு மற்றும் கௌரவம் போன்றவற்றினைப் பிழிந்தெடுப்பனவாகக் காணப்படுகின்றன. இத்தகையதொரு நிலைமையில், தொழிலாளியின் உடல் சரியான கவனிப்பின்றிப் புறக்கணிக்கப்படுகிறது. ஆனால் அந்த உடல் உருவாக்குகின்ற உழைப்பு இலாபத்தை அடைவதற்காக வணிகப் பண்டமாக்கப்பட்டுச் சுரண்டப்படுகிறது. அரசுக்கு வருவாய்க்கான ஒரு வழியாக உழைப்புக் காணப்பட்டது. மூலதனத்துக்கு மேலும் அதனைத் திரட்டவும் அதனை விரிவாக்குவதற்குமானதொரு கருவியாக தொழிலாளியின் உழைப்புக் காணப்படுகிறது. எனவே இரு தரப்புக்கும் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர் ஒருவர் இனங்கண்டுகொள்ளும் பாரபட்சங்களுக்கான நிலைமைகளைத் தொடர்ச்சியாக வைத்திருப்பதற்கான காரணங்கள் தேவைப்படுகின்றன. பெருந்தொற்றானது பாரபட்சம் மற்றும் சுரண்டலைத் தொடர்வதற்கு அல்லது ஆழப்படுத்துவதற்குமாக மேலதிகமான நியாயப்படுத்தலை வழங்கியுள்ளது.

## உசாத்துணைகள்:

Artigala, A. (2020) *Facebook*. Available at: https://www.facebook.com/permalink.php?story_fbid=4562515707099223&id=580456651971835 (Accessed: 24 July 2021).

Arunatilake, N. (2013) 'Precarious Work in Sri Lanka', *American Behavioral Scientist*, 57(4), pp. 488–506. doi: 10.1177/0002764212466246.

Attanapola, C. T. (2006) 'Were they ever "in place"? Sense of place and self-identities among migrant female export-processing zone workers in Sri lanka', *Norsk Geografisk Tidsskrift - Norwegian Journal of Geography*, 60(3), pp. 217–226. doi: 10.1080/00291950600891778.

Bandara, S. (2021a) *Facebook*. Available at: https://www.facebook.com/ArtOfSajith/photos/a.281558598710607/1829869590546159/?type=3 (Accessed: 24 July 2021).

Bandara, S. (2021b) *Facebook*. Available at: https://www.facebook.com/ArtOfSajith/photos/a.281558598710607/1839013799631738/?type=3 (Accessed: 24 July 2021).

Bandara, S. (2021c) *Facebook*. Available at: https://www.facebook.com/ArtOfSajith/photos/a.281558598710607/1873961409470310/?type=3 (Accessed: 24 July 2021).

Bourdieu, P. (1998) *Acts of Resistance : Against the New Myths of Our Time*. Translated by R. Nice. Cambridge: Polity Press.

*COVID-19 Pandemic: A Pretext to Roll Back Sri Lankan Garment Workers' Rights* (2020) AFL-CIO, Clean Clothes Campaign, Labour Behind the Label, Workers United, Maquila Solidarity Network, War on Want and USAS. Available at: https://cleanclothes.org/file-repository/sri_lanka_brief_march_2021.pdf.

De Silva, M. (2020) 'Situation Of Garment Factory Workers In Katunayake – Covid-19', *Colombo Telegraph*, 14 October. Available at: https://www.colombotelegraph.com/index.php/situation-of-garment-factory-workers-in-katunayake-covid-19/ (Accessed: 24 July 2021).

*Garment workers on the frontline of the pandemic outbreak in Sri Lanka* (2020) WARONWANT. Available at https://waronwant.org/

news-analysis/garment-workers-frontline-pandemic-outbreak-sri-lanka (Accessed 20 June 2021).

Gunatilaka, H. (2019) ‘Gender Inequality at Work: A Literature Review’, *International Journal of Research and Innovation in Social Science (IJRISS)*, 3(IX). Available at: https://www.rsisinternational.org/virtual-library/papers/gender-inequality-at-work-a-literature-review/ (Accessed: 24 July 2021).

Hancock, P. (2006) ‘Women, work and empowerment: A portrait of women workers in two of Sri Lanka’s Export Processing Zones’, *Norsk Geografisk Tidsskrift - Norwegian Journal of Geography*, 60(3), pp. 227–239. doi: 10.1080/00291950600891836.

Hancock, P., Carastathis, G., Georgiou, J., Oliveira, M. (2016) ‘Female workers in textile and garment sectors in Sri Lankan Export Processing Zones (EPZs): gender dimensions and working conditions’, *Sri Lanka Journal of Social Sciences*, 38(1), pp. 63–77. doi: 10.4038/sljss.v38i1.7386.

Hancock, P., Middleton, S. and Moore, J. (2012) ‘Gender, globalisation and empowerment: a study of women who work in Sri Lanka’s Export Processing Zones’, *Work Organisation, Labour & Globalisation*, 6(1), pp. 131–146. doi: 10.13169/workorgalaboglob.6.1.0131.

Hari Tv (2020) සමහරු කොස් ඇට කාලා වතුර බිව්වා. කාන්තාවන්ව විවිධ දේවල් වලට භාවිතා කලා - හෙළිදරව්ව *[Hari Tv]*. Available at: https://www.youtube.com/watch?v=ekkeroK92FM (Accessed: 24 July 2021).

Harvey, D. (2007) *A Brief History of Neoliberalism*. Oxford: Oxford University Press.

Hewamanne, S. (2003) ‘Performing “Dis-respectability”: New Tastes, Cultural Practices, and Identity Performances by Sri Lanka’s Free Trade Zone Garment-Factory Workers’, *Cultural Dynamics*, 15(1), pp. 71–101. doi: 10.1177/a033109.

Hewamanne, S. (2017) ‘Toward Meaningful Health and Safety Measures: Stigma and the Devaluation of Garment Work in Sri Lanka’s Global Factories’, in Prentice, R. and De Neve, G. (eds) *Unmaking the Global Sweatshop*. Philadelphia: University of Pennsylvania Press, pp. 226–250. Available at: https://www.degruyter.com/document/doi/10.9783/9780812294316-010/html (Accessed: 24

July 2021).

Hewamanne, S. (2018) 'Sewing their way up the social ladder? Paths to social mobility and empowerment among Sri Lanka's global factory workers', *Third World Quarterly*, 39(11), pp. 2173–2187. doi: 10.1080/01436597.2018.1458302.

Hewamanne, S. (2019) 'Crafting social change: former global factory workers negotiating new identities in Sri Lanka's villages', *Identities*, 26(2), pp. 165–183. doi: 10.1080/1070289X.2017.1380942.

Hewamanne, S. (2020) 'From global workers to local entrepreneurs: Sri Lanka's former global factory workers in rural Sri Lanka', *Third World Quarterly*, 41(3), pp. 547–564. doi: 10.1080/01436597.2019.1675504.

Hewamanne, S. (2021) 'Pandemic, Lockdown and Modern Slavery among Sri Lanka's Global Assembly Line Workers', *Journal of International Women's Studies*, 22(1), pp. 54–69.

Jayawardena, D. (2018) 'Patriarchy and (Un)Doing Factory of Women's Collective Identity in Sri Lanka's Localised Global Apparel Industry: The Glass Ceiling Revisited', in Mahtab, N. et al. (eds) *Handbook of Research on Women's Issues and Rights in the Developing World*. IGI Global, pp. 19–36. doi: 10.4018/978-1-5225-3018-3.ch002.

Jayawardena, D. (2020) 'Other's Place or Othering Space Reframing the Performativity of the Neoliberalized Space(s) of Factory Women in a Free Trade Zone in Sri Lanka', *Gender in Management: An International Journal*, 35(5), pp. 405–421.

Jordal, M., Öhman, A. and Wijewardene, K. (2020) 'Respectability and rights. Sexual and reproductive health and rights of Sri Lankan women formerly involved in prostitution', *Contemporary South Asia*, 28(1), pp. 28–42. doi: 10.1080/09584935.2019.1667301.

*Liberation Movement on Facebook Watch* (2021). Available at: https://www.facebook.com/LiberationMovementLka/videos/not-even-13-of-the-working-class-has-been-given-the-covid-19-vaccine-as-yet-on-o/323307655890361/ (Accessed: 24 July 2021).

Perera, W. and Fernando, K. (2020) *Sri Lankan free trade zone employees told to keep working as infections rise*, *World Socialist Web Site*.

Available at: https://www.wsws.org/en/articles/2020/10/17/coro-o17.html (Accessed: 24 July 2021).

Ruwanpura, K. N. (2012) *Ethical codes: reality and rhetoric-a study of Sri Lanka's apparel sector*. University of Southampton. Available at: https://core.ac.uk/download/pdf/8747298.pdf (Accessed: 24 July 2021).

Ruwanpura, K. N., Gunawardana, S. and Padmasiri, B. (2021) 'Vaccine Inequality and the Cost to Garment Sector Workers', *Groundviews*, 22 May. Available at: https://groundviews.org/2021/05/22/vaccine-inequality-and-the-cost-to-garment-sector-workers/ (Accessed: 24 July 2021).

Skanthakumar, B. (2017) *Living for the day': Contract Workers in Sri Lanka's Free Trade Zones*. Katunayake: Dabindu Collective.

*Sri Lankan garment workers decry violations of labor rights - UCA News* (2020) *ucanews.com*. Available at: https://www.ucanews.com/news/sri-lankan-garment-workers-decry-violations-of-labor-rights/89988 (Accessed: 24 July 2021).

*Sri Lanka's apparel industry attracts over 500 mln USD orders for PPE* (2020) *Xinhua News*. Available at: http://www.xinhuanet.com/english/2020-05/22/c_139079934.htm (Accessed: 24 July 2021).

*UN(DER) PAID IN THE PANDEMIC: An estimate of what the garment industry owes its workers* (2020). Clean Clothes Campaign. Available at: https://cleanclothes.org/file-repository/underpaid-in-the-pandemic.pdf.

Wijesinghe, R. (2020) 'Sri Lankan garment workers face difficulties during and after COVID-19 curfew', *Praja*, 3 June. Available at: http://praja.lk/english/sri-lankan-garment-workers-face-difficulties-during-and-after-covid-19-curfew/ (Accessed: 24 July 2021).

# 8

# கடினமான காலங்களில் தொடர்புகள்: கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் அரசசேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சமூக வலையமைப்புகளின் செயற்பாடு பற்றிய ஒரு ஆய்வு

*ஷஷிக் சில்வா*

## அறிமுகம்

கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் விழாக்களை நடத்தல், குறிப்பிட்ட வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், ஒரு இடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குப் பிரயாணம் செய்தல், தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளல், உணவுப் பொருட்களை விநியோகம் செய்தல் போன்றவற்றுக்காக அனுமதிகோருதலானது உலகெங்கிலும் இடம்பெறுவதுபோல இலங்கையிலும் வழக்கத்திற்கு மாறாகப் பிரசைகளை அரசின் மீது தங்கியிருக்கச் செய்துள்ளது. இத்தகையதொரு நெருக்கடியான சூழ்நிலையில் சமத்துவக் கொள்கையினை வலுவான வகையில் கடைப்பிடிக்கவேண்டிய தார்மீகக் கடமை அரசிற்கு இருக்கிறது. ஆயினும் இலங்கையில் தேசிய மட்டத்தில் கொவிட்-19 தொடர்பான அரசசேவைகளை மக்கள் எதிர்பார்த்து நிற்கின்ற நிலையில் ஒருதலைப்பட்சம் மற்றும் பாகுபாடு பற்றிய பல வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுவருவதனைக் காணமுடிகிறது.

ஒருதலைப்பட்சம் மற்றும் பாகுபாடுகளை வெளிப்படுத்துகின்ற பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கொழும்பு மாவட்டத்தின் தடுப்பூசி மையத்தில் அண்மையில் இடம்பெற்ற விடயத்தினை எடுத்துக்கொள்ளலாம்.

நகரசபைத் தலைவர் ஒருவர் தன்னால் வழங்கப்படும் அனுமதிச் சீட்டுக்களைக் கொண்டுவரும் நபர்களுக்கே மருத்துவ அதிகாரிகள் தடுப்பூசிகளை வழங்கவேண்டும் என்ற சம்பவமானது அரசினால் வழங்கப்படும் தடுப்பூசிகளைப் பெறுவதில் காணப்படும் நியாயமற்ற தன்மையினைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது (*Moratuwa Mayor arrested for disrupting the duties of health workers*, 2021). பரவலாகப் பேசப்பட்ட பிறிதொரு சம்பவமாக பிரயாணக்கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருந்தபோது மேல் மாகாணத்திலிருந்து ஒரு குழுவான மக்கள் அஸ்ராசெனிக்காவின் இரண்டாவது தடுப்பூசியினைப் பெறுவதற்காக தென் மாகாணத்திலுள்ள காலி மாவட்டத்திற்குப் பிரயாணம் செய்தமை காணப்பட்டது. இரண்டாவது தடுப்பூசியினைக் குறிப்பிட்ட அந்தக் காலப்பகுதியில் அரசு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்காத நிலையில் நாடு பூராகவும் முதலாவது தடுப்பூசிகள்கூட மிகக் குறைந்தளவான விநியோகம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (*Report finds 425 from Western Province got Covishield jab in Galle*, 2021). பிரயாணக்கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருந்த காலத்தில் விழாக்கள் மற்றும் பொதுமக்களின் ஒன்றுகூடல்கள் மற்றும் சில தனிப்பட்ட நபர்கள் தனிமைப்படுத்தல் விதிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டமை தொடர்பான பல பதிவுகள் காணப்பட்டன. இலங்கையினது கேளிக்கை அல்லது களியாட்டத்துறையினது (Entertainment industry) முக்கிய பிரபலம் ஒருவரினால் கொழும்பிலுள்ள ஆடம்பர விடுதி ஒன்றில் ஒழுங்குசெய்யப்பட்ட பிறந்தநாள் கொண்டாட்டத்தினைத் தொடர்ந்து இடம்பெற்ற தனிமைப்படுத்தல் செயன்முறைகளில் அதிகளவான நெகிழ்வுத்தன்மை காணப்பட்டதாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது (*Chandimal's birthday party: Seven arrested and granted bail*, 2021).

மேற்கூறப்பட்ட விடயங்கள் தெளிவுபடுத்துவது எதனையெனில், அரசசேவைகளுடன் தொடர்புபடும்போது சிலர் ஏனையவர்களைவிடத் திறனுடையவர்களாகக் காணப்படுகின்றனர் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இது சாதாரணப் பிரசைக்கு ஒரு நியாயமற்ற நிலையொன்று ஏற்பட வழிசமைக்கிறது. இத்தகைய நிலைமைகளில் அரசசேவைகளைப் பெற அல்லது அதனைத் தவறாகப் பயன்படுத்த தேசியமட்ட சமூக வலையமைப்புகளைப் (Social networks) பயன்படுத்துகின்ற நிலைமை காணப்படுகிறது. இந்தக் கட்டுரையில், வழமையினைவிட சிவில் வாழ்க்கைக்கு அரசசேவைகள் இன்றியமையாதவை என மக்கள் கருதும் பெருந்தொற்றுக் காலத்தில் சமூக வலையமைப்புகளின் வகிபங்கு ஆய்வு செய்யப்படுகிறது. இது தொடர்பான நான்கு பிரச்சினைகள் மீது கவனஞ்செலுத்தப்படுகிறது: முதலாவதாக, கொவிட்-19 உடன் போராடுவதில் அரசியல் மற்றும் அரசியல்சாரா செயற்பாட்டாளர்களின்

வகிபங்கு; இரண்டாவதாக, கொவிட்-19 காலத்தில் அரசசேவையைப் பெறுவதில் அரசியல் சகாய வலையமைப்பு அல்லது ஆதரவு நல்கும் வலையமைப்பு (Political patronage) ஒரு சமூக வலையமைப்பாகச் செயற்பட்டமை; மூன்றாவதாக, சகாய வலையமைப்புச் செயல்பாடுகளினால் அசமத்துவ நிலைமைகள் நிலைத்துநிற்றல் மற்றும் தோற்றுவிக்கப்பட்டமை. இறுதியாக, கொவிட் நெருக்கடியின் போது அரசசேவைகளைப் பெற்றுக்கொடுப்பதில் இடையீட்டாளர்களின் (Mediators) வகிபங்கு.

மேல் மாகாணத்தினது கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய இரு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரு தொடரான பண்புசார் நேர்காணல்கள் மற்றும் அவதானிப்புகளின் அடிப்படையில் இக்கட்டுரைக்கான பகுப்பாய்வு இடம்பெறுகிறது. மேலும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களிலிருந்து பெறப்பட்ட பார்வைகள் மற்றும் கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் அரசசேவைகள் தொடர்பான பார்வையினை வழங்கிய 'கொவிட்-19 காலத்தில் சமூக-பொருளாதாரக் குறிகாட்டி' (Socio-Economic Index In the Face of Covid-19, 2021) என்று பெயரிடப்பட்ட கணிப்பீட்டினையும் தரவுக்காகப் பயன்படுத்துகிறது. சமூக வலையமைப்புத் தொடர்பாக விரிவாக எழுதிய றொபேட் பட்னம் (Robert Putnam) ஜேம்ஸ்.சி.ஸ்கொட் (James. C. Scott) பியர் போர்டியு (Pierre Bourdieu) ஆகிய மூவரினது கருத்துக்களின் மீதும் அரசியல் சனசமூகம் (Political community) தொடர்பாக பார்த்தா சட்டர்ஜீ (Partha Chatterjee) அவர்களது கருத்துக்களின் மீதும் கவனஞ்செலுத்துகிறது. இதன் அடிப்படையில், பெருந்தொற்றுக் காலத்தில் முறைசார் சனநாயக நிறுவனங்கள் மற்றும் செயற்பாடுகள் போன்றன ஏறக்குறைய நிறுத்திவைக்கப்பட்டிருந்ததோடு அரசுடன் தொடர்புபடுதல் என்பது முற்றிலும் வெளிவாரியான நிறுவனங்களால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இக்கட்டுரை வாதிடுகிறது.

## கொவிட் – 19 ஐ எதிர்த்துப் போராடுவதில் அரசியல் மற்றும் அரசியல் சாரா செயற்பாட்டாளர்களின் வகிபங்கு

2021ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுப் பகுதியில், சோஷல் இன்டிகேட்டர் (Social Indicator) நடாத்திய கணிப்பீட்டின்படி, உள்ளூர் மட்டத்தில் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஆற்றிய பங்கினைவிட கிராம சேவையாளர்கள் (Grama Niladari), சுகாதாரத்துறை, பொலிஸ், இராணுவம் ஆகியன கொவிட்-19ஐ எதிர்ப்பதற்கு வகித்த வகிபங்கு தொடர்பாகப் பொதுமக்கள் திருப்தியடைந்ததாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது (இணைப்பு 3இனது அட்டவணை 5-10

வரை பார்க்கவும்) 5,000 ரூபாய் கொடுப்பனவினை வழங்குதல், வீட்டுத் தனிமைப்படுத்தலில் உள்ளவர்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்குதல், நாடு முடக்குதல் நிலைமையின்போது அரசாங்க வைத்தியசாலைகளிலிருந்து வீடுகளுக்கு மருந்துகளை விநியோகம் செய்வதற்குத் தேவையான தகவல்களை வழங்குதல், பெருந்தொற்றுக் காலத்தினுள் அன்புக்குரியவர்கள் இறக்கும்போது அது தொடர்பாகப் பொதுமக்களை பொதுச்சுகாதாரப் பரிசோதகருடன் ஒருங்கிணைப்பதனை உறுதிசெய்தல் போன்ற கொவிட்-19 உடன் தொடர்புடைய பல கடமைகள் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டன. பிரயாணக்கட்டுப்பாடுகளை விதித்தல் மற்றும் நோய்க்கிருமி பரவுவதனைக் கட்டுப்படுத்தல் போன்ற பலதரப்பட்ட பொறுப்புகள் பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. குறிப்பாக, தனிமைப்படுத்தல் நிலையங்களை நடாத்துவதற்கு இராணுவம் பொறுப்பாக்கப்பட்டிருந்தது. பெருந்தொற்றின் மூன்றாவது கட்டத்தில் தினசரி தடுப்பூசியேற்றலின் அடைவுமட்டத்தினை அடைந்துகொள்வதற்காக தடுப்பூசியேற்றல் செயன்முறையில் பெருமளவிற்கு இராணுவம் ஈடுபடுத்தப்பட்டது. இக்காலகட்டத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் முக்கியமானவர்களாகக் கருதப்பட்டதோடு கொவிட்-19 இற்கு எதிரான போராட்டத்தில் அவர்கள் முக்கியமான வகிபங்கு வகிப்பதாகவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தமையைக் காணலாம். தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் முறையாகப் பின்பற்றப்படுவதனை உறுதிசெய்கின்ற பொறுப்பு இவர்களுக்குப் பிரதானமாகக் கொடுக்கப்பட்டாலும் தமக்குரிய பிரதேசங்களில் வேறும் பல பொறுப்புக்களையும் அவர்கள் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனினும் பல்வேறு அழுத்தங்களினால் கிராம சேவையாளர் மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தமது பொறுப்புக்களை நிறைவேற்ற மறுத்த தகவல்களும் காணப்படுகின்றன. உதாரணமாக, 2020, 2021இல் இரண்டு சந்தர்ப்பங்களில் 5,000 ரூபாய் கொடுப்பனவினை விநியோகிப்பதில் பங்குபற்றுவது தொடர்பாக கிராம சேவையாளர்கள் தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்திருந்தனர். 2020இல் பெருந்தொற்று ஆரம்பகட்டத்தில் இருந்ததனால் நிவாரணத்தினை விநியோகிக்க வேண்டிய தேவை இருக்காதபோதும் அரசியல் அழுத்தங்களினால் அவர்கள் விநியோகித்ததாகக் குறிப்பிட்டனர் (*Grama Niladharis call off boycott of Rs 5,000 allowance distribution duties*, 2020; *Distribution of Rs 5,000: Grama Niladharis to withdraw*, 2020). 2020இல், அதிகாரிகளுக்கு ஏற்படக்கூடிய பாதுகாப்பின்மை நிலைமையினால் புத்தாண்டுக்கு முன்னர் அதனை விநியோகிப்பது சாத்தியமற்றது என்ற அடிப்படையில் அத்தகைய விநியோகத்தில் ஈடுபட அவர்கள் மீண்டும் மறுத்தனர் (*Grama Niladharis refuse to distribute Rs. 5,000*, 2021). அதேநேரம் தங்களது

வேலைக்குச் சட்டபூர்வப் பாதுகாப்பு நிராகரிக்கப்பட்டமை மற்றும் பொதுமக்களுக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் அசௌகரியத்தினை ஏற்படுத்துகின்றனர் என்ற மனச்சோர்வு தரும் அறிக்கையினை சுகாதார அமைச்சர்கள் வெளியிட்டமை போன்றவற்றினைத் தொடர்ந்து கொவிட்-19ஐ கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து அவர்கள் விலகவிரும்பினர் (*PHIs step away from COVID-19 control duties*, 2020).

கணிப்பீட்டின்படி, பெருந்தொற்றுக் காலத்தில் திருப்தியான சேவையினை வழங்குவதில் அரசியல் சாராத செயற்பாட்டாளர்கள் பிரபல்யமடைந்த அதேவேளை அரசியல் செயற்பாட்டாளர்கள் அத்தகைய பிரபல்யத்தினைப் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் மேற்கூறப்பட்ட சம்பவங்களானவை, அரசியல் சாராத செயற்பாட்டாளர்கள் தமது சேவையினைத் தொடரத் தயங்குவதனை நிரூபிப்பனவாகக் காணப்படுகின்றன. அத்தோடு அரசியல் மற்றும் அரசியல் சாராத செயற்பாட்டாளர்களிடையேயான ஒரு பதட்ட நிலைமையும் கொவிட்-19 பெருந்தொற்றுக் காலம் பூராகவும் அரசியல் சாராத செயற்பாட்டாளர்களைத் தமக்குச் சார்பாக அரசியல் செயற்பாட்டாளர்கள் பயன்படுத்திக் கொண்டனர் என்ற முடிவுக்கும் வர இயலுமாக இருக்கிறது.

மேலும், அரசியல் தலையீட்டினால் ஏற்பட்ட தயக்கத்துக்கும் அப்பால் பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்துவதில் இராணுவத்தின் தலையீடு குறித்து சுகாதாரத்துறையினரிடையே ஒரு அதிருப்தி நிலையும் பெருகிவருகிறது. எடுத்துக்காட்டாக பொதுமக்களிடையே குழப்பத்தினை ஏற்படுத்துவதாகக்கோரி தடுப்பூசியேற்றல் செயன்முறையில் அதிகரித்த இராணுவத்தலையீடு குறித்து 'அரசாங்க வைத்திய அலுவலர்கள் சங்கம்' தனது அதிருப்தியினை சுகாதார அமைச்சுக்குத் தெரிவித்தது (*GMOA complains of military interference in vaccination drive: Army refutes allegation*, 2021).

## பெருந்தொற்றுக் காலத்தில் அரசியல் சகாயத்தின் வகிபாகம்

### *இலங்கையில் அரசியல் சகாயத் தன்மை*

அரசியல் சகாயம் அல்லது ஆதரவு நல்குதல் என்பதனைப் புரிந்துகொள்வதானது பெருந்தொற்றுக் காலத்தில் அதனது தாக்கத்தினை விளங்கிக்கொள்ள அவசியமானதாகும். நிலச்சுவாந்தர்கள் மற்றும் அவர்களது குடியிருப்பாளர்களிடையே சமமற்ற அதிகார உறவினைக்கொண்ட நிலப்பிரபுத்துவச் சமூகத்தில் அரசியல் சகாயம் என்பது வெளிப்படையாகக் காணப்பட்ட ஓர் அலுவலாகும். இந்த சமூகக்

கட்டமைப்பில் மானியம் வழங்கும் உரிமையைக்கொண்ட காப்பாளரான உயர்ந்த தரப்பினர் வாடிக்கையாளரான தாழ்ந்த தரப்பினருக்கு ஆதரவு வழங்குதல் அல்லது பாதுகாத்தல் போன்றவற்றின் ஊடாக செல்வாக்கினை செலுத்த முற்படுகின்றனர். இதற்காகத் தாழ்ந்த தரப்பினர் சில சேவைகளை ஆற்றுகின்றனர். இந்தச் சேவையின் தன்மையானது காப்பாளரது கோரிக்கையினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது (Scott,1972; Hettige,1984).

ஆயினும் சனநாயகத்தின் எழுச்சியோடு காப்பாளர்-வாடிக்கையாளர் உறவானது (Patron-client relationships) மிகவும் சிக்கலானதாக மாற்றமடைந்தது. வாடிக்கையாளர்கள் இந்தப் புதிய சூழலில் அதிகளவான சுயாதீனத் தன்மையினைப் பெற்றுக்கொண்டனர். காரணம் காப்பாளர்கள் ஒருபோதும் இல்லாதவாறு அதிகரித்த வாடிக்கையாளர்களின் அழுத்தங்களைச் சமாளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். வாடிக்கையாளர்களது பெருகிவந்த கோரிக்கைகளைக் காப்பாளர்களது தனிப்பட்ட கொள்திறனால் பூர்த்திசெய்ய முடியாததொரு நிலைமை ஏற்பட்டது. இதனால் காப்பாளர்கள் ஏற்கனவே தாம் வைத்திருந்தவற்றுக்குப் புறம்பாக, அரசுக்குச் சொந்தமான வளங்களை நாடவேண்டியதொரு நிலைமையும் ஏற்பட்டது (Kitschelt and Wilkinson, 2005). இதன் காரணமாக நாம் இன்று 'சகாய சனநாயகம்' (Patronage democracy) அல்லது காப்பாளர்-வாடிக்கையாளர் உறவுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வகையான சனநாயக உருவாக்கத்தினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த முறையில் இடம்பெற்ற வாக்குப் பரிமாற்றத்திற்காகக் காப்பாளர்கள் தமது வாடிக்கையாளர்கள் அரசினது கட்டுப்பாட்டிற்குக் கீழுள்ள வளங்களைப் பயன்படுத்த அனுமதிக்கின்றனர்.

இந்தக் கணக்கில் வாக்காளர்களின் கோரிக்கைகளைப் பூர்த்திசெய்ய சேமநலன் என்ற விடயமும் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் அரசு என்பதனை "சமூக சேமநலன் மற்றும் தாராளதன்மைத் கொண்ட அதியுயர் நிறுவனமாக" மக்கள் நோக்க வழிசமைத்துள்ளது (Uyangoda, 2010, p. 61; also see Weerawardana, 1951). இவ்வாறாக, பிரசைகள் மற்றும் சேமநலன் ஆகிய இரண்டுக்குமிடையே ஒரு முக்கியமான இடைத்தரகர் வகிபங்கினை அரசியல்வாதிகள் வகிக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. பிரசைகளுக்கு சேமநலன் மிகவும் அவசியமாகவுள்ள நிலையில் அரசியல்வாதிகள் சேமநலன்சார் சேவைளைப் பெற்றுக்கொடுப்பதற்கு இன்றியமையாதவர்களாக உருவாகியுள்ளனர் (Gunasekara, 1992; Uyangoda, 2010; Peiris, 2021) இந்தப் பின்னணியில் பெருந்தொற்றுக் காலத்தில் 'தொடர்புகள்', 'வலையமைப்பு' தொடர்பாக அடுத்த பகுதியில் நோக்கலாம்.

## *பெருந்தொற்றுக் காலத்தில் அரசியல் சகாய வலையமைப்புகளும் அரசசேவைகளைப் பெறுதலும்*

முன்னர் குறிப்பிட்டது போன்று சேமநலத் திட்டத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான பயனுள்ள மற்றும் வினைத்திறன் கொண்ட மாற்றுப்புள்ளியாக அரசியல்வாதிகள் மாறியுள்ளனர். பெருந்தொற்றுக் காலத்திலும்கூட கொவிட்-19உடன் தொடர்புடைய அரசசேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உள்ளூர் சனசமூகங்களால் ஏற்கனவே தாபிக்கப்பட்டிருந்த பல சகாய வலையமைப்புகள் பயன்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்களைக் காணமுடிந்தது. பெரும்பாலும் அவசரகால நிலைமையொன்றில் மாகாண எல்லைகளைக் கடப்பதற்கான பிரயாண அனுமதிகளைப் பெறுதல், மளிகைப் பொருட்களை விற்பனை செய்யும் வணிகச் செயற்பாட்டுக்கான அனுமதியைப் பெறுதல் அல்லது ஏனைய தனிப்பட்ட வணிகத்தினைத் தொடருதல் போன்ற பலவற்றுக்காக அரசசேவைகளை அணுகுதலானது பொதுமக்களின் வாழ்க்கைக்கு மிகவும் அவசியமானதாக அமைந்திருந்தது.

இந்த ஆய்வுக்காக அணுகப்பட்ட இரண்டு பதிலளிப்பாளர்களின் கருத்துக்களை ஒப்பீட்டு ரீதியாக நோக்குவதானது பயன்தரத்தக்கதாக அமையலாம். இருவரில் ஒருவர் தனது பிரதேசத்தில் கைக்கிருமி நீக்கி, முகக்கவசங்கள் மற்றும் ஏனைய பாதுகாப்பு உபகரணங்களை உற்பத்திசெய்யும் சிறியதொரு வணிகத்திற்கு உரிமையாளர் ஆவார். உள்ளூர் அரசியல்வாதியின் உதவியுடன் கொவிட்-19 முதலாவது அலையின்போது தனக்காகத் தொழில் புரிந்த அவரது தொழிலாளர்களை அவர்களது சொந்த ஊருக்கு எளிதாக அனுப்பமுடிந்தது[1]. உள்ளூர் அரசியல்வாதியுடனான நெருங்கிய உறவு மற்றும் அவரது அரசியல் செயற்பாடுகளுக்காக முன்னர் அவரால் வழங்கப்பட்ட ஆதரவு காரணமாக அவரால் அவ்வாறு செய்ய முடிந்தது. மற்றையவர் ஓர் இளம் நிர்வாகி. அவர் தனது பிரதேசத்திலுள்ள எந்தவொரு அரசியல் சகாய வலையமைப்புகளுடனும் தொடர்புகளைக் கொண்டிராத ஒருவராகக் காணப்பட்டமையினால் நாடு முடக்கத்திற்குள்ளாகியபோது தனது வீட்டில் வேலைசெய்த கொத்தனாரைக் (மேசன்) கூட அவரது சொந்த ஊருக்கு அனுப்ப முடியாதிருந்தது.[2] எனினும் முதலாவது பதிலளிப்பாளர் போன்று தொடர்புகளைக் கொண்டிருந்த பிறிதொருவரால் உணவு விநியோக அனுமதியினை அவரது நகரசபைத் தலைவரின் சிபாரிசின் பெயரில் பெற்று மூன்றாவது அலையின்போது விதிக்கப்பட்ட

---

1 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொட்டிகா வத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொழும்பு மாவட்டம், 2ஆம் திகதி ஜூன் 2021.

2 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொட்டிகா வத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொழும்பு மாவட்டம், 2ஆம் திகதி ஜூன் 2021.

பயணக்கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் அவர் உற்பத்தி செய்த புதிய மரக்கறிகளை விற்க முடிந்தது.[3] தேவையான தொடர்புகளில்லாத பலரால் இவ்வாறு செயலாற்ற இயலவில்லை.

மேலே கூறப்பட்ட இந்தக் குறிப்புகள் அரசியல் சகாய வலையமைப்புகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ள ஒருவர் கொவிட்-19 காலத்தில் அரசினது சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றிலிருந்து எவ்வளவு இலகுவாக விலக்களிக்கப்படலாம் என்பதனையும் அவ்வாறு இல்லாத ஒருவர் எத்தகைய அசௌகரியத்துக்கு ஆளாக வேண்டியிருக்கிறது என்பதனையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. கொவிட்-19 விதிமுறைகளைத் திறமையான வகையில் சாதகமாகக் கையாளுவதற்கு அனுமதிப்பதன் மூலம் அரசியல் சகாயமானது வாடிக்கையாளர்களைப் பெருந்தொற்றுக் காலத்தில் திருப்தியடையச் செய்துள்ளது. இவ்விதமான அரசியல் சகாய முறையானது பார்த்தா சட்டர்ஜி (Partha Chatterjee) குறிப்பிட்டது போன்று "அரசியல் சமுதாயம்" (2004) என்பதன் தோற்றத்திற்கு வழிசமைக்கிறது. இதன்படி சமூகத்தின் ஒரு பகுதியினர் மாற்றீடுகள் இல்லாத நிலையில் அல்லது அத்தகைய வழிமுறைகள் மிக வினைத்திறனாக இல்லாத நிலையில் அரசினை அணுகுவதற்காக முறைசார்ந்த மற்றும் முறைசாரா நிறுவனங்களைப் பயன்படுத்துகின்றனர்.

ஆயினும் இந்த நெருக்கடியான காலத்தில் குறைந்தளவான வளங்கள் மற்றும் அதிகளவான கோரிக்கைகள் போன்றவற்றினால் அரசசேவைகளை நாடுவதற்காக இந்த அரசியல் சகாய வலையமைப்புகளைப் பயன்படுத்துவது மட்டுப்பாடுகளுக்குள்ளாக்கியுள்ளது. இதன்விளைவாக, இந்த வலையமைப்புகளில் தங்கியிருந்த பெரும்பாலானோர் சில சந்தர்ப்பங்களில் ஏமாற்றமடைந்தனர்/விரக்தியடைந்தனர். ஏனெனில், தங்களது தொடர்புகள் மூலம் நன்மைகளை முழுமையாக அடைந்துகொள்ளவோ அல்லது விரும்பிய அடைவுகளை பெறவோ முடியாததொரு நிலைமை காணப்பட்டது. எடுத்துக்காட்டாக உள்ளூர் நகரசபையில் தொழில்புரியும் ஊழியர் ஒருவர் சபையின் பணியாளராகப் பெறவேண்டிய அஸ்ராசெனிக்காவின் இரண்டாவது தடுப்பூசியானது நகரசபைத் தலைவரின் உறவினர்களுக்கு வழங்கப்பட்டமை குறித்துக் கடுமையான அதிருப்தியினை வெளிப்படுத்தியிருந்தார்.[4] உள்ளூ ராட்சி சபையின் ஊழியர்கள் அரசியல் சகாய வலையமைப்பினூடாக

3 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொலன்னாவ நகரசபை, கொழும்பு மாவட்டம், 4ஆம் திகதி ஜூன் 2021.

4 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொழும்பு மாவட்டம், 17ஆம் திகதி ஜூன் 2021.

அனுகூலத்தினைப் பெற்றுக்கொள்பவர்களாகக் காணப்படுகின்றனர். உண்மையில் இவ்வாறு தாபிக்கப்பட்ட வலையமைப்புகளின் ஊடாகவே நகரசபைக்கு இவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஆயினும் கொவிட்-19 காலத்தில் வளங்களின் தன்மை மற்றும் கிடைப்பனவுகள் என்பன முன்னரைப் போலல்லாது வேறுபட்டுக் காணப்படுகின்றன. இத்தகைய வலையமைப்புகளானது தொழிற்படவும் முன்னரைப்போல வினைத்திறனான வகையில் அனுகூலத்தினையும் வழங்குவதில்லை. அதிகரித்த பற்றாக்குறையும் சமூக சமத்துவம் தொடர்பான பிரச்சினைகளில் தாக்கங்களைச் செலுத்துகின்றன. இது அடுத்த பகுதியில் விபரிக்கப்படுகிறது.

## *அரசியல் சகாய வலையமைப்புகளும் அசமத்துவங்களும்*

முன்னர் குறிப்பிட்டது போன்று அரசியல் சகாய வலையமைப்புகளுடன் தொடர்புகளைக் கொண்டவர்கள் அவ்வாறு இல்லாதோரைவிடச் சேவைகளைச் சுலபமாகப் பெறுகின்றனர். இதன்விளைவாக அத்தகைய சேவைகளைப் பெறுவதில் மக்களில் ஒரு குழாத்தினர் மற்றையவர்களை விட அதிகபடியான நன்மைகளைப் பெறுகின்ற ஒரு சூழ்நிலை காணப்படுகிறது. எனவே கொவிட்-19 காலத்தில் சமூகத்தில் ஆழமான அசமத்துவத்தினை உருவாக்குவதில் அரசியல் சகாய வலையமைப்புகளானவை அதிகளவு பங்களித்துள்ளன.

எடுத்துக்காட்டாக, அரச ஒழுங்குவிதிகளுக்கமைவாக அரசாங்கத்தினது 5,000 ரூபாய் கொடுப்பனவு இடம்பெற்றபோதிலும் அச்செயன்முறையினைத் தவறாகக் கையாண்டமை தொடர்பான குறிப்புக்களும் காணப்படுகின்றன. உதாரணமாக, அரசியல் சகாய வலையமைப்புகளுடன் தொடர்புடைய தனிப்பட்டவர்கள் பொதுவாகப் பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் தரவிதிகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தனர். இந்தக் கொடுப்பனவினை பகிர்ந்தளிக்கும் உள்ளூர் அதிகாரிகளும்கூட இத்தகையவர்களின் (அடிப்படை) விபரங்கள் பற்றி அதிக சிரத்தை எடுக்கவில்லை. அதேநேரம் அத்தகைய அரசியல் சகாய வலையமைப்புகளுடன் தொடர்புகளைக் கொண்டிராத குடும்பங்கள் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதில் சவால்களை எதிர்கொண்டன. அத்தோடு கொடுப்பனவிற்குத் தகுதியாவதற்கும் அதனைப் பெறுவதற்கும் ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுமாறு கோரப்பட்டன. இந்த யதார்த்தத்தினை வெளிப்படுத்தும் இரண்டு விபரிப்புகள் அடுத்து முன்வைக்கப்படுகின்றன.

பதிலளிப்பாளர் ஒருவர் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியராக இருக்கின்ற நிலையில் அவர் உள்ளூர்மட்டத்தில் அரசியல் சகாய வலையமைப்புகளுடன் தொடர்புகளைக் கொண்டவராகக்

காணப்பட்டார். அவர் தேர்தல் காலங்களில் தனது பிரதேசத்தில் கட்சி ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளில் அடிக்கடி பங்குபற்றும் ஒருவராகக் காணப்படுகின்றார். அவரது வீட்டில் அவரும் அவரது மனைவி, மகன் மற்றும் மருமகள் ஆகிய இரண்டு குடும்பங்கள் வசிக்கின்றன. தனது அரசியல் சகாய வலையமைப்பினூடாக இரண்டு குடும்பத்துக்கும் தனிதனியாகக் கொடுப்பனவினைப் பெறக்கூடியதாக இருந்தது.[5] மறுபுறம், பிறிதொரு பதிலளிப்பாளர் ஒருவர் தனியார்துறையில் பணிபுரியும் ஊழியராகவும் எவ்விதமான அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபடுபடாதவராகவும் காணப்பட்டார். அவருடைய வீட்டிலும் பல குடும்பங்கள் வசிக்கின்றன. எனினும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்தனியாகக் கொடுப்பனவினைப் பெற அவரால் முடியவில்லை. ஏனெனில் அவர் எந்தவொரு அரசியல் சகாய வலையமைப்புகளுடனும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருக்கவில்லை. பின்னர் உள்ளூர்மட்டத்தில் பிரதேசசபை உறுப்பினர் ஒருவருடன் தொடர்புள்ள ஒருவரை அணுகியதன் விளைவாக அவரது வீட்டிலுள்ள சகல குடும்பத்தினரும் தனித்தனியாகக் கொடுப்பனவினைப் பெறக்கூடியதாக இருந்தது.[6] பின்னைய உதாரணத்தினை அடிப்படையாகக் கொண்டு இங்கு பிரதானமானதொரு கருத்து முன்வைக்கப்படுகிறது. இரண்டாவது பதிலளிப்பாளரின் வெளிப்பாடும் செயற்பாடுகளும் வெளிப்படுத்துவது எதனையெனில், முறையான வழிகளினூடாக கொடுப்பனவினைப்பெற முயற்சிப்பதனைவிட அரசியல் சகாய வலையமைப்புகளை அணுகுவதனூடாகச் சாதகமான பிரதிபலன்களைப் பெறமுடியும் என்பதனையாகும்.

பிறிதொரு உதாரணத்தில், பதிலளிப்பாளர் ஒருவர் தமது கிராமத்தின் சமுர்த்தி சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றுவதோடு அந்தப் பிரதேசத்து உள்ளூராட்சி சபையினைச் சேர்ந்த அரசியல்வாதியின் சகோதரியாகவும் காணப்படுவதனால் தனது கிராமத்தில் 5,000 ரூபாய் கொடுப்பனவினை விநியோகிப்பதில் முன்நின்று செயற்பட்டிருந்தார். அவர் அந்தப் பிரதேசத்தில் குறைந்த வருமானத்தினை ஈட்டுகின்றவர்களை இனங்காணுமாறு கிராம சேவையாளர்கள் மற்றும் சமுர்த்தி அலுவலர்களுக்கு அறிவுறித்தினார். பயனாளிகளை இனங்கண்டுகொண்ட விதம் தொடர்பாகப் பெரும்பாலானோர் தமது அதிருப்தியினை வெளிப்படுத்தியிருந்தனர். அத்தோடு தெரிவுசெய்யப்பட்ட செயன்முறை நியாயமற்ற வகையில் இடம்பெற்றதாக அவர்கள் அந்தப் பெண்மணியுடன் (அரசியல்வாதியின் சகோதரியுடன்) முரண்பட்டுக்கொண்டனர்.

5 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொட்டிகா வத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொழும்பு மாவட்டம், 4ஆம் திகதி ஜூன் 2021.

6 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொட்டிகா வத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொழும்பு மாவட்டம், 5ஆம் திகதி ஜூன் 2021.

தனக்கு மிக நெருக்கமானவர்களுக்கும் தனது சொந்த அரசியல் வலையமைப்புக்கு உட்பட்டவர்களுக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்டதாக பலரும் கூறியிருந்தனர்.[7] இந்நிலையில் தனக்கு சார்பானவர்களுக்காக ஒருதலைபட்சமாக நடந்து கொண்டிருந்தமையினால் அரசினால் வழங்கப்பட்ட சேமநலத் திட்டங்களை சிலர் அதிகபடியாகப் பெறுவதற்கான நிலைமை காணப்பட்டது.

2021 ஏப்ரலில், இரத்மலானைப் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்று பற்றி ஊடகங்கள் தெரிவித்திருந்தன. இதன்போது முன்னரே தயாரிக்கப்பட்ட பட்டியலின் அடிப்படையில் அனுமதிச்சீட்டுக்கள் (டோக்கன்கள்) வழங்கப்பட்டதாகவும் பின்னர் நிவாரணம் வழங்கப்படும் வேளையில் தமக்குச் சார்பானவர்களுக்காக ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டமையினால் பல மணித்தியாலங்களாக நீண்டவரிசையில் மக்கள் நிற்க வேண்டியேற்பட்டதாகவும் தெரிவித்திருந்தனர் (*The 5000 that heated up Ratmalana,* 2021*).* டிரான்ஸ்பேரன்சி இன்ரநெஷனல் (*Transparency International)* என்ற அமைப்பானது *(ENSURING COVID-19 RELIEF REACHES SRI LANKA'S PEOPLE,* 2020) வறிய குடும்பங்களுக்குக் கொவிட்-19 நிவாரணத்தினைப் பகிர்ந்தளிப்பதில் காணப்படும் முறைகேடுகள் குறித்துத் தனது கவலைகளை வெளிப்படுத்தியிருந்தது. டிரான்ஸ்பேரன்சி இன்ரநெஷனல் தனது அறிக்கையில், உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவர் நிவாரணத்தினை ஒரு பிரச்சாரத்துக்கான கருவியாகப் பயன்படுத்தியிருந்ததாகக் குற்றஞ்சாட்டியிருந்தது.

இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய முக்கிய விடயம் என்னவெனில், சில சேவைகளை நியாயமற்ற அல்லது சமமற்ற வகையில் பெறுவதற்கு நடப்பிலுள்ள முறைமையினைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்காக இந்த வலைமைப்புகள் பிரதானமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அரசியல் சகாய வலையமைப்புடன் தொடர்புகளைக் கொண்டிராத மக்கள் விசேட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலாத ஒரு சூழ்நிலையில் அவ்வாறான தொடர்புகளைக் கொண்ட ஏனையவர்கள் அதனை அணுகக்கூடியவாறான சூழ்நிலையும் காணப்பட்டது.

சமூக மூலதனம் (Social capital) என்ற போர்டியூவின் எண்ணக்கருவாக்கத்தினை அஸ்கியுத் (Asquith, 2019) விளக்குகின்றபோது, "சமூக மூலதனமானது தனிப்பட்டவர் மற்றும் அவனது/அவளது பொருள்சார், கலாசார, அடையாள அந்தஸ்து, சமூக அந்தஸ்து, பொருளாதார நிலைமை சில வகையான கலாசார

7 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், பேருவளை பிரதேச சபை, களுத்தறை மாவட்டம், 16ஆம் திகதி ஜூன் 2021.

வடிவங்களுடனான ஈடுபாடு போன்றவற்றினால் தீர்மானிக்கப்படுகிறது. இதனால் சமூக மூலதனத்தினது பரிமாணமானது தனிநபர் கொண்டுள்ள வலையமைப்பினது (அவளது/அவனது) அளவு மற்றும் வலையமைப்பிலுள்ள உறுப்பினர்கள் கொண்டுள்ள கலாசார மற்றும் பொருளாதார மூலதனம் என்பவற்றிலேயே தங்கியுள்ளது" (p.32). எனவே அசமத்துவம் மற்றும் விலக்கிவைத்தல் என்பன சமூக மூலதனத்தின் உட்பொருளாகக் காணப்படுகின்றன. சமூக மூலதனமானது நெருக்கடியான சூழ்நிலையொன்றில் பிரதான வழிமுறையாகச் செயற்படுகின்ற நிலையில் அசமத்துவமும் விலக்கிவைத்தலும் மைய நிலையினை வகிக்கவருகின்றன. சட்டர்ஜியின் அரசியல் சமுதாயம் என்ற கருத்தாக்கம் குறிப்பிடுவதுபோல சகாய அரசியலானது சமூகத்தில் குறைவான அதிகாரத்தினைக் கொண்டவர்களைக்கூட வலையமைப்பின் பிரகாரம் நன்மையடையச் செய்கிறது. நிவாரணங்களைப் பகிரந்தளிக்கும் திட்டங்களுக்குள் ஊடுருவியுள்ள சகாய அரசியலினால் உரிமை மற்றும் உரிமைக்கோரல் என்பவற்றினை நன்மை/ பயன்கள் என்ற அடிப்படையில் நோக்குவதானது ஆபத்தானதொரு விடயமாகும்.

## *அரசசேவைகளை அணுகுவதில் இடையீட்டாளராகச் செயற்படுபவர்களின் முக்கியத்துவம்*

கடந்த பகுதிகளில், அரசசேவைகளை அடைந்துகொள்ளுதல், கொவிட்-19 சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான விசேட விலக்களிப்புகளைப் பெறுதல் போன்றவற்றில் அரசியல் சகாய வலையமைப்பினுள் இடையீட்டாளராகச் செயற்படுபவர்கள் (Mediators) வகித்த பிரதான வகிபங்கு பற்றிக் கண்டுகொண்டோம். இடையீட்டாளர் என்ற பதமானது இந்தக்கட்டுரையில், அரசசேவைகளைப் பெறுவதற்குப் பொதுமக்களை இணைப்புச் செய்யும் நபர் அல்லது கொவிட்-19 சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளிலிருந்து விசேட விலக்களிப்புக்களைப் பெறுவதற்கு உதவுபவர் எனப் பொருள்படுகிறது.

அரசியல் சகாய வலையமைப்பினைச் சேர்ந்த இடையீட்டளராகச் செயற்படுபவர்களை விட சுகாதாரத்துறை ஊழியர்கள், பொலிஸ், இராணுவ அலுவலர்கள் மற்றும் பணிக்குழாத்தினர் போன்றோரும் கொவிட்-19 தொடர்பான அரசசேவைகள் மற்றும் விலக்களிப்புகளை இலகுவாகப் பெறுகின்றனர். எனினும் இந்தப்பகுதியின் நோக்கம் யாதெனில் சகாய வலையமைப்பினுள் செயற்படும் பலதரப்பட்ட இடையீட்டாளர்களின் வகிபங்கு பற்றி விபரிப்பதாகும்.

## *அரசியல் சகாய வலையமைப்பினுள் இடையீட்டாளர்கள்*

கொவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் அரசியல் சகாய வலையமைப்புகளது இடையீட்டாளர்களின் செயற்பாடுகளைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் காணமுடிந்தது. இத்தகைய இடையீட்டாளர்கள் அரசியல் சகாய வலையமைப்பின் ஒரு பகுதியாக அமைந்திருக்கின்ற அதேவேளை தத்தமது கிராமங்களிலுள்ள ஏனைய சமூக வலையமைப்புகளைச் சார்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் சிலவேளைகளில் அரசியல் சகாய வலையமைப்புகளினது எல்லைக்கு வெளியேயான சேவைகளை வழங்குவதற்கான நிலைமையினையும் இது ஏற்படுத்தியது.

எடுத்துக்காட்டாக, விவசாயத்துறையினைச் சேர்ந்த அதிகாரி (Govi Niyamaka) ஆகவும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினராகவுமுள்ள ஒருவர் தனது பிரதேசத்தில் தடுப்பூசியேற்றத்தினைச் சுமுகமாக மேற்கொள்ள அவர் எவ்வாறு பங்களித்துள்ளார் என்பது பற்றிப் பகிர்ந்து கொண்டிருந்தார். இவர் பலதரப்பட்ட சனசமூக அமைப்புகளில் ஒரு உறுப்பினராகவும் சிரமதானம் மற்றும் இரத்ததான ஆரம்பிப்புகள் போன்ற சமூக வேலைகளிலும் செயற்திறனாக ஈடுபட்ட ஒருவராவார். தற்போது உள்ளூர்மட்ட அரசியல்வாதியொருவருக்கு ஆதரவாளராக செயற்படும் அவர் அப்பிரதேசத்து தடுப்பூசியேற்றும் நிலையத்தினது செயற்பாடுகள் சுமூகமாக இடம்பெறுவதனை (உள்ளூர் இளைஞர் குழுவின் உதவியுடன்) மேற்பார்வை செய்யப் பொறுப்பாக்கப்பட்டுள்ளார். இந்த தடுப்பூசி நிலையத்தில் மேற்கூறப்பட்ட பதிலளிப்பாளரும் இளைஞர் குழுவும் முறையான ஆசன இருக்கை வசதிகளை மேற்கொள்ளுதல், தொற்றுநீக்கி வசதிகள் போதுமானதாக இருப்பதனை உறுதிசெய்தல், நிரையில் நின்று காத்துக்கொண்டிருப்பவர்களுக்குத் தண்ணீர்ப் போத்தல்களை வழங்குதல், தடுப்பூசியேற்றப்பட்டுள்ளவர்களுக்குச் சிற்றுண்டிகளை விநியோகித்தல் போன்றனவற்றை வழங்க ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். இத்தகையதொரு நிலையில் தடுப்பூசியேற்றல் நிலையம் பற்றிய தகவல் பெரும் எண்ணிக்கையான மக்களைச் சென்றடைவதனை இடையீட்டாளர்கள் உறுதிசெய்தனர். இது உண்மையில் வாக்காளர்கள், வாக்காளர் அல்லாதோர், சகாய வலையமைப்பிற்குள்ளேயுள்ள மற்றும் வெளியேயுள்ள பலரையும் கவருவதாக அமைந்திருந்தது.[8]

---

8 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொட்டிகா வத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொழும்பு மாவட்டம், 8ஆம் திகதி ஜூன் 2021.

இந்தச் சம்பவம் பற்றிக் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், தடுப்பூசியேற்றும் நிலையமானது ஒரு பௌத்த ஆலயமாக இருந்தமையாகும். இவ்வாறு பௌத்த கோவிலை தெரிவு செய்தமைக்கான எண்ணப்பாங்கானது கடந்த சனாதிபதித் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட கட்சியினது தழுவப்பட்ட நிகழ்ச்சிநிரலுடன் ஒத்துப்போகிறது. எனவே திட்டமிட்ட வகையிலோ அல்லது தற்செயலாகவோ இது குறிப்பிட்ட அரசியல் கட்சியின் ஆதரவுத் தளத்தினை வலுப்படுத்தப்படுவதாக அமைகிறது எனக் கருத இயலுமாகவுள்ளது.

இதேபோல பிரதேச சபையினது முன்னாள் வேட்பாளரான ஓர் அரசியல்வாதியும் தற்போது அதிகாரியுமாகவுள்ள பிறிதொரு பதிலளிப்பாளர் ஒருவர் அவரது பகுதியில் 5,000 ரூபாய் கொடுப்பனவு விநியோகத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்தார். இந்தக் கொடுப்பனவானது இந்தப் பகுதியிலுள்ள சகாய வலையமைப்பிற்கு உட்பட்டவர்களுக்கும் அதற்கு வெளியேயுள்ளவர்களுக்கும் வழங்கப்பட்டதாக அவர் உறுதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.[9]

மேற்கூறிய இரண்டு பதிலளிப்பாளர்களின் விளக்கங்களும் வெளிப்படுத்துவது எதனையெனில் இடையீட்டாளர்கள் தமது சமூகத்தில் சகாய வலையமைப்புகள் மற்றும் ஏனைய சமூக வலையமைப்புகள் போன்றவற்றை வலிமைப்படுத்துவதில் இரட்டை வகிபங்கினை மேற்கொள்கின்றனர் என்பதனையேயாகும். இதனை அவர்கள் நேரடியாகவும் சிலசமயங்களில் மறைமுகமாகவும் மேற்கொள்கின்றனர். இவ்வாறு மேற்கொள்ள இயலுமாகவிருப்பது அவர்கள் தமது பிரதேசங்களில் ஏலவே தாபித்திருக்கின்ற பரந்தளவான தொடர்புகள் மற்றும் ஈடுபாடுகள் போன்றனவற்றினாலாகும். வலையமைப்புகள் செயற்படுவதனையும் அதனால் செயன்முறைகள் சுமூகமாக இயங்குவதனையும் இடையீட்டாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். இந்த சகாய வலையமைப்புகளானவை முடிந்தளவு வினைத்திறனான வகையில் கீழ்மட்டத்திலுள்ள மக்களை அடைந்துகொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் இடையீட்டாளர்களும் கீழ்மட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள சகாய வலையமைப்புகளும் அதிகளவாக அரசியல் காரணங்களுக்காக அரசியல்வாதிகளால் பயன்படுத்தப்படுகின்றன. கீழ்மட்டத்தில் சமூகங்களுக்கான செயற்பாடுகளை ஒழுங்கமைக்கவும் நடைமுறைப்படுத்தவும் இவை சிறந்த வலையமைப்புகளாகத் திகழ்கின்றன.

9 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொட்டிகா வத்த முல்லேரியாவ பிரதேச சபை, கொழும்பு மாவட்டம், 16ஆம் திகதி ஜூன் 2021.

பெருந்தொற்று ஆரம்பமாகியதிலிருந்து சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் தம்மை தாபித்துக்கொள்வதில் சகாய வலையமைப்புகள் வெற்றியடைந்துள்ளன. நெருக்கடி நிலையின் தேவையினைப் பூர்த்திசெய்யும் பொருட்டு தமது மக்களுக்கு கொவிட்-19 உடன் தொடர்புடைய நன்மைகளை/ உதவிகளை வழங்கியமையால் இந்த வெற்றி சாத்தியமானது. இந்த வெற்றியைப் பொருட்படுத்தாது நாம் கவனத்திற் கொள்ளவேண்டிய விடயம் என்னவெனில், அரசசேவைகளைப் பெற்றுக்கொள்ள சகாய வலையமைப்புகள் பயன்படுத்தப்படும்போது சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன என்ற விடயத்தினையேயாகும்.

## *சுகாதாரத்துறையில் இடையீட்டாளர்கள்*

இலங்கையில் கொவிட்-19 தொடங்கியதிலிருந்து சகாதாரத்துறை ஊழியர்கள் அதிகமான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டுள்ளனர். நெருக்கடியான சூழ்நிலையில் சுகாதாரத்துறையினையும் அதனது சேவைகளையும் அங்கீகரிக்கவும் நன்றி நவிலவும் சுவ விருவோ (Suwa Wiruwo) என்ற பிரச்சாரம் 2020இல் தொடங்கப்பட்டது. இது பரந்தளவான கவனத்தினை ஈர்த்திருந்தது. கொவிட்-19இற்கு எதிரான தேசியப் போராட்டத்தினை முன்நின்று சுகாதார ஊழியர்கள் நடாத்துவதனால் அவர்களைப் பொதுமக்கள் மிகுந்த மரியாதையுடன் நடாத்த வேண்டுமென்ற கருத்தினை இந்தப்பிரச்சாரம் வலுவூட்டியது. ‘சுவ விருவோ’ என்ற பிரச்சாரத்தினால் சுகாதார ஊழியர்கள் தொடர்பான பொதுமக்களின் கவனம் வெற்றிகரமாக அடைந்துகொள்ளப்பட்டது.

சுகாதார ஊழியர்களது அயராத சேவையினைப் பாராட்டும் முகமாகப் பிரபல்யமான விடுதிகளால் வழங்கப்பட்ட விசேட விடுமுறைப் பொதிகள் போன்ற வெகுமதிகளைச் சுகாதார ஊழியர்கள் பெற்றுக்கொண்டனர் (*Cinnamon Hotels & Resorts offers a holiday package for “Suwa-Sewa Wiruwo”*, 2020). மேலும் ஏனைய துறைகளோடு ஒப்பிடுகையில் இக்காலகட்டத்தில் தமக்கான தொழிலாளர் உரிமைகளை மேம்படுத்துவதற்கான பேரம்பேசலில் சுகாதாரத்துறை ஊழியர்கள் நன்மையினையும் அடைந்துகொண்டனர்.

மிக முக்கியமாக உள்ளூர்மட்ட சனசமூகங்களினைச் சேர்ந்த மக்கள் கொவிட்-19 காலத்தில் சில சுகாதார ஊழியர்கள் வகித்த மிக முக்கியமான வகிபங்கினால் அவர்களை அங்கீகரிக்கவும் தொடங்கினர். இந்த ஆய்வுக்காகத் தொடர்புகொண்ட ஒரு பதிலளிப்பாளரின் கருத்துப்படி, முன்னர் தமது பிரதேசத்தில் பொதுச்சுகாதாரப் பரிசோதகரை “குணுமாத்தையா” (கழிவுமுகாமைத்துவ அலுவலர்) என்றே அழைப்பதாகவும் குறிப்பிட்டார். காரணம் அந்தப் பகுதியிலுள்ள

முறையற்ற கழிவகற்றல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் ஒருவராகவே அவர் முன்னர் அடையாளப்படுத்தப்பட்டிருந்தார். எனினும் கொவிட்-19இனது தோற்றத்தோடு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தொடர்பான உள்ளூர் மக்களது பார்வை மாற்றமடைந்ததோடு அவர் சமூகத்திற்கு மிக முக்கியமான சேவையினை ஆற்றும் ஒருவராகக் கண்டுகொள்ளத் தொடங்கினர். சமூக மூலதனம் என்ற போர்டியுவின் புரிதலை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது, (இந்தச் சூழ்நிலையில்) தமது சமூக வலையமைப்புகளில் சுகாதார ஊழியர்களை உறுப்பினராகக்கொண்ட தனிப்பட்டவர் இத்தகைய இணைப்புகளினால் அரசசேவைகளைப் பெறுவது இலகுவானதாக அமைந்தது. ஆயினும் கொவிட்-19 ஒழுங்குவிதிகளைத் தமக்குச் சார்பாகக் கையாள்வதற்காகவே பிரசைகள் இந்தப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களைப் பெருமளவு பயன்படுத்தினர். அத்தோடு வினைத்திறனாக சரியான நேரத்திற்குச் சேவைகளைப் பெறவே அவர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

அரசசேவைகளைப் பெறுவதில் சுகாதாரத்துறை ஊழியர்கள் இடையீட்டாளராக செயலாற்றுகை மற்றும் அரசியல் சகாய வலையமைப்பிலுள்ளோர் இடையீட்டாளராக செயற்படுகை ஆகியவற்றுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. கொவிட்-19 நெருக்கடியில் சுகாதாரத்துறை ஊழியர்களின் தலையீடானது தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனினும் வாக்குகளைச் சேகரிப்பதற்காகத் தாபிக்கப்பட்ட படிநிலையாக்கத் தன்மையின் அடிப்படையில் அமைந்துள்ள வலையமைப்பினூடாக அரசசேவைகளைப் பெற்றுக்கொடுக்க அவர்கள் நேரடியாக தலையிடுவதில்லை. பெரும்பாலான பதிலளிப்பாளர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது புலப்பட்ட விடயம் என்னவெனில், தமது அன்புக்குரியவர்கள் இறக்கின்ற போது அவர்களுக்கு விரைவாக பி.சி.ஆர். (PCR) பரிசோதனையைச் செய்தல், அவர்களுக்கான இறுதிச்சடங்குகளை விரைவாகச் செய்தல் போன்ற நோக்கங்களுக்காகச் சுகாதாரத்துறையின் ஊழியர்களின் உதவியினை மக்கள் வேண்டிநிற்கின்றனர் என தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகையதொரு நிலையில்,மக்கள் பயந்தவர்களாக சுகாதார ஊழியர்களின் தொடர்புகளில் தங்கியிருக்கின்ற நிலைமை காணப்பட்டது. இந்த உண்மையினை கீழே தரப்படும் குறிப்பு பிரதிபலிக்கின்றது:

> எனது மாமா கொவிட்-19இனது மூன்றாவது அலைக்காலத்தில் இறந்தார். நகரத்தின் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிறிது நேரத்தில் அவர் இறந்திருந்தார். வைத்தியசாலை ஊழியர்கள் அவருக்குப் பிரேத பரிசோதனை செய்யவேண்டுமெனக் கூறினர். இதனால் எனது பிரதேசத்துப் பொலிஸ் பிரிவைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதோடு பிரேதப் பரிசோதனைக்காக

ஒரு பொலிஸ் அலுவலரையும் கொண்டுவருமாறு கூறினர். எனக்குத் தெரிந்த ஒரு பொலிஸ் அலுவலகர் ஊடாக பொலிஸ் நிலையத்தினைத் தொடர்புகொண்டேன். எனினும்,பிரேதப் பரிசோதனைக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தரைப் பெறமுடியவில்லை. பின்னர் எனது நகரசபைத் தலைவருடன் விடயத்தினை விரைவுபடுத்துவதற்காக அணுகினேன். நகரசபைத் தலைவர் தனது ஊழியர் ஒருவரை பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பினார். எனினும் என்னால் சரியான நேரத்திற்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தரைப் பெறமுடியவில்லை. இறுதியாக எனக்குத் தெரிந்த பாராளுமன்ற உறுப்பினரை அணுகுவதுதான் என் இறுதித் தெரிவாக இருந்தது. பாராளுமன்ற உறுப்பினரின் நெருங்கிய உறவினரான சகோதரன் எனக்கு நன்றாகப் பழக்கம். பாராளுமன்ற உறுப்பினரின் நெருங்கிய சகோதரர் தேர்தல் காலத்தில் எனது வலையமைப்பில் சில வாக்குகளைத் திரட்ட என் உதவியினை நாடியிருந்தார். அவரது அரசியல் கட்சிக்கு நான் தனிப்பட்ட வகையில் ஆதரவு வழங்காவிட்டாலும் கணிசமான வாக்குகளை அந்தநேரத்தில் பெற்றுக்கொடுத்திருந்தேன் என நினைக்கிறேன். எனது நிலை தொடர்பாக அவரிடம் கதைத்து விளக்கிய பின்னர், அவர் விரைவில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரை ஒழுங்குசெய்திருந்தார். பிரேத பரிசோதனையின் பின்னர், இறந்த உடலை ஒப்படைக்க முன்னர் பி.சி. ஆர். பரிசோதனை ஒன்றை மேற்கொள்ளவேண்டும் எனக்கூறப்பட்டது. இந்தச் செயன்முறைக்கு ஆகக்குறைந்தது இரண்டு நாட்களாவது எடுக்கும் என நான் கண்டுகொண்டேன். சுகாதார அமைச்சில் தொழில்புரியும் தாதி மற்றும் பிறிதொரு நபர் எனக்கு பழக்கமாக இருந்தமையினால் இரண்டு நாட்களுக்குள் பிரேத பரிசோதனை முடிக்க அவர்கள் உதவினார்கள். எனது மாமா இறந்து ஏழாவது நாள், நாம் தானம் வழங்குவதற்கு ஆயத்தமானோம், பாதுகாப்பு மற்றும் சுகாதார காரணங்களுக்காக எமது பிரதேச ஆலயத்திலிலுள்ள மதகுரு தானம் வழங்கும் நிகழ்வில் பங்கேற்க மறுத்துவிட்டார். பின்னர் எனது அயல்வீட்டார் ஒருவருடன் இது குறித்து கூறியபோது, தானம் வழங்கும் நிகழ்வுக்கு ஒரு மதகுருவினை அழைத்துவர உதவுவதாகக் கூறினார். எனது அயலவர் கூட உள்ளூராட்சி சபையினது அமைச்சர் ஒருவரது கட்சி ஒருங்கிணைப்பாளர் ஆவார். அவராலும் அவரது தொடர்புகளாலும் சரியான நேரத்தில் பிறிதொரு ஆலயத்திலிருந்து ஒரு மதகுருவினை நான் பெறக்கூடியதாக இருந்தது.[10]

மேற்குறிப்பிட்ட உரையாடல்க் குறிப்பு விளக்குவது எதனையெனில், இந்த நெருக்கடி காலத்தில் தோற்றம்பெற்ற பலவகையான சமூக வலையமைப்புகளையும் பல்வேறு சேவைகளைப் பெறுவதற்கு அவை பயன்படுத்தப்பட்ட விதத்தினையும் வெளிப்படுத்துவதாக

10 பிரதான தகவலாளர் ஒருவருடனான கலந்துரையாடல், கொலன்னாவ நகர சபை, கொழும்பு மாவட்டம், 4ஆம் திகதி ஜூன் 2021.

அமைகிறது. இந்தக் குறிப்பிலிருந்து விளங்கிக்கொள்வது யாதெனில், அரசசேவைகளைப் பெறுவதில் சுகாதார ஊழியர்களும் சமூக வலையமைப்பின் மிக முக்கியமான பகுதியாக உருவாகிவருகின்றனர் என்பதனையேயாகும்.

ஏனைய இரண்டு பதிலளிப்பாளர்களும் இதேபோன்ற கருத்துக்களை முன்வைத்திருந்தனர். ஒரு பதிலளிப்பாளரது கருத்துப்படி, கொவிட்-19இன் இரண்டாவது அலையின்போது அவரது தந்தையார் வீட்டில் இறந்த பின்னர் அவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். பி.சி.ஆர். செயன்முறையினை விரிவுபடுத்துவதற்காக மருத்துவ அவசர ஊர்தி ஓட்டுநராகப் பணிபுரியும் உறவினர் ஒருவரை அணுகியுள்ளனர். இந்த ஓட்டுநர் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ளாமல் ஏனைய சகல ஆவணங்களோடு உடலை இறந்தவரின் குடும்பத்திற்கு ஒப்படைத்திருந்தார்.[11] சந்தைப்படுத்தல் உத்தியோகத்தராகப் பணிபுரியும் இரண்டாவது பதிலளிப்பாளர் குறிப்பிட்டதன்படி, தனது வாடிக்கையாளராகவுள்ள ஒரு தாதி மூலம் அரசினால் அத்தியாவசிய மற்றும் முன்னிலையில் தொழில்புரியும் தொழிலாளர்கள் (Frontline Workers) போன்றவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த அஸ்ட்ராசெனிக்காவின் முதலாவது தடுப்பூசியினைப் பெற்றுக்கொண்டிருந்தார்.[12]

